மெய்கண்டாரும் சிவஞானபோதமும்

★

பல்கலைப் புலவர்
உயர்திரு கா. சுப்பிரமணிய பிள்ளை அவர்கள்
எழுதியது

★

கழக வெளியீடு

73-3

உ

திருச்சிற்றம்பலம்

மெய்கண்டாரும் சிவஞானபோதமும்

*

பல்கலைப் புலவர்

உயர்திரு கா சுப்பிரமணிய பிள்ளை அவர்கள்,

எம் ஏ, எம் எல், அட்வகேட்

எழுதியது

திருநெல்வேலி, தென்னிந்திய

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்,

1/140, பிரகாசம் சாலை, சென்னை-1

1977

கிளைகள் :

திருநெல்வேலி-6 மதுரை-1 கோயமுத்தூர்-1
கும்பகோணம்-1 திருச்சிராப்பள்ளி-2

கழக வெளியீடு : ௯௦௪

முதற்பதிப்பு : (சமாசம்) 1932
இரண்டாம் பதிப்பு : (கழகம்) நவம்பர் 1949
மறுபதிப்புகள் : மார்ச் 1966; திசம்பர் 1977

R673x2, 1:g
N77

MEIKANDAARUM
SIVAGNANABOTHAMUM

திருவரங்கனார் அச்சகம், சென்னை-600013 (I/1)

73-3

பதிப்புரை

'சிவஞானபோதம்' எனப்பெயரிய மெய்கண்டான் நூல், செழுந் தமிழ் முழுமுதல் பொருள் நூல். இவ் வரும் பெரும் நூலை மொழிபெயர்ப்பு நூலெனச் சின்னாட்கள்வரை உலகம் மயங்க ஒரு சிலர் உரைத்து வந்தனர். அவ்வுரை பொருந்தாப் புளுகுரையென ஆராய்ச்சிவல்ல அருந்தமிழ்ச் சான்றோரால் பொருந்தக் காட்டப் பெற்றுள்ளது.

செந்நெறியாம் சிவநெறிக்கு இருகண்போல் திகழ்வன திருமுறை பன்னிரண்டும், மெய்கண்டநூல் பதினான்கும் ஆகும். திருமுறையைப் புகழ்நூல் (தோத்திரம்) எனவும், மெய்கண்ட நூலைப் பொருள் நூல் (சாத்திரம்) எனவும் வழங்குப.

மெய்கண்டார் ஏறத்தாழ எழுநூற்றைம்பது ஆண்டுகட்கு முன் அருள் தோற்றம் எய்திய வேளாண் செல்வர். வேளாண் மரபினர். உடலும் உயிரும் உடன் ஓம்பிப் பல்லுயிரும் பேணும் பண்பினர். அதனால், பிள்ளை (கடவுட்பிள்ளை) எனச் சிறப்புப் பெயருடன் வழங்கப் பெறுவர்.

இந் நூற்கண் முப்பொருள் உண்மையும் அப்பொருள்கள் ஒன்றோடொன்று இயைபுற்று இயங்கும் தன்மையும் யாவரும் உளங்கொண்டு உய்யும்வண்ணம் மேற்கோள், ஏது, எடுத்துக் காட்டுக்களுடன் அருளிச்செய்யப்பெற்றுள்ளன.

இந் நூற்கு மாதவச் சிவஞானமுனிவரர் பல்லாற்றானும் பரந்து பட்டதொரு பேருரை வரைந்தருளினர். அவ்வுரை 'சிவஞான பாடியம்' என வழங்கும். அவற்றின் முழுப்பிழிவாக இந் நூல் யாக்கப்பெற்றுள்ளது. இதன்கண் ஆசிரியர் வரலாறு முழுமுதல் தமிழ் நூற்பாவுடன் அதன் மொழிபெயர்ப்பாகிய திட்ப நுட்பஞ் செறியா வடமொழி நூற்பாவும் அதனது வலுவின்மையும், பேருரையின் பிழிவும், சிவஞானபோத நூற்பா, மேற்கோள், ஏது, எடுத்துக்காட்டு வெண்பா எண்பத் திரண்டும், பொழிப்புரையும், வெண்பாக்களின் உரைநடை,

*

உரை, குறிப்பு முதலியவும் செம்மை பெற யாக்கப் பெற்றுள்ளன.

இவற்றைக் கற்பார் செம்பொருள் துணிவாம் 'சைவ சித்தாந்த' முழுமுதல் நூலைக் கற்பதுடன் நுண்பொருள்கள் எல்லாம் அறிவியல்துறைக்கேற்ப அறிந்து பெரும்பயன் எய்துவர்.

'மெய்கண்டாரும் சிவஞான போதமும்' என்ற பெயருடன் பேராசிரியர் கா. சுப்பிரமணிய பிள்ளையவர்கள் விளக்கத்துடனும் குறிப்புகளுடனும் செப்பஞ் செய்யப்பெற்ற இந்நூலை, 'சைவ சித்தாந்த மகாசமாசத்தார்' முதன்முதல் 1932 ஆம் ஆண்டில் வெளியிட்டனர். அவ்வரிய நூலே நல்ல அமைப்புடன் எங்களால் வெளியிடப் பெறுகின்றது.

இந்நூலில் முன் பதிப்பில் வெளிவந்த திருவெண்ணெய் நல்லூரின் பெருமை, திருவெண்ணெய்நல்லூர்க் கோயிலிலுள்ள கல்வெட்டுக்கள், மெய்கண்ட தேவர் கல்வெட்டும் காலமும் என்ற கட்டுரைகளை இப்பதிப்பிலும் இணைத்து வெளியிட உதவிய 'சமாசத்தலைவர்' திருவாளர் ம. பாலசுப்பிரமணிய முதலியாரவர்கட்கு எங்கள் நன்றி உரியதாகுக.

செந்நெறிச் செல்வரும் செந்தமிழ்ப் பெருமக்களும் இதனை வாங்கியும் வாங்குவித்தும் மெய்ப்பொருள் உண்மை தேறித் தமிழ்ப் பெருநெறி ஓம்புவாராக.

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்.

உ
சிவமயம்

முன்னுரை

"பொய்கண்டார் காணாப் புனிதமெனும் அத்துவித
மெய்கண்ட நாதன் அருள் மேவுநாள் எந்நாளோ."

இச் சிறு நூலானது மெய்கண்ட தேவநாயனாரது வரலாற்றினை ஆராய்ச்சி முறையாக இயம்புகின்றது. சிவஞான போதம் தமிழிலே முதல் நூலாக அமைந்திருப்பதற்குரிய காரணங்கள் இதனுள் தொகுத்துரைக்கப்பட்டுள்ளன. சிவஞான போதத்திற்கு ஒப்பற்ற பேருரையாக விளங்குஞ் சிவஞான பாடியத்தின் சாரமானது சுருக்கமாக இதனுள் விளக்கப் பட்டிருக்கிறது. சிவஞான போதத்திலுள்ள ஒவ்வொரு சூத்திரத்திற்கும் அதன் கருத்திற்கும் அதன் அதிகரணங்களி லுள்ள வாக்கியம், ஏது, உதாரணச் செய்யுள் என்பவற்றிற்குந் தெளிவான பொழிப்புரையுங் குறிப்புரையும் சிவஞானபோதம் தோன்றிய திருவெண்ணெய்நல்லூரின் சிறப்புஞ் சேர்க்கப் பட்டுள்ளன. இத்தகைய நூல், சிவஞானபோதக் கருத்தினை எளிதாயுந் தெளிவாகவுந் தெரிந்து கொள்வதற்குப் பெரிதும் பயன்படுமாதலின், இது சித்தாந்த மாணவர்களால் ஒருதலையாகக் கற்கப்பெறுதற்குரியது.

இந்நூலை அச்சியற்றுவித்துத் திருவெண்ணெய்நல்லூரில் மெய்கண்டார் சந்நிதியில், அவர் திருநாளாகிய இன்று இதனை வெளியிட்ட சென்னை சைவ சித்தாந்த மகா சமாச அமைச்சர், திருவாளர். ம. பாலசுப்பிரமணிய முதலியார் பி. ஏ., பி. எல்., அட்வகேட், அவர்கட்குப் பெரிதுங் கடப்பாடுடையேன்.

ஆங்கிரசஹூ ஐப்பசிமீ கஉ
சுவாதி நாள்
29—10—32

கா. சுப்பிரமணிய பிள்ளை.

உ

சிவமயம்

முதற் பதிப்பின்

உரிமையுரை

தொண்டை மண்டலம் சோழ மண்டலம்
என்றிரு நாட்டின் இடையே இலங்கும்
நடுநன் னாட்டின் திலக மாகியும்
திருநாவ லூரார்க்குப் பேரருள் புரிந்த
அருட்டுறை முதல்வன் ஆலய முடையதும்
சைவ வேளாள மாண்பெரு வள்ளல்
சடையப் பரென்பார் இணையில் புகழொடு
திகழ்ந்து தீம்பா வேந்தன் கம்பற்கு
அருந்துணை யாதர வளித்த பதியாய்ச்
சிவநெறி முடிபின் தலைமை நாதன்
மெய்கண்ட ஞானக் கதிரவன் வளர்ந்த
அழியாப் பெருஞ்சீர்த் தலமு மாகிய
திருவெண்ணெய் நல்லூர் வதியும் பெருந்தகை
சீலம் அடக்கம் செம்மனப் பான்மை
வண்மை வாய்மை தமிழ்ப்பெரும் பற்று
சிவனடிப் பேரன்பு அடியார் பத்தி
வாய்ந்த பண்பாளர் ஏய்ந்த பல்புகழ்ச்
சைவ சித்தாந்த மாபெரும் பேரவை
தம்பதி நடாத்திய தாவில் புகழார்
அண்ணா மலைக்கண் அருண கிரியார்
ஆலயம் பூசனை அமைத்த சிறப்பினர்
இந்நூல் வெளியிட முற்பொரு ளுதவிய
நலம்பல பொருந்திய நன்மை யாளர்
நுண்மாண் ஞானம் உடையோ ராதலின்
சின்ன சாமி சிரேட்டப் பெயரார்க்குப்
பதியியை பாலும் பல்லாற் றானும்
இந்நூல் பெரிதும் ஏற்புடைத் தாமே.

இங்ஙனம்

கா. சுப்பிரமணியன்.

உ

சிவமயம்

திருவெண்ணெய்நல்லூரின் பெருமை*

அமிழ்தினுமினிய தமிழ் நூல்களுள் இப்போதுள்ளவை மூவகைப் படும். அவை தோத்திரம், சாத்திரம், இலக்கியம் என்பனவாம். இம் மூன்றனுள்ளும் தலைசிறந்து விளங்கும் நூல்களோடு பெருந்தொடர் புடையதும், தென்னுடைய சிவபெருமானது முக்கண் போன்று மிளிர் வதுமாகிய தனிப்பெருஞ் சிறப்புடையது திருவெண்ணெய்நல்லூர் என்ற திவ்விய க்ஷேத்திரமாகும். இந்தத் தலத்திலே சுந்தரமூர்த்தி சுவாமிகள், முதன் முதலாக இறைவன் அடியெடுத்துத் தர, "பித்தா பிறைசூடீ" என்ற தோத்திர தேவாரத்தை யருளியதும், மெய்கண்டதேவர் "சிவ ஞான போதம்" என்ற சாத்திர முதனூலை அருளியதும், கவிச்சக்கர வர்த்தி கம்பர் "இராமாயணம்" என்ற இலக்கியத்தைத் தொடங்கிப் பகுதியைப் பாடிமுடித்ததும் பழைய வரலாறுகளால் அறியக்கிடக்கும்.

இந்தத் தலம் திருமுனைப்பாடிநாடு, மலாடுநாடு, சேதிநாடு எனப் பழைய நூல்களில் கூறப்படும் நடுநாட்டிலுள்ள தேவாரப் பாடல் பெற்ற இருபத்திரண்டு சிவத்தலங்களுள் ஒன்றாகும். பெரியபுராணத் தில் மெய்ப்பொருள் நாயனார் புராணத்தில்,

"சேதிநன் னாட்டு நீடு திருக்கோவ லூரின் மன்னி
மாதொரு பாக ரன்பின் வழிவரு மலாடர் கோமான்" என்றும்

ஷை புராணம் தடுத்தாட்கொண்ட புராணத்தில்,

"கங்கையும் மதியும் பாம்பும் கடுக்கையும் முடிமேல் வைத்த
அங்கணர் ஓலை காட்டி ஆண்டவர் தமக்கு நாடு
......................................திருமுனைப்பாடி நாடு" என்றும்

"...கன்னர தேவர்க்கு யாண்டு 17-வது முனைப்பாடித் திருநாவலூர்த் திருத்தொண்டீஸ்வரத்து மஹாதேவற்கு......ஸ்ரீமத் நரசிம்மவர்ம மிலாடுடைய நாட்டான் சித்தவடவன் ஆகிய நரசிம்மவன்மன் வைத்த விளக்கு..." (திருநாவலூரில் ஒரு கல்வெட்டு)— 'மன்னியல் பசும்புரவி யேறியொரு கணமதில் வலம்வரும் புவியை நீயே மாமுடி கவித்தாள்க

---

* இது திரு. தி. கு. இ. நாராயணசாமி நாயுடு அவர்க ளுதவிய குறிப்பைக்கொண்டு திரு. ம. பாலசுப்பிரமணிய முதலி யாரால் எழுதப்பட்டது.

வென்று மூவேந்தரும் வாய்மலர்ந் தருள வாங்கே, மின்னுறு குணக்குக் கடற்கரைவரைக்குமிகு மேவுமலர் சோலைதெற்கு விளங்கு திருவரத் துறைவதிட்டக்குடி வெள்ளாறு மேற்றிசைக் கொல்லி மலையாந், தென்னியல் வடக்குப் புனற்றருங் கடியாறு செப்புமிந் நான்கெல்லையுள் திருமுனைப்பாடிநாடுதசதுர் முடி பெற்ற தெய்வீக மன்னனாண்ட, அந் நிலையில் சிங்கபுரி நன்னிலத் தரசுபுரி யருள்பெறுவ கந்த்ராயர் அண்ணுவி னிற்றுதிசெய் உண்ணுமுலைக்குரிய அண்ணுமலைத் தேவனே' (திரு அண்ணுமலை சதகம்) என்னும் வரும் ஆதாரங்களினுல் இந்நாட்டின் பல பெயர்களும் எல்லையும் நன்கு விளங்கும். இந்நாடு சேர சோழ பாண்டியர் மூவர்க்கும் பொதுவாகவும் நடுவாகவும் இருந்தமையால் **நடுநாடு** எனப் பெயர் பெற்றது. இது புறநானூற்றில் பாரி முதலிய நடுநாட்டு வள்ளல்களைப்பற்றிய செய்யுள்களாலும் அவற்றின் உரையாலும் அறியலாகும். இந்நாடு பல போர்முனைகளைக் கண்டது. கடைசியாக கி. பி. 1760 இல் ஆங்கிலேயர் திருவெண்ணெய் நல்லூரில் முற்றுகை செய்து அதைக் கைப்பற்றியதாக Orme என்ற சரித்திர ஆசிரியர் கூறுகின்றனர். திருவெண்ணெய் நல்லூரில் இப்போதும் கோட்டைத் தெரு என்றொரு தெருவுண்டு.

இந்நாட்டுக்கு நீர்வளனையும் நிலவளனையும் நல்குவது **பெண்ணையாறு** இது தமிழ் நூல்களில் மிகச் சிறப்பாக வருணிக்கப் பட்டுள்ளது. இது பழைய காலத்தில் ஒரு வழியாகவும் இப்போது வேறொரு வழியாகவும் ஓடுகிறது. பழைய வழி இப்போது மலட்டாறு எனப்படுகிறது. நீரின்மையால் வரும் மலடுபற்றி மலட்டாறு என்றே, மலாடு நாட்டு ஆறு ஆதல்பற்றி மலாட்டாறு திரிபுற்று மலட்டாறு என்றே இது இவ்வாறு அழைக்கப்படுகின்றது. இம் மலட்டாறு என்ற பழம் பெண்ணை திருவெண்ணெய் நல்லூருக்கு வடக்கே கால் மைலில் ஓடுகிறது. புதிய பெண்ணையாறு இதற்கும் வடக்கே மூன்று மைலிலிருக்கிறது.

இனித், திருவெண்ணெய் நல்லூர் என்ற தலம், நிறைந்தபல நீர் நிலைகளையும், குளிர்ந்த பல சோலைகளையும், செழித்த பல புலங்களையும் உடையது. "மின் அமர் பொழில் சூழ்வெண்ணெய்" என்றார் அருணந்தியார். இங்கு உமாதேவியார் பசு வெண்ணெயினுற் கோட்டைகட்டி அதனிடையே பஞ்சாக்கினியை வளர்த்துத் தவம் புரிந்து சிவப்பேறெய்திய காரணத்தால் இவ்வூர் **திருவெண்ணெய் நல்லூர்** ஆயிற்று. இஃது வேலைய தேசிகரியற்றிய வீரசிங்காதன புராணத்துத் திருக்குடந்தைச் சருக்கத்திலுள்ள "ஆலகாலமன் றருந்திய நமையுமை அறிவால், ஏலவே **பசு இழுதினற் கோட்டை** செய்திடையே, சாலஐந்தழல் நாப்பணே தவம்புரிந் திடலான், மேலவாம் **திருவெண்ணெய் நல்லூர்** என விளங்கும்" என்ற செய்யுளால் அறியப்படும்.

பல தலங்களிலுள்ள திருக்கோயில்கட்குத் தனிப் பெயர்களுண்டு. ஆரூர்ப் பூங்கோயில், கச்சூர் ஆலக்கோயில், கடம்பூர் கரக்கோயில், பீயச்சூர் இளங்கோயில், வைகன் மாடக்கோயில், கருவூர் ஆகிலை என்ற பெயர்களை நோக்குக. இஃதேபோல் திருவெண்ணெய் நல்லூர்க் கோயிலுக்கும் அருட்டுறை (அருள் + துறை) என்ற தனிப்பெயருண்டு. சுந்தரமூர்த்தி சுவாமிகட்கு அருள் புரிந்தமையால் இப்பெயர் வந்ததாகச் சிலர் கருதுகின்றனர். இது தவறு. சுந்தரமூர்த்தி சுவாமிகட்கு இருநூறாண்டு முற்பட்டவராகிய திருநாவுக்கரசு சுவாமிகள் "பெண்ணை அருட்டுறை தண் பெண்ணாகடம்" என்று க்ஷேத்திரக் கோவைத் தாண்டகத்தில் கூறியுள்ளார். உமையம்மையாருக்கு அருள்புரிந்தமையால் அருட்டுறையாயிருத்தல் கூடும். திருநாவுக்கரசு சுவாமிகள் இவ்வூரில் தேவாரம் பாடியதாகப் பெரியபுராணம் கூறுகின்றது. "திருவதிகைப் பதி மருங்கு திருவெண்ணெய் நல்லூரும் ......மருவு திருப்பதி பிறவும் வணங்கி வளத்தமிழ்பாடி........." என்பதை நோக்குக. இப் பதிகம் கிடைத்திலது.

இத்தலத்து விநாயகர் பொல்லாப் பிள்ளையார் என்பார். (பொல்லா=பொள்ளாத=உளியாற் பொளியாத=சுயம்பு.) இவர் சிவஞானபோதச் சூர்ணிக்கொத்து அருளியதாக ஆன்றோர் சிலர் கூறுவர். இது பொல்லாப் பிள்ளையார் அருளியதன்று என்றும் சுவாமிநாததேசிகர் என்பார் இயற்றியதென்றும் உயர்திரு. மறைமலையடிகள் கூறுகின்றார்கள். இத்தலத்துச் சுவாமி பெயர் வடமொழியில் கிருபாபுரீசுவரர் என்பது. பழைய கல்வெட்டுக்களில் தடுத்தாட்கொண்ட தேவர் என்றிருக்கிறது. உமாபதிசிவமியற்றிய சிவக்ஷேத்திர சிவநாமக் கலிவெண்பாவில் சுவாமி பெயர் தடுத்தாட்கொண்ட தேவர் என்றும், தேவி பெயர் வேற்கண்மங்கை யென்றும் காணப்படுகின்றன.

திருமுனைப்பாடி நாட்டில் திருநாவலூரில் சடையனுருக்கும் இசைஞானியாருக்கும் தவப்புதல்வராக நம்பி ஆரூரர் பிறந்து நரசிங்க முனையரையர் என்ற அரசரால் அன்புடன் வளர்க்கப் பெற்று (மணந்தவிர்ந்த) புத்தூரில் திருமணம் செய்துகொள்ளும் போது சிவபெருமான் ஒரு கிழ அந்தணர் வடிவுபூண்டு வந்து "இம் மணமகன் எனக்கடிமை. இவன் மணம் செய்யலாகாது. வேலை செய்தல்வேண்டும். இவன் தந்தையின் தந்தை எழுதிக்கொடுத்த அடிமை யோலை என்னிடம் உள்ளது" என்றார். இதைக் கேட்ட நம்பியாரூரர் "அந்தணர்க்கு அந்தணன் அடிமை ஆதல் இல்லை. பித்தனே, ஏன் இவ்வாறு கூறுகிறாய்" என்றார். கிழவர் "பித்தனும் ஆக, பேயனும் ஆக, வித்தகம் பேசவேண்டாம்; பணி செய்யவேண்டும்" என்றார். நம்பியாரூரர் கிழவரிடமிருந்த ஓலையைக் கிழித்தெறிந்தார். கிழவர் "இவன் கிழித்தது படியோலை. மூலஓலை திருவெண்ணெய் நல்லூரில் என்னிடமுள்ளது. அதைக் காட்டுவேன்" என்றார். அனைவரும் புத்தூரிலிருந்து திருவெண்ணெய்நல்லூரை

யடைந்தார்கள். ஆங்கு மறைக்கிழவர் அந்தணர் பேரவையில் தமது வழக்கை யுரைத்தனர். அவையினர் "ஆட்சியில் ஆவணத்தில் அன்றி மற்றயலார் தங்கள் காட்சியில் மூன்றில் ஒன்று காட்டுவாய்" என்று கட்டளையிட்டனர். கிழவரும் மூலவோலையைக் காட்ட, அதிலிருக்கும் கைச்சாத்து, வேறு உண்மைக் கைச்சாத்தோடு ஒப்பு நோக்கப்பட்டது. அவையினர் மூலவோலை உண்மையோலை யென்றும், நம்பியாரூரர் வெண்ணெய்நல்லூர்ப் பித்தனுக்கடிமை யென்றும், அவன் ஏவல் செய்தல் கடன் என்றும் பணித்துத் தங்கள் ஊரில் கிழவரது மனையும் நீடு வாழ்க்கையும் காட்டுமாறு விரும்பினர். "வாருங்கள்" என்றழைத்துச் சென்று மறைக்கிழவர் திருவருட்டுறை ஆலயத்துள் மறைந்தனர். அவையினர் திகைத்து நின்றனர். நம்பியாரூரர் தொடர்ந்தழைப்பக் கிழவர் ஆகாயத்தில் விடைமேற் காட்சியளித்து "நமது பழைய தொண்டனாகிய நீ இவ்வுலகில் நம் ஏவலாற் பிறந்தனை. நாம் தடுத்து ஆட்கொண்டோம். நீ வன்மை பேசி வன்தொண்டன் என்னும் நாமம் பெற்றாய். நம்மைச் சொற்றமிழ் பாடு" என்று அசரீரியாக அருளினார். நம்பி "நாயேன் யாதினை அறிந்து என் சொல்லிப் பாடுகேன்" என்ன இறைவன் "முன்பெனைப் பித்தன் என்றே மொழிந்தனை; ஆதலாலே என் பெயர் பித்தன் என்றே பாடுவாய்" என்றனன். நம்பியாரூரர் என்ற சுந்தரமூர்த்தி சுவாமிகளும்,

"பித்தா! பிறைசூடீ! பெருமானே! அருளாளா!"

எனத் தொடங்கும் தேவாரப் பதிகத்தைப் பாடியருளினார்.

இவ் வரலாற்றுக்கு ஆதரவாகத் திருவெண்ணெய்நல்லூர் ஆலயச் சுவர்களிலுள்ள கல்வெட்டுக்களில் "தடுத்தாட்கொண்ட தேவர், ஆவணங்காட்டி யாட்கொண்டான், விருத்த வேதியன், பித்தன், பிச்சன் என்று பாடச் சொன்னான், வழக்கு வென்ற திருவம்பலம்" என்ற குறிப்புக்கள் உள்ளன. சிவபெருமான் சந்நிதிவாயிலுக்கு மேலே இடப வாகனாரூடமூர்த்தமும் கற்சிலையி லமைக்கப்பட்டுள்ளது திருவெண்ணெய்நல்லூருக்குச் சமீபத்தில் தடுத்தாட்கொண்டவூர், மணந்தவிர்ந்த புத்தூர் என்ற ஊர்களுமுள்ளன. சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரத்திலேயே,

அடக்கங்கொண்டு ஆவணங்காட்டிநல்
வெண்ணெயூர் ஆளுங்கொண்டார்... 17, 10
அன்று வந்தெனை அகலிடத் தவர்முன்
ஆள தாகவென்று ஆவணங் காட்டி
நின்று வெண்ணெய்நல் லூர்மிசை ஒளித்த நித்திலத்திரள் 62, 5

வெண்ணெய் நல்லூரில், அற்புதப்பழ ஆவணங் காட்டி
அடியனென்னை ஆளது கொண்ட' நற்பதத்தை...68. 6

என்ற அகச்சான்றுகள் உள்ளன.

இனி, "சிவஞான சித்திக்குமேல் சாத்திரமில்லை" எனப் புகழப்படும் சிவஞான சித்தியார் என்ற சிறந்த சாத்திரநூலுக்கு முதல் நூலாக விளங்குவது "சிவஞான போதம்" என்பது. இதன் ஆசிரியராகிய மெய்கண்டதேவ நாயனர் "சித்தியார்" ஆசிரியராகிய அருணந்தி சிவாசாரியாருக்கு ஞானோபதேசம் செய்த ஞான குருவாவார். மெய்கண்டதேவர் சிவானுபூதி கூடிச் "சிவஞான போதம்" திருவாய் மலர்ந்தருளியது இத் திருவெண்ணெய் நல்லூரிலேயாம். இதன் விரிவை இந்நூலிற் காண்க. சிவஞான போதத்தின் சாரமும் விரிவுரையும் இந்நூலுள் வெளிவந்துள்ளன. இவரது காலத்தைப்பற்றிய கட்டுரை, கல்வெட்டுக்களைக் கீழே காண்க. இவர் சந்நிதி வடக்கு வீதியில் வடமேற்கு மூலையிலுள்ளது.

திருவெண்ணெய் நல்லூரில் கி. பி. 12 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் (அதாவது மெய்கண்டார் காலத்துக்கு நூறாண்டுகள் முன்னர்) சடையப்ப வள்ளல் என்ற வேளாளத் தலைவர் ஒருவர் இருந்தார். இவர் கம்பருக்கு வேண்டிய உதவிகளைப் புரிந்து அவர் இராமாயணம் பாடுதற்குப் பெரிதும் துணைசெய்தார், கம்பர் தெய்வத் திருவருள் பெற்றுப் பாடிய "மோட்டெருமை வாவிபுக" என்ற முதற் செய்யுளிலும் சடையப்பவள்ளலைச் "சரராமன்" என்று புகழ்ந்தார். சடையப்பவள்ளல் பொருளுதவியைக்கொண்டு கம்பராமாயணத்தின் பெரும் பகுதி திருவெண்ணெய் நல்லூரிலேயே பாடப்பட்டு ஏட்டிலும் பதியப்பட்டது. "ஏரெழுபது" என்ற நூலும் இவ்வூரில் இவர் முன்னிலையில் கம்பரால் அரங்கேற்றப்பட்டது. கம்பர் சடையப்பரை இராமாயணத்துள் பத்து இடங்களில் வைத்துப் பாடியுள்ளார். அவற்றுள் சில, வெண்ணைவாழ் கன்னன் (=கர்ணன், கொடையன் - அல்லது புலவர்க்குக் கண் போன்றவன்), வெண்ணைச் சடையன், கொடை மீளி யண்ணல் சரராயன் வெண்ணை யனுகும் வள்ளற் சடையன் வெண்ணைமன் சடையன் என்பனவாம். இவரையே சோழ மண்டல சதகம் புதுச்சேரிக் கொடையன், புதுவைச் சடையன், வெண்ணைத் திரிகர்த்தன், திரிகர்த்தராயன் என்று புகழ்ந்து கூறுகிறது இவருடைய தகப்பன் பெயர் சங்கரன் என்று ஷை சதகமும் பிற நூல்களும் கூறுகின்றன. இவர் ஒருகாலத்தில் தமிழ் மூவேந்தர்க்கும் அவர்கள் பரிசனங்கட்கும் பெரு விருந்தளித்து அவர்களால் திரிகர்த்தராயன் என்ற சிறப்புப் பெயர் சூட்டப் பெற்றார். ஈழ நாட்டில் ஓராண்டில் பஞ்சம் வந்தபோது அந்நாட்டரசன் பரராச சிங்கப் பெருமான் என்பான் இவ் வள்ளலுக்குச் சீட்டுக்கவி யனுப்பி இவருத

விபை நாட, இவர் ஆயிரம் கப்பல்நிறைய நெல்லனுப்பி உபகரித்தார். தானிய ஏற்றுமதித் தொழிலில் புதுச்சேரிக் கடற்றுறையிலும் இவர் சிறப்புற்றிருந்தார். இவர் நாடோறும் ஆயிரம் புலவர்கட்குப் பாலுஞ் சோறும் அளித்த வள்ளலாவார். இவருக்குச் சோழநாட்டிலும் மிகப் பெரிய காணிவளமும் திருவியலூரில் சில்காலஉறைவிடமும் இருந்தன. இவைகளைமட்டும் ஆதாரமாகக்கொண்டு சிலர் திருவெண்ணெய் நல்லூரென்பது மாயவரத்துக் கருகிலுள்ள குற்றாலம் ரயில்வே ஸ்டேஷனுக்கு வாயு மூலையிலுள்ள ஒருரென்றும், சடையப்ப வள்ளல் சோழநாட்டினர் என்றும் கூறுகின்றனர். இது தவறு.

எட்டுத் திசையும் பரந்தநிலா வெறிக்கும் கீர்த்தி யேருழவர்
சட்டப் படுஞ்சீர் வெண்ணெய்நல்லூர்ச் சடையன் கேடிலன் சரிதமெலாம்
ஒட்டிப் புகழ ஆயிரநா வுடையார்க் கன்றி யொருநாவின்
மட்டுப் படுமோ அவன் காணி வளஞ்சேர் சோழ மண்டலமே.

புரந்தர தாரு புதுவைச் சடையன்
இருந்த வியலூர்தென் மேற்கு—பரந்தபொன்னி
ஆற்றுநீ ரால்விளை யும் அப்பாற் கிழக்கரிசி
மாற்றுநீ ரால்விளையு மாம்.

என்ற சோழமண்டல சதகச் செய்யுட்களிலிருந்து புதுவைச் சடையன், வெண்ணெய் நல்லூர்ச் சடையன், கேடிலன் எனப் புகழப்படுவோர் நடுநாட்டின ரென்பதும் அவருக்குக் காணிவளம், சில்கால இருக்கை முதலியன சோழநாட்டிலிருந்தன வென்பதும் புலனாகும். இதனை வலியுறுத்தவேறுபல மேற்கோள்களும் உண்டு. மூவேந்தர்க்கும் ஒருங்கே விருந்தளித்து திரிகர்த்தராயன் என்ற பட்டம் பெற மூவர்க்கும் பொதுவாய நடுநாட்டினர் ஒருவர்க்கே கைகூடும் என்பது வெளிப்படை. இவரைப்பற்றிய விரிவான ஆராய்ச்சியைச் "செந்தமிழ்" மூன்றாந் தொகுதியில் திரு. ரா. இராகவையங்கார் எழுதிய "கம்பர்" என்ற கட்டுரையிற் கண்டுகொள்க. கம்பர் தாம் உயிர்விடுந் தறுவாயில் பாடிய பாட்டிலும் சடையப்பவள்ளல் பெயரையும் அவரது நன்றியையும் மறவாது கூறியுள்ளார்.

அருணகிரிநாத சுவாமிகள் திருவெண்ணெய் நல்லூரி லுள்ள முருகக்கடவுள் மயில்மீது நடம்புரிதலைக் கண்குளிரக் கண்டு திருப்புகழ் ஒன்றும் திருவாய்மலர்ந்துள்ளார். திருநாவலூர்ப் புராண ஆசிரியர் இராசப்ப நாவலர் இவ்வூருக்கும் ஒரு கலம்பகம் செய்துள்ளார்.

திருவெண்ணெய்நல்லூர் ஆலயத்திலுள்ள கல்வெட்டுக்கள்

க. 423/21. இதில் திருமுனைப்பாடி நாட்டுத் திருவெண்ணெய் நல்லூர் தடுத்தாட்கொண்ட தேவர்க்குக் கூடல் ஆளப்பிறந்தான் அரசநாராயணன் என்ற காடவராயன் சில கிராமங்களின் வரிகளைத் தானம் செய்தது கண்டிருக்கிறது.

உ. 430/21. ஜடாவர்மன் வீரபாண்டியன் 5-ஆண்டு 12-11-1301 தடுத்தாட்கொண்ட நாயனர்க்கு நந்தவனம் வைப்பதற்காக 25-பணத்திற்கு விக்கிரமபுரத்து ஊராருக்கு 500 குழி நிலம் விற்றது.

ங. 431/21. கோப்பெருஞ் சிங்கன் 27-ம் ஆண்டு 28-3-1268. செஞ்சியைச் சேர்ந்த ஒரு மத்தியஸ்தனான உடையான் ஸ்ரீசைலாய முடையான் என்பவன் திருவெண்ணெய்நல்லூர் ஆட்கொண்ட தேவர்க்கு ‘பிச்சன் என்று பாடச்சொன்னான்’ என்ற பெயருடைய இரண்டு வெள்ளி மூரசும், ஒரு பொன்கால்காறையும் தானம் செய்தது.

ச. 435/21. இராசராச தேவர் 5-ம் ஆண்டில் ஆட்கொண்ட தேவர் சந்தி விளக்குக்காக ஆலாலசுந்தரப் பெருந்தெருவில் வசித்த ஒருவன் 4-பசு தானம் செய்தது.

ரு. 437/21. தேவாரம் ஓதிக்கொண்டு திருவிழாக்களில் தெருவழியாகப் போகும் உரிமைகளின்பொருட்டு ஒரு சண்டையில் உயிர் துறந்த திருப்பூவண முடையார் இலங்கேசுவரனுக்கு வெண்ணெய்நல்லூர் கைக்கோளர்கள் பெருமான் ஆலாலசுந்தரப் பெருமாள் கட்டளையின்படி திருச்சின்னம் முழக்க சிறுமுறி தந்தது ருதிரோத்காரி வைகாசி 22-தேதி. அரசன் பெயரில்லை.

சு. 441/21. குலோத்துங்கசோழன் 29-ஆண்டு “வழக்கு வென்ற திருவம்பலம்” என்ற கல்மண்டபம் கட்ட சில குடிகளுடைய வீடுகளை எடுத்துக்கொண்டு வேறு இடம் தந்தது. இது கோயில் பிராகாரத்தில் வடகிழக்கு மூலையிலுள்ள மண்டபம்போலும்.)

எ. 446/21. கோயில் அதிகாரிகள் சூரிய நாராயணன் என்பானுக்குத் தடுத்தாட்கொண்ட நல்லூர், செங்காடன் குளத்தூர் என்ற ஊர்களை விற்றது.

அ. நடராசர் வீற்றிருக்கும் அறையின் வடசுவரில் அடிவரியில் ஒரு சாசனம் சுந்தரர்க்காக வெட்டப்பட்டுள்ளது. இதனைப் படியெடுத்துள்ளோம் அதில் சில முக்கியமான வரிகள் வருமாறு: நாச்சியாரோடும் பூசை கொண்டருளுகிற ஆளுடைய நம்பிக்கு அமுதுபடி புறவிட்ட நிமந்தங்களுக்கு உடலாக நாங்கள் இவ்வாளுடைய நம்பி ஸ்ரீ கரத்திலே நீர் வார்த்த நிலமாவது * * * * இந்நிலம் அரைவேலியும் இவ் ஆளுடைய நம்பிக்கு வேண்டும் அமுதுபடி உள்ளிட்ட நிமந்தங்களுக்கு உடலாகக்கொடுத்த இந்நிலம் * * * இப்

பரிசு சந்திராதித்தர் வரை செல்லக்கடவதாகச் சம்மதித்து இவ் ஆளுடைய நம்பி ஸ்ரீகரத்திலே நீர்வார்த்து சிலாலேகை பண்ணிக் கொடுத்தோம். ** இத்தேவர்க்கு யாண்டு கஙு-வது (ராசாதி ராச தேவர்?) இவ்வூர் களத்தூர் சிறிய நம்பி ** இவ்வூரில் பூசைகொண்டு அருளுகிற ஆளுடைநம்பிக்கு அடைக்காயமுதும் இலையமுதும் செல்வித்தாக பூர்வமாக தானம் பண்ணிக் கொடுத்திட்ட நிலம். **

இக்கோயிலில் சில பாடல்களும் செதுக்கப்பட்டுள்ளன. அவற்றுள் பித்தன், விருத்தவேதியன், ஆவணங்காட்டி யாட்கொண்டான் என்ற குறிப்புக்கள் உள்ளன.

திருவெண்ணெய்நல்லூர்த் திருப்புகழ்

பலபல தத்துவ மதனை யெரித்திருள்
பரையர ணப்படர் வடவன லுக்கிரை
படநட நச்சுடர் பெருவெளி யிற்கொள விடமேவிப்

பவன மொழித்திரு வழியை யடைத்தொரு
பருதி வழிப்பட விடல்தக னத்தொடு
பவுரி கொளச்சிவ மயமென முற்றிய பரமூடே;

கலகலெ னக்கழல் பரிபுர பொற்பத
வொலியலி யத்திரு நடன மியற்றிய
கனக சபைக்குளி லுருகி நிறைக்கட லதில்மூழ்கிக்

கவுரி மினற்சடை யரனெடு நித்தமொ
டனக சகத்தவம் வருதலு மிப்படி
கழிய நலக்கினி நிறமென விற்றுட லருள்வாயே;

புலையர் பொடித்தளும் அமண ருடற்களை
நிரையில் கழுக்களி லுறவிடு சித்திர
புலவனெ னச்சில விருது படைத்திடு மிளையோனே

புனமலை யிற்குற மகளய லுற்றொரு
கிழவ னெனச்சுனை தனில வளைப்புய
புளகித முற்றிபம் வரவணை யப்புணர் மணிமார்பா;

மலைசிலை பற்றிய கடவு ளிடத்துறை
இழவி யறச்சுக குமரி * தகப்பனை
மழுகொடு வெட்டிய விமலிகை பெற்றருள் முருகோனே.

மகிழ்பெணை யிற்கரை பொழில்முகில் சுற்றிய
திருவெணெய் நற்பதி புகழ்பெற அற்புத
மயிலின் மிசைக்கொடு திருநட மிட்டுறை பெருமாளே.

திருவெண்ணெய்க் கலம்பகம்

நேரிசை ஆசிரியப்பா

இல்லற வியற்கைத் தொல்லுல கறிய
இளங்கொடி யொருபால் விளங்கவீற் றிருந்துந்
துறவற மிஃதென் றறவர் நன்குணர
ஏகமாய் நின்று மநேக சீவரிலுங்
கலந்துங் கலவா திலங்குசெஞ் சுடரே!
விண்வளி தீநீர் மண்ணுளொன் றிரண்டு
மூன்றுநான் கைந்தாய்த் தோன்றிய பரமே!
யாவரு மெமது தேவனென் றுள்ளத்து
அமைவுற மூவிரு சமையமும் வகுத்தாங்கு
அவையிடை விளங்கு நவையறு வரமீந்து
அருள்புரி யிறைவ! நிருமலச் சொருப!
ஐந்தொழி லியற்று மந்திரப் பொருளே!
இருவினைக் கடலுக் கொருபெரும் புணையே!
வாக்கொடு மனமுந் தாக்கருஞ் சிவமே!
நீறணி பவருள் ளூறிய வமுதே!
அப்பனே ! யாவு மொப்பிலாமணியே!
வேண்டற் குரிய மாண்டவப் பேறே!
அவனவ ளதுவென் றுவமையின் முதலே!
முதலிடை யீறிர கிதமறைப் பொருளே!

---

* தக்கனை வீரபத்திரரால் மழுக்கொண்டு வெட்டுவித்த நின்மலி.

ஐயனே! கருணை பெய்யுமா முகிலே!
விரும்பிய வளிக்கும் பெருங்கற் பகமே!
மூவா விமலா! தேவா திபனே!
காண்டற்கரிய தூண்டா விளக்கே!
புண்ணிய பலன்செய் பெண்ணைத் தென்பால்
வெண்ணெயம் பதியி னண்ணிய பிரானே!
காம மாற்சரிய மாமத மோகங்
குரோத மூலோபம் விரோத மிடம்பம்
நடுவிலை யின்மைக் கொடுமையா தியவாம்
பொல்லா வியற்கை யெல்லாம் பொதிந்த
உருவெடுத் துன்றன் றிருவடி மறந்த
நாயினுங் கடையனைத் தாயினு மன்பாய்
அற்புத நல்கு நிற்புகழ் பாடப்
பணித்தநின் கருணை யெனிற்கரை யின்றால்
இவ்வண மினுமுன் செவ்வணம் புகழ்ந்தாங்கு
ஈறிலாப் பருவ மாறிமா றிவருங்
கண்ணிமைப் போலு மெண்ணரும் பிறவி
எடுத்திண் டுழல்வது விடுத்து மாறாத
நவிலரு மின்பச் சிவகதிச் செல்வம்
எளிதிற் பெறவுன் னுளங்கூர்ந்து
அருள்புரி வதும் பெரிதுந்நின் கடனே. (செய்-௪௦)

—இராசப்ப நாவலர்.

மெய்கண்டதேவர் கல்வெட்டும் காலமும்

இது திருவண்ணாமலை ஸ்ரீ அருணாசலேசுவரர் கோயில் முதற் பிரகாரத்து வடசுவரிலுள்ளது. (1902ஆம் வருஷத்திய 485 நெ.) சாசனமாக கல்வெட்டிலாகா அதிகாரிகளால் குறிக்கப்பட்டுள்ளது. ஷை இலாகா அதிகாரிகளின் அனுமதியின்பேரில் இங்கு வெளியிடப்படுகிறது. கல்வெட்டிலுள்ள எழுத்துப் பிழைகள் திருத்தப்பட்டுள்ளன.)

ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவனச்சக்கரவர்த்திகள் ஸ்ரீராசராசதேவர்க்கு யாண்டு கக-வது ரிஷபஞாயிற்று இருபத்தெட்டாந் தேதியும் சனிக்கிழமையும் பெற்ற மிருகசிரிஷத்துநாள் உடையார் திருவண்ணாமலை

யுடைய நாயனார் கோயில் ஸ்ரீ மாஹேசுவரக் கங்காணி செய்வார்களும் தேவர்கன்மி கோயிற் கணக்கனும் திருவெண்ணெய் நல்லூருடையான் மெய் கண்டதேவன் ஊருடைய பெருமாளான எடுத்தது வலிய வேளார்க்குக் கல்வெட்டிக் கொடுத்த பரிசாவது, இந்நாயனார் தேவதானஞ் செங்குன்ற நாட்டு மாத்தூரான இராசராசநல்லூரில் இவர் வெட்டுவித்த மெய்கண்டதேவப் புத்தேரிக்கு கடமை யிருக்கு மிடத்துத் திருத்தின ஆண்டு குழி காழியும் பாடிகாவலுங் கொள்ளக் கடவதாகவும். இதன் எதிராமாண்டு கால் வரிசையும் பாடிகாவலும்,இறுக்கக் கடவதாகவும். இதன் எதிராமாண்டு முதல் காலே அரைக்கால் வரிசையும் பாடிகாவலும் உட்பட வேலி எண் பதின் கலம் இறுக்கக் கடவதாகவும். இவ்வேந்தலுக்கு எல்லை அர சுக்குக் கிழக்கு நீரேறின நிலம் திருத்திப் பயிர் செய்யக்கடவதாகவும். இவ்வேந்தலுக்குப் புஞ்சைநிலம் அரசுக்குக்கிழக்கு, திருக்கோவலூர் பெருவழிக்கு வடக்கு. இவ்வேந்தலைச் சூழ்ந்த நில த்திலே ஐந்துவேலி தரை எல்லையாய்ப் பண்டாரத்துக்குக் கடமை இறுக்கக்கடவதாகவும். இவ்வேந்தலில் திருத்தப்பட்ட நிலத்திலே இவ்விராசராசநல்லூரில் எழுந்தருளுவிக்கிற உடையார் மெய்கண்டீசுவரமுடைய நாயனார்க்கு பூசைக்கும் அமுதுபடிக்கும் மூன்றில் ஒன்று தேவதான மாவதாகவும். இவ்வேரிக்கு ஏரிப்பட்டி மன்றுட்டுப்பட்டியுமாக ஐஞ்ஞூறு குழி விடக்கடவதாகவும். இவ்வேந்தல் தம் பொருளிட்டு வெட்டுகிற நிலம் இவ்வேரியும் நிலமும் குடிநீங்கா தேவதானமாய் இவர்க்கு சந்திராதித்தர் வரையும் காணியாய் விற்றொற்றிப் பரிக்கிரகஞ் செல்லக்கடவதாகவும். இப்படி சம்மதித்துக் கல்வெட்டிக் கொடுத்தோம் இவ்வனைவோம். இது பந்மாஹேஸ் வரரக்ஷை.

குறிப்பு :—மெய்கண்டான் யாண்டு ஐப்பசியில் தொடங்குவதாகவும் முதலாண்டு கி. பி. 1222 இல் தொடங்கியதாகவும் கூறும் வழக்க மொன்று தமிழ் நாட்டில் சில காலமாகவுளது, அதன்படி நிகழும் ஆங்கீரசஞூ ஐப்பசியில் மெய்கண்டான்யாண்டு 710 ஆரம்பமாயிருக் கிறது. உமாபதி சிவாசாரியார் சங்கற்ப நிராகரணத்தில்,

"ஏழுஞ் சிறுநூறு எடுத்த ஆயிரம்—வாளுநத் சகன மருவா நிற்ப"

என்கிறார். இது சாலிவாகன சகாப்தம் 1235 அல்லது கி. பி. 1313ஆம் ஆண்டைக் குறிப்பதாகும். மேற்கூறிய கல்வெட்டு, உமாபதி சிவம் செய்யுள் ஆகிய இரண்டையும் ஆதாரமாகக் கொண்டு காலஞ்சென்ற கல்வெட்டு நிபுணர் திரு. தி. அ. கோபிநாதராயரவர்கள் "செந்தமிழ்" ௩ ஆம் தொகுதி 189, 190 ஆம் பக்கங்களில் மேல்வருமாறு கூறி யுள்ளார் :—

"இச்சாஸநம் திரிபுவன சக்கரவர்த்திகள் ராசராசதேவர் II. ஆட் சியில் 16வது வருஷத்தில் இக்கோயிலிற் பதிக்கப்பட்டது. இவ்

வரசன் கி. பி. 1216ல் பட்டம்பெற்றான். ஆகவே, இச்சாசனத்தின் காலம் 1232 கி. பி. என்பது பெறப்படும். இச்சாசனத்திற் கண்ட மெய்கண்டதேவனே சந்தான குரவருள் முதல்வரான மெய்கண்டதேவர் என்பார் என்பது எந்துணிபு. ஆயின் இவரேன் இச்சைவாசாரியர் பெயர் பூண்ட வேறொருவராயிருக்கக் கூடாது என்னும் சங்கை யுண்டாகலாம். அதற்கு சமாதானம் கூறுவோம். கி. பி. 1232-ல் சைவாசாரியாராகிய மெய்கண்டதேவர் பெயர் பிரபலப்பட்டிருந்ததென்று கொண்டு அப் பெயர் படைத்தவன் இச்சாசனத்திற் கூறியவன் எனில், இவன் விக்ரக ஸ்தாபனம் பண்ணவும், அதற்குத் தானங்கள் செய்யவும் உத்தேசம் 30 வயதுள்ளவனாயிருக்க வேண்டும். இவனுக்கு முந்தி யிருந்தவர் பிரபல மடைந்திருந்தார் எனின், அவர் ஏதேனும் இவனுக்கு 50-60 வருஷங் களுக்கு முன்னாகிலும் இருந்திருக்கவேண்டும். ஆதலால், இவர் காலம் சற்றேறக் குறைய கி. பி. 1150 ஆக வேண்டும். அப்பொழுது இவருக் கும் உமாபதியார்க்கும் இடையில் சுமார் 165 வருஷங்களாயிருக்க வேண்டுமென்று பெறப்படும்.

தகப்பன் பிள்ளை முறையில் வரும் பரம்பரையிலே சாதாரணமாக ஒவ்வொருவருக்கும் 30 வருஷம் கொடுக்கில் போதுமென்றிருக்க, ஆசாரிய சிஷ்ய பரம்பரையில் அவ்வாறு 30 வருஷம் கொடுப்பினும் இவ்விருவர்க்கு மிடையில் 120 வருஷங்களுக்கு மேற்படாது. ஆயின் மேற்கண்டபடி இவ்விருவருக்கும் இடையில் 165 வருஷம் சென்றிருக்க வேண்டுமென்று பெற்றது ஏற்காது. இவ்வாபாசம் நேர்ந்ததற்குக் காரணம் சாசனத்திற் கூறியவனும் சைவாசாரியரும் தனித்தனி என்று கொண்டதனால் என்பது தெள்ளிதினுணரப்படும். அப்படிக் கொள்ளாது இருவரும் ஒரே மனிதர் என்று கொள்ளின் இது நேராது. இருவரும் ஒருவரே என்று துணிய இருவரும் திருவெண்ணெய் நல்லூருடையார் என்பது ஒருவாறு பயன் கொடுக்கிறது. ஆதலால், இவ்விருவரும் ஒருவரே என்று கொள்ளின் மெய்கண்டதேவர்க்கு ஊருடைப் பெருமாள் என்றும், எடுத்தது வலிய வேளார் என்றும் இரு மறுபெயர் களிருந்திருக்கவேண்டும் என்பது பெறப்படுகிறது. மேற்கூறிய வற்றாலும் உமாபதி சிவாசாரியாரின் கூற்றாலும், மெய்கண்டதேவர் உத்தேசம் கி. பி. 1232-லிருந்தார் என்பதாகக் கொள்ளலாம்."

———

பொருளடக்கம்

[எண் : பக்கஎண்]

உ

திருச்சிற்றம்பலம்

மெய்கண்டாரும் சிவஞானபோதமும்

மெய்கண்டார் வரலாறு

தோற்றுவாய்

எல்லாம் வல்ல இறைவன் தவத்திற் சிறந்த பெரியார் வாயிலாக அருள் நூலுண்மைகளை மன்னுயிர்களுக்குப் போதித் தருளுகின்ருன் என்பது பலசமயத்தாரும் ஒப்புக்கொண்ட கொள்கையாகும். மிகவும் பழைமையாகிய தென் தமிழ் நாட்டிலே,

> "ஓரால் நீழல் ஒண்கழ லிரண்டும்
> முப்பொழு தேத்திய நால்வர்க்கு
> ஒளிநெறி காட்டினை"

என்ற திருஞானசம்பந்தப் பெருமான் திருவாக்கின்படி சிவபிரான் முதன்முதல் நான்கு முனிவர்க்கு ஓராலமர நிழலின்கீழ் ஞான நெறியினைக் காட்டியருளினன். "அறம், பொருள், இன்பம், வீடு மொழிந்த வாயான்," என்றபடி அவர்களுக்கு நாற் பொருளையும் பற்றிய பொதுநெறி யறிவுறுத்தப்பட்டதென்று தெரிகிறது. இதனையே வேத நெறி என்பர். இந்நெறிக்குச் சிறந்த இலக்கியமாய்த் தற்காலத்தே இலங்குவது திருவள்ளுவர் நூலேயாகும்.

சிவபெருமான் வீட்டின்பத்தையே விழைந்து, அதற்குரிய மந்திரநெறியை அறிய விரும்பிய ஐந்து பெரியோர்க்குப் பெருமணிமலை என்னும் மகேந்திரமலையில் அந்நெறி காட்டும் அருள் நூலை அறிவுறுத்தினனென்பது,

"மன்னு மாமலை மகேந்திர மதனிற்
சொன்ன வாகமந் தோற்றுவித் தருளியும்"

என்ற திருவாசகத்தால் நன்கு விளங்கும். அப் பெரியோர் மரபில் வந்தோரே ஆதிசைவ மரபினர் ஆவர்.

பிறிதொரு காலத்தே திருக்கயிலாயமலையிலே பரமசிவன் திருநந்திதேவர்க்கு அறிவுநெறியினை அருளிச்செய்தனர். அவர்வாயிலாக எண்மருக்கு வெவ்வேறு காலத்தில் ஞான நெறியை அறிவுறுத்தியதாகத் தெரிகின்றது.

"நந்தி யருள்பெற்ற நாதரை நாடிடின்
நந்திகள் நால்வர் சிவயோக மாமுனி
மன்று தொழுத பதஞ்சலி வியாக்கிரமர்
என்றிவர் என்னோ டெண்மரு மாமே"

என்ற திருமூலர் திருவாக்கான் அஃது உணரப்படும். இவ் வெண்மர் பரம்பரை ஞானாமிர்த நூலுரையில் விவரமாகக் கூறப்பட்டமை காண்க. நந்திகள் நால்வரில் சனற்குமாரர் ஒருவர்; இவர் வழியில் விஞ்ஞானதேவர் சந்தானம், மெய் கண்டதேவர் சந்தானம் என இரண்டு பரம்பரைகள் தோன்றி விளங்கின. மெய்கண்டதேவர் பரம்பரையே நமது ஆராய்ச்சிக் குரிய தாகும்.

மாணிக்கவாசகப்பெருமான் காலத்தே புத்தசமயத்தால் வந்த இடர் ஒழிந்தது. பின்னர், திருமூலர் திருமந்திரம் வாயிலாகச் சைவசித்தாந்த ஞானம் தமிழ் நாட்டிலே வளர்ந்து வந்தது. தேவார முதல்வர்கள் காலத்தே சமண சமயத்தால் வந்த இன்னல்கள் நீங்கின. ஆழ்வார் காலத்திற்குப்பின் திருவிசைப்பாப் பாடிய அருட்புலவர்களால் சைவவொளி பரவிற்று. ஒன்பதாவது நூற்றாண்டிற்குப் பின்னே, வேத வியாசரியற்றிய பிரமசூத்திரத்திற்குச் செய்யப்பட்ட நால்வகைப் பேருரைகளாகிய நீலகண்ட பாடியம், சங்கரபாடியம், இராமா நுசபாடியம், மாத்துவபாடியம் என்னும் மாறுபட்ட விரிநூல்கள் தமிழ்நாட்டிலே பரவிச் சமயக்கொள்கைகளைப்பற்றிப் பெருங் குழப்பத்தை நிரப்பினமையால், சைவநன்மக்கள் திருமுறைகள்

முதலிய சித்தாந்த நூல்களின் உண்மைப்பொருள் உணராது அலமந்தனர். ஆதிமறைக் கருத்துக்களைச் சிறுபான்மை யுள்ளடக்கிய வடமொழி உபநிடதங்களுட்போந்த 'அத்துவித' மென்னும் சொல்லிற்குப் பொருள் இன்னதென்று தெரியாமல் அறிவுநூல் கற்போர் பலரும் மயங்கித் தியங்கினர். அம் மயக்கந் தீர்த்தற்பொருட்டும், திருமுறைப் பெருமையை உலகில் நாட்டற்பொருட்டும் சிவபெருமானது திருவருளினால் மெய்கண்டசந்தானம் இத் தமிழ்நாட்டில் ஏற்பட்டதாகத் தெரிகின்றோம்.

''நல்வியாத முனியுரைசெய் சூத்திரத்தின்
பாடியமோர் நான்குங் கொண்ட
சொல்வாய்மை பொருள்வாய்மை தெளிதலுற்ற
தோராது சோக முற்றோர்
எல்லாரு மத்துவித சத்தநிலை
யினிதெய்திச் சோக மோயப்
பொல்லாத சமயிகளு மதிசயிப்பப்
புவனிமிசைப் போத மேற''

என்று மெய்கண்டார் பிறப்பிற்குக் காரணங் கூறும் சந்தாநுசாரிய புராணசங்கிரகத் திருப்பாட்டால் அஃது இனிது விளங்கும். மெய்கண்ட தேவநாயனாரால், சித்தாந்த ஞான பரம்பரை, இந்நிலவுலகிலே பிற சந்தானங்கள் மறைவெய்திய பின் நிலைநாட்டப்பெற்றது. அப் பரம்பரையிலுள்ளார் மெய் கண்ட சந்தானத்தைச் சேர்ந்தவர்களென்று அழைக்கப் படுகிறார்கள்.

மெய்கண்ட சிவாசாரியார்புராணம் பதினெண்புராணத் துள் பவிடிய புராணத்துட் கூறப்பட்டதாகச் 'சந்தாநுசாரி யார் புராண சங்கிரகம்' என்னும் நூலியற்றிய சுவாமிநாத தேசிகர் தெரித்துள்ளார்.

''பம்பிட நவில்பு ராணம் பதினெட்டுள் பவிடி யத்தில்
எம்பெரு மக்கள் காதை யினையென நிகழு மன்றே.''

பவிடியத்துள் அவர் வரலாறு கேட்கப்படுவதற்கு இட மில்லை. மெய்கண்டதேவர் காலம் ஏறக்குறைய 800 ஆண்டு கட்கு முன்னரென்று ஊகிக்க இடமுண்டு. திரு உமாபதி சிவாசாரியார் தமது சங்கற்பநிராகரணத்துள் அந் நூல் இயற்றப் பட்ட காலம் "ஏழஞ்சு இருநூறெடுத்த வாயிரம், வாழுநற் சகனம் மருவா நிற்ப'', என்றவிடத்துச் சாலிவாகன சகாப்தம் 1235 ஆவது ஆண்டெனக் குறித்துள்ளாராகலின், அவர் காலத்திற்குச் சுமார் இரண்டல்லது மூன்று தலைமுறைக்குமுன் திரு மெய்கண்டதேவர் ஞானவொளிபரப்பத் தொடங்கினர் என்பது தெளிவாம். ஆயின் அவர் காலத்திற்குப் பின் பவிடிய புராணத்துள் அவர் வரலாறு கேட்கப்படக்கூடியது. அவர் காலத்திற்கு முன்னேயே பவிடியம் அவரது வரலாற்ஞேடு தோன்றியிருக்கு மென்று கோடல் சரித்திரவாராய்ச்சிக்குப் பொருத்தமானதன்று. எதிர்காலத்துச் செய்திகளை முற்கூறல் சோதிட நூலுக்கே பெரிதும் பொருத்தமாம். பவிடிய புராணம் சோதிட நூலுமன்று. பாரத முதலிய சில நூல்களுள் கால வியல்பு முதலியவற்றைக் கூறியிருத்தல் காலத்தின் பொது வியல்பு கூறியதாகுமேயன்றி வருங்கால மக்கள் சரித்திரங்களை விதந்தோதியதாகாது. தமிழ்ப் பெரியோரது சாத்திரங்கட்கு வடநூன்மூலம் வேண்டுமென்ற தப்புக்கொள்கை சில நூற்ருண்டுகளாக நம்மவர் மனதிற் புகுந்துநிற்பதே இங்ஙனம் மெய்கண்டதேவர் முதலிய சந்தானகுரவர் சரித்திரத்திற்கு வடநூல் மேற்கோள் கூறியதற்குக் காரணமாகும். இவ்வாறே உண்மையில் வடநூல் மேற்கோளில்லாத தலமான்மியங் களுக்கு வடநூல் மேற்கோள் கூறும் பொய்ந்நெறியும் நமது நாட்டில் நிலவுவதாயிற்று.

வரலாறு

தொண்டை நாட்டிற்குஞ் சோழநாட்டிற்கும் நடுவேயுள்ள தாய்த் திருநாவுக்கரசுநாயனருஞ் சுந்தரமூர்த்தி நாயனருந் தோன்றியிலங்கிய திருமுனைப்பாடியென்னும் நடுநாட்டிலே திருப்பெண்ணகடம் என்னுமூரிலே சைவ வேளாள குலத்திலே அச்சுதகளப்பாளர் என்னும் குலதிலகருக்குத் தவப்புதல்வராக,

திரு மெய்கண்டதேவர் தோன்றியருளினர். பண்டைத் தமிழரது செந்நெறிக்கொள்கையாகிய சித்தாந்த ஞானத்தை உலகில் நிலைநாட்டுவான் வந்த அருட்பேராசிரியர், பண்டைத் தமிழ் மக்களது சிறந்த நாகரிகத்தைப் பழுதுபடாவண்ணம் போற்றி வரும் சைவவேளாளர் மரபிலே தோன்றுதல் மிகவும் பொருத்த முடையதே. அவர் தவங்கிடந்து பெற்ற தனிப்புதல்வ ரென்பது யாங்ஙனமெனிற் கூறுதும்:

நாயனாரது தந்தை அச்சுதகளப்பாளர்க்குப் பன்னாளாகப் பிள்ளைப்பேறில்லாக் குறை யேற்பட்டிருந்ததால் தமது குலகுருவாகிய திருத்துறையூர் அருணந்திசிவாசாரியாரிடம் சென்று அக் குறை நீங்குதற்பொருட்டுச் செய்வது யாதென அவர் வினவினர். அப்போது ஆசிரியர் திருமுறையைப் பூசித்துக் கயிறுசாத்திப் பார்த்தனர்.

"பேயடையா பிரிவெய்தும் பிள்ளையினோ டுள்ளநினை
வாயினவே வரம்பெறுவ ரையுறவேண் டாவொன்றும்
வேயனதோ ளுமைபங்கன் வெண்காட்டு முக்குளநீர்
தோய்வினையா ரவர்தம்மைத் தோயாவாந் தீவினையே"

என்னுந் திருப்பாட்டுக் காணப்பட்டது. அச் செய்யுளுள் திருவெண்காட்டிலுள்ள முக்குளநீரில் நீராடுபவர்க்குப் பிள்ளையினோடு எண்ணிய யாவும் கைவருமென்று அறுதியிட்டுக் கூறியிருத்தலின், ஆசிரியர், அச்சுதகளப்பாளரைத் திருவெண் காட்டிற்குச் சென்று முக்குளநீரில் முழுகி அங்கெழுந்தருளி யிருக்கும் பெருமானையும் அம்மையையும் வழிபட்டு வரும்படி கட்டளையிட்டார். அக் கட்டளையைச் சென்னிமேற்கொண்டு அச்சுதகளப்பாளர் தம் மனைவியாரோடும் திருவெண் காட்டிற்குச் சென்று ஆசிரியர் விதித்தபடி யொழுகி அறங்கள் பலவுஞ் செய்துவந்தனர். அங்ஙனம் ஓராண்டு அவர் வதியுங் காலத்து ஒருநாள் அவருக்குக் கனவில் சிவபெருமான் தோன்றி 'அன்ப! இப் பிறவியில் மகப்பேறெய்தும் பான்மை நினக்கு இல்லை' என்றுரைத்தனர். அது கேட்ட அச்சுத களப்பாளர், 'ஞானசம்பந்தப் பெருமானது திருவருட்பாடலை

நம்பி ஈண்டுத் தவங்கிடந்ததின் பெரும்பயனாக இம்மையிலேயே நற்புதல்வனை நீவிர் அடியேற் கருளுதல்வேண்டும்,' என்று விண்ணப்பஞ்செய்து பன்முறை பணிந்தனர். அப்போது அம்மையப்பராகிய சிவபெருமான் கருணைகூர்ந்து, 'ஞானசம்பந்தன் நம்மைத் துதித்த பாட்டின்கண் உறுதி வைத்து எம்மை வழிபட்டமையால் அன்னவன் போன்ற மகவினை நீவிரும் பெற்று வாழ்திர்,' என்று திருவாய்மலர்ந்தருளினர். அதனைக்கேட்ட அச்சுதகளப்பாளர் அளவில்லாத மகிழ்ச்சியடைந்து நனவெய்தியபின் முன்போலவே சிவபெருமானை வழிபட்டு அறநெறியில் ஒழுகுவாராயினர்.

கனவிற்கண்ட தெல்லாம் பொய்யென்று ஒதுக்கி விடுதல் தவறு. கனவென்பது நுண்ணுடம்பின் நுகர்ச்சியாகவுள்ளது. நமது கண்ணிற்குப் புலனாக நின்றவுடம்பே தூலஉடம்பென்று கூறப்படும். அவ்வுடம்புகொண்டு நனவிலே உயிர் போதல் வருதல் முதலியன செய்யும். தூங்கும்போது கட்புலனாகாத நுண்ணுடம்பு பலவித நுகர்ச்சிகளை யடைதல்கூடும். அருந்தவத்தினரது கட்புலனுக்கு அருள்செய்யுங் கடவுள் அவரது நுண்ணுடம்பிற்கு மாத்திரையே புலனாகும் வண்ணம் தோன்றுதலுமியல்பே. தமது நுண்ணுடம்பைப் பருவுடம்பினின்றும் வேறுபிரிக்கும் ஆற்றலுடைய யோகிகள்கூட ஏனையோரது நுண்ணுடம்பிற்குப் புலனாகும் வன்மையுடையாரென்பது இவ்வாராய்ச்சியில் (Psychic Research) வல்ல மேலைநாட்டுப் பண்டிதர் சிலரும் ஒப்புக்கொள்ளக்கூடியதே. நனவிற் கண்டது கனவில் உருவெளித் தோற்றம்போல் புலனாவது இதனின் வேறாகும். கடவுளும் யோகிகளும் கனவில் தோன்றும் முறை வேறு. பின்னது பிற்பயன் விளைப்பது; முன்னது கைகண்ட பயனொன்றும் விளைப்பதில்லை. கனவில் தோன்றிய பெருமக்கள் தாம் அங்ஙனந் தோன்றியதை நனவில் உரைத்தல் கூடுமாதலின் அன்னவர் தோற்றத்தைக் கனவின் பொய்த்தோற்றத்தோடு பிறழக்கொள்ளுதல் தவறாகும். இதன் நுட்பங்கள் இவண் விரிக்கிற் பெருகும். இது நிற்க, வரலாற்றின் தொடர்ச்சியை நோக்குவோமாக.

பின்னர், அச்சுதகளப்பாளரது மனைவியார் வயிறு வாய்த்ததறிந்து பத்துத் திங்களிலும் செயற்பாலனவாகிய சடங்குகளனைத்தையும் அவர் உவகையோடு செய்து முடித்தனர். சைவ சித்தாந்த இளஞ் செஞ்ஞாயிருகிய மெய்கண்டதேவர் நல்வேளையிலே நிலவுலகமுய்ய உதித்தருளினர்.

"பண்டைமறை வண்டரற்றப் பசுந்தேன் ஞானம்
பரிந்தொழுகச் சிவகந்தம் பரந்து நாறக்
கண்டவிரு தயகமல முகைக ளெல்லாங்
கண் திறப்பக் காசினிமேல் வந்தவருட் கதிரோன்
விண்டமலர்ப் பொழில்புடைசூழ் வெண்ணெய் மேவும்
மெய்கண்ட தேவன்மிகு சைவ நாதன்
புண்டரிக மலர்தாழச் சிரத்தே வாழும்
பொற்பாத மெப்போதும் போற்றல் செய்வாம்."

(சிவஞானசித்தியார் - பரபக்கம்—செ - ௬)

அக்காலத்துச் செய்யவேண்டிய சடங்குகளையும் முடித்துத் திருவெண்காட்டப்பரிடம் விடைபெற்று, சுற்றத்தார் புடைசூழப் பிள்ளையோடும் மனைவியோடும் அச்சுதகளப்பாளர் திருப்பெண்ணாகடஞ் சென்று தமது மாளிகையில் வதிந்தனர். அவ்வூராரெல்லாம் பிள்ளைப் பேறெய்திய நற்செய்தி கேட்டுக் களிப்படைந்தனர்; அவ்வருட் குழந்தைக்கு முதலில் சுவேதவனப்பெருமாளென்ற திருவெண்காட்டடிகள் திருப்பெயரிடப்பெற்றது. சிலநாட் சென்றபின் திருவெண்ணெய் நல்லூரிலுள்ள நன்மாமனார் குழந்தையை எடுத்துத் தமதில்லத்திற்குக் கொண்டுபோய் வளர்த்துவந்தனர். அங்ஙனம் வளர்ந்துவரும் நாளிலே சுவேதவனப்பெருமாள் முற்பிறவியிலேயே சரியை கிரியை யோகம் முதலியன முடித்துச் சிவஞான மடைதற்குரிய பெருந்தவத்தினராதலின் இரண்டு வயதளவிலே 'அடிசேர் ஞானம்' அடைதற்குரிய சாமுசித்தநிலை எய்தினர். முற்பிறவியில் உறுதியாகப் பயின்ற கல்வி இப்பிறவியில் இளமையில் எளிதாகத் தழைத்தோங்கி ஒளிர்வதை இயற்கையிலேயே கணிதநூல்வன்மை பெரிதும் படைத்திலங்கும் சில பிள்ளைகளிடம் கண்கூடாக இன்றுங் காண்கின்றோம். இலக்கியங்களை மூன்று அல்லது நான்கு

வயதில் படித்துப் பொருள்கூறும் குழந்தை ஒன்று சமீப காலத்தில் பர்மாவில் தோன்றியதாகக் கேள்விப்படுகிறோம்.

"ஒருமைக்கட் டான்கற்ற கல்வி யொருவற்
கெழுமையு மேமாப் புடைத்து"

என்றார் திருவள்ளுவர். ஒரு பிறவியிற் கற்ற கல்வியின் பயனாகிய நல்லறிவு பல பிறவிகளிலும் உயிரோடு கலந்து வளர்ந்து நிலைபெறுதல்போலப் பல பிறவியிற் கற்ற பெரும் பயன் ஒரு பிறவியிலே இளம்பருவத்திலேயே அளவிலடங்காது பொங்கி மிளிர்தல் கூடும். அத்தகைய கல்வி போலப் பல பிறவிகளிற் கடவுள்மாட்டு அன்பு செலுத்தி இயற்றப்படும் அருந் தவமானது ஒரு பிறவியிலே அத் தவத்தின் எல்லையற்ற பயனாகிய கடவுளது அருட்காட்சியை யளிக்கவல்லது. சைவ சித்தாந்த சமயத்திற்கு முதற்றலைவராகிய ஞானசம்பந்தப் பெருமானும் சித்தாந்த ஞானபரம்பரைக்கு முதற்றலைவராகிய மெய்கண்டதேவ நாயனாரும் உலகமுய்யவே தோன்றியருளினர் என்பது அவர்கள் குழவிப் பருவத்திலேயே உலகநெறி செல்லாது கடவுளது அருண் ஞானநெறியிலேயே நிற்கும் உயர்நிலை எய்தினமையால் விளங்கும்.

சுவேதவனப் பெருமாள் திருவெண்ணெய் நல்லூரி லிருந்தகாலையில் திருக்கைலாயத்திலிருந்து சனற்குமார முனிவரது ஞானப்புதல்வராகிய சத்தியஞான தரிசனிகளிடம் உபதேசம்பெற்ற பரஞ்சோதிமாமுனிவர் என்பார் ஆகமத் தலைவராகிய ஐம்முனிவருள் தலைசிறந்த அகத்திய முனிவர் வீற்றிருக்கின்ற பொதியமலை நோக்கிச் செல்லுங் காலத்தில் அவரது ஒளிவிமானமானது திருவெண்ணெய்நல்லூருக்கு நேராகவந்தவுடன் நின்றுவிட்டது. அதன் குறிப்பையுணர்ந்த பரஞ்சோதியார் சுவேதவனப் பெருமாளைக்கண்டு அவருக்கு மெய் யுணர்வளித்து மெய்கண்டார் என்ற தமது ஞானத்தந்தையின் திருப் பெயரைச் சூட்டியருளினர்.

சிவபெருமான் தக்க பக்குவமுடையார்க்குக் குருவாய் வந்துணர்த்துவது பெரும்பான்மையும் தம்முடைய பேரன்பரை நிலைக்களமாகக் கொண்டேயாம். பரஞ்சோதி மாமுனிவர்

மெய்கண்டதேவர்க்கு மெய்யுணர்வளித்தகாலை அவர் கடவுளோடு இரண்டறக் கலந்து நிற்கும் நிலையினின்று அருள் செய்தாராகலின் சிவபெருமானே நம்முடைய நாயனுருக்கு உண்மைப்பொருள் உணர்த்தியதாகக் கொள்ளவேண்டுமே யொழிய, பரஞ்சோதிமுனிவர் தாமே அவ்வாறு உணர்த்தினர் என்று கோடல் பொருந்துவதன்றும். இவ்வாறே உபமன்னியர் கண்ணனுக்கு உபதேசஞ் செய்ததாகவும் கண்ணன் பார்த்தற் கறிவுறுத்தியதாகவுங் கூறுப.

மெய்கண்டார் கலைஞானமனைத்தையும் திருவெண்ணெய் நல்லூரில் எழுந்தருளிய பொல்லாப்பிள்ளையாரிடங் கேட்டுச் சிந்தித்துத் தெளிந்தனர். பின் அவர் தாம் பெற்ற இன்பம் இவ்வையகம் பெறவேண்டுமென்ற திருவுள்ளக் கருத்தால் சிவஞானபோத மென்னும் சைவசித்தாந்தத் தலைமணி ஞான நூலினை இயற்றியருளினர். அச் சிவஞானபோத நுண் பொருளை அவர்பாற் கேட்டுத் தெளிந்தோர் நாற்பத் தொன்பது மாணவராவர். அந் நாற்பத்தொன்பதின்மரது பரம்பரை வாயிலாகவே இத் தமிழ்நாடெங்கும் சித்தாந்த அறிவுச்சுடர் கொளுத்தும் ஒளி நிலையங்களாகிய திருமடங்கள் ஏற்பட்டன. முதல் மாணவர் பரம்பரையில் வந்த திரு நமசிவாயதேசிகரால் நிலைபேறெய்திய மடம் திருவாவடுதுறை யாதீனமாகும். அதே பரம்பரையில் வந்த ஞானசம்பந்த தேசிகரால் தருமபுரவாதீனம் ஏற்படுத்தப்பட்டது. மெய்கண்ட தேவருடைய மாணவருள் முதல் நின்றவர் அவருடைய தந்தையார்க்குக் குலகுருவாகிய அருணந்தி சிவாசிரியராவர். பதினான்கு சித்தாந்த நூல்களுள் ஒன்றாகிய உண்மை விளக்க வாசிரியராகிய மனவாசகங் கடந்தவரும் அவர்களுள் ஒருவர். சிற்றம்பல நாடிகளும் அவருள் ஒருவரென்ப. மெய்கண்ட தேவ நாயனார் தம் மாணவருக்கு உண்மைப் பொருளுணர்த்திய பின்னர், நனவிலேயே அதீதத்தைப் புரிபவராய் இடையறாது சாமதி நிலையிலிருந்து ஐப்பசித் திங்களில் சோதிநாளில், சிவபெருமானோடு இரண்டறக் கலந்தனர்.

———

சிவஞானபோதம் தமிழ் முதல் நூலே

திரு மெய்கண்டதேவநாயனர் அருளிச்செய்த சிவஞான போதத்தை வடமொழியிலுள்ள இரௌரவாகமத்திலே பாவ விமோசனப் படலத்திலுள்ள பன்னிரண்டு சூத்திரங்களின் மொழிபெயர்ப்பென்று இக்காலத்திலே பலர் கருதுகின்றார்கள். இதைப்பற்றிய தடைவிடைகளின் விரிவு, சாந்தாநுசாரியார் சரித்திரத்துக் காண்க. இங்கே அஃகொள்கை தவறுடைத் தென்பதற்குரிய காரணங்களை ஒருவாறு தொகுத்துரைப்பாம்.

தமிழிலே மொழிபெயர்ப்பு நூல் செய்யப் புகுந்தார் யாவருந் தமது மேற்கோளை விளக்குவது மரபு. அது திரு விளையாடற் புராண முதலிய பல நூல்களிலுங் காணப்படும். ஒரு நூலின் ஆசிரியராதல், பாயிர முரைத்தோராதல், நூலாசிரியர் காலத்தே நூலினைப்பற்றி எழுதினோராதல் அது மொழிபெயர்ப்பென்று கூறாதவிடத்து அந்நூல் மொழி பெயர்ப்பன்று என்பது நன்கு ஊகிக்கப்படும். பிற மொழியி னின்று தமது மொழியிற் பெயர்த்ததை மறைத்துக் கூறும் வழக்கம் தமிழ்ப் பேராசிரியர்கள்பால் யாண்டுங் காணப்படுவ தில்லை. வடமொழி நூலோர்க்கு அங்ஙனஞ் செய்தல் இயல் பென்பது பெரியபுராணச் சரித்திரத்தால் இனிது விளங்கும். ஆசிரியர் சேக்கிழார் தமது நூலிற்கு முதனூல் திருத்தொண்டத் தொகையும் நம்பியாண்டார் நம்பி திருவந்தாதியுமென்று கூறி யிருப்பவும், அதனை வடமொழியில் மொழிபெயர்த்தோர் தமது மூலத்தைக் கூறாமையாலும் தங்களுடைய மொழிபெயர்ப்பு நூலே தமிழ் நூற்கு மூலமென்று அபிமானம்பற்றி வாய்ப் பறை அறைந்தமையாலும் அதனைக் கேட்டு மயங்கிய தமிழர் சிலர் பெரியபுராணத்தையே மொழிபெயர்ப்பு நூலென்று கூசாது சொல்லத் தொடங்குகிறார்கள் இது நிற்க :

சிவஞானபோதம் இயற்றிய ஆசிரியர் மெய்கண்டார் தமது நூலிற்கு மூலம் இரௌர வாகமம் பாவ விமோசனப் படல மென்று கூறவில்லை. முதற் சூத்திரத்தே "என்மனார் புலவர்" என்று கூறினாரே யன்றி, "என்றார் சிவபெருமான்" "என்றது இரௌரவம்" என்று விதந்தோதினாரில்லை. மங்கல வாழ்த்தும் அவையடக்கமுங் கூறிய ஆசிரியர் தமது நூற்கு மூலமிருந் திருப்பின் அதனைக் கூறாதுவிடக் காரணமில்லை. கூற வேண்டியது அவசியமில்லை யென்று சொல்லுவதும் பொருத்த மாகாது. என்னை? சிவபெருமானது திருவாக்கின் மொழி பெயர்ப்பென்றாதல் இரௌரவ சிவாகமத்தின் ஒரு பகுதியின் மொழிபெயர்ப்பென்றாதல் ஆசிரியர் காட்டியிருந்தால் அது கற்போருக்கு மிக்க ஊக்கத்தைக் கொடுக்க வல்லதாகும். ஆன்றோர் வழக்கின்படி நூன்மரபும் உரைத்தவாறாகும். ஆசிரியர் நூற்கு மூலம் கூறாமையாலே மூலமில்லை யென்றலே பொருத்த முடைத்து.

இன்னும் தமிழ்ச் சிவஞானபோத முதற் சூத்திரத்தையும் வடமொழிச் சிவஞானபோத முதற் சூத்திரத்தையும் ஒத்துப் பார்ப்பின் தமிழ்ச் சூத்திரத்தின் பொருளைச் செவ்விதிற் றெரிக்கும் ஆற்றல் வடமொழிச் சூத்திரத்திற்கில்லை யென்பது புலனாகும். தமிழ்ச் சூத்திரத்தில் 'அவனவளது' என்று கூறியிருப்ப, வடமொழிச் சூத்திரம் 'பெண்ணாணலியின் ஆதித் தன்மையால்' என்று தொடங்குகின்றது. 'அவனவளது வெனும் அவை' யென்று பிரபஞ்சத்தை முக்கூற்றினுளடக்கிக் கூறியிருக்குஞ் சிறப்பு வடமொழிச் சூத்திரப் பகுதிக்கில்லை. பின்னையது முன்னையதற்கு மூலமாமெனின் ஆசிரியர் மெய்கண்டார் சிவபெருமானது வாக்கென்று சொல்லப்படும் வடநூற் சூத்திரத்திற் கியையத் தமிழ்ச் சூத்திரஞ் செய்திருப் பார். அவ்வாறு செய்யாமையால் வடமொழிச் சூத்திரத்தின் வழிவந்தது தமிழ்ச் சூத்திர மல்லவென்று ஊகிக்கப்படும். தமிழ்ச் சூத்திரத்திலுள்ள 'மலத்துளதாம்' என்கின்ற சொற் றொடருக்கு நேரான சொற்றொடர் வடநூற் சூத்திரத்தில் காணப்படவில்லை. உலகம் ஒடுங்கு மென்பதற்கும் உயிர் களுக்கு ஆணவமலபரிபாகத்தின் பொருட்டு மீளவும் அது

தோன்றுமென்பதற்கும் 'மலத்துளதாம்' என்ற ஒரு சொற்ருெடர் அமைத்த திறமை ஆசிரியர் மெய்கண்டார்க்கே யுரியது. இவ்வகையான நயம் அமையாத வடமொழிச் சூத்திரத்தை மூலமென்றும் சிவவாக்கென்றும் கூறுதலும் தமிழ்ச் சூத்திரத் திற்கேற்ப வடமொழிச் சூத்திரத்தை வலிந்து பொருள் கோடலும் சரித்திர வாராய்ச்சி யின்மையான் வந்த அபிமானத்தின் பயனேயன்றி வேறில்லை. இவ்வாறே ஏனைத் தமிழ்ச் சூத்திரங்களையும் வடமொழிச் சூத்திரங்களோடு ஒப்பிட்டு நடுவுநிலைமையோடு ஆயுமிடத்துத் தமிழ்ச் சூத்திரமே வடமொழிச் சூத்திரத்திற்கு மூலமென்பது தெளிவாகும். சுருக்கமாக அதனை ஈண்டுக் காட்டுதும்:

வடமொழிச் சிவஞானபோத முதற் சுலோகத்தே 'மூவினைமையின்' என்ற பொருளுள்ள சொற்ருெடரில்லை. அதற்குப் பதிலாகக் 'காரியம்' என்னும் சொல்லே அமைந்து கிடக்கின்றது. அது அத்துணைச் சிறப்புடைய தல்லவென்பது நன்கு விளங்கும். இனி 'அந்தம் ஆதி' என்ற சொற்ருெடர் போல நயமான வாக்கியம் வடமொழிச் சுலோகத்திலில்லை. 'கர்த்தா ஒருவன் உளன். அவன் பிரபஞ்சத்தை ஒடுக்கி உளதாக்குவன்' என்பது மாத்திரமே கூறப்பட்டது. 'என்மனுர் புலவர்' என்பதற்கும் நேரான பதமில்லை.

இரண்டாஞ் சுலோகமானது ஆசிரியர் திருமெய்கண்டாரது இரண்டாஞ் சூத்திரத்திற்கு வியாக்கியானம்போலத் தோன்றுகிறது. 'அவையே தானே' என்பதற்குக் 'கர்த்தா வேருயினும் வியாபகத்தினுல் வேற்றுமையின்றி' என்னும் பொருளுள்ள சொற்ருெடர் காணப்படுகின்றது. அது 'அவையே தானேயாய்' என்பதுபோல் அழகாக வமைந்ததன்று. 'நீக்கமின்றிற்குமன்றே' என்பதற்கு நேரான சொற்ருெடர், 'அமைந்தவளவில் நில்லாது கிருத்தியங்களைச் செய்கின்ருன்' என்று பொருளுள்ள வாக்கியஞ் சேர்க்கப்பட்டுள்ளது. 'போக்குவரவு புரிய' என்பதற்கு வடமொழிச் சுலோகத்தில் நேரான சொற்ருெடரில்லை.

மூன்றுஞ் சூத்திரத்திலே 'உண்டி வினையின்மை' என்ற சொற்றொடரின் பொருளை நன்கு விளக்காத ஒருசொல்லே வடமொழிச் சுலோகத்திலமைந்துள்ளது. 'உணர்த்த' என்ற முக்கியமான சொல்லின் பொருளை விளக்குமொழி சுலோகத்தி லில்லாமை அதற்கு ஒரு குறைவாகும். 'மாயா வியந்திர' என்னும் வாக்கியமும் அதனுளில்லை.

நான்காஞ் சூத்திரத்திலே 'சகசமலத் துணராது' என்பதன் சொல்லாற்றலை இனிது விளக்காது மலத்தினால் மறைக்கப் பட்ட ஞானங் கிரியையையுடைய ஆன்மா என்று பொருள்படும் வாக்கியமே வடமொழிச் சுலோகத்து ளமைந்துகிடக்கின்றது. ஞானம் கிரியை என்பதற்குத் திரு மெய்கண்டதேவர் சூத்திரத்தில் சொல்லவில்லை. ஞான மறைப்பே சிறப்பாகக் கூறப்பட்டது.

இனி ஐந்தாஞ் சூத்திரத்தே 'அளந்தறிந் தறியா' என்பதற்கு நேராகிய பகுதி வடமொழிச் சுலோகத்திலில்லை. உயிர் அறிவிக்க இந்திரியங்கள் அறிவதுபோல, சம்பு அறிவிக்க உயிர் அறியும் என்று அஃது கூறியதே யொழிய இந்திரி யங்கள் எப்படி உயிரை அறியமாட்டாவோ அவ்வாறே உயிர்கள் தம்மையும் தம்மைச் செலுத்துந் திருவருளையும் அறியமாட்டா என்னுங் கருத்தை விளக்கும் வாக்கியங்கள் வடமொழிச் சுலோகத்திலில்லை. முதல்வனது சிற்சத்தியால் என்னும் பொருள்படத் 'தமியருள்' என்று தமிழ்ச் சூத்திரத்தி லிருப்ப, வடமொழிச் சுலோகத்துள் 'சம்புவினால் அறிகின்றன' என்று கூறப்பட்டது. 'காந்தங் கண்ட பசாசத் தவையே' என்பதில் 'அவையே' என்ற சொல்லாற்றலால் முதல்வன் விகாரியில்லை என்று ஆசிரியர் மெய்கண்டார் பெற வைத்திருப்ப அதனை விரித்து அவன் விகாரியல்லன் என்று சுலோகத்தில் கூறப்பட்டது.

ஆறுஞ் சூத்திரத்துள் சுருக்கமாகவும் நயமாகவும் சத்தும் அசத்தும் வரைசெய்து உணர்த்தியதின் நயம் வடமொழிச் சுலோகத்தி லமையவில்லை. ஆசிரியர் அசத்து என்றதை வட மொழிச் சுலோகத்தில் சடமென்ற வார்த்தையால் தெரிவிக் கின்றார். 'சிவசத்து' என்ற சொற்றொடரின் பொருள்

வளத்தைச் சம்புவின் ரூபமென்ற சுலோகப்பகுதி பெற்றிலது. 'இன்மையின்' என்பதன் பொருளை 'அசத்பாவக' என்ற சொல்லினால் சுலோகஞ் செய்தார் விளக்கினரே யொழிய, சத்தும் அசத்தும் என்ற சொற்களை இனிதமைத்துச் சுலோகத்தை யாக்க அறிந்திலர். சூத்திரத்தில் 'இசைக்குமன்னுலகே' என்பதற்கு நேராக 'ஞானிகள் கூறுவார்கள்' என்ற சொற்றொடரமைக்காது 'ஞானிகள் அறிவார்கள்' என்ற பொருள்படும் வாக்கியமே சுலோகத்திற் காணப்படுகின்றது.

அடுத்த ஏழாஞ் சூத்திரத்தே 'சத்து, அசத்து' என்ற சொற்களின் பொருள்நயம் உணரப்பெறாது, சித்து, அசித்து என்ற சொற்களை அமைத்தே வடமொழிச் சுலோகம் செய்யப்பட்டுள்ளது. 'இருதிற னறிவுளது' என்று சூத்திரம் சுருக்கிக் கூறியிருப்பதை, 'எவன் பிரபஞ்சத்தையுஞ் சிவனையுமறிகின்றானோ' வென்று விரித்துக் கூறுகின்றது சுலோகம்.

எட்டாஞ் சூத்திரத்தில் 'தம்முதல்' என்பதன் பொருளை இனிதுணர்த்துஞ் சொல் வடமொழிச் சுலோகத்திலில்லை. அதனால் சிவபெருமான் குருவாய் வருகின்றார் என்ற உண்மையை அச் சுலோகம் விளக்கவில்லை. அரன் என்பதற்கும் நேராகிய பதமில்லை. 'வளர்ந்து' என்பதுபோலச் 'சகஸ்தித்வா' என்ற சொல் நயமுடையதன்று.

ஒன்பதாஞ் சூத்திரத்தே 'ஊனக்கண் பாசமுணரா' என்பதன் பொருளை விளக்கும் பகுதி வடமொழிச் சுலோகத்திலில்லை. 'பாசம்' என்ற சொல்லிற்கு 'விருத்தி' யென்ற சொல்லே சுலோகத்திற் காணப்படுகின்றது. 'விதி' என்னும் பதப்பொருளை விளக்குஞ் சொல் அதில் காணப்படவில்லை.

பத்தாவது சூத்திரம் பாசக்ஷயம் கூற வந்தது. அதனை இனிது விளக்கும் 'மலமாயை தன்னொடு வல்வினை யின்றே' என்பதன் கருத்தை விளக்குதலோடமையாது 'ஸ்வானுபூதிமான்பவதி' என்ற வாக்கியத்தைச் சேர்த்துவருஞ் சூத்திரத்தின் கருத்தையும் வடமொழிச் சுலோகம் விளக்குவதாயிற்று. 'வல்வினை' என்ற சொற்றொடருக்கு நேராகிய பகுதியில்லை.

கூறவேண்டியதைக் கூருது அவசியமில்லாத வாக்கியத்தைச் சேர்த்து நிற்கின்றது அச் சுலோகம். 'இறைபணி நிற்க' என்ற அழகிய சொற்ருெடர்போல 'ததீனஸ்வவிருத்திகம்' என்ற வாக்கியம் ஆற்றலுடையதன்று.

பதினென்ருஞ் சூத்திரத்தே 'கண்டு காட்டலின்' என்ற சொற்ருெடரின் உண்மைப் பொருளை இனிது விளக்கு மொழி சுலோகத்தில் இல்லை காட்டுபவன் என்னும் பொருளையே சுலோகம் விளக்கிற்று. காண்பவன் என்பது தெளிவுபடுத்தப் படவில்லை. 'காட்டலின்' என்ற சொல்லாற்றலினலே ஆசிரியர் மெய்கண்டார் பெறவைத்த நுட்பத்தை 'ஆத்மோப காரகே தாஸ்மின்' என்று வடமொழிச் சுலோகம் விரித்தது. 'அயரா' என்பதன் பொருள் நயமுணராது மேலான என்ற பொருளுள்ள சொல்லையே வடமொழிச் சுலோகத்தார் அதனைக் குறிக்க வழங்கியுள்ளார். 'அரன் கழல் செலுமே' என்பதின் பொருளை விளக்கும் பகுதி வடமொழிச் சுலோகத்தி லில்லை. மேலான பத்தியைச் செய்யவென்றவளவில் சுலோகம் நின்றுவிட்டது.

பன்னிரண்டாவது சூத்திரத்திலே "செம்மலர் நோன்ருள் சேர வொட்டா அம்மலங் கழீஇ" என்கின்ற கருத்தை வடமொழிச் சுலோகம் விளக்கவில்லை. அதற்குரிய வாக்கியமும் அதிலில்லை 'அரனென' என்பதற்கும் நேரான சொல்லில்லை. "மாலற நேய மலிந்தவர்" என்பதற்குந் தெளிவான வாக்கியமில்லை. அஃதன்றியும் வடமொழிச் சிவஞான போத இறுதிச் சுலோ கத்தின் இறுதியடிக்கும் சரியான வாக்கியந் தமிழிலில்லை.

இவ் வேறுபாடுகளால் தமிழ்ச் சூத்திரங்களிலுள்ள நயங்களை வடமொழிச் சுலோகங்களிற் காண இடமில்லையென் பதும், ஆசிரியர் மெய்கண்டாரது நூல் நயத்தைச் செவ்விதின் உணர்ந்து அதனை வடமொழியில் இனிதமைக்கும் ஆற்ற லில்லாத ஒரு வடமொழி வாணரால் வடமொழிச் சிவஞான போதம் எழுதப்பட்டதென்பதும் இனிது விளங்கும். ஆசிரியர் மெய்கண்டாரது சூத்திரங்கள் மிக்க நயமுடையனவென்று கூறினல் அவையெல்லாம் வடமொழிச் சுலோகங்களில்

தொக்கு நின்றனவென்று தமக்குத் தோன்றியவாறு அபிமானிகள் போலிச் சமாதானங் கூறுவர். ஆசிரியர் மெய்கண்டாரது நூலை மொழிபெயர்ப்பு என்று சொல்லுவது திருவாசகத்துக்குப் போப்பையர் என்னும் பெரியோரால் அமைந்துள்ள மொழிபெயர்ப்பைத் தனியே எடுத்து அது மொழிபெயர்ப்பு நூலென்று காட்டாது அச்சிடப்பட்ட பின் நூறு அல்லது இருநூறு ஆண்டுகள் சென்றால் ஆங்கிலப் பற்றுமிக்கோர் போப்பையரது ஆங்கிலத் திருவாசகத்தையே மாணிக்கவாசகர் தமிழில் மொழிபெயர்த்து விட்டாரென்று கூறினாற்போலும். ஓவியச் சீர்மைவாய்ந்த ஒரு வடிவத்தையும் அது வாயப்பெறாத மற்றொரு வடிவத்தையும் ஆசிரியர் மெய்கண்டார் நூலை வழிநூலென் றுரைப்பார்க்குக் காட்டினால், பின்னையதிற் புதைந்து கிடைந்ததையே முன்னையது விளக்க எழுந்தது என்று அவர் கூறுவர்போலும். இங்ஙனஞ் சாற்றுவார் மயக்கத்திற்கு மருந்தில்லை. உண்மையை நுண்ணிதின் ஆயப் புகுவோருக்கு இதுகாறுங் கூறிய காரணங்களால் ஆசிரியர் மெய்கண்டார் நூலே முதனூலென்பது அங்கை நெல்லியாம்.

மெய்கண்டார் இயற்றிய சிவஞானபோதத்தை வடமொழியிற் பெயர்த்தவர் அதனை வடநூற் பன்னிரண்டாவது சுலோகத்திற் குறிப்பித்துள்ளார். வடமொழிச் சிவஞானபோதத்தின் பன்னிரண்டாவது சுலோகத்தின் இறுதியில் "ஏவம் வித்யாத சிவஞானபோதே சைவார்த்த நிர்ணயம்" என்ற வாக்கியங் காணப்படுகின்றது. அதற்குப் பொருள் 'இவ்விதமாகச் சிவஞானபோதத்திலே சைவப் பொருள் துணியப்பட்ட தென்றறிக' என்பதே; இந்த வாக்கியத்தில் 'சிவஞானபோதே' என்ற சொல் உற்று நோக்கத்தக்கது. அந்த சொல் வடமொழிச் சிவஞான போதத்தைச் சுட்டுவதல்ல. அதற்குரிய சுட்டு அச் சூத்திரத்திலில்லை. இல்லாததை இருப்பதென்று கோடல் பொருத்தமில்லை. ஆதலால் அங்குச் சிவஞானபோதமென்றது மெய்கண்டாரது நூலையே குறிக்கும். வடமொழிச் சிவஞானபோதம் எழுதப்பட்ட காலத்தே சிவஞானபோதம் என்று பெயருள்ள நூல் ஒன்றுதானிருந்ததாகலின் அதனைத் தமிழ்ச் சிவஞானபோதமென்று கூறுவ

தற்குக் காரணமில்லை. தமிழிலுள்ள திருவாசகத்தை ஆங்கிலத்திலே மொழி பெயர்த்த போப்பையர் அதனைத் தமிழ்த் திருவாசகமென்றும் தமது மொழிபெயர்ப்பை ஆங்கிலத் திருவாசக மென்றுங் கூறினரில்லை. யாண்டும் அவ்வாறே ஆகும். ஒருமொழியிலுள்ள ஒருநூலை மொழிபெயர்ப்பவர் நூலின் பெயரோடு மொழிப்பெயரையும் இணைத்துக் கூறுவது வழக்கமில்லை. அவ்வாறே நூலாசிரியர் பேரையும் நூலினோடு இணைத்துக் கூறுதல் மரபன்மை யறிக. மகாபாரதத்தின் மொழிபெயர்ப்பு என்றவிடத்து வியாசர் செய்த மகாபாரதத்தின் மொழிபெயர்ப்பு என்று கூறுவது அவசியமில்லை. வியாசரைத் தவிர வேறு யாராவது மகாபாரதஞ் செய்திருந்தால் வியாச மகாபாரதமென்று கூறுவதற்குக் காரணமுண்டு. சிவஞானபோதமென்பது ஒரே நூலாகவும், அது மெய்கண்டார் ஒருவராலேயே செய்யப்பட்டதாகவும் இருந்தமையாற்றான் வடமொழிச் சிவஞானபோதம் எழுதினோர் 'சிவஞானபோதே' என்ற அளவில் மெய்கண்டார் நூலையே குறித்தாரென்று கொள்க.

அன்றியும், வடமொழிச் சூத்திரத்தின் மொழி பெயர்ப்பு மெய்கண்டார் நூலின் பன்னிரண்டாவது சூத்திரமென்று கொண்டால் "ஏவம் வித்யாத் சிவஞான போதே சைவார்த்த நிர்ணயம்" என்ற வாக்கியத்திற்கு மொழிபெயர்ப்பு அதன்கண் ஏன் காணப்படவில்லை என்ற வினாவெழும். அதற்கு 'அவ் வாக்கியத்தை மொழி பெயர்த்தல் அவசியமில்லை' யென்ற விடை தக்கதன்றாம். சிவாகமமுடிபினை அறுதியிட்டுச் சிவபெருமானாலே கூறப்பட்ட சொற்றொடரை அவசியமில்லையென்று ஒதுக்குவது ஆசிரியர் மெய்கண்டார்மாட்டு ஏற்படுத்தப்படுங் குற்றமாமன்றோ? அங்ஙனம் மெய்கண்டார்மேற் குற்றமேற்றுதல் தவறாகும். ஆதலால் மெய்கண்டார் நூல் செய்யுமுன் வடமொழியில் சிவஞானபோதம் ஏற்படவில்லையென்றே கொள்ளுதல் பொருத்தமுடைத்து.

இன்னும் இரௌரவாகமத்தே, பல சுலோகங்களையுடைய பாவவிமோசனப் படலத்துள் பன்னிரண்டு சுலோகங்கள் மாத்திரமே சிவஞானபோதம் என்ற ஒரு சாத்திரமாயிற்று என்று

கோடல் அறிவிற்குப் பொருந்துவதன்றும். அதன்கணுள்ள பன்னிரண்டு சூத்திரங்களை வேறாக எடுத்து அவற்றை மாத்திரம் சிவஞானபோதமென்று கூறினாரென்று கொள்ளு வதற்கிடமில்லை. ஏனெனில் அப் பன்னிரண்டு சூத்திரங்களுள் இறுதிச் சூத்திரமே சிவஞான போதமென்ற வார்த்தையை உள்ளடக்கி நிற்கின்றது. அவ்வார்த்தையுள்ள ஒரு சுலோகம் பாவவிமோசனப் படலத்துள் அமைந்து கிடக்குமாயின் பன்னி ரண்டு சூத்திரத்திற்கும் சிவஞானபோதமென்ற பெயர் வேறாக ஏற்பட்டிருக்க இடமில்லை. ஒரு படலத்தினுள்ளே ஒரு சூத்திரம் அதற்கு முன்னுள்ள பதினொரு சூத்திரங்களையும் ஒரு சாத்திரமாகத் தோற்றுவாயின்றிக் கூறல் நூன்முறைக்கு முற்றுமாறாகும். ஆதலால் வடமொழிச் சிவஞானபோதப் பன்னிரண்டு சூத்திரமும் பாவவிமோசனப் படலத்தின் பகுதி யென்று கொள்ள இடமில்லை. இரௌரவத்தின் பகுதி யென்று சொல்வதற்குத் தெளிவான சான்றுகள் ஒன்றுமில்லை. இரௌரவத்தின் பகுதியெனப்படுஞ் சில சுலோகங்கள் காலஞ் சென்ற திரு. செந்திநாதையரவர்களால் வெளிப்படுத்தப் பெற்றன. அச் சுலோகங்கள் தீக்கை செய்யு முறையைப்பற்றிக் கூறு கின்றன. அங்ஙனங் கூறுமிடத்துச் 'சீடன் கையில் சிவஞான போத மென்னுஞ் சாத்திரத்தைக் கொடு' என்ற பொருளுள்ள வாக்கியங் காணப்படுகின்றது.

பாவநாதி க்ஷயாசைகம் சுத்தம் ஙிருத்வா பதாவிதி
சிவஞானபோத சாஸ்திரஞ்ச தத்யாத்பத்ய சிந்தநம்.''

சிவஞானபோதமானது இரௌரவத்தின் ஒரு பகுதி யாயிருக்குமாயின் தன்னின் வேறாகிய ஒரு சாத்திரமாக இரௌரவம் அதனைக் கூறவேண்டியதில்லை. ஆகவே சிவ ஞானபோதம் இரௌரவத்தின் பகுதியென்பதற்கும் வெளிப் பட்ட சுலோகங்கள் இடங்கொடுக்கவில்லை. ஆதலால் சிவ ஞானபோதத்தை இரௌரவத்திலிருந்து வந்ததென்று சொல்லுவதற்கு மெய்கண்டார் காலத்திற்குப்பின் புதிதாக ஏற் படுத்திய சில சுலோகங்களே இப்போது இரௌரவ மெனப் படுதல் காண்க.

இனி, திரு. மெய்கண்டாரது முதல் மாணவராகிய அருணந்தி சுவாமிகள் தமது நூல்வழிகூறுஞ் செய்யுள் கவனிக்கத்தக்கது. "போத மிகுத்தோர் தொகுத்த" என்னும் முதற்குறிப்பினை யுடைய பாட்டில் மிக்க ஞானமில்லாமலும் மிக்க பேதைமை யில்லாமலும் நடுத்தரமான நிலையில் நிற்போர்க்கு உய்திகூட நெறி எது என்று ஆராய்ச்சி செய்வோரின்பொருட்டு ஒரு வழியை இறைவன் நந்தி பெருமானுக்கருளிச்செய்ய, அவர் அவ் வழியைச் சனற்குமாரருக்கு உபதேசிக்க, அந்த நெறியை மெய்கண்டதேவர் கடைப்பிடித்து அருளிச்செய்த ஞான நூலின் வழித்தாயது சிவஞானசித்தியார் என்று கூறப்பட்டுள்ளது. இதனால் விளங்குவது யாதெனில், சிவஞானபோதத்திற் கூறப் படும் ஞானநெறியானது இறைவனிடத்திலிருந்து நந்திதேவர் பரம்பரை வாயிலாக மெய்கண்டார்க்கு வந்ததென்று தெரி கின்றோம். உபதேச முறையாற்பெற்ற அரும்பொருளை அடிப் படையாகக்கொண்டு திரு. மெய்கண்டார் செய்தருளிய ஞான நூலே சிவஞானபோதமென்று கொள்ளவேண்டுமேயன்றி நூல் தானே கயிலாயத்திலிருந்து குவலயத்தில் இழிந்த தென்று கூற இடமில்லை. நெறி ஏது என்பவர்களுக்கு அதனை யுணர்த்த அவ் வழியைக் குருநாதன் கொண்டு நூல்செய்தா ரென்பதே பொருந்துவதாகும். அஃது, உமாபதிசிவாசாரிய சுவாமிகள் சிவப்பிரகாசத்துப் பாயிரத்துள் நூன்மரபும் சந்தான மரபும் வேறுவேருகக் கூறினமையாலே தெள்ளிதிற் புலனும். சிவப்பிரகாசம் ஐந்தாவது பாட்டினுள் சந்தானபரம்பரை திருக் கயிலாயத்தில் வீற்றிருக்கும் பெருமான் முதலாக மறை ஞான சம்பந்தர் ஈருகக் கூறப்பட்டது.

"தேவர்பிரான் வளர்கயிலைக் காவல் பூண்ட
திருநந்தி யவர்கணத்தோர் செல்வர் பாரிற்
பாவியசத் தியஞான தரிசனிக ளடிசேர்
பரஞ்சோதி மாமுனிகள் பதியாம் வெண்ணெய்
மேவியசீர் மெய்கண்ட திறலார் மாறு
விரவுபுக ழருணந்தி விறலார் செல்வத்
தாவிலருண் மறைஞான சம்பந்த ரிவர்இச்
சந்தானத் தெமையாளுந் தன்மை யோரே."

மேலும், சிவப்பிரகாசம் பதினொன்றாவது பாட்டினுள் நூன் மரபு கூறப்படுமிடத்துத் திரு. மெய்கண்டார் சிவஞானபோதம் செப்பினர் எனவும் அவரது ஞானப்புதல்வராகிய அருணந்தி சிவாசாரியர் சிவஞானசித்தியார் இயற்றினரெனவும், அவ்விரண்டு நூலையும் ஆகம நூலையும் ஆசிரியர் திருவுள்ளத்தில் உறைகின்ற திருவருளையுங்கலந்து சிவப்பிரகாச மியற்றப் படுவதாகக் கூறுவதுங் காண்க.

"தெரித்தகுரு முதல்வர்உயர் சிவஞான போதஞ்
செப்பினர்பின் பவர்முதல்வர் சிவஞான சித்தி
விரித்தனர்மற் றவர்கள்திரு வடிகள் போற்றி
விளம்பியநூ லவையிரண்டும் விரும்பி நோக்கிக்
கருத்திலுறை திருவருளு மிறைவ னூலுங்
கலந்துபொது வுண்மையெனக் கருதி யானு
மருத்திமிக வுரைப்பன்வளர் விருத்த நூறு
மாசில்சிவப் பிரகாச மாகு மென்றே.''

திரு அருணந்திசிவாசாரியார் இயற்றிய 'போத மிருத்தோர்' என்று தொடங்கும் சிவஞானசித்தி நூன்மரபுச் செய்யுளிலாதல், சிவப்பிரகாச நூன்மரபுச் செய்யுளிலாதல், இரௌரவ ஆகமத்திலிருந்தாதல் பிற ஏதாவது ஒராகமத்திலிருந்தாதல் சிவஞான போதம் இயற்றப்பட்டதாகக் கூறப்படவேயில்லை. 'தெரித்த குரு' என்ற செய்யுளில் சிவஞானபோதத்தையும் சிவஞானசித்தியாரையும் வேருகவும் இறைவன் நூலாகிய ஆகமத்தை வேருகவும் கூறியிருத்தல் காண்க. இறைவன் நூலின் ஒரு பகுதியின் மொழிபெயர்ப்பென்று அங்கே ஆசிரியர் கூறிற்றிலர். நூன்மரபு கூறுமுன் சிவாகமத்தினியல்பினை விரிந்த ஒரு செய்யுளில் விளக்கியிருந்தும் அச் சிவாகமத்துள் ஒன்றினுடைய பகுதியின் மொழிபெயர்ப்பென்று சிவஞானபோதத்தைக் குறித்துக் கூறவில்லை. சிவாகமமாவது சரியை கிரியை யோகம் ஞானமாகியவற்றைத் தெளிவுற உணர்த்துவதென்று நன்கு வகுத்துக்கூறிய வாசிரியர் அதற்கடுத்த பாட்டில் சிவஞானபோதத்தை அச் சிவாகமத்தின் வழித்தென்று எளிதாகக் கூறியிருக்கலாம். இரௌரவப் பகுதியின் மொழிபெயர்ப்பாகச்

சிவஞானபோதமிருக்குமாயின் ஆசிரியர் அங்ஙனங் கூறாது விடார்.

*"கிரியையென மருவுமவை யாவு ஞானங்
கிடைத்தற்கு நிமித்தமெனக் கிளக்கு முண்மைச்
சரியைகிரி யாயோகத் தன்மை யோர்க்குச்
சாலோக சாமீப சாரு பங்கண்
மருவியிடு மூயர்ஞான மிரண்டா மாறு
மலமகல வகலாத மன்னு போதத்
திருவருளோன் றென்றதனைத் தெளிய வோதுஞ்
சிவாகமமென் றுலகறியச் செப்பு நூலே."

சந்தானகுரவர் நால்வருள் நூல்செய்த மூவரும் சிவஞான போதத்தை இரௌரவாகமப் பகுதியின் மொழிபெயர்ப்பு என்று கூறிற்றிலராகலான் திரு. மெய்கண்டார் காலந்தொட்டு உமாபதி சிவாசாரியர் காலம் இறுதியாகச் சிவஞானபோதம் வடநூலின் மொழிபெயர்ப்பு என்ற கொள்கை உலகத்தில் நிலவவில்லை யென்பது திண்ணம். சந்தானகுரவர் காலத்திற்குப் பின்னே சிவஞானபோதப் பெருமை தமிழுலகிற் பரவிய காலத்தே வட மொழியிற் சிவஞானபோதம் ஏற்பட்டிருத்தல்வேண்டும். அங்ஙனம் ஏற்பட்ட காலத்திற்குப் பின்னேயே அஃது இரௌர வாகமத்திலிருந்து வந்ததென்ற கட்டுக்கதை தமிழ்நூலுக்கு வடநூல்மூலம் வேண்டுமென்ற தப்புக்கொள்கையில் தோன்றி யிருத்தல் வேண்டும். அதற்குச் சற்று முன்னேதான் சிவ ஞானபோதத்திற்கு முன்னும் பின்னும் எழுதப்பட்ட பாயிரச் செய்யுட்கள் யாக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

அங்ஙனமாயினும் அப் பாயிரச் செய்யுட்களில் சிவஞான போதம் இரௌரவ ஆகமத்தின் பகுதியென்று கூறப்படவே யில்லை. நந்திபெருமான் நூல் செய்தால் அது வடமொழி யிற்றான் இருக்கவேண்டுமென்று துணிவதற்குக் காரணம் யாதோ விளங்கவில்லை. அல்லதூஉம் நந்திபெருமான் உரைத்த நூலை ஆகமத்தின் பகுதியென்று கூறவும் போதிய

* சிவப் : பா, கo.

பிரமாணம் யாதுமில்லை. ஆதலால், இச் சிறப்புப் பாயிரச் செய்யுட்கள் எழுந்தகாலத்தும் சிவஞானபோதம் இரௌரவத்தின் வழிநூலென்ற கொள்கை உலகத்தில் நிலைபெறவில்லை. இதனால் யூகிக்கப்படுவது யாதெனில் சிறப்புப்பாயிரச் செய்யுட்கள் எழுந்த காலத்திற்குப் பின்னேயே வடமொழிச் சிவஞானபோதத்தை வைப்பதற்கிடமாக இரௌரவாகமப் பகுதியொன்று ஏற்பட்டிருத்தல் வேண்டும். அதற்குப் பின்னேயே வடமொழிச் சிவஞான போதத்திற்கு விரிவுரை வகுத்த சிவாக்கிரயோகிகள் இரௌரவத்திலே சிவஞானபோதம் உபதேசிக்கப் படுகின்றதென்ற கருத்தைத் தமது பாடியத்துள் கூறுவாராயினர். சிவாக்கிரயோகிகள் காலந்தொட்டுச் சிவஞானபோதம் மொழிபெயர்ப்பு என்ற கொள்கையானது வலிபெறுவதாயிற்று. திருவாவடுதுறையில் விளங்கிய உலகுடைநாயனு ரென்பாரும் அக் கர்ணபரம்பரைக் கட்டுக்கதையை நம்பினதாக அறிகிறோம். அவர்க்குப் பின்வந்த ஆசிரியர் சிவஞானசுவாமிகள் இதனைப் பற்றிய சரித்திரவாராய்ச்சியிற் கவனஞ் செலுத்தாது ஐதிக வரலாற்றைத் தாம்கேட்ட முறையாகவே தமது நூலிற் குறித்துவிட்டனர். அங்ஙனம் கூறினும் 'சிவஞானபோத நெறிகாட்டும் வெண்ணெய் பயில்வாய்மை மெய்கண்டான்' என்றவிடத்துக் கயிலாய பரம்பரையில் வந்தது சிவஞான போதநெறியென்று குறிப்பித்தமை காண்க. 'காமிகமுதலிய சைவாகமங்களுள் ஞானபாதப் பொருளின் இகலறுத்து அவற்றின் பொருளுண்மை போதித்தற்கு இரௌரவாகமத்தில் எழுந்தது சிவஞானபோதம்' என்ற வரலாறு திரு. அருணந்தி சிவாசாரியாராற் கூறப்படவில்லை யென்பது காண்க. அஃது அருணந்திசிவாசாரியாரது "போதமிகுத்தோர் தொகுத்த" என்ற செய்யுளை உற்று நோக்கில் நன்கு விளங்கும். அருணந்தி சிவாசாரியசுவாமிகள் சுருக்கிக் கூறினதையே ஆசிரியர் சிவஞானயோகிகள் விரித்துக் கூறினரென்று ஒருசாரார் இரண்டிற்கும் பொருத்தங் கூற முற்படுவாராயின் அருணந்தி சிவாசாரிய சுவாமிகள் கூறியது சுருக்கமென்பதற்கும் ஆசிரியர் சிவஞானயோகிகள் கூறியது விரிவு என்பதற்கும் தக்க பிரமாணம் காட்டவேண்டும். இரௌரவாகமத்திலாவது நந்தி பெருமானுக்கு மலைவு தீர்தற்பொருட்டுச்

சிவஞான போதம் கூறப்பட்டதென்று வரையப்பட்டுள்ளதா வென்று ஆராய்ச்சி செய்தால் அங்ஙனம் கூறும் இரௌரவாகமத்தின் பகுதி இதுவரை காணப்படவில்லை.

இன்னுஞ் சிலர் திரு. மாணிக்கவாசகசுவாமிகளுக்குக் குருந்தமரத்தடியில் சிவபெருமான் குருவாயெழுந்தருளியகாலை அவர் கையிலிருந்த புத்தகம் சிவஞானபோதமென்று கடவுண்மாமுனிவர் கூறியதைப் பெரிய பிரமாணமாக எடுத்துரைப்பார். அக் கடவுண்மாமுனிவர் தாமும் சிவபெருமான் வைத்திருந்த சிவஞானபோதம் இரௌரவத்தின் பகுதியென்று தெரிவிக்கவில்லை. கடவுண்மாமுனிவர் காலம் சந்தானகுரவர் காலத்திற்கு மிகவும் பிந்தியது. அவர் நூலுட் குறித்த சிவஞான போதம் ஆசிரியர் மெய்கண்டார் மொழிபெயர்த்த சிவஞான போதமென்பதற்குப் பிரமாணமில்லை. கடவுள் குருவடிவமாக எழுகின்றகாலை தமது திருக்கையொன்றில் ஏடுவைத்திருத்தல் அவர் கொண்ட திருமேனியின் இலக்கணத்தின்பாற்படும். அதனை ஒரு சாரார் வேதமென்பர். ஒரு சாரார் ஆகமமென்பர். ஒரு சாரார் சிவஞானபோத மென்பர். அவர் கூறுவனவெல்லாவற்றிற்கும் பொருள் அபரஞானக்குறி என்பதே கருத்தாகக் கொள்க. "சீதனப் பளிக்கு மேனியும்" என்ற திருவிளையாடற் செய்யுளில் 'வேதபுத்தகம்' என்ற வாக்கியம் காணப்படுகின்றது. அச் சொற்றொடரைக் கேட்ட துணையானே வைதிகர்கள் சிவபெருமான் திருக்கையில் வைத்திருந்தது 'எங்கள் வேதமே, எங்கள் வேதமே' என்று முழங்குதல் கூடும். வேதத்திற்குப் பொருளருளிச் செய்ய முன்வந்த பெருமான் எப்படித் தம் கையிலுள்ள வேதத்தை விரித்து ஒவ்வொரு சொல்லிற்கும் பொருள் கூறவில்லையோ அவ்வாறே அவர் குருந்தமரத்தடியில் எழுந்தபோதும் மணிவாசகப் பெருமானுக்குச் சிவஞானபோதத்திலுள்ள பன்னிரண்டு சூத்திரங்களையும் விரித்துப் பொருள் கூறவில்லை. ஆதலால் அவர் திருக்கையிலிருந்த திருவேடு திரு. மெய்கண்டார் இயற்றிய நூலிற்கு முதனூலென்று கொள்ளப் போதிய சான்றில்லை. எவ்வாறுயினும் அது இரௌரவப் பகுதியென்று கொள்ளுதற்குப் பிரமாணம் யாது

மின்மையறிக. இதுகாறுங் கூறியவற்றல் திருக்கைலாய பரம்பரையில் வந்த ஞானநெறியினை ஆசிரியர் மெய்கண்டார் உணரப்பெற்றுச் சிவஞானபோத நூலினை முதன் முதலில் இயற்றியருளினரென்பதும், அவர் காலத்திலும் ஏனைச் சந்தான ஆசாரியர் காலத்திலும் அது மொழிபெயர்ப்பு நூல் என்ற கொள்கை ஏற்படவில்லை யென்பதும், அவர்கள் காலத்திற்குப் பின்னே வடமொழியிற் சிவஞானபோதம் மொழி பெயர்க்கப்பட்டதென்பதும், அதற்கு அவ் வடமொழிச் சிவஞானபோதத்தின் இறுதிச் சுலோகத்தின் இறுதியடியே தக்க சான்ருகுமென்பதும், சிவஞானபோத நூலே திருக் கைலையிலிருந்து வந்ததென்று கோடல் உமாபதிசிவாசாரியார் கூறிய நூன்மரபொடு முரண்படுமென்பதும், அக்கொள்கையை ஒருவாறு வலியுறுத்தும் சிவஞானபோதத்துச் சிறப்புப்பாயிரச் செய்யுட்கள் எழுந்தபின்னையே இரௌரவாகமப் பகுதி யொன்று வடமொழிச் சிவஞானபோதத்தைத் தன்னகத்துக் கொள்ளும்வண்ணம் ஏற்பட்டிருத்தல் கூடுமென்பதும், அந்த இரௌரவத்தைத் தழுவிய சிவாக்கிரயோகிகள் காலந்தொட்டே திரு. மெய்கண்டாரது சிவஞானபோதம் மொழிபெயர்ப்பென்ற பொய்க்கொள்கை உறுதிப்பட்டதென்பதும், அதற்குப்பின்னே வந்த கடவுண்மாமுனி முதலியோர் அக்கொள்கையை ஒருவாறு தழுவினரென்பதும், பின்னர்ச் சிவஞானபாடியத்திலே அஃது இடம்பெற்றுத் தமிழ்மக்களால் அதற்குப் பின்னே சில காலத்திற்கு முன்வரை நம்பப்பட்டதென்பதும் உய்த் துணரப்படும்.

உ

சிவஞானபோதம்

மங்கல வாழ்த்து

கல்லால் நிழல்மலை
வில்லா ரருளிய
பொல்லா ரிணைமலர்
நல்லார் புனைவரே.

அவையடக்கம்

தம்மை யுணர்ந்து தமையுடைய தன்னுணர்வார்
எம்மை யுடைமை யெமையிகழார்—தம்மை
உணரா ருணரா ருடங்கியைந்து தம்மிற்
புணராமை கேளாம் புறன்.

சூத்திரங்கள்

அவன் அவள் அதுஎனும் அவைமூ வினைமையில்
தோற்றிய திதியே ஒடுங்கிமலத் துளதாம்
அந்தம் ஆதி என்மனார் புலவர். க

அவையே தானே ஆயிரு வினையிற்
போக்கு வரவு புரிய வாணையின்
நீக்க மின்றி நிற்கு மன்றே. உ

உளதில தென்றலின் எனதுடல் என்றலின்
ஐம்புலன் ஒடுக்கம் அறிதலிற் கண்படின்
உண்டிவினை யின்மையின் உணர்த்த உணர்தலின்
மாயா வியந்திர தநுவினு ளான்மா. ந

அந்தக் கரண மவற்றினொன் றன்றவை
சந்தித்த தான்மாச் சகசமலத் துணரா
தமைச்சர சேய்ப்பநின் றஞ்சவத் தைத்தே. ச

விளம்பிய வுள்ளத்து மெய்வாய் கண்மூக்
களந்தறிந் தறியா வாங்கவை போலத்
தாந்த முணர்வின் றமியருள்
காந்தங் கண்ட பசாசத் தவையே. ௫

உணருரு அசத்தெனின் உணரா தின்மையின்
இருதிற னல்லது சிவசத் தாமென
இரண்டு வகையின் இசைக்குமன் உலகே. ௬

யாவையுஞ் சூனியஞ் சத்தெதி ராகலிற்
சத்தே யறியா தசத்தில தறியா
திருதிற னறிவுள திரண்டலா வான்மா. ௭

ஐம்புல வேடரின் அயர்ந்தனை வளர்ந்தெனத்
தம்முதல் குருவுமாய்த் தவத்தினி லுணர்த்தவிட்
டன்னிய மின்மையின் அரன்கழல் செலுமே. ௮

ஊனக்கண் பாச முணராப் பதியை
ஞானக் கண்ணினிற் சிந்தை நாடி
உராத்துனைத் தேர்த்தெனப் பாச மொருவத்
தண்ணிழலாம் பதிவிதி யெண்ணுமஞ் செழுத்தே. ௯

அவனே தானே யாகிய அந்நெறி
ஏக னாகி யிறைபணி நிற்க
மலமாயை தன்னொடு வல்வினை யின்றே. ௰

காணுங் கண்ணுக்குக் காட்டு முளம்போற்
காண உள்ளத்தைக் கண்டு காட்டலின்
அயரா அன்பின் அரன்கழல் செலுமே. ௧௧

செம்மலர் நோன்றாள் சேர லொட்டா
அம்மலங் கழீஇ அன்பரொடு மரீஇ
மாலற நேய மலிந்தவர் வேடமும்
ஆலயந் தானும் அரன்எனத் தொழுமே. ௧௨

———

சிவஞானபாடிய சாரம்

சிவஞானபோத மங்கல வாழ்த்திலே கல்லால் நிழல் மலைவு இல்லாரை எடுத்துக் கூறியது மிகப் பொருத்தமே. இறைவன் கல்லால் நிழலின்கண்ணேயிருந்து ஆதி நான்மறை முனிவர்க்கு நூலடைந்த கொள்கையா லேற்பட்ட மாலினை இல்லையாக்கினூர். நந்திபெருமான் வாயிலாகச் சனற்குமாரர் முதலியோர்க்கு உண்மை யுணர்த்தினர். ஆதலால், அவர் கருணையை வேண்டினர் ஆசிரியர் மெய் கண்டார். அவர் கருணையைப் பரஞ்சோதி மாமுனிவர் வாயிலாகப் பெறுமுன், பொல்லாப் பிள்ளையாரே தமக்குக் கலைஞானம் நல்கினராதலின் பொல்லாப் பிள்ளையார் வழி பாட்டின் பயனே கல்லானீழலார் திருவருளுமாமென்று ஆசிரியர் குறித்தாரென்பாரும் உளர். இம் மங்கல வாழ்த்துச் செய்யுளே நூலானது பன்னிரண்டு சூத்திர முடையதென்றும், முதல் ஆறு சூத்திரம் பொதுவும் பின் ஆறு சூத்திரம் சிறப்புமாமென்றும், மும்மூன்று சூத்திரங்கள் ஒவ்வோரியலாக அமைந்து முறையே முப்பொருள் உண்மை, அவற்றின் இலக்கணம், சாதனம், பயன் என்பவற்றை உணர்த்து மென்றுங் குறிக்குமாற்றினையும் பிற நயங்களையும் பாடிய முடையார் காட்டியதுபோல நுட்பமாகப் பிறர் எவரும் காட்ட வரிதாகும்.

அவையடக்கம், மிக அழகாக அமைந்தது. மெய்கண்ட பரமாசாரியர், தம்மையுந் தலைவனையுமுணர்ந்தாரே, பேரவை யெனக்கொண்டு அன்னோர்க்குத் தாம் உடைமை யென்றமை யால் அன்னோர் தம்முடைய உடைமையைப் போற்றுவதன்றி இகழ்தலில்லை யென்றுரைத்தார். பிறரது அறியா உரைகள் தம்முண் மாறுபடுவனவாய் மெய்ந்நயமுடையனவல்லவாக லான், அவற்றைத் தாம் ஏற்றுக்கோடலாற் பயனில்லை யென்பதை விளக்கினர். இச் செய்யுளைப்போல உண்மை நவிலும் அவையடக்கம் வேறியாதுமில்லை. இச் செய்யுளிற்

புறனென்பது சித்தாந்த சமயமொழித்தொழிந்த புறச்சமயங் களைக் குறிக்கும். அவற்றின் கொள்கைகளைத் தெளிவாகவும் சுருக்கமாகவும் பாடியமுடையார் தொகுத்துரைத்தனர்.

புறப்புறச் சமயங்களாவன :—உலகாயதமும் நால்வகைப் பௌத்தமும், ஆருகதமாகிய சமண மதமுமாம். இவை கடவுளை ஒப்புக்கொள்ளாத சமயங்கள்.

உலகாயதம் கூறுவதாவது :—நிலம், நீர், தீ, காற்று என்கின்ற நான்கு பூதங்களே யுள்ளன. இவற்றின் கூட்டுறவாலுண்டாகிய உடம்பின்கண் வெற்றிலைபாக்குச் சுண்ணாம்பின் கலப்பால் ஒரு சிவப்பு நிறமுண்டாதல்போல, ஓர் அறிவு தோன்றும். அஃதே உயிர். உடம்பிற்கு வேருக உயிரில்லை. வினையென்பது கிடையாது. இன்ப துன்பங்கள் உடம்பிற்கு இயல்பாயுள்ளன. பெண்டிர்பாற் பெறுமின்பமே வீட்டின்பம். பிராணவாயு நீங்கில் உடம்பு நாசமாம். உலக இன்பத்திற்குரிய நெறியையறிந்து உழவு, பசுக்காவல், வாணிகம், செங்கோன்முறைமை முதலியவற்றைக் கடைப் பிடித்து இம்மையில் நன்கு வாழ்வதே கடனும் என்பதே. இந்த உலகாயத மதத்தர், உடம்பே உயிரென்றும், ஐம்பொறி யுணர்வே உயிரென்றும், பிராணனே உயிரென்றும், அந்தக் கரணங்களே உயிரென்றும் கூறுவாராகப் பலவகைப்படுவர். இந்தச் சமயமானது, ஒரு சமயமாக உலகத்தில் எடுத்துப் பேசப்படாவிடினும் இதன் கருத்துக்கள் மக்கள் வாழ்க்கையிற் பெரிதுங் காணப்படுதல் தெளிவு. கொள்கையாற் சைவ சித்தாந்திகளாயும் ஒழுக்கத்தில் உலகாயதராயு மிருப்பார் நம்மவருட் பலர்.

புத்த மதம் :—கௌதம புத்தரென்பார் வடநாட்டிலே கபிலவாஸ்து என்னுமிடத்திலே ஓர் அரச குடும்பத்திலே பிறந்தவர். இளமையிலே மனைவியையும் மக்களையும் பிரிந்து உலகத் துன்பத்திற்கு விடுதலை காண்பான், எங்கும் திரிந்து இறுதியாக ஓர் அரசமரத்தடியிற்றங்கி எவ்வுயிருக்கும் இரங்குதலே பேரறம், ஊன்பயில் வேள்வியும், உடலைத் துன்புறுத்துந் தவமும், மக்கட்கு வேண்டாதனவென்று

கண்டனர். இக் கொள்கையைத் தமர்க்கும் பிறர்க்கும் எடுத்தோதினர். நல்லொழுக்கத்தை மட்டுமே போதித்தனர். கடவுளைப்பற்றி யாதுஞ் சொல்லவில்லை. அவர்க்குப் பின் வந்தவர்களும், அவர்கள் தலைவரும் புத்தசமயத்தைத் தனியே ஒரு சமயமாக்கிப் பிடகநூல் என்னுஞ் சமயநூலை வகுத்தனர். அந்நூலில் அறிவே ஆன்மாவென்று சொல்லப் பட்டது. அவ்வறிவானது ஒவ்வொரு கணப்பொழுதிலுந் தோன்றியழியும். முற்கணத்திற் றோன்றியழியும் அறிவின் வாசனை பிற்கணத்திற் றோன்றும் அறிவிற் பற்றுதலால் நீரோட்டம்போல அறிவு தொடர்ச்சியாக நிகழ்கின்றது. இவ் வாசனையழிவதே முத்தி. அதுவே நிருவாணம் எனப்படும். உலகத்திலுள்ள பொருள்களெல்லாம் இவ்வாறே கணந் தோறுந் தோன்றி யழியும் என்பதே புத்தமதக் கொள்கை. இவருள், மாத்தியமிகர், யோகாசாரர், சௌத்திராந்திகர், வைபாடிகர் என நான்கு வகையார் உண்டு. மாத்தியமிகர் உலகப்பொருள்களெல்லாம் உண்மையிற் சூனியமே. உள் பொருளாயின் அழியா; இல்பொருளாயின் தோன்றா; ஆனால் உணர்ச்சிக்குப் புலனாதல் போலுதலின், அவை தோற்றமே என்ற கொள்கை யுடையவர்கள். இவர்கள் பிடகநூல் சொன்னதைச் சொன்னவாறே கொண்டு மேல்வினவாமை யால் மத்திய மாணாக்கரெனப்பட்டனர். யோகாசாரர் என்பார், புறப்பொருள் சூனியமாயின், ஞானமும், அத்தகைத்தோ என்று தமது ஆசிரியனை வினவிய வழி, ஆசிரியன் ஞானமாத்திரம் உள்பொருள்; அது இருவகைப்படும். வடிவம் நிறம் முதலிய வற்றோடு கூடியதொன்று, அங்ஙனம் கூடாததொன்று. அகத்திலுள்ள ஞானமே புறத்துலகமாகத் தோன்றுவது என விடையிறுத்தான்.

சௌத்திராந்திகர் என்பார் புறப்பொருள் சூனியமென்ப தனை மறுத்து, யான் இது கண்டேன் என்றபோது யான் என்னுமுணர்வு அகத்துப் பொருளும், இது என்று சுட்டி யறியப்படுவது புறத்துப் பொருளும், ஆகலான் அகத்துப் பொருளும் புறத்துப் பொருளும் வெவ்வேறுள வென்றனர். அப்போது ஆசிரியன் கூறுவான்:—புறத்துப் பொருளும்

உள்பொருளே; அவை கணந்தோறுந் தோன்றி யழிதலின், அவற்றின் வடிவு முதலியன அறிவிற்பட்டு நீங்க, அறிவிற்பட்ட வடிவத்தையே அப்பொருளென அறிகின்றோம். பொருள்கள் அகச்சமுதாயம், புறச்சமுதாயமென இருதிறப்படும். புறச்சமுதாயத்திற்குக் காரணம், நிலவணு, நீரணு, தீயணு, வளியணு என்பன. அகச்சமுதாயம் என்பது சித்தமும் அதன் பகுதிகளும்: அவற்றிற்குக் காரணம், உருவம், அறிவு, உணர்ச்சி, பெயர், தொழில் என்னும் ஐவகைக் கந்தங்கள். சித்தத்திலே சிந்திக்கப்படும் சுவை, ஒளி, ஊறு, நாற்றம் முதலியன உருவக்கந்த மெனப்படும். உருவக்கந்தத்தை உணருமுணர்வுகள் அறிவுக்கந்தம். அது, பொது, சிறப்பு என இருவகைத்து. இவ்வறிவிற்றோன்றும் இன்ப துன்பங்கள் வேதனைக்கந்தம். பொருள்களின் பெயர்கள் குறிக்கந்தம்; பொருள்களின் தொழில்கள், வாசனைக்கந்தம். கந்தமென்ற சொல் கூட்டமென்று பொருள்படும். உருவம், ஞானம், வேதனை, குறி வாசனை என்பவற்றின் தொகுப்புகள் உள்ளத்துணரப்படுதலின், அவை அகச்சமுதாயமாம். எனவே, இங்ஙனங் கூறிய விடையைக் கேட்டு இவ்வாறு கேட்பதற்குத் தக்கவாறு விடையறிவுறுக்குஞ் சூத்திரங்கள் எவ்வளவிலே முடியுமென்று வினவிய மாணாக்கர்கள் சூத்திர அந்த மியாதெனக் கேட்டமையின், சௌத்திராந்திகர் எனப்பட்டனர்.

வைபாடிகர், புறப்பொருள் காட்சிப் பொருளே என்ற கொள்கையுடையார். நால்வகைப் புத்தசமயத்தவரும், கணபங்கவாதமும், ஞானமே ஆன்மாவென்ற கொள்கையும் பொதுவாகத் தழுவுபவர்கள். புத்தமதமானது பிற்காலத்திலே, வடநாட்டிலே, பெருவழி, சிறுவழி யென்று இரு பகுதிப்பட்டது. தெய்வ வணக்கம், காயசித்தி முதலியவற்றோடு கூடிய நெறியாகிய பெருவழியே சீனநாடு முதலியவற்றிற் பரவிற்று. சிறுவழி பொதுமக்களுக்கு ஏற்புடைத்தன்றாயிற்று. தென்னாட்டிற்கு அசோகன் காலத்தே வந்தது, கலப்பில்லாத புத்தமதமாகிய 'சிறுவழியே.' சிவஞான சித்தியார் பரபக்கத்திலே விரிவாக ஓதி மறுக்கப்பட்டது சௌத்திராந்திகக் கொள்கையாம்.

இனி, அருகன் என்னுங் கடவுளை வணங்குவதால் ஆருகதமென்னப்பட்ட சமயமே சமணமதமென்பது, சைன மதமென்பதும் அதுவே. சினன் என்ற பெயர் அருகனுக்குண்மையால், சைனம் என்றதும் அக் கடவுள் மதமே. புத்த மதம்போலக் கொல்லாமையை வற்புறுத்தவே, இச் சமயம் வடநாட்டிலே, இடபதேவர் மகாவீரர் என்பவரால் நிறுவப்பட்டது. இச் சமயத்தார் புத்தரினுஞ் சிறந்த தத்துவக் கொள்கையுடையவர். சீவன், அசீவன், ஆச்சிரவம், சமுவரம், நிர்ச்சரம், பந்தம், வீடு எனப் பொருள்கள் ஏழு என்பது அவர்கள் கொள்கை. உலகம் கடவுளாற் படைக்கப்படவில்லை. வினைப்பயனை யூட்டுவான் கடவுளில்லை. சீவன் அநாதிசித்தன், முத்தன், பெத்தன் என மூவகைப்படும். அநாதிசித்தன் அருகக் கடவுளே. முத்தன் கட்டு நீங்கிய வுயிர். பெத்தன் கட்டுண்ட வுயிர். உடம்புதோறும் சீவன் வெவ்வேருவன்.

பெத்தர்கள் மக்கள், தேவர், நரகர், விலங்குகள் என நாற்பகுதிப்படுவர். அசீவர் புற்கலமும், ஆகாயமும், தன்மமும், அதன்மமும் என நால்வகைப்படும். நான்கு பூதங்களும், மர முதலியனவும், பை முட்டை முதலியவற்றிற் பிறப்பனவும், புற்கலமெனப்படும். இவற்றிற்குக் காரணம் பரமாணுக்கள். ஆகாயம் உலகங் கடந்தது. உலகங்கடவாதது என்றிருவகைப்படும். முன்னது எல்லையற்றது. தன்மமும், புற்கலத்திற்கு வேருய் நன்மை பயப்பது. அதன்மம் தீமை பயப்பது. ஆச்சிரவமென்பது கன்மத் தொடர்ச்சி. சமுவரம் என்பது இரக்கமும் அடக்கமுமாம். நிர்ச்சரம் என்பது உடலைத் துன்புறுத்துங் கடுந்தவம். பந்தமென்பது இருப்புக்கூடானது, அதன்கணுள்ள சுரைப் பழத்தை அழுத்துவதுபோல, சீவனுடைய சுதந்தரத்தை அடக்கி நிற்குந் தீக்குணங்கள். வீடென்பது பந்தமற்றுச் சுதந்தரம் பெற்று உலகங் கடந்த ஆகாயத்திற் செல்லுதல்.

சமணர் கூறும் எழுவகைப் பதார்த்தங்களையும் உண்டென்ருதல் இல்லையென்ருதல் கூருது, உண்டாம், இல்லையாம், உண்டுமில்லையுமாம் முதலிய ஏழு முடிவுகளுடன் கூறு

வாராதலின், அவர் கொள்கை அநேகாந்த வாதமெனவும் சத்தபங்கி நியாயமெனவுங் கூறப்படும். நிகண்டவாதிகள் ஆசீவகர் என்றிரு திறப்படுவர். நிகண்டவாதி மதமே மேற் கூறப்பட்டது. ஆசீவகர் நிலம், நீர், தீ, கால், உயிர் என்னும் ஐந்தினையும் ஐந்தான்மாக்களென்ற கொள்கையுடையவர். பிற வேறுபாடுகளைச் சிவஞான சித்தியுட் காண்க.

இனிச் சிவாகமங்களை ஒப்புக்கொள்ளாது வடமொழி வேதத்தைப் பிரமாணமாகக்கொண்டு ஏற்பட்ட ஆறு சமயங் களே புறச்சமயங்களெனப்பட்டன. இவற்றையே வேத வாதியர் ஆறு தெரிசனம் என்றும், இவற்றின் நூல்களையே ஆறு சாத்திரமென்றுங் கூறுவர். இவற்றுள் கணாத முனிவர் செய்த வைசேடிகமும், கௌதமர் செய்த நியாய சூத்திரமும் தருக்கமெனப்படும். இரண்டுஞ் சிறுபான்மையே வேற்றுமை யுடையன. இவைகள் ஐம்பூதங்களையும், காலம், திசை, மனம், உயிர், கடவுள் என்பனவற்றையும் ஒப்புக்கொள்ளுவன. கடவுள் எல்லாம்வல்லவன். அவன் திருவுள்ளப்படி உலகந் தோன்றி யொடுங்கும். அவன் செய்த நூல் வேதம். உயிர்கள் வினைக்கீடாகப் பிறப்புடையன. மனம் அணுவளவினதாய் உயிர்தோறும் வெவ்வேறாயிருக்கும். மனத்தோடு கூடாமற் போனால் உயிர்க்கறிவில்லை. மனமற்ற விடத்தே உயிர் கற்போலக் கிடக்கும். அஃதே முத்தி யென்பர். வைசேடிகர் முத்தியில் ஆனந்தம் உண்டென்பர். சமணரையும் புத்தரையும் போலத் தார்க்கிகரும் அணு காரண வாதிகளே. முன்னிரு சமயத்தாரும் அணுக்கள் ஒருங்கு சேர்ந்து காரியப்படு மென்பர். தார்க்கிகர் இறைவன் விருப்பத்தாற் பரமாணுக் களிலே செயல் தோன்றும் என்றும், இவ்விரண்டாகவும் மும்மூன்றாகவும் அணுக்கள் சேர்ந்து காரியப்படுமென்றுங் கூறுவர். தார்க்கிக சமயத்தார் செய்த பெருநன்மை யாதெனில், கடவுளால் உலகம் தோன்றி யொடுங்குமென் பதை மேற்கொண்டதே.

மீமாஞ்சகரென்பார் வேதக் கருமகாண்டத்திற் குறித்த கிரியைகளையே முக்கியமாகக் கொள்ளுவர். சைமினி

யென்னு முனிவராற் செய்யப்பட்ட நூல் மீமாஞ்சையாம். வேதம் ஒருவராற் செய்யப்படாது நித்தியமாகவுள்ளது என்ற கொள்கை இச் சமயத்திற் காதாரமானது. வினையே பயன்களை யுதவும்; ஆன்மாக்கள் பல; கடவுள் இல்லை, உலகம் என்றும் நிலைபெறுவதாம் என்பன இம்மத முக்கியக் கொள்கைகள். சைமினி சூத்திரத்திற்குப் பாடியஞ் செய்தவன் சபரமுனிவன். சூத்திர வழியாக ஒரு சமயம் வகுத்தவன் பட்டாசாரியன் என்பவன். பாடிய வழியாகக் குருமதமெனப் பிறிதொரு சமயந் தோற்றுவித்தவன் பிரபாகரன். மீமாஞ்சை நூலின் பன்னிரண்டத்தியாயக் கருத்துக்களையும் ஆசிரியர் சிவஞான யோகிகள் திராவிட மாபாடியத்திற் றெருகுத்துள்ளார். மீமாஞ்சகன் சமணனது நிலையில் உள்ளவன்; கடவுட் கொள்கை யில்லாதவனுதலின், இவன் தார்க்கீகனிலுங் கீழ்ப் பட்டவன். சைமினி நூல் பூர்வமீமாஞ்சை யெனப்படும்.

உத்தர மீமாஞ்சை யென்பது வியாசர் செய்த ஏகான்மவாத நூல். ஏகான்மவாதம் என்பது நால்வகைப்படும். மாயாவாத மென்பது, பிரமமாகிய கடவுள் உள்ள பொருள்; உலகம் உயிர்களாகிய ஏனையன தோற்றமே; இத் தோற்றத்திற்குக் காரணம் பிரமம் மாயையொடு தொடர்புற்று அதன் வர்யிலாகப் பிரதிபலித்தலே; அந்த மாயை யாதெனில், அது இன்ன தென்று சொல்லவொண்ணுதது. இம் மாயைக்கு வேருக வுள்ள பிரமம் யானென்றறிவதே முத்தி என்ற கொள்கை யுடையது.

பாற்கரியவாத மென்பது, பிரமமே சடமும் சித்துமாய உலகமாயிற்று. அங்ஙனம் விகாரப்பட்டமையை அறியாமை யாற் பந்தமாயிற்று. வேதாந்த ஞானத்தால் உடம்புக்கு வேருக ஆன்ம ரூபம் விளங்கும். அதன்கண் ஒடுங்குதலே முத்தி யென்ற கொள்கைத்து.

கிரீடாப்பிரமவாத மென்பது, பிரமம் யானே; நிகழ்பவை யெல்லாம் என் விளையாட்டென்றறிவதே முத்தி என்பது. சத்தப் பிரமவாதமென்பது, முடிவு காலத்தில் பிரமம் சத்த

வடிவாயிருக்கும் ; அதுவே அவிச்சையால் சடமுஞ் சித்துமாய உலகங்களாமென்ற கொள்கையுடையது.

சாங்கியக் கோள்கை யாதெனில், சடவுலகம் குணதத்துவத்தினின்று உண்டாகிறது. சத்துவம், இராசதம், தாமதம் என்ற மூன்று குணங்களும் ஒப்பநின்ற நிலையிலே அது பிரகிருதி தத்துவமெனப்படும். அது எல்லாவற்றிற்கு மூலமானதால், மூலப் பிரகிருதியாம். இதற்குக் கீழ் உள்ள பூதமைந்து, பூத நுட்பங்கள் (தன்மாத்திரை) ஐந்து, அறிவுப் பொறி ஐந்து, தொழிற் பொறி ஐந்து மனம் புத்தி அகங்காரம் என்னும் இருபத்துமூன்று தத்துவங்களாலாகியதே உலகம். ஆன்மாக்கள் பல. அவை அறிவு வடிவாயிருப்பன. மூலப் பிரகிருதியின் திரிபு வடிவமாகிய புத்தியைச் சார்ந்து உயிர்கள் கட்டுப்பட்டமையால் அவைகட்கு இன்பதுன்ப உணர்வு தோன்று நின்றது. மூலப் பகுதியினின்று தன்னைப் பகுத்துணர்வதால், அவிச்சை நீங்கி முத்தி உண்டாம். இதன்கண் சற்காரிய வாதம் சொல்லப்படுகின்றது. ஆசிரியர் பரிமேலழகர் 'சுவையொளி' என்ற திருக்குறளுரையிலே சாங்கியக் கொள்கையை எடுத்தாண்டனர். சமணரைப் பார்க்கிலும் சாங்கியன் உலக மூலத்தைக் காண்பதில் வல்லவன். சமணன் அணுகரணவாதி; சாங்கியன் பிரகிருதிவாதி. இருவரும் கடவுளில்லாக் கொள்கையரே. சாங்கிய நூல் செய்தவன் கபில முனிவன்.

யோக மதம் :—பதஞ்சலி முனிவரால் யோகக் கொள்கை நிறுவப்பட்டது. சாங்கியக் கொள்கையோடு முத்திக்கு யோகமும் வழியே யென்பதும், இறைவன் ஒருவன் உளன், அவன் முற்றுணர்வுடையோனாய் உயிர்கட்கு ஞானத்தை அறிவுறுப்பனென்பதும் யோக மதத்திற் சிறப்பாகக் காணப்படுவன. தார்க்கிகனினும் யோகமதத்தான் ஒருவகையாற் கீழ்ப்பட்டவனே. என்னை? தார்க்கிகன் கடவுளால் உலகம் தோன்றி யொடுங்கு மென்பான்; யோகமதத்தான் கடவுள் கலைஞானமாத்திரம் அறிவிப்போனென்பான்.

மேற்கூறிய வைசேடிகம், நியாயம், மீமாஞ்சை, ஏகான்ம வாதம், சாங்கியம், யோகமென்னு மாறுமே, வைதிகர்களால் ஆறுசமய மெனப்படும். பாஞ்சராத்திரம் வேதத்திற்குப் புறம்பானது. அக் காரணம்பற்றி வைதிகர்களால் கழித் தொதுக்கப்படுவதுபோலச் சைவர்களால் சிவாகமத்திற்குப் புறம்பென்று அது கழிக்கப்படும். மேற்சொன்னவற்றுள், வைசேடிகம், நியாயம் என்னுமிரண்டையும் 'தருக்கமதம்' என்பதனுள்ளடக்கிப் பாஞ்சராத்திரத்தை ஆருவது புறச் சமயமாக வைத்து மறுத்தல் சித்தாந்த நூன்மரபு.

பாஞ்சராத்திரம் சாங்கியத்தைப்போல இருபத்து நான்கு தத்துவங்களையு மொப்புக்கொண்டு இருபத்தைந்தாந் தத்துவ மாக வாசுதேவன் என்ற ஒரு பரம்பொருள் உண்டு என்றும், அவனிடத்திற்ருேன்றிய நால்வரால் சித்துஞ் சடமுமாகிய எல்லாம் படைக்கப்பட்டமையால் எல்லாம் வாசுதேவனது திரிபே என்றும் வாசுதேவனது உருவில் ஒடுங்குதலே முத்தி யென்றுங் கூறும். இது ஏகான்மவாதத்துடன் பாற்கரிய வாதம் போன்திருப்பது. பால் தயிராவதுபோலக் கடவுள் உலகமானுரென்பது பாஞ்சரர்த்திரக் கொள்கை. சித்துஞ் சடமுமாகிய உலகத்தின் மூலமாகிய மூலப்பகுதி பாலுக்கு உறைமோர்போலு மென்பாருமுளர். எவ்வாருயினும் வாசு தேவன் சடத்தொடு கலந்தே சித்துப்பொருளாகிய உயிரைப் படைத்தான் என்பராகலின், பாஞ்சராத்திரம் ஏகான்மவாதச் சார்புடையதே. சித்துப் பொருளாகிய உயிர் கடவுளாற் படைக்கப்படவில்லை யென்று திருவிப் பாஞ்சராத்திரக் கொள்கையை இராமாநுசர் மறுத்தாரென்பாருமுளர். இறைவன் அழியா உருவுடைய னென்றும், அவ்வுருவி லொடுங்குதலே முத்தி யென்றும் வைணவர் கூறுதலால் இறைவனுக்கும் உயிருக்கும் உருவுடைய சடத்தின் சம்பந்தம் எக்காலமு முண்டென்பது பெறப்படும். படவே பேரறி வுடைய பரம்பொருளோடு சிற்றறிவாகிய உயிர்கள் கலந்தின் புறும் பெருமுத்தி அவர் அறியாததென்பது தெளிவு.

இனி, ஆகமங்களை ஒப்புக்கொண்டும் அவற்றிற் கூறப் பட்ட முப்பொருளை ஒப்புக்கொள்ளாது, பரமசிவனே கடவுள் என்பதை மாத்திரங்கொண்டு சிறுபான்மை புறச்சமயக் கொள்கைகளைத் தழுவுஞ் சமயங்களாகிய அகப்புறச் சமயங்களை ஆய்வாம்.

பாசுபதம் என்பது கடவுள் உண்டு, உயிர்கள் பல, உயிர்களுக்கு ஆணவமல மென்பதில்லை, மாயையினாலும் கன்மத்தினாலும் உயிர்கள் துன்புறுகின்றன, பற்றற்றுச் சிவதீக்கை பெற்றவனிடம் கடவுளுடையஞானம் பற்றும், ஞானம் பற்றிய உயிர்கள்பால் கடவுள் தன் குணங்களை வைத்துவிட்டுத் தான் அதிகாரத்தின் ஒழிவுபெற்றிருப்பன் என்ற கொள்கை யுடையது. பாசுபத மதத்தினர் சிவசங்கிராந்த சமவாதி யெனப்படுவர். இவர்கள் சுத்த தத்துவங்களைப்பற்றி யாதும் அறியாதவர்கள்.

மாவிரதம் என்ற மதமுடையாரும் பாசுபத மதத்தினரைப் போன்ற கொள்கையுடையவரே. தீக்கை பெற்று எலும்பு மாலை யணிதல் முதலிய சில விரதங்களை மேற்கொண்டு உயிர்கள் முத்தியெய்தற்பாலன என்பர். இவர்கள் முத்தி நிலையில் உயிர்களுக்குச் சிவனோடு சமமாக எல்லாக் குணங் களும் உற்பத்தியாகின்றன என்ற கொள்கையுடையவர்கள் ஆதலால் உற்பத்தி சமவாதியெனப்படுவர். காபால மதத் தினரும் இவ்வாறே உயிரியல்பும் பந்தவியல்புங் கூறுவர். தீக்கை பெற்றுப் பச்சைக் கொடியேந்தி நாடோறும் மனிதர் தலையோட்டில் ஐயமேற்றுண்பவர் முத்தராவர். அவர்கள் சிவனால் ஆவேசிக்கப்பட்டு எல்லாக் குணங்களும் பெற்றுச் சிவசமமாவர் என்பதால் இவர்கள் ஆவேச சமவாதி யெனப் படுவர். காளாமுக மதத்தினர், இறைவனைப்போற் புலியதள் முதலியன அணிவதையும் சாம்பவமதத்தினர் திருநீற்றினை உடம்பு முழுவதும் அணிவதையும் சிறந்த கடமையாகக் கொள்ளுவர். அவர்களெல்லாரும் காபால மதத்தாரோ டொத்த தத்துவக் கொள்கையுடையவரே.

வாமமதமும் வைரவ மதமும் முறையே சத்தி வழி பாட்டையும்வைரவ வழிபாட்டையும் மேற்கொண்டனவாயினும், பாஞ்சராத்திரம்போலக் கடவுளுக்குப் பரிணமங் கூறுதலும் கடவுளுருவிலொடுங்குதலே முத்தி யென்றலும் உடைமையால் புறச்சமயத்தோடொத்த இயல்புடையனவே.

ஐக்கியவாத சைவரென்பார் பிற அகப்புறச் சமயத்தா ரினுஞ் சிறந்தவர். முப்பத்தாறு தத்துவங்களை யொப்புக் கொண்டாலும், ஆணவ மலத்தை ஒப்புக்கொள்ளாதவர்கள். உயிர் கடவுளோடு கலப்பது நீரும் நீரும் போல வென்றலின், இவர்களும் ஒருவகையாற் சிவசமவாதியரே.

அகப்புறச்சமயங்கள் ஆணவமல வுண்மையை அறியா தனவாய்ச் சிவசமவாதச் சார்புடையன; ஐக்கியவாத மொழியப் பிற சமயங்கள் சுத்த தத்துவவுணர்ச்சியில்லாதன.

இது, அகச்சமயத்தினர் யாவரும் சைவசித்தாந்திகள் போலக் கடவுள், உயிர், சுத்தமாயை, அசுத்தமாயை, ஆணவம், கன்மம் என்ற ஆறு பொருளையும் அல்லது பதி, பசு, பாசமென்ற முப்பொருளையும் ஒப்புக்கொண்டவர்கள். இவற்றினியல்பு கூறுமிடத்துச் சைவசித்தாந்தியினின்று வேறுபடுவர். அகச்சமயங்களாவன :—பாடாணவாதம், பேத வாதம், சிவசமவாதம், சிவசங்கிராந்தவாதம், ஈசுர அவிகார வாதம், சிவாத்துவிதம், சுத்தசைவ மென்பன.

சுத்தசைவத்தை வேறு சமயமாக வைத்தெண்ணாது பிற ஆறினையுமே அகச்சமயமென்ப. பாடாணவாத மதத்தினர், தார்க்கிகர்போல, முத்தியில் ஆன்மா யாதொரு அனுபவமின்றி ஆணவமலத்தோடு கல்லுப்போலக் கிடக்குமென்பர். பேத வாதியர் உயிர்ஞானம் பெறுவதே முத்தியென்பர். உயிர் கடவுளொடு கலக்கவேண்டியதில்லை. தாமிரம் பொன்னாவது போல, பெத்தவுயிர் முத்தியுயிராகின்றதென்பது அவர்கள் கொள்கை. சிவசமவாதியர், உயிர் சிவனுக்குச் சமானமாய்ச் சிவனைப்போல ஐந்தொழில் நடத்துமென்பர்.

இவர்கள் கொள்கை பலகடவுளர் கொள்கைக்கு இடந் தரும். இவர்களே அருப சிவசமவாதியர். அகப்புறச் சமயத் தாருட் சிலர் உருவ சிவசமவாதியார். சங்கிராந்தவாத சைவ ரென்பார், ஆன்மாவானது, காந்தம் போல விகாரமின்றி நிற்க, அதன் முன்னே இரும்பு காரியப்படுமாறு போல, பிராணவாயு உடலைக் காரியப்படுத்தும். ஐம்பொறிகளும் பொருள்களை நுகரும்; அந்தக்கரணங்கள் பொருள்களை யறியும். அந்தக் கரணங்கள் பொருள்களை அறியாமல் ஐம்பொறிகள் அவற்றை நுகர்வதில்லை. பிராணவாயுவின்றி உடல் செயலறும் பக்குவம் வந்தவிடத்து, இறையருள் உயிரிலே பிரதிபலிக்கும். விறகிற் கொளுத்தின தீ விறகைக் கெடுத்துவிடுதல்போல, உயிர் கெட்டுக் கரணங்களெல்லாம் சிவகரணமாய்க் கடவுளையறியும் உயிர்க்கு யான் என்ற உணர்ச்சி கிடையாது என்பர்.

ஈசுர அவிகாரவாதிகள்—கன்மப் புசிப்பால் ஆணவம் நீங்கிய உயிர்கள் ஞானமாகிய விளக்கைப் பெற்று, மரநிழல்போல விகாரமின்றியிருக்கிற கடவுள் திருவடியிற் சேர்ந்து இன்ப முறுவர். இதனுள் சிவன் வந்துணர்த்தாமல் தானே சிவ ஞானத்தைப் பெறும் என்றதே ஒப்புக்கொள்ளக்கூடாதது. கண் திறக்கப்பெருமல், குருடன் ஒளியைக் காண்பதில்லை யென்பதே சித்தாந்தக் கருத்து.

சிவாத்துவித சைவரென்பார் உலகமெல்லாம் சிவவடிவம், அருவமாயிருப்பது சிவம், உருவமாயிருப்பது சிவசத்தி, முத்தி யிலே உயிர் என்ற ஒரு முதலில்லையாகச் சிவம் பிரகாசிக்கும்; உயிர் சிவமேயாய்ப் போய்விடுமென்பர். முத்தியிலும் உயிர் பொருட்டன்மையால் வேறேயுளதென்ற சைவசித்தாந்தக் கருத்திற்கு இது மாறுபட்டது. சுத்த சைவரென்பார், உயிராவது சகல நிலையில் அறிவோடிருந்து, ஆணவமலச் சார்பால் அறிவுகெட்டதென்றும் சகல நிலையே அநாதிநிலை யென்றும், சரியை கிரியை யோகமே ஞானந் தருமென்றுங் கூறுவர். இவர் சைவசித்தாந்தத்தின் நுட்பமறியாதவர். இவரைச் சைவவாதியரென்றனர் உமாபதி சிவாசாரியார்.

இதுகாறுங் கூறியவாற்ருல் இச் சமயங்களெல்லாம் உலகம் உண்டு, உலகமும் உயிர்களுமுள்ளன, கடவுளும் உயிர்களும் உலகமும் உள்ளன, கடவுளும், உயிரும் முடிவில் ஒரு பொருளே, இரண்டும் முடிவிற் சமமாவனவே என்ற கோள்கைகளே பல சமயச் கொள்கைகளாயின. வினையுண்டு, மாயையுண்டு. மூலமலம் உண்டு என்பதிலும் சமயிகள் வெவ்வேறு கொள்கையுடையவர்களே. இவற்றின் இயல்பு கூறுமிடத்தும் வெவ்வேறு கருத்துக்கள் எழுந்து நிலவின. புறப்புறச் சமயமும் புறச்சமயமும் சிவஞானசித்தியார் பரபக்கத்திலே யாய்ந்து மறுக்கப்பட்டன. ஏனையன, சங்கற்ப நிராகரணத்திலே விதந்தோதிக் கண்டிக்கப்பட்டன.

இனி, சைவசித்தாந்தக் கொள்கை கூறுஞ் சிவஞான போத நூலாராய்ச்சி, இயற்றற்பாலது. முதற் சூத்திரக் கருத்து வருமாறு :—அவன், அவள், அதுவென்று மூன்று பகுதிப்படும் உலகத்தொகுதி தோன்றுதல், நிலைபெறுதல், அழிதல் ஆகிய முத்தொழிற்படுதலால், அது ஒருவனுல் தோற்றுவிக்கப்பட்டு, நிலைபெறும் பொருளே. அது யாரால் தோற்றுவிக்கப்படு மெனின், அது ஒடுங்குதற்குக் காரணமான 'ஒடுங்கி'யால் என்க. அவன் ஏன் மீளவும் உலகத்தைப் படைக்கிருன் என்னில், உயிர்களுடைய ஆணவமலம் கழிதற்குப் பக்குவப் படும் பொருட்டு, சூத்திரத்தில் 'ஒடுங்கி மலத்துளதாம்' என்பதற்கு, கருமமலம் பக்குவப்படுவதற்காக ஒடுங்கி, மீளவும் உளதாம் என்பாருமுளர். இனி, குடத்திற்கு மூலமாய மண் போலச் சட உலகத்திற்கு மூலமாய மாயையும் மலமெனப்படு தலின், 'ஒடுங்கி மலத்துளதாம்' என்பதற்கு மாயையினெடுங்கி மீளவும் அதன்கணின்று உண்டாமென்பாருமுளர். உலகம் ஒடுங்குதற்குக் காரணமான முதல்வனுல் உலகம் உண்டாதலின், அந்தத்தைச் செய்யுங் கடவுளே ஆதியுமாவன் என்ருர் ஆசிரியர்.

உலகத் தொகுதியென்பது, முப்பத்தாறு தத்துவங்களிலு முண்டாகிய அண்டங்களும் அவற்றைச் சார்ந்த புவனங்களு மாம். அவற்றுள் இருபத்தைந்து தத்துவங்கள் பிரகிருதி

மாயையிலும், ஆறு தத்துவங்கள் அசுத்த மாயையிலும், ஐந்து தத்துவங்கள் சுத்தமாயையிலுமுள்ளன. சுத்தமாயையிலுள்ள ஐந்து கலைகள் எல்லாத் தத்துவங்களிலும் வியாபித்திருக்கும். அவை நிவர்த்திகலை (=நீத்தற்கலை) பிரதிட்டாகலை (=பதிவு கலை) வித்தியாகலை (=புலக்கலை) சாந்திகலை (=அமைதிகலை) சாந்தியாதீதகலை (=அமைதிமேற்கலை) என்பன. ஒவ்வொரு கலையினுட்பட்ட முதல்களையும் உலகுகளையும் ஒடுக்குதற்குக் காரணமான கடவுளர் வெவ்வேறுளர். தூயமாயா வுலகங்கள் முடிய யாவற்றையுஞ் சங்காரஞ் செய்யும் முதல்வனாகிய பரம சிவனே முழுமுதற் கடவுள். ஆதலின், முதற் சூத்திரக் கருத்துரையுள், ஆசிரியர் சங்கார காரணனென்று மாத்திரங் கூருது 'சங்கார காரணனுயுள்ள முதலையே' என்றார்.

முதற் சூத்திரத்தினை ஆசிரியர் மெய்கண்டார், மூன்று அதிகரணமாகப் பகுத்துரைத்தார். அதிகரணம், வகையின் விரிவைச் சுட்டுகின்றது. ஒவ்வோர் அதிகரணத்திற்கும் ஏதுவும் காட்டும் உரைத்தனர். அதிகரணப் பொருளும் ஏதுவும், உரைச் செய்யுளாலும், உதாரணம், வெண்பா வாலும் இயம்பப்பட்டன. சில அதிகரணங்களில் ஒன்றிற்கு மேற்பட்ட வெண்பாக்களுள்ளன.

முதல் அதிகரணக் கருத்து :—உலகமானது, ஒருவன், ஒருத்தி, ஒன்று, என்று சுட்டப்படுகிற அவயவப் பகுதிகளை யுடையது. ஆடையானது நூல்களை அவயவமாகவுடையது. வேறு வேறு பிரித்தற்குரியதையே அவயவமாகவுடையது என்பர். பொற்கட்டியில் வெட்டிய ஒரு சிறு துண்டை அவயவ மென்பதில்லை. உலகம் நிலம், கடல், மலை முதலிய அவயவப் பகுப்புடையது. இற்றைக்காலத்திலே, மேலை நாட்டினர் சில சில தனிப்பொருள்களின் கலப்புக்களாலே எண்ணிறந்த சடப்பொருள்கள் உளவாயினவென்றும், அத் தனிப்பொருள் களை நுண்ணிதின் ஆய்ந்து பார்க்கின் ஒரு சடசத்தியின் வெவ்வேறு திரிபுகளே அவையாமென்றும் அறிவியல் நூல் (Science) வாயிலாக நிறுவுவர். இந் நாட்டுத் தத்துவக் கொள்கைப்படி உடல்களும் பிற பொருள்களும் ஐம்பூதங்க

ளாலாயவை. ஐம்பூதம் தன்மாத்திரையினின்று வந்தன. தன்மாத்திரை அகங்காரத்தினின்றும் வந்தன. அதற்கு மூலம் குண தத்துவம். அதற்கு மூலம், மூலப்பிரகிருதி. அதற்கு மூலம் கலை. அதற்கு மூலம் அசுத்தமாயை. அசுத்த மாயை சுத்தமாயையின் கீழடங்குவது. எனவே, சடப் பொருள்களெல்லாம் ஓர் அடிப்படையான பொருள்களில் நின்றுமெழுவன. அவை தோன்றுகின்றன. தோன்றிய வடிவோடு நிற்றலுங் காண்கின்றோம். தோன்றியது தோன்றிய மூலத்திற்குச் சென்று மறைவதே அழிவென் கின்றோம். ஆதலால், அவை, தோற்றம், நிலை, இறுதியுடைய பொருள்கள். தோன்றி நிற்கும்போது, அவை சுட்டியறியப் படும் பொருளாயுள்ளன. சுட்டியறியப்படும் பொருட் டொகுதியே உலகம். சுட்டுப்பொருள்க்ள் மறைந்து சுட்டப் படா நிலையடைதல்போல, அவை பலவற்றின் தொகுதியாய உலகமும், மறைந்து சுட்டப்படா நிலையடையுமென்க. எப்பொழுது சுட்டற்ற மூலத்தில் நின்று சுட்டப்படும் பொருள் தோன்றிற்றோ, தோன்றியவாறே அது மறைதற்குரியதே. தோற்றத்திற்கும் மறைவிற்குமுள்ள இடையீடே நிலை எனப் படும். இதனாலே ஆசிரியர், தோற்றமும் ஈறும் உள்ளதன் பாலே கிடப்பதென்றார். ஒருவகையான பயிர்களோ, உயிர் களோ, ஒருகாலத்திலே முழுவதுந் தோன்றி ஒருகாலத்தே முழுவதும் அழிவது காணப்படும். அவ்வாறே அவற்றின் தொகுதியாய உலகமுமாம் என உணர்க என்பதே இவ் வதிகரண உதாரணச் செய்யுட் கருத்து.

முதற் சூத்திர இரண்டாம் அதிகரணப்பொருள் வருமாறு:— உலகம் ஒடுங்கித் தோன்று வகையாயிற்று என்றால் தோன்று துள்ள பொருளே உலக மூலமாமேயன்றி உலகம் அழிந்து சூனியமாயிற்றென்பதில்லை. சூனியத்தில் நின்று ஒன்றுந் தோன்றுதென்பார், 'இல்லதற்குத் தோற்ற மின்மையின்' என்றார். உள்ளதொன்று தோன்றுங்கால் எதன்கண் நின்று தோன்றிற்றோ, அதன்கணின்று தோன்றும். எப்படி ஒடுங் கினதோ அப்படியே தோன்றும். நெல்லானது வித்தினின்று

எப்படித் தோன்றுகின்றதோ, அதுபோலவென ஆசிரியர் சிவஞான முனிவர் அதனை விளக்கினர். நெல் வித்தினின்று நெல் முளைப்பதன்றிக் கமுகு நிகழுவதில்லை.

ஏன் ஒடுங்கியது மீளத் தோன்றுமெனின், 'இலயித்தது ஆம், மலத்தால்' எனச் சூத்திரத்திற் கூறுவதை வலி யுறுத்தினர்.

சடவுலகமானது அதன் மூலமாகிய மாயையிலே ஒடுங்கினாலும், அம் மாயைக்கு ஆதாரமாயுள்ள முதல்வனால் ஒடுங்குமாதலானும், அவனாலேயே மீள உண்டாமாதலானும், "ஒடுங்கின சங்காரத்தினல்லது உற்பத்தியில்லை" யென்று ஆசிரியர் அருளிச் செய்தனர். காத்தற் கடவுளால் உலகந் தோன்றி யொடுங்கு மென்பாரை நோக்கி, 'காத்தற் கடவுள் இருபத்தைந்தாந் தத்துவமென்று கூறுபவரே அவ்வாறு கூறுதலின், நிலமுதல் மூலப்பகுதி வரையுள்ள இருபத்துநான்கு தத்துவங்களே அக் கடவுளால் ஒடுங்குதல் கூடும். இருபத்து நான்காம் தத்துவத்திற்கு மேற்பட்ட தத்துவ புவனங்களை யொடுக்குங் கடவுள் வேறேயுளன். அவன் இருபத்தைந்தாம் தத்துவத்தை யொடுக்கும்போது அத் தத்துவக் கடவுளையும் அவனுக்குக் கீழ்ப்பட்ட அயனையும் ஒடுக்குவன் என்றார். மேலும் வாசுதேவனே மூலப் பிரகிருதி யென்பார்க்கு மூலப் பிரகிருதியாகிய தத்துவம் ஒடுங்குங்கால், வாசுதேவனும் ஒடுங்குமென்பது போதரும்.

இனி, உலகம் மாயையினின்று தோன்றித் தானே யொடுங்குமென்பாரை மறுப்பான், 'உள்ளதற்குச் செய்வோ ரின்றிச் செய்வினையின்மையின்' என்றார். இதனால், சங்கார மென்பது இவ்வதிகரணத்துட் கூறியது சங்காரக் கடவுளை யென்பது தெளிவு. சடப்பொருள் அசைப்போனையின்றி அசைவுபடாது. காந்தம் இரும்பை இழுக்குமெனின், இரும்பையுங் காந்தத்தையும் அருகு வைப்பாரில்வழி, காந்தமே சென்று இரும்பை ஈர்ப்பதில்லை. ஈர்த்ததை அறிவுடைப் பொருள்போல விட்டுவிடுவதில்லை. சடசத்தியென்பதுண்டு; அஃது அறிவுடைய ஒரு முதல்வனாலேயே இயங்கும்.

உயிர்களாலேயே சடப்பொருள் இயங்குதலின், உயிர்களே சடப்பொருளியக்கத்திற்குப் போதுமெனின், தம்வயமில்லாத உயிர்கள் பெரிய ஞாலத்தைத் தோற்றுவித்து ஒடுக்கவல்லன அல்ல. பந்தமற்ற உயிர்கள் அங்ஙனஞ் செய்யுமெனின், அவை அநாதியே பந்தமற்றனவா? இடையிலே பந்தம் அற்றனவா என்ற கேள்வி யெழும். அவை அநாதியே பந்தமில்லாதனவென்னில், அவை பலவாமாதலின், பன்மைக் கருத்து வேற்றுமையுணர்த்தும். வேற்றுமையுடைய உயிர்கள் பல இருப்பவே தொழில் ஒழுங்குபட நிகழ்தற்கு அவருள் ஒருவன் தலைவனுதல்வேண்டும். அவனே கடவுளாதலின், அவனுலேயே உலகந் தோன்றி ஒடுங்குமென்பது முடியும்.

இடையிலே பந்தமற்ற உயிர்கள் உலகை நடத்துமெனின், அவர்களுடைய பந்தத்தை நீக்கிய ஒரு முதல்வன் இருத்தல்வேண்டும். அவனே கடவுள் என்பது முடியும்.

சடமாய உலகம், மாயையிலொடுங்கித் தோன்றுதலின், மாயை உலகிற்கு வித்துப்போல்வது. அம் மாயை அசேதனமாதலின், அதற்கு ஆதாரமாய இறைவனது சத்தியினுலே அது தொழிற்படும். நிலத்தின் தட்பவெப்பத்திற் கேற்றவாறே வித்து முளைத்து வரும். மாயையாகிய வித்திற்கு இறைவன் ஆற்றல் நிலம்போல ஆதரவாயுள்ளது. மாயை தொழிற்படுதல், உயிர்கள் உடம்பெடுத் தியங்குதற்பொருட்டென்பது தெளிவு. உயிர்களை யெல்லாம் ஒப்பநோக்கு முதல்வன் எல்லா உயிர்களுக்கும் ஒருதன்மையான வாழ்வை நல்கவேண்டும். அவ்வாறின்மை கண்கூடாதலின், அதற்குக் காரணம் உயிர்களின் வினையென்பார், "அவர்வினையால் வேண்டுருவைத் தான் கொடுத்துக் கூட்டானே" என்றுர். 'கூட்டானே' என்பது கூட்டுவான் என்னும் பொருளுடையது.

இறைவன் உலகத்தைத் தொழிற்படுத்துங்கால், உருவம் வேண்டுவானல்லன். உருவம் தோன்றியழியுந் தன்மையுடையது. உடலை இயக்கும் உயிர்க்கு உருவம் வேறு

வேண்டாமைபோல, உலகத்தை இயக்கும் இறைவனுக்கு உருவம் வேண்டுவதில்லை. உடலின் பகுதிகள் உயிர்க்குக் கருவிகளாதலால் உயிர் உடலிற் கட்டுண்டு நிற்கும். இறைவன அத்தகைய கருவிகளின்றியே எண்ண மாத்திரத்தால் ஆக்கி அளித்து அழிப்போனுதலின் உலகத்திலே கட்டுப்படாது நிற்போன். இறைவன் உலகத்தை அனுபவியா னுதலின், ஒருவன் தான் கண்ட கனவை நனவிலே நினைத்துப் பார்க்குங்கால், அதன்கண் அவன் தொடக்குருமைபோல இறைவன் உலகத்திலே தொடங்குருன் என்பதே இவ்வதிகரண இறுதிச் செய்யுட் கருத்தாகும். இறைவன் தன்பொருட்டு உருவம் வேண்டானெனினும், அன்பர்களுக் கருளுதற்பொருட்டு உருவங் கொள்ளுவன் என்பது இந் நூற்கருத்தாகலின், அவன் எஞ்ஞான்றும் உருவங் கொள்ளானென்று கருதுதல் தவறு. இந்த அதிகரணத்தால் உள்ளதே தோன்றி யொடுங்கி மீளத்தோன்றும்; அதற்குச் செய்வோரின்றிச் செய்வினையின்மையின், அதனைத் தோற்றவும் ஒடுக்கவும் ஒரு முதல்வன் உளன். ஒடுக்கினவனே தோற்றுவிப்பன் என்னு முண்மைகள் அறியற்பாலன.

இனி, மூன்ரும் அதிகரணமாவது சங்காரமே முதலென்பது. ஒடுக்குங் கடவுள் ஒருவனே முதல்வன். ஏனைக் கடவுளர் அவனுக்குக் கீழ்ப்பட்டவர்கள். ஆதலின் முழுமுதற் கடவுள் ஒருவனே யென்பது கருத்து. உடம்பொடு கூடிய உயிர்கள் சுட்டியுணரப்படுந் தன்மையன. உடம்பில்லாத கடவுள் சுட்டியுணரப்படாதவன். அவனே உடம்புகளை ஒடுக்கி உண்டாக்குதலால், உடம்பிற்பட்ட உயிர்கள் அவன்வயமாய் அடங்கி நிற்பனவே. சுட்டியுணரப்படாத பொருள் பலவாதற்குக் காரணமில்லை. தன்மை ஒன்ருய இடத்துப் பன்மை கோடற்கிடமில்லை. அப் பொருள் உருவு அருவு என்னும் இருவகைப்படும் உலகப் பொருள்களுள் ஒன்றன்று. ஆதலின் அதனை ஆசிரியர் 'ஒன்றலா ஒன்று' என்ருர். உயிர்கள் பலவும், முத்தி நிலையிலும் பரம்பொருளினின்று இயற்கையில்

வேறுபட்டனவாகலான், அங்கும் அவை அப் பொருட்கு அடிமையாவனவே. சுட்டியுணரப்படாத பரம்பொருள் பேராற்றலுடைமையின், அஃதொன்றே உலகை ஒடுக்கவுந் தோற்றுவிக்கவும் வல்லதாம். இரண்டாவது மிகையாகும். ஆதலால் முழுமுதற் கடவுள் இருவரென்று கோடற்கிட மின்மை தெளிக.

இவ்வதிகரணத்தால், சுட்டியுணரப்படாத பரம்பொருள் தன்மை வேறுபாடுடையதென்று கொள்ள இடமின்மையாற் பன்மைப்படுமென்பது தவறுதலானும், அளவில்லாத பேராற்றலுடைய அப் பொருளுக்கு ஏனையன அடிமையாகலானும், அப் பொருள் ஒன்றே முழுமுதலாயுள்ள தென்பது பெறப் படும்.

இரண்டாஞ் சூத்திரம்

இனி, இரண்டாஞ் சூத்திரப்பொருள் ஆயற்பாற்று :— இஃதே மிக விரிவாக எழுதப்பட்டுள்ளது. இச் சூத்திரக் கருத்து வருமாறு:—சங்கார காரணனாகிய முதல்வன் உடலிலே உயிர் கலந்திருப்பதுபோல உயிர்களிற் கலந்து அவையே யாயும் பொருட்டன்மையால், அவற்றின் வேறாகியும், கண்ணும் உயிரினறிவும் ஒரு பொருளை ஒருங்கு காணுதல்போல உயிரோடு உடன் அறிதல்பற்றி உயிருக்குயிராயிருப்பதால், உடனாயும் இருக்கிறான். அப்படி நின்று, உயிர்கள் இரு வினையினாலே இறப்பும் பிறப்பும் புரியும்படி, அவ்விருவினை களைச் செலுத்துவதாகிய ஆணையென்னுந் தனது அறிவாற்ற லோடு (சிற்சத்தியோடு) பிரிவின்றி விளங்குவன். இச் சூத்திரத்துள் முதல்வனது பொது இலக்கணங் கூறுமுகத் தானே, அவனது சத்தியும், வினையும், மாயையும் உண்மை குறிக்கப்பட்டது. சத்தி, அவனுக்குக் குணமும், மாயை உடைமையுமாம். இருவினை கூறவே, அவற்றிற்குப் பற்றுக் கோடாய மாயையுங் கூறியவாறாயிற்று. சத்தி, இறைவனுக்கு மூலமாகிய துணைக் காரணம். இருவினை அவன் சத்திவழி

நிற்பதாகிய இடையாய துணைக்காரணம். மாயை முதற் காரணம். இறைவன் நிமித்த காரணம்.

தோற்றமும் ஒடுக்கமும் வினையினுல் உளவாம். எனவே, தோன்றியது ஒடுங்கும்வரை நிற்கும் நிலையும் அதனுலே உள்ளதே. மறைப்பென்பது உயிர்கள் வினைப் பயனை நுகருங்கால், அவ் வினைவழி நின்று, ஆணவமலம் நீங்குதற் குரிய பருவம் வரும்வரை, உயிர்களை நடத்துவதாகிய முதல்வனது திருக்குறிப்பே. மறைப்பு நிகழாவிடின் மலபரி பாகம் வந்து, உயிர்கள் பாசநீக்கம் அடையமாட்டா. மறைப்பு, காத்தலின்கண் அடங்கும். அருளல் என்பது வீடுபேறளித்தல். அது மீட்சியின்றி இறைவன்பால் ஒடுங்குவதே யாகலான், அஃது ஒடுக்கத்தி லடங்கும். இங்ஙனம் படைப்பு, காப்பு, ஒடுக்கம், மறைப்பு, அருளல் என்ற ஐந்தொழிலும் முத் தொழிலின்கண் அடங்குதல் காண்க. இத் தொழில்கள், பந்தமும் வீடுந்தருதல் என்னும் இரண்டின்கண் அடங்கு தலின், இறைதொழில்கள் இரண்டென்பது முண்டு.

ஐந்தொழில் தூலம், சூக்குமம், அதிசூக்குமம், (வெளி, நுட்பம், மிகுநுட்பம்) என முத்திறப்படும். தூலம், வெளிப் படை. சூக்குமம், உலகம் ஒடுங்கியபின், மீண்டும் தூல ஐந்தொழில் நடப்பதற்கு முற்படியாக உயிர்கள் ஆணவ மலத்தோடு மாத்திரமுள்ள தனி நிலையில் (கேவலத்தில்) நிகழ்வன. அதிசூக்குமமென்பது ஒவ்வொரு பொருளையும நுகருமிடத்தே நிகழ்வது. இவை விரிப்பிற் பெருகும்.

இனி, இரண்டாஞ் சூத்திரம் முதலதிகரணத்திலே இறைவன் உயிர்களோடு இரண்டறக் கலந்து நிற்பது கூறப் படுகின்றது. அதனையே அத்துவிதக் கலப்பென்பார் வட நூலார். அத்துவிதமென்ற சொல்லைப்பற்றியே, வைதிக சமயத்தாருட் கருத்து வேறுபாடு பெரிதும் விளைந்திருப்பதால், அதன் உண்மைப்பொருளைப் பரமாசாரியர் இவ்வதிகரணத் திலே தெளிவாக விளக்கியருளினர். கடவுள் ஐந்தொழி லியற்றுவது உயிர்கள் பொருட்டெனின், கடவுளுக்கும் உயிர்க்கு

முள்ள சம்பந்தமானது யாது? என்ற வினு வெழுகின்றது. கடவுள் உயிர்க்கு வேருகவே நிற்பானெனின் உயிர்க்கும் அவருக்கும் சம்பந்தமில்லை என்பது போதரும். அங்ஙன மாயின் இறைவன் உயிர்களை இயக்குதல் கூடாது. கடவுள் உயிர்களேயாமெனின், அவர் ஐந்தொழில் செய்வது தம் பொருட்டென்பது முடியும். அஃது அவரது முழுமுதற் றன்மைக்கு மாருகும். கடவுள் உயிரோடு கலந்து நிற்பதி னுலேயே, ஐந்தொழில் நிகழ்த்துவதற்கு இயைபு ஏற்படு கின்றது. "எப்படி உயிரானது உடம்பொடு கலந்து நின்று அதனை நடத்துகின்றதோ, அப்படியே அறிவுப்பொருளாய இறைவன் உயிரறிவிற் கலந்துநின்று ஐந்தொழில் இயற்று கின்ருனென்பதே" பரமாசாரியர் கருத்து. உயிருக்கும் உடலுக்குமுள்ள சம்பந்தத்தையும், கண்ணெளிக்கும் கதிரவ னெளிக்குமுள்ள சம்பந்தத்தையும், இரண்டற்ற கலப்பு அல்லது அத்துவிதமென்று கூறுதல் சாத்திர மரபு. "பிரமம் அத்துவிதம் என்று" உபநிடதங் கூறுகின்றது. அத்துவிதம் என்ற சொல் இரண்டின்மையைக் குறிக்கும். குறிக்கவே, அஃது ஒன்றென்று பொருள்படுமாதலின் கடவுள் உலகத் தோடு அத்துவிதமாயிருக்கின்ருரெனின், கடவுள் உலகமேயா யிருக்கின்ருர்; கடவுளும், உலகமுமொன்றே என்பது கருத்து என்று ஏகான்மவாதியர், தம்மதம் நாட்டுவர். அதனை ஆசிரியர் மெய்கண்டார் மறுத்து, "அத்துவிதமென்ற சொல்லானே" ஏகம் என்னில் ஏகமென்று சுட்டுவ துண்மையின் அத்துவிதமென்ற சொல்லே அந்நியநாத்தியை (நாஸ்தி) யுணர்த்துமாயிற்று" என்ருர். (அந்நியநாத்தி — அந்யமின்மை) ஒன்றென்ற சொல்லிருக்கும்போது, இரண் டற்ற என்ற சொல்லினுல் அதன் பொருளைக் குறிக்க வேண்டியதில்லை. ஆதலால் பிந்தியசொல் வேறன்மையாகிய கலப்பினைக் குறிக்குமே யொழியப் பொருள் ஒன்றே என்பதைக் குறியாது. ஒன்று என்று சுட்டுகிற பிறிதொன்று இருப் பதால் பொருள் ஒன்றே என்றல் தவறென்பது ஆசிரியர் கருத்து. ஆனல், "'பிரமம் ஏகம்' பிரமப் பொருளில்லை யாயின் ஒரு பொருளுமில்லை" என்று சொல்லும் வாக்கியங் களால் ஏகான்ம வாதம் பெறப்படாதோவெனில், கடவுள்

ஒருவனே உளன். இரு கடவுளர் இலர் என்பதும் கடவுளுடைய சார்பில்லாது ஒரு பொருளும் வடிவெடுப்பதும் தொழிற்படுவதுமில்லை யென்பதுமே அவ் வாக்கியங்களின் கருத்தாழன்றிக் கடவுள் ஒருவரே உளர்; வேறு யாதுமில்லை என்பது அவற்றின் கருத்தன்றென்பதைப் பரமாசாரியர் இனிது விளக்கினர். அகரத்தின் உதவி கொண்டு பிற எழுத்துக்கள் ஒலிப்பதுபோலக் கடவுளின் சார்பு பற்றிய உயிர்களியங்குமென்றனர். உயிரறிவு கண்ணொளியோடு கலந்து பொருள்களைக் காணுகின்றது. உயிரறிவுங் காண்கின்றது. கண்ணுங் காண்கின்றது. ஒன்று அறிவாற்றல், மற்றொன்று சடசத்தி ஆதலால் இரண்டும் ஒருசெயல் நிகழ்த்துவதாகக் கூறுமிடத்து 'உடன்' என்ற சொல் வழங்குவதே பொருத்தமாம். இறைவன் உயிர்க்குப் பொருள்களைக் காட்டுமிடத்துத் தானும் அவற்றைக் கண்டு காணுகின்றான். ஆதலின் அவன் உயிர்களோடு உடனாயிருந்தறிவன் என்றார். எனவே 'உலகெல்லாம் ஆகி, வேறாய், உடனுமாய்' என்றவாறு இறைவன் மூவகையாய் நிற்கின்றானென்பது போதரும். இங்ஙனம் கடவுளுக்கும் உயிர்க்குமுள்ள சம்பந்தத்தை எடுத்துக் கூறுஞ் சமய நூல் சித்தாந்தசைவமே யன்றிப் பிற எச்சமய நூலுமில்லை. சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத் தலைவராய திருவாளர் நெல்லையப்ப பிள்ளையவர்கள் ஒன்றாய், வேறாய், உடனாய் என்பதற்கு இறைவனது விழைவு அறிவு செயல்கள், உயிரின் விழைவு அறிவு செயல்களோடு கலந்திருப்பதைக் காட்டுமென்று விளக்குமுகத்தான் ஓர் ஆராய்ச்சி இயற்றியுள்ளார்கள். விழைவென்பது விருப்பத்தைக் காட்டுதலின், அது ஒற்றுமையையும் இறைவனது இயற்கை ஞானம், உயிரின் செயற்கை ஞானத்தின் வேறாதலின் வேற்றுமையையும் இறைவன் உயிர்க்குக் காட்டுவதோடு, தானுங் காண்கின்றானாதலின், உடனிகழ்ச்சியையும் புலனாக்குமென்பது அவர்கள் கருத்து. இதனால் சைவ சித்தாந்தமே இறைவனுக்கும் உயிர்க்குமுள்ள அத்துவித இயல்பைத் தக்கவாறு விளக்கும் மெய்க்கொள்கையுடையதென்று தெளிக. 'ஏகம்' என்ற சொல் ஒரு பொருளையே யுணர்த்தும்.

'அத்துவிதம்' என்ற சொல் அந்நிய மின்மையை யுணர்த்து மாதலின் ஏகான்மவாதக் கொள்கைக்கு அத்துவித மென்பது பொருந்தாது. துவிதவாதம், கடவுள் எங்கும் நிறைந்து எல்லாவற்றிற்குஞ் சார்பாய் அடிப்படையாய் நிற்குந் தன்மையை விளக்குமாறில்லை. அத்துவிதமென்பது கடவுளுக்கும் உயிர்க்குமுள்ள கலப்பையே உணர்த்துதலின், அக் கலப்பினை இனைத்தென்றறிவுறுத்துஞ் சித்தாந்த சமயமே அத்துவிதக் கொள்கையுடையதாமென்று தெளிக. மெய்யியல்பு குறிப்பதற்குச் சுத்தமென்ற அடைமொழியை வழங்குவது வடமொழித் தருக்கநூல் மரபாதலின் சைவசித்தாந்த நூல் கூறும் அத்துவிதமானது சுத்தாத்துவிதம் என்னப்படும். பால் பிரைமோரோடு கலந்து தயிரானாற்போலப் பிரமமானது பசு, பாசங்களோடு கலந்து உலகமாயிற்றென்று கூறும் வைணவக் கொள்கை விசிட்டாத்துவிதம் என்னப்படும். முத்தியிற் சிவனோடு உயிர் கலந்து சிவமாகவே மாறிவிடுமென்ற கொள்கை சிவாத்துவிதக் கொள்கையாம். கடவுளுக்கும் உயிர்க்குங் கலப்பின்மை கூறும் மத்துவாசாரியார் கொள்கை துவிதக் கொள்கை யெனப்படும்.

இரண்டாஞ் சூத்திர முதலதிகரணத்தால் கடவுள் உயிரோடு ஒன்றாயும், வேறாயும் உடனாயும் நிற்பன் என்பது இனிது விளக்கப்பட்டது.

இனி இரண்டாஞ் சூத்திரத்தின் இரண்டாமதிகரணப் பொருள் வருமாறு :—ஆன்மாக்களுக்கு இருவினைப் பயன் முதல்வன். ஆணையால்வரும், வினையின் வழி, எல்லாம் நிகழுமாயின், கடவுளின் தொடர்பு வேண்டியதில்லை யென்பாரை மறுத்து இறைவன் கட்டளையின்றி வினைப்பயன் நேர்வதில்லை. அஃதெவ்வாறெனில் அரசன் தன் கீழ்ப்பட்ட ஓர் ஊரிலுள்ளவர்கள் நெறி நின்று வழுவினால், அவர்களைத் தண்டித்தற்கு அமைத்த ஏற்பாடுபோலவே முதல்வனும் உயிர்களைத் திருத்தி உய்யக்கொள்ளும் பொருட்டு அவை இருவினைப் பயனை நுகர்தற்குரிய இயைபினை அமைத்துள்ளானென்க. உயிர்கள் அந்நெறி திறம்பியகாலை அவைகளுக்கு அவற்றின்

செயற்பயனைக் கொடுத்து அவற்றை நன்னெறி நிறுவுதலே இறைவன் திருநோக்கம். அதனை நிறைவேற்றவே அவனுடைய கட்டளைப்படி இருவினைப்பயன் செய்தவனைச் சென்றடையும் என்றவாறு.

சடமாகிய வினைப்பயன் வினைசெய்தானைத் தானே சென்றடையமாட்டாது. முதல்வனது திருக்குறிப்பின்படியே வினைப் பயன் நுகரப்படுகின்றது. இதனை உதாரணத்தாலுணர்த்துவார், உழவுதொழிலின் பயனை நிலம் விளைவிப்பதுபோல, வினையின் பயனை இறைவன் விளைவிப்பன். வித்து மாத்திரம் நிலத்தின் சார்பின்றிப் பயன் கொடாமைபோல, வினை தானே செய்தவனை யணையாது என்றார். வினையைச் செய்த உயிர் வினைப்பயனைத் தெரிந்து நுகருமெனின், நல்வினையின் பயனை அது நுகருமேயன்றித் தீவினைப்பயனை அது நுகர விரும்பாது; இருவினைப்பயனையும் உயிர்கட் களிப்பவன் இறைவனே.

ஒரு செயலைச் செய்யுங்கால், அது மாயாகாரியமாகின்றது. மனம், சொல், உடம்பு என்ற மூன்றும் மாயா தத்துவச் சார்புடையன. ஆதலால் இவற்றைக் கொண்டு செய்யப்படுஞ் செயல்கள், மாயையைப் பற்றுக்கோடாக வுடையன. மாயையிலே செயல் நிகழ்வதற்கேதுவாய உயிரின் செயற்றிறமே அதன் கன்மமெனப்படும். அறியாமை விளைக்கும் ஆணவம் நெல்லில் உமியும் செம்பிலே களிம்பும் போல உள்ளது. ஆணவமென்பது மலம் என்று சிறப்பாகக் கூறப்படும். மாயை, மலம், கன்மம் என்ற மூன்றும் எப்போதுமுள்ளன.

ஆணவ மலம் உயிரின் அறிவினை மறைக்கவே, உயிரினிச்சை உலகப் பொருள்களிற் செல்லும். அப்போது ஆணவ மலத்தின் விளைவு ஏற்படுகின்றது. அது மோகம், மதம், அராகம், கவலை, தாபம், வாட்டம், விசித்திரம் என எழுவகைப் படும். நூலறிவாலே கெட்டதென்றுணர்ந்த பொருள் களிலே மயல் விளைப்பது மோகம். விரும்பிய பொருளைப் பெரிதாக மதிப்பது மதம் எனப்படும். ஆசை மேன்மேல் மிகுவது அராகம். விரும்பிய பொருளினை இழந்தவிடத்துத்

துன்புறுவது கவலை. உள்ளம் வெதும்பித் தவிப்பது தாபம். உள்ளமும் உடம்பும் வாடுதற்கேதுவாயது வாட்டம். விசித்திர மென்பது, பெற்றதைப் பாராட்டித் திருத்தி யடைதற் கேதுவாயது. வினையின் விளைவு இன்ப துன்பங்கள்; மாயை யின் காரியம் உள்ளம் உடம்பு முதலிய கருவிகள்.

இருவினை யென்பதில்லையாயின் உயிர்களுக்கு வெவ்வேறு வகைப்பட்ட இன்ப துன்ப முதலியவற்றைக் கூட்டுதல், எல்லா வுயிர்களையும் ஒப்ப நோக்கும் பெருங்கருணையுடைய இறைவனுக் கேலாதென்பதறிக. பிறர்க்குந் தமக்குந் தீங்கு செய்தல் தீவினை; பிறர்க்குந் தமக்கும் நன்மை செய்தல் நல்வினை; இவ்விரண்டுஞ் செய்தவிடத்து, அவை மிக நுட்ப மாய்ப் புத்தி தத்துவத்திற் பதிவுற்றகாலை பாவபுண்ணிய மெனப்படும். அவை சஞ்சிதமென்ப. வித்தினைச் சேர்த்து வைத்த களஞ்சியம்போலச் சஞ்சிதக் கன்மத்தொகுதி புத்தி தத்துவ வாயிலாக மாயையிற் கிடப்பது. சூக்கும தூலமாகிய செயல்கள் ஆகாமியமெனப்படும் இன்ப துன்பத்திற்கேதுவாய் வருங்கால் வினை பிராரத்தமெனப்படும். வினை விளைவிற் காதாரமானது மாயை யாதலின், அதனைப்பற்றி ஆராய்வாம். காணப்படுகின்ற உலகத்தை அறிவுடையது, அறிவில்லாதது என இரண்டாகப் பகுக்குமிடத்து, அறிவிலாப் பொருட் டொகுதி யனைத்தும் சடமென்ற பெயராற் குறிக்கப்படும். சடப்பொருள்களின் தன்மையை ஆய்ந்தோர் அவை ஐம்பூதங் களாலாயவை யென்பர். ஐம்பூதங்களும் அவற்றின் நுட்ப மாகிய மாபூதங்களெனப்படும் தன்மாத்திரைகளினின்று வந்தன. மனமும் ஐம்பொறிகளும் அவ்வாறே அகங்காரத்தி னின்று வந்தன. அகங்காரம், குணத்தினின்று வந்தது. குணம் பிரகிருதி தத்துவத்தினின்றும் வந்ததென யோகக் காட்சி வல்ல அறிஞர் கண்டு, பிறர்க்கு அறிவுறுத்தினர். பல்வகைப்பட்ட பொருள்களெல்லாம் ஒடுங்குங்கால் ஒரு தன்மையனவாகின்றன. மண்ணிற் செய்த பல்வகைப் பாத்தி ரங்களெல்லாம் உடைபட்டகாலை மண்ணாதல்போல, ஒரு பொருளை ஆயுங்கால் ஐம்பூதமும் அதிற் கலந்திருப்பதாகத் தெரிவதால், அது உடைபட்டு அழியுங்காலை அது ஐம்பூதங்

களிலு மொடுங்கும். சடப்பொருள்கள் உருவிழந்து ஒடுங்கும் அடிப்படை, தத்துவமெனப்படும். பூததத்துவத்தை ஒன்றென்னது ஐம்பூதமெனப் பகுத்தது, ஐவகைத்தாய் வேற்றுமைப்பட்ட தன்மை காணப்படுதல் பற்றி யென்க. மூலப்பிரகிருதிவரை, சடவுலகை நுட்பமாகப் பகுத்தறிய இயலாதவர்கள் ஐம்பூதங்களின் நுட்பமாகிய அணுக்களே சடவுலகிற்காதி யென்றும், தன்மாத்திரைகளே ஆதி யென்றும, மனமேயாதி யென்றும் தாம் அறிந்த அளவிற் கூறுவர். கடவுள் எல்லாவற்றையும் சூனியத்திலிருந்து படைத்தாரென்பார் சூனிய முதற்காரணவாதி யெனப்படுவர். சூனியத்திலிருந்து ஒன்றுந் தோன்ருது என்ற கருத்தைப் பரமாசாரியர் 'இல்லதற்குத் தோற்றமின்மையின்' என்ற விடத்தே தெளிவுபடுத்தினர். இதனுல் ஒன்றுஞ் சூனியமாவதில்லை யென்பதும் போதரும்.

இனி, சடவுலகிற்கு மூலம் பிரகிருதியே யென்ற சாங்கியர் கொள்கையை, வைதிக சமயத்தாராய ஏகான்மவாதியரும் தந்திர சமயத்தாராய பாஞ்சராத்திரிகர், மாத்துவர் முதலியோரும் மேற்கொண்டனர். மூலப்பிரகிருதியிலும் நுட்பமான தத்துவங்கள் உள்ளன. மூலப்பகுதி யென்பது கலை என்னுந் தத்துவத்தினின்று வந்தது. அது மாயையினின்று வந்தது. மாயையே அதற்குக் கீழுள்ள தத்துவங்கட்கு அடிப்படை. மாயை = மாயா = மாய் + ஆ = மறைதல், ஆதல். மாயை என்ற சொல்லிற்கு எல்லாம் ஒடுங்குதற்கும், மீள உளவாதற்கும் அடிப்படை யென்ற பொருளிருத்தலால், பிறசமயத்தார் மூலப்பிரகிருதியே மாயை யென்பர். கலை தோன்றுதற்கேதுவாய மாயையினின்றே காலம் நியதி என்ற தத்துவங்கள் தோன்றின. காலம், நியதி, கலை, வத்தை, அராகம் என்னும் ஐந்து தத்துவமுங் கூடிய உயிர் புருட தத்துவமெனப்படும். புருட தத்துவமென்பது ஒரு சட தத்துவமன்று. இனி மாயைக்கு மேற்பட்ட ஐந்து தத்துவங்கள் சுத்தமாயை என்பதின் பகுதிகளாக அமைந்துள்ளன. அவைகளின் தொடர்பால், ஆன்மா, மயக்கமும் துன்பமுமடைவதில்லை. மாயையின் தொடர்பால் மயக்க மேற்படுதலால் இதனை அசுத்த மாயை

என்று வழங்குவது சைவ சிந்தாந்த நூன்மரபு. மூலப் பிரகிருதியைப் பிரகிருதி மாயை யென்ப. எனவே, மாயை என்பது, சுத்தமாயை, அசுத்தமாயை, பிரகிருதிமாயை என முத்திறப்படும். இவை ஒவ்வொன்றிற்கும் பல பெயர்கள் உள்ளன. இவற்றிலுள்ள தத்துவங்கள் முப்பத்தாறு. இவற்றின் உண்மைகளையும் தன்மைகளையும் ஆசிரியர் சிவஞான முனிவர், பாடியத்துள் இனிது விளக்கினமைபோலப் பிற எவ்வாசிரியரும் விளக்கவில்லை.

ஈண்டு மிகச் சுருக்கமாகவே தத்துவங்களின் தன்மையைக் குறிக்கின்ளும்.

இறைவன் தூய உடம்பையுடைய உயிர்கள் பொருட்டுத் தானே ஐந்தொழில் செய்வன். அத் தொழில் இயற்ற வாயிலாகப் பயன்படுமிடம் சுத்தமாயா தத்துவங்கள். பிற உயிர்கள் பொருட்டு அவன் காரணேசுரர் வாயிலாக ஐந்தொழில் நிகழ்ச்சியை நடாத்துங்கால், அவர்களுக்கு மயக்க மிலதாய உடம்பு வேண்டப்படும். அவ்வுடம்பு தூயமாயையா லாயது என்று தெளிக. ஆதலாற் சுத்தமாயை உண்மைக்குக் காரணம் அறியற்பாற்று. மேலும் உயிர்களுக்குப் பெயர், இனம் முதலியவற்றை அறிதற்கேதுவாய சிறப்புணர்ச்சி எழுத்தோசையாலாகிய சொல்லால் நிகழ்வது. அவ் வெழுத் தோசைக்கு முதற்காரணம் சுத்தமாயையே. ஆகாயத்தி லெழும் இசையோசை எழுத்தோசையைப் புலப்படுத்தும். எழுத்தோசைக்கும் இசையோசைக்கும் வேற்றுமை அறியற் பாலது. பெயர், இனம், தொழில் முதலியவற்றை உயிர் குறித்தற்கேதுவாய உயிரினறிவை விளக்குவதாய் உள்ளது எழுத்தோசை; இசையோசை பொருட் சிறப்பில்லாது வானில் எழுவது என அறிக.

மேற்கூறிய சிறப்புணர்ச்சி புத்திதத்துவ புவனங்களினும், அதற்கு மேலுள்ள புவனங்களிலு மிருப்பார்க் குண்மையின் அதற்குக் காரணமானது, சுத்தமாயை யென்பதே துணியப் படும். இவ்வெழுத்தோசை, சூக்குமை, பைசந்தி, மத்திமை,

வைகரி (மூலம், பிண்டம், இடை, விரி) யென நான்கு வகைப்படும். கடையில் நின்ற வைகரி, தன்செவி கேட்பது, பிறர் செவி கேட்பதென இருவகைப்படும். ஆகவே, வாக்கு ஐவகை யென்பதுமுண்டு. சுத்தமாயையின் நின்று சுத்தமாகிய பொருளுலகமும் உரையுலகமுந் தோன்றுவன. உரையுலகம், பொருளுலகத்தைப் பற்றி நிற்பது. பொருளுலகமென்பது கலையுந் தத்துவமுமாம். சுத்தமாயையிற் றோன்றிய ஐந்து கலைகள் எல்லாத் தத்துவங்களிலும் வியாபித்து அவற்றிற்கு மேற்பட்டு நிற்பன. அவை நீக்கம், பதிவு, புலம், அமைதி, அமைதி மேல், (நிவிர்த்தி, பிரதிட்டை, வித்தை, சாந்தி, சாந்தியாதீதை) என்பன. ஐவகைப்பட்ட வாக்கானது ஐங்கலைகளின் வாயிலாக, எல்லாத் தத்துவங்களினுஞ் சென்றியையும். ஐவகை வாக்குக்களுள், சூக்குமையானது சிவதத்துவத்தைப் பற்றிநின்று மகாசங்கார காலம்வரை அழியாதிருப்பதால், அதனையே சத்தப்பிரம மென்பர் சத்தப் பிரமவாதிகள். மேற் கூறிய எழுத்தொலி, வானில் தோன்றும் இசையோசையால், நமது செவிக்குப் புலனாமென்பது முன்னே கூறப்பட்டது.

இனி, தத்துவங்களின் தோற்ற முதலியவற்றை ஆய்வாம். சிவதத்துவம்:—(சிவமுதல்) எல்லாம் ஒடுங்கியபின், மீள அவற்றைத் தோற்றுவிக்கக் கருதிய முதல்வன், சுத்த மாயையைத் தனது அறிவாற்றலால் நோக்குவன். அதனாற் றிரிவுற்ற சுத்தமாயையின் பகுதி சிவதத்துவமெனப்படும். சூக்குமை வாக்கு அதனைப் பற்றிநிற்பதென்பது, முற்கூறப் பட்டது.

சத்தி தத்துவம்:—இறைவனது செயலாற்றல் சார்ந்த போது தோன்றுஞ் சுத்தமாயைப்பகுதி சத்திதத்துவமெனப் படும். அது பைசந்தி வாக்குக்குப் பற்றுக்கோடாக வுள்ளது. சிவதத்துவ விரிவு நாததத்துவமெனவும், சத்திதத்துவவிரிவு விந்து தத்துவமெனவுங் கூறப்படும். சிவம், சத்தி, நாதம், விந்து, (சிவம், அருள், ஒலி, வித்து) என்ற நான்கும் இறைவனது அருவ வடிவமெனப்படும். அருவம் - தோன்றா நிலை.

இறைவனது அறிவாற்றலுஞ் செயலாற்றலும் ஒத்துச் சிறப்பாக உன்னும் இடம், சதாசிவ தத்துவமெனப்படும். அஃது உலகங்கள் தோன்றுவதற்கு அடிப்படையான பாது காப்புநிலை எனப்படும். அஃது இறைவனது அருவுருவ வடிவமெனப்படும். அது மத்திமை வாக்கிற்குச் சார்பாயுள்ளது. இத் தத்துவம், தமிழிலே அருட்சிவமெனப்படும்.

இனி, உலகந் தோன்றுவதற்கேதுவாய் இறைவனது செயற்றிறம் சிறப்பாகப் பதிவுற்ற சுத்தமாயைப் பகுதி ஈசுர தத்துவமெனப்படும். அதன் மூலமாய், இறைவனது அறிவாற்றல் சிறந்து விளங்கிக் கீழ்த் தத்துவங்களிலுள்ள உயிர்கட்கு உணர்வைப் புலப்படுத்துதற் கேதுவாய வைகரிக்குச் சார்பாய் வடிவெடுத்த தூய மாயைப்பகுதி சுத்தவித்தையெனப்படும். ஈசுரமுஞ் சுத்தவித்தையும் இறைவனது உருவத் திருமேனிக்குரிய இடங்களாம். இவற்றில், இறைவனிலை அதிகாரமெனப்படும். இவற்றை ஆட்சி, தூயபுலம் என்ற பெயரால் அழைத்தல்கூடும். அதிகாரமென்பது, உள்ளது சிறத்தலைக் குறித்தலின், 'Evolution' 'Development' என்ற சொற்களிற் போந்த கருத்துக்களை இனிது விளக்குவதாகும்.

சுத்த தத்துவங்களிலே ஐந்தொழிலும் இறைவனாலேயே நடைபெறுகின்றன. கீழுள்ள தத்துவங்களிலே ஐந்தொழில் இறைவனால் அதிட்டிக்கப்பட்ட கடவுளால் நிகழ்கின்றன. அவர்களை இயக்குங் காரணேசுரர் சுத்த தத்துவங்களிலுள்ளவர்கள். அவர்கள் இறைவனாலியக்கப்படுபவர்கள். சுத்தவித்தியா தத்துவத்திலே அயன், அரி, அரன் என்னும் மூவருளர். அவர்கள் கீழுள்ள அண்டங்களிலுள்ள, அயன், அரி, காலருத்திரர் என்னு முத்தொழிற்றலைவரை யியக்குகின்றார்கள். ஈசுர தத்துவத்திலே வைகும் அனந்தர் அணுமகேச ரெனப்படுவர். அவர் பிரகிருதிமாயைத் தலைவராகிய சீகண்ட ருத்திரரை இயக்குவர். பிரகிருதி மாயையிலுள்ள அண்டத்ததிபதிகளையும் சீகண்டர் வாயிலாக அனந்தர் இயக்குவரென்ப. அனந்தராலே அசுத்தமாயையிலுள்ள ஐந்தொழிலும் நடைபெறுகின்றன. சீகண்டராலே, பிரகிருதி

மாயையின்கண் ஐந்தொழிலும் நிகழ்கின்றன. அணுசதா சிவர், சதாசிவ புவனத்திலுள்ளவர். ஐங்கலை வாயிலாகக் கீழுள்ள அதிபதிகளை யியக்குங் காரணேசுரர், மேற்கூறிய அயன், அரி, அரன் அனந்தர், அணுசதாசிவரென்ப. சுத்த தத்துவங்கள், (பிரேரக காண்டம்) இயக்கும் பகுதி யெனப் படும்.

சுத்த வித்தைக்குக் கீழ் அசுத்தமாயா தத்துவமுள்ளது. அது தமிழிலே தூய்தல்லா மாயை எனப்படும். அது வினைக்குப் பற்றுக்கோடாயுள்ளது. சுத்தமாயை மயக்கஞ் செய்யாதது. அசுத்தமாயை வினையிற் கட்டுண்ட ஆன்மாக்களை மயக்குவது. அனந்த தேவராற் கலக்குண்ட அசுத்த மாயையி னின்று காலம், நியதி, கலை என்னுந் தத்துவங்கள் தோன்றுவன. நியதி - தமிழிலே ஊழ் எனப்படும். எல்லாக் காரிய நிகழ்ச்சியையும் வரையறைப் படுத்துவது காலம் எனப்படும். உயிர்களது போக நுகர்ச்சியை வரையறுப்பது அஃதே. வினை செய்தானுக்கு அதன் பயனைச் சென்றடை வித்தற் கேதுவாயது நியதியாகும். இறைவனது சத்தி வினைப்பயனை உயிர்கட்கு ஊட்டுவதற்குக் கருவியாகக் கொண்ட தத்துவமே அஃதாம்.

கலையென்பது, ஆணவமல மறைப்பாற் சூனியம்போலக் கிடந்த உயிர்க்கு ஆணவமலத்தைச் சிறிது நீக்கி அதன் கிரியாசத்தியை விளக்குவதாகும். மலத்தைக் கலைப்பதாற் கலையெனப் பெயர்பெற்றது. உயிரானது புத்தி தத்துவத்தைப் பொருந்தும்படி அதனைச் செலுத்துவது கலையாகும். கலையைத் தொழிற்படுத்துவது, முதல்வன் சத்தி சார்ந்துள்ள சுத்த தத்துவங்களென்று தெளிக. சுத்ததத்துவங்கள் மலத்திற் பிணிப்புற்ற உயிர்களை நேரே சாருமாறில்லை யாகலான் அவை கலைவாயிலாகவே அவற்றின் உயிர்ச் சத்திகளை விளக்கும்.

கலைநின்று தோன்றி உயிர்களின் அறிவாற்றலை விளக்குவது, வித்தை (புலம்) என்னுந் தத்துவமாம். புறப்

பொருட் காட்சிக்கு, அந்தக்கரணங்கள் கருவியாகும். புறப் பொருளைப்பற்றி, அஃதாகப் பரிணமித்த போதமாகிய புத்தி தத்துவமே இன்பதுன்ப வுணர்ச்சிக் கேதுவாம். இப் புத்தி தத்துவத்தை ஆன்மாவின் ஞானசத்திக்குப் புலனுக்குவதற்குக் கருவியாய் உள்ளது, வித்தை யென்றறிக.

புத்திதத்துவங் கூடாதவிடத்துப் பொதுமையாயறியும் நிருவிகற்ப அறிவுக்கு வித்தையே கருவியாகும். அக் காட்சிக் கண் ஐம்பொறிகளை ஆன்மா அதிட்டிப்பதற்குக் கருவியா யிருப்பதும் வித்தையே.

இச்சை நிகழாமல், உயிர்கள் போகம் நுகராமையின், அவற்றின் இச்சாசத்தியை விளக்குவதாய், வித்தையிலிருந்து தோன்றிய தத்துவம் அராகம் (அவா) எனப்படும். அராகம், பொதுவான விருப்பத்தை விளக்கும். கலை, வித்தை, அராகம் என்பவற்றுற் பொதுவாக செயல், அறிவு, விருப்பம் விளங்கி நின்ற உயிர் மூலப்பகுதியோடு சார்புற்றுப் போக நோக்கத் துடன் நிற்கும் நிலை புருடதத்துவமெனப்படும். இந் நிலையில், நிலையாதவற்றை நிலையினவென்றுணருந் திரி புணர்ச்சியும் (அவிச்சையும்), அதுபற்றி யான் எனதென, அவற்றை மதிக்கும் அகந்தையும், எனக்கிது வேண்டு மென்னும் அவாவும், அவாவிய பொருட்கண் செல்லும் வேட்கையும், அதற்கு மாறுனதிற் செல்லும் வெகுளியும் ஆகிய ஐந்துயரென்பன உளவாம். அவற்றை வடநூலார் பஞ்சக்கிலேசம் என்ப.

முக்குணங்களும், மயில் முட்டையிற் பன்னிறங்கள் மறைந்து நிற்றல்போல விளங்காது நின்ற தத்துவமே மூலப் பகுதி யெனப்படும். அவை சமமாய் விளங்கி நின்ற தத்துவம் குணதத்துவமெனப்படும். பிரகிருதி தத்துவ புவனங்கள் குணதத்துவ முடிவிலுள்ளன. குணமூன்றும், சுகதுக்க மோகங்கட் கேதுவாயுள்ளன. சாத்துவிக குண மிகுந்தும், பிற இரண்டுங் குறைந்தும் உள்ள தத்துவம், புத்தி யெனப் படும். இராசதம் மிக்கு ஏனையன குறைந்த இடத்தே

ஆங்காரதத்துவந் தோன்றும். உயிரின் அறிவாற்றலைச் சிறப்பாக விளக்கிப் பொருட்பன்மையைத் துணிதற்குக் கருவியாயும், துணிந்த பொருள்வடிவாய்த் தோன்றும் அறிவாய் நின்று, உயிர்களுக்கு இன்பதுன்ப வுணர்ச்சி நிகழ்தற் கேதுவாயும், இருவினைக்குச் சிறப்பான பற்றுக்கோடாயும், அவற்றின் விரிவிற்கெல்லாம் இடமாயுமுள்ளது புத்தி தத்துவமே.

ஆங்காரமானது யான் இது செய்வலென்று துணிந் தெழுதற் கேதுவாயுள்ளது. புத்திக்கும் ஆங்காரத்திற்கு முள்ள வேறுபாட்டைப் பாடியகாரர் தெளிவாக விளக்கியுள்ளார். புத்தியின் தொழிற்பாடாகிய துணிபு, விடயத்தின் கண்ணதாய், இது குடம், இஃதாடையெனப் பொருடோறும் வேறுவேறாய், இஃதென்னும் வடிவிற்றாய் நிற்பது. ஆங்காரத்தின் தொழிற்பாடாகிய துணிபு, புருடன் கண்ணதாய், விடயந்தோறும் யான் நிச்சயிப்பேனென ஒன்றாய், யானென்னும் வடிவிற்றாய் நிற்பது என்றமை காண்க. ஆங்காரத்திலே சாத்துவிக மிகுந்த பகுதியினின்று, மனமும் ஐம்பொறிகளுந் தோன்றும். இராசதப் பகுதியினின்று, வினைப்பொறியாகிய கன்மேந்திரியமைந்துந் தோன்றும். தாமதப் பகுதியினின்று தன்மாத்திரையுந் தன்மாத்திரையினின்று ஐம்பூதங்களும் தோன்றும். ஐம்பூதங்கள் ஒன்றினொன்று தோன்று மென்பதற்குக் கருத்து, ஒரு பூதத்தோடு பிறிதொரு பூதத்தினுட்பம் விரவிநின்றமை பற்றியே யென்றறிக. ஆகாயத்தினோடு வாயுபூதத்திற் கேதுவாய பரிச தன்மாத்திரை விரவி நின்றமையின், ஆகாயத்தினின்று வாயு பூதம் வந்ததென்னும் வழக்கேற்பட்டது. அது சேற்றிலே தன் கிழங்கினின்றும் முளைத்த தாமரையைச் சேற்றினின்று முளைத்ததாகக் கூறுவதுபோலும்; வடமொழியிலே 'பங்கஜம்' என்பதற்குச் சேற்றிலே முளைத்ததென்பதே நேர்பொருள். இவ்வாறே, கடவுளின் திருவருட்சத்தியை ஆதாரமாகக் கொண்ட மாயையினின்று தோன்றிய உலகைக் கடவுளினின்று தோன்றியதாகக் கூறுவதுமா மென்றுணர்க.

மனமானது, பொது அறிவுக்குப் புலப்பட்ட பொருளின் கண் ஆராய்ச்சி நிகழ்தற்கேதுவாயது. முன் அதனையறிந்த நினைவால், இஃது இன்னதாமென நினைக்கும் நினைவு, சித்த மெனப்படும். இதுவோ, அதுவோ என்ற ஐயப்பாடு ஏற்படு தற்குக் காரணமாயுள்ளது மனம் எனப்படும். சித்தமும், மனத்தின் விருத்தியாதலின், அதனை வேறு தத்துவமாக வைத்தெண்ணுவதில்லை.

மனமுதலிய அந்தக்கரணங்களின் தொழிற்பாட்டினை ஆசிரியர் சிவஞான முனிவர் தெள்ளிதின் விளக்கியுள்ளார். உயிரானது வித்தையென்னுந் தத்துவத்தைக் கருவியாகக் கொண்டு, ஐம்பொறிகளோடு தொடர்புற்றகாலை, எதிரே தோன்றுவ தொன்றின்கண், பொதுவகையாக இஃதொரு பொருளென்றறிதலாகிய நிருவிகற்பக்காட்சி நிகழும். பின்னர், உயிரானது மனத்தைப் பற்ற, இது யாதாகற்பாற்றென்ற ஆராய்ச்சி நிகழும்; சித்தமானது முன்வாதனைபற்றி, இஃது இன்னதென்ற கருத்தையும், மனம், இஃது இன்னதாமோ வென்ற ஐயப்பாட்டையும் தோற்றுவிக்கும். பின்னர் உயிர் ஆங்காரத்தைப் பற்றி இஃது இன்னதென்று துணிவேனென்ற உணர்ச்சியை விளைக்கும். உயிர் புத்தியைப்பற்ற, புத்தி யானது அஃது இன்ன பொருளேயாமென்ற துணிவை உண்டாக்கும். இங்ஙனந் துணிந்த அறிவே சவிகற்பக் காட்சியாம். ஆங்காரம் பிராணவாயுவை யியக்கும். பிற தத்துவ ஆராய்ச்சியுடன் இரண்டாஞ் சூத்திர இரண்டாம் அதிகரணப் பாடிய முடிகின்றது.

இனி, இரண்டாஞ்சூத்திர மூன்றும் அதிகரணப் பொருள் வருமாறு:—முதல்வன் ஆணைப்படி இருவினைப் பயனை நுகர்தற் குரிய உயிர்கள் இறந்து பிறந்து அலமரும். ஒடுங்கினது தோன்றுமென்பதுபற்றி, இறந்த உயிர்கள் மீளப் பிறக்கு மென்று கோடல் பொருத்தமே. பருஉடம்பு கெட்டபோதும், நுண்ணுடம்பு கெடுதலில்லை. நுண்ணுடம்புடன் சென்று, உயிர்கள் பூதசாரமான உடம்புகளையெடுத்து மேலுலகத் திலோ, கீழுலகத்திலோ தங்கும். நுண்ணுடம்பே எடுக்கப் படும் பருவுடம்பிற்கு மூலமாயுள்ளது. நுண்ணுடம்பானது

தன்மாத்திரையாலாயது. தன்மாத்திரை பூத நுட்பமாகலின், பூதத்தாலாய தூலஉடம்பிற்கு முதற்காரணமாகின்றது. பொன்னானது எவ்வாறு பல்வகைப் பணிகளாகச் செய்யப் படுதல் கூடுமோ, அவ்வாறே நுண்ணுடம்பானது பல்வகைத் தூலஉடம்புகட்கு மேதுவாம். நனவிற் கண்டவற்றைக் கனவிலே மறந்து விடுதல் போல, ஒருபிறவியி லறிந்தவற்றை மற்றொரு பிறவியிலே மறத்தல் ஏற்படுதலின், அதுபற்றி மறுபிறவி யின்றெனக் கோடல் தவறு. முன்னுடம்பு இறக்கும் போது, மனம் எதன்கண் பற்றியதோ, அதன்கண் மீளப் பிறத்தல் நேரும். "மனம் தள்ள உயிர் கருவில் வீழும்" என்று மறு பிறவியினியல்பும் ஏதுவும் உரைத்தார். மீண்டு பிறக்க நேருங்காலை, வேறுலகங்களிலெடுத்த உடம்புகளை விட்டு நுண்ணுடம்போடு உயிர் கருவிற்பற்றும். உடம்போடு கூடிய, உயிர் போக்குவரவு செய்தற்கிடமாகிய அண்டங்களி னியல்பையும் புவனங்களி னியல்பையும், முனிவர் இவ்வதி கரணத்தே விளக்கினர்.

முப்பத்தாறு தத்துவங்களும் ஐந்து கலைகளுக்குள் அடங்கி நிற்பனவென்பது முன்னமே கூறப்பட்டது. தத்துவங்களிலே அண்டங்களுள்ளன. பிருதுவிதத்துவத்தை முனிவர் புடவி தத்துவமென்பர். புடவிதத்துவம், அப்புதத்துவம், தேயு தத்துவம், வாயுதத்துவம், ஆகாயதத்துவம், ஆங்கார தத்துவம், புத்திதத்துவம், பிரகிருதி தத்துவம் என்னும் எட்டினும் அண்டங்களுள்ளன. இவையனைத்தும் பிரகிருதி மாயையாலாயவை. பிரகிருதிக்குமேல், அராகம், வித்தை, கலை, அசுத்தமாயை, சுத்தவித்தை, ஈசுரம், சாதாக்கியம், சத்தியென்னும் எட்டுத் தத்துவங்களிலே அண்டங்களுள்ளன வாம்.

புடவிதத்துவத்திலே ஆயிரங்கோடி அண்டங்கள், ஒரு தட்டிலே விளாங்கனி பரப்பினாற்போலுள்ளன. (ஒவ்வோர் அண்டத்தினுள்ளே ஆறு புவனங்களும், புறத்தே நூற் றிரண்டு புவனங்களு முக்கியமானவை.) புடவிதத்துவ அண்டத்திலும், மேலுள்ள தத்துவ அண்டங்கள் பதின்

மடங்கு ஏற்றமான அளவின. பிரகிருதி மாயையிலுள்ள அண்டங்களினும் அசுத்த மாயையிலுள்ள அண்டங்கள் நூறுமடங்கு பெரியன. சுத்தவித்தை, ஈசுரம், சாதாக்கியம் முதலிய தத்துவங்களிலுள்ள அண்டங்கள் கீழ்த் தத்துவங்களிலுள்ள அண்டங்களினும் ஆயிரமடங்கு பெரியன. சத்தி சிவ தத்துவ அண்டங்கள் நூறுயிரமடங்கு பெரியன.

புவனங்கள் என்பது அண்டங்களிலே உருத்திரமூர்த்தி முதலிய அதிபதிகட்கு உட்பட்ட சிறப்பிடங்களாம். நிவிர்த்தி கலையிலுள்ள முதற்றத்துவ அண்டங்கள் ஒவ்வொன்றிலும் நூற்றெட்டுப் புவனங்களும், பிரதிட்டா கலையிலடங்கிய இருபத்து மூன்று தத்துவ அண்டங்களையடுத்து ஐம்பத்தாறு புவனங்களும், வித்தியாகலையிலடங்கிய அசுத்தமாயா தத்துவங்களிலே இருபத்தேழு புவனங்களும், சுத்தமாயா தத்துவங்களிலே சாந்திகலை, சாந்தியாதீத கலையிலடங்கிய முப்பத்து மூன்று புவனங்களும் உள்ளன.

புடவிதத்துவ அண்டத்திலே, கீழே காலாக்கினி யுருத்திர புவனமும், அப் புவனத்திற்குமேல் நரகங்களுமுள்ளன. அவற்றிற் கதிபதியாகக் கூசுமாண்டர் வைகும் புவனம் அதற்கு மேலுள்ளது. அதற்குமேல் ஏழு பாதாளங்களும், அவற்றிற்குமேல், அவற்றிற் கதிபதியாகிய ஆடகேசுரர் வைகும் புவனமுமுள்ளன. அதற்கு நெடுந்தூரத்திற்கப்பால் பூவுலகமுள்ளது. பூமிக்கு நடுவேயுள்ள மேருவிலே எண் திசைப் பாலகரும், மும்மூர்த்திகளும் இடங்கொண்டுள்ளனர். பூவுலகம் ஒன்பது பெரும் பிரிவுடையது. பெரும் பிரிவு வருடமெனப்படும். அவற்றுட் சிறந்தது பாரத வருடமெனப்படும். அஃதே கருமபூமி யென்றும், ஏனையன போகபூமிகளென்றும் நூல்கள் கூறும். பாரத வருடமும், ஒன்பது கண்டமுடையது. அவற்றுள் குமரிக்கண்டமே சிறந்தது. பாரத வருடம், இப்போது மேலை நாட்டினர் அறிந்த பூவுலக முழுவதுமென்பதும், குமரிக்கண்டம், இந்தியாவுமாமென்பதும் சிலர் கருத்து.

பூவுலகின்மேல், ஆதித்த மண்டலம் வரையுள்ள பகுதி புவலோகமாம். அதன்மேல் விண்ணவர் வைகுமிடம் சுவ

லோகம். அதன்மேல் முனிவர் வைகும் மகலோகமுள்ளது. பிதிரர் இருப்பிடம் சனலோகம். அதற்குமேல் தவலோகம். அதற்குமேல் அயன்வைகுஞ் சத்தியலோகம். செங்கண் மாலுலகம், உருத்திர உலகமாகிய சிவவுலகம் என்பன உள்ளன. காலாக்கினி உருத்திர புவன முதல் உருத்திர உலகம் வரை யுள்ளவை ஒவ்வோர் அண்டத்திலுமுள்ளன. பிற விரிப்பிற் பெருகும்.

இனி இரண்டாஞ் சூத்திரம் நான்காம் அதிகரணப் பொருள் வருமாறு :—இறைவன் ஆணையாகிய சிவசத்தி யாலே இருவினைப்பயன் நுகர்தற்குரிய ஆன்மாக்கள் பிறந் திறந்துழலும். அச் சிவசத்தியும் முதல்வனும் வேறல்லர். சிவமுஞ் சத்தியுங் குணியுங் குணமும் போன்ற சம்பந்த முடையரென்பார், "நீக்கமின்றி நிற்கு மன்றே" என்றார். சமவாயம், சமவேதம், தாதான்மியம் என்ற சொற்களால் இச் சம்பந் தத்தை வடநூலார் கூறுவர். தாதான்மியமாவது பொரு ளான் ஒன்றே யாயினும், ஒருவாற்றான் அது இருவகைப் பட்டுப் பிரிப்பின்றி நிற்றல். உயிர்களோடு அத்துவித சம்பந்தமுடையவனுய்க் கலந்திருப்பதாலும், மாயைக்குத் தாரகமா யிருத்தலாலும், முதல்வன் எங்குமுளன் என்பதால், அவன் வியாபகப் பொருளாவான். இறைவனைப் பொருட் டன்மையாற் கருதுமிடத்துக் கதிரவன்போலவும், பிறபொருட் கலப்பாற் கருதுமிடத்துக் கதிர்த்தொகுதியெனவும் தோன்றுத லான், அவன் இருதிறத்தன். தனிநிலையில் அவன் சிவ னெனவும், புறப்பொருளிற்குச் சார்பாக நிற்கும் நிலையில் சத்தியெனவும் பெயர்பெறுவன். தீயின் சத்தியே சுடுங்கால் சுடுசத்தியெனவும், அடுங்கால் அடுசத்தியெனவும், ஒளி விடுங்கால் ஒளிச்சத்தியெனவும் தொழில்பற்றிப் பலவேறு பெயர்பெறும். அதுபோல், இறைவனது சத்தி, பராசத்தி (மேலான வாற்றல்), ஆதிசத்தி (மூலவாற்றல்), இச்சாசத்தி (விழைவாற்றல்), ஞானசத்தி (அறிவாற்றல்), கிரியாசத்தி (செயலாற்றல்) எனப் பலதிறப்படும். சத்தியின் றொழிற்கிட மாகிய சுத்தமாயையும் பல்வேறு வகைப்பட்டு நிற்கும்.

ஒவ்வொரு சடப்பொருளுமே, தத்துவ காரியங்களில் வியாபித்தற்குரிய காரணரூபமாய் நிற்குந்தன்மையும், தத்த மியல்பில் நிற்குந்தன்மையும் என இருதன்மையுடையது. அதன் வியாபகசத்தி, காரகசத்தி யெனப்படும். பொருள்களை அறிவுறுக்குஞ் சொற்களின் சத்தி ஞாபகசத்தி யெனப்படும். பிற விரிப்பிற் பெருகும்.

இனி, மூன்ருவது சூத்திரக் கருத்து ஆயற்பாற்று. ஆன்மாவி னுண்மையைக் காரணங்களால் நிறுவுவது இச் சூத்திரம். அக் காரணங்களை ஏழாகப் பகுத்தமையால், இச் சூத்திர அதிகரணங்களும் ஏழாயின. ஆன்மா இல்லை யென்று கூறுவார், உடல், பொறி, மனம் முதலியவற்றை முறையே இஃதான்மா அன்று எனக் கழித்து, ஒன்றும் ஆன்மாவன் ருதலின், ஆன்மா சூனியமென்பர். அங்ஙனம் கூறுவதோர் அறிவுண்மையின், அவ் வறிவுடையதொன்றே ஆன்மாவென் பார், முதல் அதிகரணத்தே, 'இலதென்றலின், ஆன்மா உளது' என்ருர். இவ் வதிகரண உதாரணப் பாட்டினுள், ஆன்மா உலகப் பொருளுமில்லை, தனிமுதலாகிய இறைவனுமில்லை. இரண்டிற்கும் வேருயுள்ளது என்பது அறிவுறுத்தப்பட்டது.

மூன்ருஞ் சூத்திர இரண்டாம் அதிகரணத்தே உடல் ஆன்மாவன்றென்பார் 'எனது உடல்' என்று கூறுவது எது, அது ஆன்மாவாகுமென்றியம்பினர்.

மூன்ரும் அதிகரணத்திலே, ஐம்பொறிகள் பொருள்களை அறிதலால், அவற்றை ஆன்மாவென்பாரை மறுத்து அவற்றுள் ஒன்று அறிந்ததைப் பிறிதொன்றறியாமையான், ஐம்புல ஞகிய சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்ற ஐந்தினையும் அறிகின்ற ஒரு பொருள் ஆன்மாவாமன்றி, ஐம்பொறிகள் ஆன்மாவல்ல வென்பார், "ஐம்புலனறிதலின் ஆன்மா உள தென்றது" என்ருர். நான்காம் அதிகரணத்துள் அதனை ஒப்புக் கொண்டு, சூக்குமவுடம்பே ஐம்பொறிகளையுஞ் செலுத்துவ தாகலின், அஃதே யான்மாவென்பாரை மறுப்பார், ஐம்பொறி களும் அடங்கின இடத்துளதாங் கனவினை நனவின்கண் அறிந்து நிற்பதெதுவோ, அதுவே ஆன்மாவென்ருர். சூக்கும

வுடம்பே கனவினை நனவின்கண் அறியுமாயின், கனவு, நனவு என்ற வேறுபாட்டுடன் அதனை அஃதறியாது ஆன்மாவானது அகத்துப் புகுதலும் புறத்துச் செல்லுதலுமாய் வேறுபாடுடைமையின், நனவிற்கு வேருகக் கனவினை யறிகின்றது. ஆதலால், சூக்குமவுடம்பிற்கு வேருக ஆன்மா உளதென்ருர்.

இனி, பிராணவாயு நனவிலுங் கனவிலு மியங்குதலின், அதுவே ஆன்மாவென்பாரை மறுப்பார், துயிலுங்கால் இயங்கும் பிராணவாயுவிற்கு இன்ப துன்ப வுணர்ச்சியுஞ் செயலும் இன்மையால், அவ் வுணர்ச்சியுஞ் செயலுமுடைய ஆன்மா பிராணனின் வேருயுளதென்ருர். இது ஐந்தாமதிகரணக் கருத்து.

இதுகாறுங் கூறியவாற்ருற் சடமாகிய பிராணன் முதலியன ஆன்மா வல்லவென்பது முடிந்தது. சித்துப் பொருளாகிய பிரமமே ஆன்மாவென்ருலென்னை யென்பாரை மறுத்து, இயற்கையாகவே முற்றுணர்வுடைய கடவுளுக்கும், அக் கடவுள் உணர்த்தினலன்றி யுணராத உயிர்க்கும் வேறுபாடுண்மையின், கடவுளின் வேருக உயிர்கள் உள்ளன வென்பார், 'உணர்த்த உணர்தலின், ஆன்மா உளது' என்ருர். இஃது ஆரும் அதிகரணம். இனி, எல்லாக் கருவிகளுங்கூடிய கூட்டமே ஆன்மா வென்பாரை மறுத்து, அக் கூட்டத்துள் நின்றியங்குவதாய ஆன்மா, அக் கூட்டத்தின் வேருயுளதென்று குறிப்பார், "மாயாவியந்திர தனுவினு ளான்மா" என்ருர். அக் கூட்ட முழுவதும் மாயையாகிய சடப்பொருளாலாயது. சித்துப்பொருளாகிய ஆன்மா வேறு. அச் சடப்பொருள்கட்கு வெவ்வேறு பெயர் உள்ளன. அவை யொன்றும் ஆன்மாவைச் சுட்டுமாறில்லை. அவைகளாலாய உடம்பு ஆன்மா இயங்குமிடம். கண்ணிற்குத் தீபம்போல, ஆன்மாவிற்கு, அறிதுணையாக உள்ளன அவை என்றியம்பியருளினர். இஃது ஏழாம் அதிகரணம்.

முதற் சூத்திரத்தாற் பதியுண்மையும், இரண்டாஞ் சூத்திரத்தாற் பாசவுண்மையும், மூன்ருஞ் சூத்திரத்தாற் பசு உண்மையுங் கூறப்பட்டதாகலின், இம் மூன்று சூத்திரத்தையும் பிரமாண வியலென்ப.

இனி, நான்காஞ் சூத்திரப் பொருள் ஆயற்பாலது. ஆன்மாவி னிலக்கணம் இச் சூத்திரத்தினுணர்த்தப்பட்டது. உயிரானது அந்தக்கரணங்களுள் ஒன்று அன்றாயினும், அநாதியே பற்றியுள்ள ஆணவத்தாலறிவின்றி, அமைச்சரோடு கூடி நின்று தொழில்நடாத்தும் அரசன்போல, அந்தக்கரணங் களோடு கூடிநின்று ஐந்தவத்தைப் படுகின்றது என்பது சூத்திரக் கருத்து. இஃது ஆன்மாவின் பொது விலக்கணம். அந்தக்கரணங்களில் ஒவ்வொன்றையும் ஆன்மாவெனக் கூறுவது உபசாரம். முதலதிகரண ஏதுவை விளக்குமிடத்து ஆசிரியர் சிவஞானமுனிவர் கூறுவதாவது :—

ஐம்பொறிகளறிந்த விடயத்தைச் சித்தஞ் சிந்தித்தறியும். யான் சிந்தித்தேனென்றறியமாட்டாது. மனம் அதனைச் சங்கற்பவிகற்பஞ் செய்தறியும். யான் சங்கற்ப விகற்பஞ் செய்தேனென்றறியமாட்டாது. ஆங்காரம் ஒருப்பட்டெழுந் தறியும். யானொருப்பட்டெழுந்தே னென்றறிய மாட்டாது. புத்திநிச்சயித்தறியும். யான்நிச்சயித்தேனென்றறிய மாட் டாது. அவ்வாறன்றி, யான் சிந்தித்தேன், பற்றினேன், எழுந்திருந்தேன், நிச்சயித்தேன், என்றறியுஞ் சித்தாகிய ஆன்மா, அந்தக்கரணங்களினொன்றாமாறு யாண்டைய தென்பர், 'அவைதாம் பிரகாசமாய் நின்றே அப்பிரகாசமாய் நிற்றலான்' என ஏதுக்கூறினர் என்பது. மெய்கண்ட பரமா சாரியர் இவ்வதிகரணத்துள், 'பிரகாசம்' 'அப்பிரகாசம்' என்ற சொற்களை அறிவுடைமை, அறிவின்மை யென்ற பொருளில் வழங்கியுள்ளார். ஐம்புலன்கள் மன முதலிய அந்தக்கரணங் களின் சார்பாற் பொருள்களை யுணரும். அந்தக்கரணங்கள் உயிரின் சார்பால் உணர்ச்சி யெய்தும். ஐம்புல அறிவு, வாயிற்காட்சியெனப்படும். அதற்குப்பின், மனதிற்றோன்றுவ தாய மானதக் காட்சி தோன்றும். அதன்மேல், புத்தியிற் றோன்றுவதாய தன்வேதனைக்காட்சி யுளதாம். இவைகள் ஆன்மாவிற்குத் தோன்றுதல் கடலிடையெழுந்து கரைசேரும் திரைபோலுமென்றார். உயிர்கள் பெயர், இனமுதலியன பற்றிப் பொருள்களையறியுஞ் சவிகற்ப உணர்ச்சிக்கு மனம், புத்தி முதலியன காரணமெனினும், அவற்றை இயக்கும்

எழுத்தோசையாகிய நால்வகை வாக்குகள் உள்ளன வாகலான், அவைகள் எவ்வாறு அந்தக்கரணங்களைச் செலுத்துவன என்பதையுணர்த்துவார், 'அகாரம் அகங் காரத்தைச் செலுத்தும். உகாரம் புத்தியினைச் செலுத்தும். மகாரம் மனத்தினைச் செலுத்தும். சித்தத்தை விந்துவானது செலுத்தும். உயிரினை நாதஞ் செலுத்தும். இவ்வெழுத்துக் களைப் பகுக்காதவிடத்து, அவை பிரணவமாம். அது சூக்கும வைந்தெழுத்தெனவும் படும். அது அசபையாய்த் திரிபுற்றுப் பிராணவாயுவை அடக்கியும் விட்டும் நின்றுணர்த்தவே, கணந்தோறும் நினைப்பும் மறப்பும் நிகழும். அவை நிகழ்தல் கடலிலே புதிது புதிதாய் அலை தோன்றியுமொடுங்கியும் வருமாறு போலும். பிரணவமே தூல ஐந்தெழுத்தாய் வருவதென்றும், அதனின்றே வர்ணம், பதம், மந்திர மென்பன தோன்றுமென்றும், முனிவர் விளக்கினர். வாக்கு ஐந்தும் ஒன்றற்கொன்று காரணமாயும், நாதகலை அவற்றிற்கு மூலகாரணமாமென்றுங் கூறுப. இவ்வெழுத்துக்கள் சடமாகலின், இவற்றை அதிட்டிக்குங் கடவுளர் சுத்ததத்துவங்களி லுள்ளாரென்பார், நாதத்திற்கு சதாசிவனும், விந்துவிற்கு மகேசரும், மகரத்திற்கு உருத்திரரும், உகரத்திற்கு மாலும், அகரத்திற்கு அயனும் அதிதெய்வங்களாம் என்றார்.

அறிவுப் பொருளாகிய உயிர், கருவிகளினுதவியின்றித் தானே பொருள்களை யறியாதோ வெனின், அதனோடு எப்போதுங் கலந்துள்ள ஆணவமலத்தினால், அஃது அறி வின்றிக் கிடப்பதாகலின், கருவிகளினுதவியை அது வேண்டிற் றென்பார், 'இவ்வான்மாச் சகச மலத்தினுல் உணர்வின்று' என்றார். இஃது இச் சூத்திர இரண்டாமதி கரணம். மூலமலமானது உயிரினறிவை மறைக்கின்றதேயன்றி, அதனைச் சூனிய மாக்கவில்லையென்பார், "அதுதான் ஞான திரோதகமாய் மறைத்துக் கொடு நிற்றலால்" என்று காரண முரைத்தார். உயிர்க்கு அறிவை மறைப்பது மாயையன்று, உயிரினறிவிற்கு விளக்குப் போலப் பொருள்களைக் காட்டுவது மாயையின் செய்தி; அவ் வறிவைத் தடுத்து நிற்றல் ஆணவமலத்தின் செய்தி. ஆதலால், மாயை வேறு; ஆணவமலம் வேறு. அறிவென்பது

ஆன்மாவின் குணம்; அஃது ஆன்மாவோடு எப்போதும் உள தாயின், ஆன்மாவிற்கு அறிவு ஒருகால் நிகழ்ந்தும், மற்ருெரு கால் நிகழாமலும் இருக்கக் காண்கின்ரேம். அதற்கு ஒரு காரணம் வேண்டும் அக் காரணம் ஆணவமாம். மயக்க வுணர்வு ஆணவமலமென்றல் பொருந்தாது. உணர்வு மயக்க மடைதற்குக் காரணமே ஆணவம். ஒரு சாரார் ஞான மின்மையே மலம் என்பர். உள்பொருள் அழியாதாகலின், ஞானம், மறைபடுமேயன்றி இல்லாமற்போகாது. ஒரு சாரார் தமோகுணமென்பதே மலம் என்பர். குணதத்துவமானது மாயையின் பகுதியாகலின், மாயை விளக்காதலின், குண தத்துவத்தின் பகுதியாகிய தமோகுணம் அறிவை மறைப்ப தெப்படி? ஆன்மாவிற்கு ஆணவத்தாலேற்பட்ட தீய தன்மைகள் வெளிப்படுதற்குத் தமோகுணமாகிய கருவி பயன் படுமேயன்றி, அஃது ஆன்மவறிவை மறைக்கும் மலமென்று கோடற்கிடமில்லை.

மாயையானது உயிரின் அறிவைச் சுட்டுப்பொருளிலே அழுந்தச்செய்வதால், அது நில்லாதனவற்றை நிலையின வென்றுணருந் திரிபுணர்ச்சி ஏற்படுவதற் கேதுவாமேயன்றி, அஃது ஒன்றுந் தெரியாமையாகிய அறியாமையை விளைப்ப தில்லை. உயிரினறிவு உலகப்பொருள்களில் அழுந்துமிடத்து, உயிர் இறைவனை அறியாவண்ணம் மறைப்பது ஆணவம். இவ்வதிகரணத்தே ஆணவமலவியல்பு கூறப்பட்டது.

உயிரின் குணம் அறிவாகவே, அதற்கு மாருய அறியாமை, அதன் குணமாகாது. ஆதலால், ஆணவமலம் உயிர்க்கு வேருயுள்ளதென்றறிக. சிவசத்தி உயிரினறிவை மறைப்பதன்று. ஆணவமலம் மறைத்தகாலை, அம் மலம் நீக்குவதற்குரிய பக்குவம்வரும்வரை, அம்மல சத்தியின் வழி நின்று உயிர்களை நடத்துவதே சிவசத்தியின் தொழிலாதலின், சிவசத்தி உயிரினறிவை மறைக்கின்றதென்பது பெருந் தவறென்றுணர்க. அணுக்களாகிய ஆன்மாவை ஆணவம் எப்போதும் பற்றிநிற்றலின், அது மூலமலம் எனப் பெயர் பெற்றது.

இனி, இச் சூத்திரம் மூன்றும் அதிகரணத்தே உயிர் ஐந்தவத்தை யுறுதல் கூறப்படுகின்றது அவையாவன :— நனவு, கனவு, துயில், பேருறக்கம், உயிர்ப்படக்கம் என்பன. அவத்தை யுறுதற்குக் காரணம், தத்துவங்களின் தொழிற் பாடே. கருவிகளெல்லாவற்றோடுங்கூடிய உயிரின்மாட்டு ஐம்பூதங்களும் தன்மாத்திரைகளும் அவற்றாலாய கருவிகளும், சத்திமடங்கித் தொழிற்படாது நிற்குங்கால், ஐம்பொறிகளின் தொழிற்பாடு செவ்விதின் நிகழாது. மெத்தென நிகழ அவ்வாறே வினைப்பொறிகளின் தொழிற் பாடுமாக, கண்டுங் காணாதும், கேட்டுங் கேளாதும், தீண்டியுந் தீண்டாதும், சுவைத்துஞ் சுவையாதும், முரன்றும் முரலாதும் நிற்கும்நிலை சாக்கிரமெனப்படும். அவ்வவத்தையிலே அறிவுப்பொறி யைந்தும், வினைப் பொறியைந்தும், அவற்றிற்குப் புலனாவன பத்தும், அந்தக்கரணம் நான்கும், புருடனும், பத்துவாயுக் களும் தொழிற்படுமாதலின், சாக்கிரத்தே தொழிற்படுங் கருவிகள் முப்பத்தைந்தென்ப. சாக்கிரம் நிகழுமிடம் புருவநடு. கனவிலே, அறிவுப்பொறிகளும் வினைப்பொறிகளும் தொழிற்படாமையின், தொழிற்படுங் கருவிகள் இருபத்தைந் தாம். கனவிற்கிடம் கழுத்து. துயிலாகிய சுழுத்தி நிலையிலே, இருவகைப் பொறிகளும், அவற்றிற்குப் புலனாவனவும், பிராணன் ஒழிந்த பிற வாயுக்களும், அந்தக்கரணங்களும் சத்திமடங்கவே, சித்தம் உடம்பிற்குக் காவலாய் நிற்பப் பிராணவாயுவும் புருடனுமே தொழிற்படும். சித்தம் இதயத்திற் பொருந்தியிருத்தலால், இதயமே சுழுத்திக் கிடமாம். சித்தத் தின் செயலும் அற்றஇடம் துரியம். இதற்குத் தானம் உந்தி. ஆங்காரத்தாற் செல்லும் பிராணனுமடங்கிய நிலை துரியாதீதம். இது மூலாதாரத்தில் நிகழ்வது.

சாக்கிரத்தின் உட்பிரிவாக ஐந்தவத்தை நிகழற்பாலதே. பொருள்களை நுகருமிடத்தே அவை நிகழ்வன. ஒன்றினை யறியுங்கால், அதனை விட்டுவிட்டறிவதல்லது, இடையறாது அறிவதில்லை. விட்டுவிட்டறிதற்கேற்ப இயக்குங் கருவிகளுள் ஒன்றோ; பலவோ செயற்படுதலால், இவ்வவத்தைகள்

ஏற்படுகின்றன. இயக்குங் கருவிகளாகிய சுத்ததத்துவங்கள் ஐந்தாகலின், விடய நுகர்ச்சிக்கட்படு மவத்தையும் ஐந்தாயின.

உயிர், ஆணவமலத்தோடு மாத்திரங் கலந்து நிற்கும் நிலை கேவலமெனப்படும். மாயாகாரியமாய கருவிகளோடு கூடிய நிலை சகலமெனப்படும். மலத்தில் நீங்கிய நிலை சுத்த மெனப்படும். கேவல நிலையிலே உயிர்கள் ஆணவமல மறைப்பால் யாதும் உணரா. சகல நிலையிலே உயிர்கள் உலகத்தையறியும். சுத்த நிலையிலே அவை கடவுளையுந் தம்மையுமறியும்.

இனி, ஐந்தாஞ் சூத்திரப் பொருள் வருமாறு:— உயிர்களை யியக்குபவன் முதல்வனாதலின் அவன் செய்யு முபகாரத்தை இதன்கண் உணர்த்துகின்றார். முன்சூத்திரத்திலே ஆணவ முதலிய பாசத்தினிலக்கணமுங் குறிப்பாக வுணர்த்தப்பட்ட வாறே இச்சூத்திரத்தும் அது தெரிக்கப் பட்டதோர்க. இச் சூத்திரத்தின் கருத்து :—"ஆன்மாவினால், தமக்குப் புலனாவன வற்றை யறியும் மெய், வாய், கண், மூக்கு, செவி யென்பன தம்மையும், தம்மைச் செலுத்தும் ஆன்மாவையும் அறிய மாட்டா, அதுபோல, உயிர்களும் தம் உணர்விற்கு முதலாகிய அருட்சத்தியினாலே வினைப் பயன்களை யறிந்து நுகர்கின்றன வெனினும், தம்மையும் தம்மைச் செலுத்துந் திருவருளினையு மறியமாட்டா. திருவருட்சத்திமுன் உயிர்கள் தொழிற்படுதல் காந்தத்தின் முன் இரும்பு தொழிற்படுதல் போலுமாதலின், திருவருட்சத்தியுடைய இறைவன் விகாரப்படுத லில்லையென்று தெளிக," என்பதே.

ஐம்பொறிகளும் ஆன்மாவினாலே தொழிற்படுகின்றன வென்பதே, இச்சூத்திர முதலதிகரணக் கருத்து. இதன் இரண்டாமதிகரணத்திலே, 'ஆன்மா, தமது முதலாலே யுணரு மென்றனர். உயிரின் சார்பின்றி, எவ்வாறு பொறிகள் உணர்ச்சியிலவாமோ, அதேபோல உயிரும் முதல்வன் சார்பின்றிப் பொருளை யறியுமாறில்லை. முதல்வன் அறிவித்தா லன்றிப் பொருளை யறியுமாற்றல் உயிர்க்கில்லை. இறைவன்

காட்டவே, உயிர் பொருள்களைக் காணுமிடத்து, வினையினளவாகவே அவற்றைக் கண்டு நுகர்தலால், அவ்வினைப்பயன் உயிர்க்குள்ளதே யன்றி இறைவனுக்கில்லை. சிவன் அசத்தாகிய மாயா காரியங்களை நுகரமாட்டானாகலின், "மன்னு சிவன்" என்ற உதாரண வெண்பாவிலே "சிவன்" என்ற சொல் பேரின்பத்தையும் முற்றறிவினையும் தூய தன்மையையுமுடைய முதல்வனைக் குறிக்கவே பயன்படுத்தப்பட்டது. ஆன்மா ஒன்றை யுணருங்கால், முதல்வனின் வேருய் விளங்குதலுமின்றி, அவனே யாதலுமின்றி, உடனுயடங்கி நின்றுணர்வனென்பார், கதிரவனொளியி லடங்கிய விண்மீனை உயிர்க்கு உவமை கூறினர். இவ்வுவமை கூறிய வெண்பாவினுள், திருவள்ளுவர் குறட்பகுதியாய, 'கண்டுகேட்டுண்டுயிர்த்துற்றறியு மைம்புலன்' என்பது எடுத்தாளப்பட்டது. கதிரவனுங் கதிரும்போலச் சிவமுஞ் சத்தியுமாமென்றனர். அது மெய்யுணர்ந்தாரே அறியற்பாலது இச் சூத்திரத்திலே முதற்காரணந் துணைக்காரண மென்பவற்றி னியல்புரைக்கப்பட்டது.

இனி, ஆறுஞ் சூத்திரத்திலே, பதிப்பொருளின் சிறப்பியல்பு கூறுகின்றார். பதியின் பொது இயல்பு இரண்டாஞ் சூத்திரத்தே குறிக்கப்பட்டது இதன்கண், சத்தும் அசத்தும் வரைசெய்துணர்த்தப்படுகின்றது.

அறிந்தனுபவிக்கப்படும் உலகம், உயிராற் கருவிகள் வாயிலாக அறியப்படும். தோன்றுமுலகம் அழியுந் தன்மையது ஆதலால், இறைவன் உலகத்துப் பொருள்போல அறியப்படுவனுயின், அவனுக்கும் அழிவுண்டாம். ஆதலால், அவன் அங்ஙனம் அறியப்படமாட்டான். அவன் உயிரால் எவ்வாற்றாலும் அறியப்படாதவனெனில், அவன் சூனியப் பொருளாவன். அவன் அத்தகையானன்மையின், ஒருவாற்றால் அறியப்படாதவனும், ஒருவாற்றால் அறியப்படுபவனுமுள்ள பேரறிவுடைய பெரும்பொருள் என்பார், அவனைச் 'சிவசத்து' என்றார். சட உலகத்திற்கு மூலமாகிய மாயை சடசத்தாகலின், அறிவுடைய சத்தினைச் 'சிவசத்'

தென்றார். இதனால் சித்துமாய்ச் சத்துமாயிருப்பது இறைவனியல் பென்று தெரிவித்தவாறும். "வாலறிவ"னென்ற திருவள்ளுவர் கருத்து மி஁தேபோலும்.

ஞானம், பதிஞானம், பசுஞானம், பாசஞானமென முத்திறப்படும். இறைவனை யறியும் ஞானம் பதிஞானம்; இறைவனறிவுகொண்டே இறைவனறியற்பாலன். உயிர் தனது சுட்டறிவுகொண்டு முதல்வனையறியாது. உயிர் தன்னைப் பாசத்தின்வேறாக அறியுமறிவு பசுஞானம். பாசப் பொருள்களை யறியுமறிவு பாசஞானம். பசுவினுண்மையியல்பும், பாசத்தினுண்மையியல்பும், இறை ஞானத்தாலேயே அறியற் பாலன. யான் இதனையறிந்தே னென்றபோது இது என்ற புறப்பொருளாய பாசமும், யான் என்னும் பசுவும், பாசஞானத் திற்கு விடயமாகின்றன.

இனி, இச் சூத்திர முதலதிகரணத்தே, அறிவினாலறியப் பட்ட சுட்டு அசத்தென்பதுணர்த்தப்பட்டது. உள்ளதென்ற உணர்ச்சிக்குமாத்திரமன்றி, இல்லதென்ற உணர்ச்சிக்கும், அழிபொருள் யாவும் இடந்தருதலின், சுட்டுப்பொருள் பிரகாசமாய் நின்றே அப்பிரகாசமாய் நிற்பதெனப் பரமாசாரியர் குறித்தருளினர்.

சுட்டுப்பொருள்போல அறியப்படுதலும், சூனியப் பொருள்போல அறியப்படாமையுமாகிய இரண்டு தன்மையு மின்றிச் சூக்குமவாக்காகிய நாதமுடிவாகவுள்ள பாசஞானத் தாலும், பசுஞானத்தாலும் அறியப்படாமல், பதிஞானத் தாலுணரப்படுவதாய் நின்ற அதுவே சத்தாயுள்ள சிவமென் றுணரற்பாற்றென்பதனை இரண்டாம் அதிகரணத்துள் ஆசிரியர் விளக்கினார். உயிரானது முதல்வனைத் தன்னறிவினா லறியக்கூடுமென்னில், அவன் உயிர்க்கு வேறாவான் வேண்டும். அவன் உயிரோடு அத்துவிதமாய்க் கலந்திருப்பவனாகலின், தன்னிற்பிரித்து அவனை உயிர் எப்படியறிதல்கூடும்? அவன் உயிரறிவிற்கு அப்பாற்பட்டு நுட்பமாய்க் கலந்திருப்பானாகலின், தூலமாகிய தன்னறிவினாலே அதனைக் கடந்துள்ள முதல்வனை

உயிர் அறியமுடியாது. உயிர் கண்ணுக்குப் பொருளையுணர்த்தினும், கண் உயிரினை யறியமாட்டாது. அதுபோல உயிரொடு கலந்து உயிர்க்குப் பொருள்களையுணர்த்து முதல்வனை உயிர் தன்னறிவாலறிய மாட்டாது. ஆதலால் இறைவனறிவு கொண்டே அவனை உயிர் பிரிப்பின்றியறியும். இறைவனருளில் ஒன்றி நின்ற உயிர் அவ்வருளே கண்ணாகக்கொண்டு அறிதலையே இறைவனறிவா லறிதலென்றவாறு. "அவனருளே கண்ணாகக் காணினல்லால், இப்படியன் இந்நிறத்தன் இவ் வண்ணத்தன் இவன் இறைவன் என்றெழுதிக் காட்டொணாதே" என்றதுமது. இச் சூத்திர பாடியத்துள், முனிவர் சிவசம வாதத்தை விரிவாக மறுத்துள்ளார். பாடியமெழுதுங் காலத்தே முனிவர் உயர்ந்த உள்ள நிலையடைந்திருந்தமையால், பிறசமயத்தார் யாரையுங் கடிதலின்றி, இணக்கமாகவே அவரவர் கொள்கையை மறுப்பாராயினர். சிவஞானபாடியம் 313ஆம் பக்கத்திலே "எத்தன்மையராயினும், சிவதீக்கைபுடையராய்ச் சிவாகமத்தில் விதித்தவாறொழுகி அகச்சமயத்தில் நிற்றலின், அவரைப் பழிக்கலாகாமையின், அவரறிவு அவ்வளவிற்றென்று போதலே பொருத்தமுடைத்து" என்ற முனிவர் திருவாக்கானும் அது தெளியப்படும்.

இச்சூத்திர பாடியத்துள், அத்துவிதமென்ற சொல்லிலுள்ள அகரத்திற்குச் சங்கராசாரியர், இராமானுசர், சிவாத்துவித சைவர் முதலியோர் இன்மைப்பொருள் கொண்டமையும், பேதவாதியாகிய மத்துவாசாரியர் முதலியோர் மறுதலைப் பொருள்கொண்டு "இரண்டின் மறுதலை ஒன்றெனின், ஒன்றின் மறுதலை யிரண்டாம்" என்று கூறித் துவிதங் கொண்டமையும், சைவசித்தாந்திகள் அன்மைப்பொருள் கொண்டமையும், முனிவர் தெள்ளிதின் விரிவாக விளக்கிப் போந்தனர். பரப்பிரமப்பொருள் ஒன்றே உள்ளதென்பார், கேவலாத்துவிதிகள். தனது சத்தியானும் தன்னோடியை யுடைய பசு பாசங்களானும் விசேடிக்கப்பட்டு விசிட்டமாய் நின்ற பரப்பிரமம் ஒன்றே யென்பார், விசிட்டாத்துவிதிகள் ஆவர். அத்துவிதமென்பது, பலவகையான சம்பந்தத்துள், ஒருவகைச் சம்பந்தத்தை யுணர்த்துமென்று தெளிக. அத்து

விதம், ஐக்கியம், தாதான்மியம், சமவாயம், சையோகம், சொரூபமெனச் சம்பந்தங்கள் பல. ஆற்றுநீருங் கடல்நீருஞ் சேர்வது ஐக்கிய சம்பந்தம். அதனாற் பொருட்டன்மை யொன்றே என்பது முடியும். குணமுடையானுக்குங் குணத் திற்குமுள்ள சம்பந்தம் தாதான்மியம். அதனாலும் பொருட் டன்மை ஒன்றே யென்பதே கருத்து. ஆன்மா முதல்வனின் குணமன்று. தானே குணிப்பொருளாயுள்ளது தாதான் மியத்தை நியாயநூலர்ர் சமவாயமென்பர். விரலும் விரலுஞ் சேர்ந்தாற்போல இருப்பது சையோகசம்பந்தம். அது ஒன்றிலொன்றை வியாபித்திருப்பதை யுணர்த்தாது. சொரூப மென்பது வடிவமுடையானுக்கும் வடிவத்திற்குமுள்ள சம்பந்தம். கடவுளின் வடிவம் உயிரன்றாதலின், அச்சொல் கடவுளுக்கும் உயிர்க்குமுள்ள சம்பந்தத்தை யுணர்த்தாது. இருபொருள் அதுவதுவாய் ஒற்றுமைப்பட்டொன்றாய் நிற்பதே அத்துவித மெனப்படும். உயிர்க்குயிராய்நிற்கு முதல்வனது சம்பந்தம் அஃதேயாதல் தெளிக.

சிவானந்தத்தை நுகர்தற்குரிய உயிரின் தன்மையை முனிவர் தெளிவாக விளக்கியுள்ளார். ஆன்மாவானது சார்ந்ததன் வண்ணமாய் நிற்குமியல்புடைமையின், எதைச் சார்ந்ததோ அதனோடத்துவிதமாய், அதன்கண் வியாப் பியமாய் நிற்கும். தனக்கு வேறாய உலகப்பொருளைச் சார்ந்து அதன்கண் வியாப்பியமாய் நிற்றல், மலத்தா லுளதாஞ் செயற்கைநிலை யெனவும், அறிவுப்பொருளாய்த் தனக்கு ஒத்த சிவத்தைச் சார்ந்து அதனில் அடங்கிநிற்றல் இயற்கை நிலையெனவு மறிக. ஆன்மா அழுந்தி யறிதலால், உலகத்தை யும் சிவத்தையுமனுபவிக்கும். சிவம், பசுபாசங்களினழுந் தாமையால், அவை, பரம்பொருளுக்கு அனுபவப்பொருளாகா. ஆதலால் முதல்வன் ஒன்றையும் தன் பொருட்டு வேண்டா தவன். உயிரே சிவத்தின்பால் பேரின்பப் பயனெய்துதற் குரியது

நான்காஞ் சூத்திரத்திலே உயிரினிலக்கணமும், ஐந்தாஞ் சூத்திரத்திலே பாசவிலக்கணமும், ஆறாவதிற் பதியிலக்

கணமும் போந்தமையின், இம் மூன்றும் இலக்கணவிய லென்னப்படும்.

இனி, ஏழாம் சூத்திரப்பொருள் வருமாறு :—முத்திபெறுதற் கேதுவாய உயிரின் சிறப்பிலக்கணம் இதன்கட் கூறப்படும். ஏழாஞ் சூத்திரக் கருத்து வருமாறு :—சிவசத்தின் முன்னர், அசத்தாகிய நிலையிலாப் பொருளெல்லாம் பாழேயாகலான், சத்தாகிய சிவம் அசத்தாகிய பாசத்தை அறிந்து அனுபவி யாது; பாசம் அறிவில்லாத சடமாகலின் சத்தாகிய சிவத்தை அறிந்தனுபவியாது; ஆதலால், சத்தேயாகவும் அசத்தேயாகவு மில்லாத சதசத்தாகிய ஆன்மா, இரண்டையும் அறிந்து அனுபவிக்கவல்லது. சூத்திரக் கருத்து அதிகரணங்களா லினிது விளங்கும். முதலதிகரணத்தே 'சத்தினிடத்து அசத்துப் பிரகாசியாது' என்றமையால், பாழென்றது விளங் காமைபற்றி யென்றறிக.

முதலதிகரணத்துள், சத்தானது பொருள்களைச் சுட்டியறியுந் தன்மையுடையதன்றாகலின், அதன் முன் சுட்டியுணரப்படுவ தாகிய அசத்து எவ்வாறு தோன்றும்? சுட்டுணர்வு முற்றுணர்வைத் தடுப்பதாகலான் அஃதில்லாமை முற்றுணர் வுக்கு மேம்பாடாவதன்றி யிழுக்காகாது தன்னுள் அடங்கிய பசுபாசங்களை இறைவன் சுட்டியுணராமல் அறிவன் என்பது கருத்து.

இரண்டாவது அதிகரணத்துள், அசத்திற்கு அறிவின்றென்பது விளக்கப்பட்டது. மூன்றும் அதிகரணக் கருத்தாவது பாச ஞானமென்பது, பாசம்வாயிலாக நிகழும் பசுஞானமே. சத்தாகிய சிவத்தையும் அசத்தாகிய பாசத்தையுமறியுந் தன்மையுடையதாய், அறிவிக்க அறிவதாய் உள்ளது ஆன்மா வென்பது. ஆன்மா அறிவிக்கவே யறியும்; தானாக முதல்வன் போல அறியுமாற்றலுடையதன்று; அசத்தையாவது சத்தை யாவது சார்ந்தவிடத்தே, அவ்வவற்றின் வண்ணமாய் நிற்கும் ஆன்மவியல்பு புலப்படுதலால், அவ்விரண்டினையுஞ் சார்ந்தே, ஆன்மா தன்னியல்பை யறியும். ஆன்மவியல்பினை முனிவர் 'மயக்கமதுற்று மருந்திற் றெளிந்தும்,' என்னும் வெண்பாவின்

பொருள் விளக்குமிடத்து அழகாக விரித்துரைத்தார். மயக்க மாகிய அறியாமை, அறிதற் கருவியில்வழி மேற்பட்டும், அஃதுள்வழி நீங்கியும், நிலைபேறில்லாததாக விருப்பதால், அஃது உயிர்க்கு உயிராயுள்ள முதல்வனது மெய்ஞ் ஞானத்தைப் பற்ருது. கடலிலே உப்பானது நீரிற் பற்றுவதே யல்லாமல், அதற்கு இடங்கொடுக்கும் ஆகாயத்திற் பற்ருமை போல, மயக்கமானது உயிரைப் பற்றுமே யொழிய முதல்வனைப் பற்ருது என்ருர்.

எட்டாஞ் சூத்திரத்திலே பதிஞானத்தை ஆன்மாவுணரு முறையினைக் கூறுகின்ருர். பல்பிறவிகளிலே செய்த பெருந் தவத்திஞல், ஒரு பிறவியிலே உயிர்க்குயிராய பரம்பொருள் உயிர்க்குக் குருவாய்த் தோன்றி உயிரை நோக்கி, ‘நீ நின் பெருந்தகைமை யறியாது மயங்கி இடர்ப்பட்டாய். நின் பெருந்தகைமை இத்தகையது’ என்றறிவுறுப்ப, உயிரானது ஐம்புல வேடர் கூட்டுறவினை விட்டு நீங்கி இறைவனேடத்து விதமாய் நிற்கும நிலையினை யுணர்ந்து, அம் முதல்வன் திருவடிகளை யணையும்.

இச் சூத்திரத்தின் முதலதிகரணத்தே, ஞானத்தாலேயே வீடென்பதும், அது சரியை கிரியை யோகத்தின் பயனாய் வருமென்பதும் உணர்த்தப்பட்டது. உலகவின்பங் கருதிச் செய்யப்படும் நல்வினையின் பயனானது, பசிக்கு உணவு போலும். உண்ட உணவு செரித்தவுடன், மீட்டும் பசி யுண்டாம். அதுபோல, அந் நல்வினையானது நிலைத்த இன்பத்தைக் கொடாது. உலகப் பயன் கருதாது, வீடு கருதிச் செய்யுஞ் சரியை, கிரியை, யோகமென்பன, இருவினை யொப்பினை உயிர்க்கு உண்டாக்கி, ஞானத்திற்கு வழிதிறக்கும். இருவினை யொப்பாவது நல்வினையுந் தீவினையும் உலக இன்ப துன்பத்தைப் பயத்தலால், அவையிரண்டின் பயனிலும் ஒத்த முறையில் விருப்பமில்லாமையாகும். நல்வினைகளெல்லாம் பசு புண்ணியமெனப்படும். சரியை, கிரியை, யோகம், பதி, புண்ணியமெனப்படும். பசு புண்ணியம், சிவ புண்ணியமென்ற பகுப்பு, செய்வாரது கருத்து வேறுபாடு பற்றியே யென்பது,

முனிவரால் பாடியத்துள் நன்கு விளக்கப்பட்டது. சிவ புண்ணியம் பொதுவெனவும், சிறப்பெனவும் இருவகைப்படும். வேள்வியிற் பல தேவரோடு, சிவபிரானை வழிபடுவது பொதுவெனவும், சிவலாயத்திற் சிவபிரானை வழிபடுவது சிறப்பெனவு மறிக. சிறப்புச் சிவபுண்ணியமும், சிவதீக்கையின்றிச் செய்யப்படுவது, தீக்கை பெற்றுச் செய்யப்படுவது என விருதிறப்படும். மெய்யன்பாற் செய்யப்படுவது, புகழ், அதிகார முதலிய பயன் கருதிச் செய்யப்படுவது என்ற இருபாகுபாடுமுண்டு. முன்னது உண்மைச் சரியை, கிரியை, யோக, ஞானமெனப்படும். பின்னது, உபாயச் சரியை, கிரியை, யோக ஞான மெனப்படும்.

சரியை, இறைவனது தூலவடிவத்தை வழிபடுவதாகும். கிரியை இறைவனது சூக்கும வடிவத்தை வழிபடுவது. யோகமானது, அவனது, அதிசூக்கும வடிவத்தை வழிபடுவது. ஞானமானது, அகண்டாகார நித்தவியாபக சச்சிதானந்தப் பிழம்பாகிய பரம்பொருளை நேரே வழிபடுவது. சரியை, புறவணக்கம். கிரியை, அகப்புற வணக்கம். யோகம், அக வணக்கம். ஞானம், அறிவால் எங்கும் வழிபடுவது. சரியைக்குப் பயன், புவன பதிகளின் உலகமெய்தி, ஆண்டுள்ள போகங்களை நுகர்வது. கிரியைக்குப் பயன் புவனபதிக்கு அணுக்கத் தொண்டராய் வைகுதல். யோகத்திற்குப் பயன், புவனபதிக்கு ஒத்த வடிவுடைமை. உயர்தரமல்லாத ஞானத்திற்குப் பயன், புவனபதிகளால் அதிட்டிக்கப்படுதல். இவற்றின் பயன்களை விரிவாக, முனிவர் இனிது தொகுத்துரைத்த பகுதி வருமாறு :—

உபாயச் சரியையிற் சரியை முதல் உபாய ஞானத்தில் ஞானம் ஈறுகிய பதினாறு வகையினின்று பல்வேறு வகைப்பட்டு விரியுஞ் சிவ புண்ணியங்களுக்கெல்லாம் பயன், அவ்வவற்றிற்கேற்பக் காலாக்கினிருத்திரர் முதல் குண தத்துவ மத்தகத்திற் சீகண்ட புவனத்தின்கீழுள்ள உருத்திரரீறுன அவ்வப்புவன பதிகளுலகத்திற் சாலோக முதலியவற்றைப் பெறுதலாம். உண்மைச்சரியை முதல் உண்மை யோகத்தில்

ஞானம் வரை விரியுஞ் சிவ புண்ணியங்கட்குப் பயன் சீகண்ட புவன முதல், சுத்த வித்தைக்குக் கீழுள்ள அவ்வப்புவன பதிகளுடைய சிவலோகத்துச் சாலோக முதலிய பதவிகளைப் பெறுதலாம். உண்மை ஞானத்திற் சரியை முதல், யோக மீறாக விரியுஞ் சிவபுண்ணியங்களுக்கு, சுத்த வித்தை முதலிய அதிகார தத்துவ புவனத்துச் சாலோக முதலிய அபரமுத்தியைப் பெறுதலாம். ஞானத்தின் ஞானங்களுள் முடிவான ஞானத்திற்குப் பயன், பரமுத்தியே. ஏனையவற்றிற்கு, இலய தத்துவத்திலுள்ள அபரமுத்திப் பயனெனக் கொள்க.

சரியை, கிரியை, யோகமென்னும் நற்றவ முற்றிய விடத்தே, மலத்திற்குத் துணையாய் நின்று உயிர்களை நடாத்திய மறைப்புச்சத்தி மலம் நழுவுதற்குரிய தருணத்திலே பராசத்தி வடிவமாய் உயிரின்கட் பதிதலே சத்திநிபாத மெனப் படும். 'சத்தியின் வீழ்ச்சி' யென்பது அதன் பொருள். அப்பெயர்க் காரணத்தை முனிவர் அழகாக விளக்கின பகுதி வருமாறு :—"ஓரவைக்களத்தின் நடுவே ஒரு கல் வந்து வீழ்ந்தால், அவ் வீழ்ச்சி, அவ்வவைக்களத்துள்ளாரை ஆண்டு நின்றும் அகல்விக்கும். அதுபோலச் சத்திநிபாதம் நிகழ்ந்த மாத்திரையே அஃது அவ்வான்மாவை, மனைவி, மக்கள் முதலிய உலகத்துழனியின் அச்சம் நிகழ்ந்து அவ்வுலக வாழ்க்கையினின்று வெரீஇப் போந்து உண்மைக் குரவனை நாடிச்செல்லுமாறு செய்வித்தலின், அவ்வொப்புமை தோன்றச் சத்தி நிகழ்ச்சியென்னாது சத்தி வீழ்ச்சி யென்" றோதப்பட்டது.

மலபரிபாக மென்பது ஆணவமலம், தனது சத்தி தேய்ந் தொழிதற்குரிய துணைக்காரணங்களோடு கூடுதல்.

இச் சூத்திரத்தின் இரண்டா மதிகரணத்துள், சரியை முதலியன, ஞானத்திற் கேதுவாமன்றி ஞானத்தை அவை தாமே பயக்கமாட்டா. இறைவனே குருவாய் வந்து ஞானத்தை யுணர்த்துவன். உயிரோடு அத்துவிதமாய்க் கலந்துள்ள முதல்வனே உயிரின் பக்குவமறிந்து அதற்குத் தன்னைக் காட்டவல்லா னாகலின், அவனே குருவாய் வருவனென்றார்.

சிவாகமங்களிலே ஆசாணை அதிட்டித்து நின்று இறைவ னுணர்த்துவனெனக் கூறினும் பொருட்டன்மையால், இறைவனே ஆண்டுக் குருவாதல் தெளிக. ஆணவமல மாத்திரமுடைய விஞ்ஞானகலர்க்கு இறைவன் குருவாய் வெளிப்பட்டுத் தோன்றாது, உண்ணின்றவாறே உண்மை யுணர்த்துவன். ஆணவமுங் கன்மமுமுடைய பிரளயாகலருக்கு முத்தொழில் நடத்துவான் கொண்ட திருமேனியொடு தோன்றி உண்மையை அறிவுறுத்துவன். மும்மலமுடைய சகலர்க்கு அவர் வடிவுபோன்றதொரு வடிவத்துடன் தோன்றி ஞானத்தை நல்குவன். மூவகை உயிர்களுக்கும், முறையே தன்மையினும், முன்னிலையினும், படர்க்கையினும் உணர்த்து மாறறிக. ('அருள்வீழ்ச்சி') சத்திநிபாதம், மந்தாரம், மந்தம் தீவிரம், தீவிரதரம் என நாற்றிறப்படும். மந்ததர சத்திநிபாத, முடையார் சாதகநிலை யெய்துவர். மந்தர், சத்திநிபாத முடைய சீவன் முத்திநிலை யெய்துவர். தீவிரசத்திநிபாதப் பயன், அபரமுத்தி. (அஃதாவது சுத்ததத்துவ புவனங்களி னெய்துதல்). தீவிரதரமுடையோர், இரண்டறக் கலத்த லாகிய பரமுத்தியடைவர். ஞானநூலுணர்வு மாத்திரம் போதாது, இறைவனே குருவாய் வரவேண்டுமென்பதற்குக் காரணம் 'இல்லா மூலைப்பாலும்' என்ற செய்யுளுள் விளக்கப் பட்டது. மூன்றும் அதிகரணத்துள், இறைவன் உணர்த்தாமல், உயிர்கள் தம்மையுணரமாட்டா. ஐம்பொறிகள் வாயிலாகப் புலப்படும் பொருள்களின் வண்ணமாய், உயிர்கள் நிற்பன வாகலான் "ஐயுணர்வுகளான் மயங்கித் தம்மை யுணரா" வென்றார்.

நான்காம் அதிகரணத்தே, உயிர் இறைஞானத்தால் தன்னை இந்திரியத்தின் வேறுவான் காணவே தமது முதல்வன் சீபாதத்தை அணையுமென்ப தறிவுறுக்கப்பட்டது பந்த நிலையில், கருவிகள் பிரிந்து நீங்கியவழி, உயிர்க்கு மலம் தாரகமாம். அவைகள் நீங்கிய இடத்தே, சிவமே உயிர்க்குத் தாரகமாம். மலத்தைப்பற்றிக் கேவல நிலையில் நின்ற உயிர் மீளவுங் கருவிகளைக் கூடிச் சகல நிலையடைதல்போல, சிவந்தாரகமாய்ச் சுத்தநிலை யெய்திய உயிர் மீண்டுங் கருவிக

ளோடு கூடுமோவெனிற் கூடா வென்பதனை உதாரணச் செய்யுளில் வலியுறுத்தினர்.

இவ்வதிகரணத்துள், திருவடி ஞானத்தைப் பெற்ற உயிர் மீளப் பாசஞானத்திற் செல்லுதல் இல்லையெனவும், பாசஞானத்திற் செல்லுதல் இழுக்காமாதலின், மீளாமைக் குரியன செய்யவேண்டுமெனவும் அறிவுறுத்தப்பட்டது.

இனி, ஒன்பதாஞ் சூத்திரத்துள், பாசஞானத்திற்கு மீளாமைக் கேதுவாகிய ஆன்மசுத்தி பண்ணுமாறு தெரிக்கப்பட்டது. முற்சூத்திரத்திற் சிவரூபமும், இச் சூத்திரத்திற் சிவதரிசனமுங் கூறப்பட்டதென்றலுமொன்று. இச் சூத்திரக் கருத்தாவது :- பசுஞானத்தாலும் பாசஞானத்தாலு மறியப்படாத முதல்வனை, அம் முதல்வன் அளித்த ஞானமாகிய கண்ணினாலே தன்னறிவின்கண்ணே ஆய்ந்தறிக. கானல்போல நிலையில்லாத பாசக்கூட்டங்களினின்று விலகவே, பதிஞானமானது, பிறவித் துயராகிய வெப்பத்திற்குக் குளிர்ந்த நிழலாகத் தோன்றும். அந்த ஞானத்தால், முதல்வனைக் கண்ட காட்சி சலியாமைப் பொருட்டு, அப்பொருள் பயக்குந் திருவஞ்செழுத்தினை விதிப்படி எண்ணுக,'' என்பதே.

இச் சூத்திர முதலதிகரணத்தே சிவஞானத்தாலேயே சிவனைக் காணலாமென்பது நிறுவப்பட்டது. சிவஞானத்தைக் காண்டல் எவ்வாறெனில், 'நிலையில்லா உலகை அசத்தென்று கண்டு கழித்தவிடத்தே ஞான சொரூபம் விளங்கும்' என்றார். இறைவன் மூவகைப் பிரபஞ்சத்திலுங் கலந்தும் அப்பாற்பட்டும் நிற்பானாகலின், அப் பிரபஞ்சத்தைக் கழித்தொதுக்கவே, அவனது அளவிறந்த நிலைமை தோன்றும். கருடபாவனையால் விடந்தீரும் விதத்தை முனிவர் நன்கு விளக்கினர். அது வருமாறு :—"ஆதிபௌதிக கருடன், ஆதி தைவிக கருடன் ஆத்தியான்மிக கருடன் எனக் கருடன் மூன்றுவகைப்படும். இவ்வாறே பொருள் தோறுங் கண்டுகொள்க. அவற்றுள் உலகத்திற் காணப்படுங் கருடன் ஆதிபௌதிக கருடன். அதற்கு அதிதெய்வமாய் மாந்திரிகன் உள்ளத்தில் அதுபோல வைத்துத் தியானஞ்செய்து கணிக்கப்படு மந்திரம், ஆதி

தைவிக கருடன். அம் மந்திரத்தினிடமாக நின்று மாந்திரி கனுக்குப் பயன் கொடுப்பதாகிய சிவசத்தி ஆத்தியான் மிக கருடன். அதனைப் பாவித்தலாவது நாடோறும் பயின்றுவந்த பயிற்சி விசேடத்தால் அம் மந்திர ரூபமேதானாக அநந்நிய பாவனை செய்து தன்னறிவு அதன் வசமாம்படி உறைத்து நிற்றல். அங்ஙனம் நின்று அம் மந்திரக்கண்கொண்டு பார்க்கவே, அஃது அவ்விட வேகத்தை மாற்றுதல் ஒருதலை."

மூன்றும் அதிகரணத்துள், திருவைந்தெழுத்தை நினைக்கு முறை விளக்கப்பட்டது. இதனுள் 'உச்சரிக்க' வென்றது அறிவாற் கணித்தலேயாமென்று முனிவர் விளக்கினர். சூத்திரத்துள் 'எண்ணுக' என்பது 'தியானிக்க' என்னும் பொருட்டு. திருவைந்தெழுத்தை நினைக்கு முறையும் ஓது முறையும் ஒன்றே. ஞானம் விளங்கி முதல்வனைக் கண்ட விடத்தும், பயிற்சிவயத்தான், முன்னர்த்தான் பற்றியிருந்த பாசத்தை உயிர்நோக்கி நிற்குமாதலின், அந் நோக்கை நீக்குதற்கு, அஞ்செழுத் தெண்ணுதல் வேண்டப்பட்டது. அஞ்செழுத்தைக் கணிக்கு முறையிலே ஆன்மா சிவனுக்கு அடிமையாதலை யறிந்து உள்ளத்திலே அஞ்செழுத்தா லிறைவனைப் பூசித்து, உந்தியிலே ஓமித்து புருவநடுவே தியானித்துச் சிவோகம் பாவனை செய்யின், ஆண்டானடிமைத் திறம் இனிது விளங்குதலின், மலவாசனை மாறும். அவ்வாறு செய்யுமிடத்து உலகை நோக்கிய உயிர்க்கு அதனோடு கலந் துள்ள முதல்வன் தோன்றுவனேயன்றி உலகந் தோன்றாது.

இனி, பத்தாஞ் சூத்திரக் கருத்து ஆயற்பாற்று. முதல்வன் உயிரோடுகலந்து, உயிரேயாய் நின்றமைபோல, உயிரும் தானெனென்பது வேறு காணப்படாது, அம் முதல்வனேயாய் ஒற்றுமைப்பட்டு அவன் பணியிலே வழுவாது நிற்பின், ஆணவம், மாயை, கன்மமென்ற மூன்றும், பற்றக்கழியும் என்பது சூத்திரக் கருத்து. அஞ்செழுத்தை நினைந்து இறைவனைப் பூசித்துப் பின் அவனோடு ஒற்றுமைப்படுதலா லேயே, யானென தென்னுஞ் செருக்கு அறுமாதலின், அவ் வொற்றித்தல் வேண்டப்படு மென்பதை முதல் அதிகாணத்துள்

வற்புறுத்தினர். அங்ஙனம் ஒற்றுமைப் படுதலோடு, அவ னருளாலன்றி ஒன்றுஞ் செய்யாது, அவன் பணியில் நிற்பதனுலேயே, மாயையின் காரியமாய மயக்கவாசனையும், ஆகாமியவாசனையும் ஏற்படாவாகலின், அருள்வழிநிற்றல் இரண்டாம் அதிகரணத்துள் வற்புறுத்தப்பட்டது.

அருள்வழி நிற்பதால், உலகமும் தாமும் இறைவ னுடைமை யென்று கருதுதலமைதலின், பிராரத்தம் நுகரு மிடத்து, ஆகாமியம் ஏறுவதில்லை. அஃது உடலனுபவ மாகவே கழியும். பிராரத்த வினையும் இறைபணி நிற்கும் ஞானிகட்கு வாசனை போல மெலிதாய் வந்து தாக்குவதன்றி, நுகரப்படுத லில்லையாகலான், ஆகாமியம் ஏறி மேலைக்கு வித்தாகா தென்பதை இனிது விளக்கினர். அனற் கட்டுடையார், அனலாற்றுன்புறுமைபோல, இறைவனடியாகிய அச்சினைவிட்டு விலகாதார் பிராரத்தத்தாற் பிணிப்புறு மாறில்லை யென்றார்.

இனி, பதினோராஞ் சூத்திரப் பொருள் ஆயற்பாற்று. பாசநீக்கு முறை பத்தாஞ் சூத்திரத்துட் கூறப்பட்டது. இருள்நீக்கத்தில் ஒளிவிளக்கம் போலப் பாசநீக்கத்தில் அருள்விளக்கம் நிகழும். அதற்குமேல் முற்றிய சிவானந்த விளக்கம் நிகழும். அச் சிவானந்த விளக்கம் பெறுதற்குரிய முயற்சி பதினொராஞ் சூத்திரத்துட் கூறப்பட்டது. இச் சூத்திரக் கருத்து யாதெனில் :— கண்ணுக்கு உருவத்தைக்காட்டித் தானும் அதனைக் காண் கின்ற உயிரைப்போல, முதல்வன் உயிர்க்குப் பொருள்களை யுணர்த்தித் தானு முணர்ந்து பேருதவி புரிவதைக் கடைப் பிடித்துச் செய்யும் அன்பாலே, சிவானந்தம் விளையும், கண்ணோடு உயிரினறிவானது கலந்து நிற்ப, கண்கண்டதும் உயிர் கண்டதும்பிரித்தறியப்படுமாறின்மைபோல, முதல்வனும் உயிரறிவோடு கலந்து நின்று அத்துவிதமாய் உயிரோடு தானும் பொருள்களை யறிந்துதவுவதே இறைவன் செய்யும் பேருபகார மென்றார். இறைவன் உயிர்க்குப் பொருள்களைக் காட்டினுல் மாத்திரம் போதாது; தான் அவற்றைக் கண்டாற்றான், உயிர் காணும். காணுமுதவியைக் கருணை மேலீட்டினுலேயே இறைவன் புரிவதால், அக்கருணையை யுள்ளுவார்க்கு முதல்வன்பால் மிகுதிப்படும் விழைவே அன்

பெனப்படும். அவ் விழைவோடு அத்துவிதமாய்க் கலந்திருப்பது சிவானந்தமாதலின், இஃது இன்ப அன்பெனப்படும். தீயானது, திரியிற்றங்கி விளங்குதல்போல, முதல்வனும் உயிரிற்றங்கித் தொழில் செய்வனென்பது முடிந்தது. இச் சூத்திர முதலதிகரணத்தே, இறைவன் உயிர்கள் அறியும் பொருளை அவற்றோடு கலந்து தானும் அறிந்துதவுகின்றாரென்றார். இதற்குக் காரணத்தை முனிவர் இனிது விளக்கினார்.

விளக்கொளி கண்ணொளியோடு கலந்து கண்ணொளியோடுகூட உருவத்தினுங் கலந்தாலன்றி, கண் அவ்வுருவத்தைக் காண்டலியலாமைபோல, அறிவிக்க அறியும் இயல்பின வாய உயிரும், முதல்வனதுணர்வு தம்மொடு விரவி நின்று தம்மொடுகூடச் சென்று விடயத்தினும் விரவி நின்றாலன்றி அறிவு விளங்கி அதனை யறியும் இயல்பினவல்ல,'' என்றது காண்க.

உலகத்தையும் தன்னையும் உயிரோடு கலந்து இறைவனறிவனென்று தெளிக. அங்ஙனம் இறைவன் தன்னை யறிவனே யன்றி யனுபவித்தலில்லை. ஏனெனில், இறைவன் ஒன்றிலே அழுந்துவதில்லை. தானே இன்பவடிவன், என்பது உய்த்துணரற்பாற்று. இறைவன் எல்லாப் பொருளையும் பொதுவகையால் ஒருங்கே யறிந்து, சிறப்புவகையால் ஆன்மாவினுடனின்றறிவனென்று தெளிக.

உயிர் இறைவனோடு அத்துவிதமாய் நின்று இறைவனருளே விளங்கத் தான் ஏற்ற உணர்ச்சி யிழந்து, ஒரு பொருளை யுணருங்கால், வினைப்பயன் சிவபோகமாய் விளையும். வினைப்பயனை முதல்வனே ஏன்றுகொள்ளுவான் எனவும், ஏன்றுகொண்டு உயிர்கள் செய்யுஞ் செய்திக்குத் தக்க பயனை யளிப்பனெனவும் உண்மை யறியற்பாற்று.

இச் சூத்திர இரண்டாம் அதிகரணத்தே பத்தியின் மறவாதேத்த இறைவன் திருவடியினை உயிர் அடையுமென்பது வற்புறுத்தப்பட்டது. அன்புடையார் விரும்புஞ் சிவானுபவ இன்பத்தை இறைவன் நல்குவனென்பது கருத்து. செய்பவர் செய்திப்பயனை வீட்டு நிலையிலுங் கட்டு நிலையிலும் இறைவன் விளைப்பினும், கட்டுநிலையிலே இறைவன் புலனாகாமைக்குக்

காரணங் கூறுவார், 'படலவிசேடத்தால், ஒளி மழுங்கிய கண்ணிடத்தும், அது நீங்கி ஒளி விளங்கிய கண்ணிடத்தும், வேற்றுமையின்றி ஆதித்தன் சமமாய் நின்றாலும், அவ்வாதித்தன் ஒளிமழுங்கிக் காட்சியில்லாத கண்ணுக்கு மாலையிருட்டாய்த் தோன்றுவனன்றி, ஒளிவிளங்கிய கண்ணுக்குத் தோன்றுமாறு போல விளங்கித் தோன்றான்' என்றார். இறைவன் செய்யும் பேருதவியைப் பரமாசாரியார் "மன்னுமிருளை" என்ற வெண்பாவால் அறிவுறுத்தினர். இறைவனது இச்சை செயலறிவின் வழியே உயிரின் இச்சை செயலறிவு முத்தியின்கண் நிலைப்படுதலைப் பரமாசாரியார், தமது வெண்பாக்களாலினிது விளக்கினர்.

இனி, பன்னிரண்டாஞ் சூத்திரப்பொருளறிதற்பாற்று. மறவாத பேரன்பால், இறைவன் திருவடியை யணைந்த சீவன் முத்தன், செங்கமல மலர்போல விரிந்து விளங்கிய முதல்வனது திருவடியை அணையவொட்டாது மறத்தலைச் செய்விக்கும் இயல்புடைய மும்மல அழுக்கை ஞானநீராற் கழுவி, அயரா அன்புடன் முதல்வனை யணைந்தோரொடுங்கூடி, மலமயக்கம் நீங்க, அவ்வன்பரது திருவேடத்தையும் திருக்கோயிலையுஞ் சிவனென வழிபடுவன் என்பதே இச் சூத்திரக் கருத்து. சீவன்முத்தர்க்குப் புறத்தே அறிவு, இச்சை, செயல்கள் செல்லுங்கால், அவை எவற்றைப் பற்று மென்பது இதன்கண் விளக்கப்பட்டது. சிவானுபவம் உள்ளத்தே நிறையப்பெற்ற பெரியோரே சீவன் முத்தர். உடம்புள்ள போதே உடம்பினுள் உத்தமனைக்கண்ட அவர்கட்கு அவ்வுடம்பு உலகத்தே வதியுங்காலைப் பிராரத்தத்தால் அறிவிச்சைசெயல்கள் புறம்போந்தகாலை, அவற்றினியல்பு இன்னவாறுமென்பதே இச் சூத்திர முரைக்கின்றது. அவர்கள் அறிவு சிவஞானத்தைப் பற்றும்; அவர்கள் இச்சை அன்பர் கூட்டுறவைப் பற்றும்; செயல், வணக்கத்தைப் பற்றும் என்றறிக. முதலதிகரணத்தே, மும்மலங்கள் வாதனைவயத்தாற் பொருந்துமாயின், அவற்றைக் களைதல் கூறப்பட்டது. கன்மமலமான்து புண்ணிய பாவங்கட் கேதுவாய் விருப்பு வெறுப்பாய்ப் பொருந்தும். மாயாமலம், மண்முதல் மாயைவரையுள்ள தத்துவங்களைக் காட்டும். ஆணவமலம் சுட்டுணர்

வாகிய திரிபுணர்ச்சியைத்தரும். பிராரத்தவினை நுகர்ச்சிக்கட் சென்ற தற்போதத்தால் விருப்பு வெறுப்புத் தோற்றமேற் படும். அதனுற் சுட்டறிவுளதாம் என்றறிந்து சிவஞானத் திலே உறைத்துத் தற்போத மிழத்தலே இம் மலங்களைத் துடைக்கும் வழியாகும்.

சிவபத்தரல்லாதார் அஞ்ஞானத்தை யுணர்த்துவ ராகலான், சிவனன்ப ரிணக்கமே வேண்டுமென்பது இரண் டாவது அதிகரணத்தே வற்புறுத்தப்பட்டது. சிவ பத்தரைப் பிராரத்தவினை வாதியாமையின் அவரிணக்கமே பிராரத்தத்தை வெல்லும் உபாயமாதல் காண்க.

இச் சூத்திர மூன்றும் அதிகரணத்தே, திருவேடத்தி னியல்பும் திருக்கோயிலினியல்பும் விளக்கப்பட்டன. நான்காம் அதிகரணத்தே, அவ்விடங்களிலே முதல்வனை வழிபடுதலின் சிறப்பு உணர்த்தப்பட்டது. திருவேடத்தினியல்பு கூறு மிடத்து, அப்பமூர்த்திகளின் பெருந்தவ வடிவத்தையே முனிவர் அதற் கெடுத்துக்காட்டாக மொழிந்தார்.

முதல்வன் எங்கும் நிறைந்த பரம்பொருளாயினும், இவ்விடங்களில் தயிரில் நெய்போலவும், ஏனையிடங்களிற் பாலில் நெய்போலவும் இருத்தலின், சிறப்பிடங்கள் விதந் தோதப்பட்டன. திருக்கோயிலின்கண்ணே இறைவன், அதுவே தானெனக் காணமாட்டாதார்க்கு மந்திர சாந்நித்திய மில்வழி விளங்காது நின்று, உண்மைத் தவமுடையார்க்கு எப்போதும் இனிது விளங்கித் தோன்றுவன். எல்லாப் பொருளிலும் இறைவன் கலந்திருப்பினும், அக் கலப்பினைப் புலப்படுத்தி அன்புவினைவிக்கு மிடங்களிலெல்லாம் அவனை வழிபடுக. பிராரத்தவாதனை பற்றறக் கழிதற்கு ஞானிகளின் கூட்டுறவே இன்றியமையாதது.

எக்காலத்தும் இறைவழிபாடு உயிர்க்கு இன்றியமையாத தென்பதைத் 'தன்னையறிவித்து' என்ற திருவெண்பாவில் வற்புறுத்தியருளினர். இந்நூல் சகலர்க்கே யென்பதைப் பரமாசாரியார் இந் நூலினிறுதிச் செய்யுளால் விளக்கி யருளினர்.

சிவஞானபோதப் பொழிப்புரை

மங்கல வாழ்த்து

கல்லால் நிழல்மலை
வில்லார் அருளிய
பொல்லார் இணைமலர்
நல்லார் புனைவரே.

உரை :—அருள்வடி வாகிய கல்லால மரநிழலின்கண் எழுந்தருளியிருந்து, தனது மாணவர்க்கு மலைவு தீர்த்தருளிய முதலாசிரியர், மேன்மேலருள் செய்தற் பொருட்டு, சுயம்பு மூர்த்தியாகிய பிள்ளையாரது அறிவாற்றல் செயலாற்றல் என்ற இரண்டு திருவடிகளை மெய்யன்பர் தலைமேற்கொள்ளுவர்.

குறிப்பு :—கல்லால மரநிழலின்கண் திருநந்திதேவர் முதலியோர்க்கு ஞானம் உபதேசித்தமை வெளிப்படை. 'அருளிய' என்பதற்கு அவர் அருளாற் பிறந்த என்பாருமுளர். இங்கே, அருளிய - அருள்செய்ய. பொல்லார் - பொள்ளார், உளி முதலியவற்றுற் போழ்ந்து செய்யப் படாதவர். திருவெண்ணெய்நல்லூரிலே, விநாயகப்பெருமான் சுயம்பு மூர்த்தியாயுள்ளார். புனைதல் - மேற்கொண்டு தமது அறிவு செயல் அவற்றுள் அடங்கப்பெற்று நிற்றல்.

அவையடக்கம்

தம்மை யுணர்ந்து தமையுடைய தன்உணர்வார்
எம்மை யுடைமை யெமையிகழார்—தம்மை
உணரார் உணரார் உடங்(கு) இயைந்து தம்மிற்
புணராமை கேளாம் புறன்.

உரை :—(உடைமைப் பொருளாகிய) தம்மியல்பினை உணர்ந்து தம்மை உடையனாகிய தலைவனை உணர்ந்தவர்கள்,

தமக்கு உடைமையாக எம்மை உடையவர்களாதலின், எம்மை (அன்பாற் பாராட்டுவாரன்றி) இகழமாட்டார். தம்மை உணராதவர்கள் தலைவனையும் உணராதவர்களே. அவர்கள் ஒருங்கு சேர்ந்து தம்முள் ஒற்றுமைப்பட மாட்டாராகலான், அவர்களது புறங்கூற்று மொழியை யாம் பொருளாகக் கொள்ளாம்.

குறிப்பு :—கேளாம் - உடன்பட்டுக் கொள்ளமாட்டோம்.

முதற் சூத்திரம்

அவன் அவள் அது வெனும் அவை மூவினைமையின்
தோற்றிய திதியே ஒடுங்கி மலத்(து) உளதாம்
அந்தம் ஆதி என்மனர் புலவர்.

என்பது சூத்திரம். என்னுதலிற்றோவெனின், சங்கார காரணனாயுள்ள முதலையே முதலாக வுடைத்து இவ்வுலகம் என்பதுணர்த்துதல் நுதலிற்று.

முதற்சூத்திரப் பொருள் :—அவன், அவள், அது என்று பகுக்கப்படும் உலகத் தொகுதி, (தோன்றுதல், நிலைபெறுதல், ஒடுங்குதல் ஆகிய) மூன்று தொழிலுடைமையால், அது ஒருவனாற் றோற்றுவிக்கப்பட்டு, நிலை பெறுவதேயாம். அது தான் ஒடுங்குதற்குக் காரணமான கடவுளாலேயே தோன்றுவது. ஆணவமலம் தீர்ந்து ஒடுங்காமையால், அது (ஒடுங்கியதோடு நில்லாது மீளவும்) உண்டாவது. அதற்கு (ஒடுக்கமாய் முடிவைச் செய்யும்) அந்தமாகிய கடவுளே ஆதியுமாகின்றான் எனத் தருக்க நூலறிந்தோர் கூறுவர்.

கருத்துப் பொருள் :—ஒடுங்குதற்குக் காரணமாயுள்ள முதற் கடவுளையே இவ்வுலகம் தனது தலைவனாக வுடையது.

குறிப்பு :—அவை - தொகுதி; திதி - காக்கப்படுவது. ஒடுங்கி - ஒடுக்கும் கடவுள், ஒடுங்கியினால் உளதாம் என்பது. மலத்தால் ஆணவ மலம் உண்மையால், 'மலத்து' என்பதை 'ஒடுங்கி' யென்பதனோடு இயைத்து உயிர்களின் கருமமலம் பக்குவப்படுதற்பொருட்டு ஒடுங்கி (மீண்டும்) உளதாம் என்றுரைப்பதுமுண்டு. 'மலத்து' என்பதற்கு மாயா

மலத்துள் எனப் பொருள் கொண்டு, மாயையின் ஒடுங்கி அதனின்று மீளவும் உளதாம் என்பாருமுளர்.

கருத்துக் குறிப்பு :—சங்கார காரணன் என்று மாத்திரங் கூறுது, சங்கார காரணனுயுள்ள முதலே என்றது, உலகத்தின் பல பகுதிகளைத் தனித்தனியே சங்காரஞ் செய்வார் பல கடவுளர் இருத்தலின், எல்லாவற்றையும் ஒடுக்குபவனே முதல்வன் என்பார் அவ்வாறு கூறினர்.

முதற்சூத்திர முதல் அதிகரணம்

ஈண்டு உளதாய் ஒருவன் ஒருத்தி ஒன்றென்று சுட்டப்பட்ட பிரபஞ்சம் உற்பத்தி திதி நாசமுடைத்து.

பொருள் :—(முதற்கண்) நிலைபேறுடையதாய், ஆண், பெண், இரண்டுமல்லாதது என்ற அவயவப் பகுப்புடையதாய்ச் சுட்டி யறியப்படும் உலகம், தோற்றம், நிலை, முடிவு என்பவற்றையுடையது.

குறிப்பு : -அவயவப்பகுப்பு என்பது கலப்புப் பொருளிற் சேர்ந்துள்ள தனிப்பொருட் பிரிவுகள். உலகமானது, நிலம், கடல், மலை முதலிய அவயவப் பகுப்புக்களையுடையது. மண்ணின் ஒரு துண்டு, அதன் அவயவப்பகுப்பாகாது. ஒரு பொற்கட்டியில் வெட்டிய சிறு துண்டை அதன் அவயவப்பகுப்பு என்பதில்லை. சுட்டப்படாத பொருளைப்பற்றி யாதுங் கூறமுடியாது. சுட்டியறியப்படும் பொருளே, முத்தொழிலுடையது.]

ஏது :—தோற்றமும் ஈறும் உள்ளதன்பாலே கிடத்தலின்.

பொருள் :—நிலைபெறுவதாய்க் காணப்படும் உலகின் கண்ணே, படைப்பும், முடிவும் உடன் நிகழ்தலின்.

குறிப்பு :—நிலைபெற்றிருக்கும் உலகத்திலேயே ஒருபொருள் தோன்றி யழிதல் அவை உடன் நிகழ்தலென அறிக. நிலைபெறுவதற்கு முதலில் தோற்றம் வேண்டும். ஒடுங்கினுலன்றித் தோற்றம் நிகழாமையின் ஒடுக்கமும் வேண்டும். ஆதலால், நிலைபேறு, 'ஈறு முதலுந் துணையாகி நிகழும்' என்றூர்.

உதாரணம் :

பூதாதி யீறு முதலுந் துணையாகப்
பேதாய் திதியாகும் பெற்றிமையின்—ஓதாரோ
ஒன்(று) ஒன்றிற் றேன்றி உளதாய் இறக்கண்டும்
அன்றுஎன்றும் உண்டென்ன ஆய்ந்து.

பொருள் :—பேதையே அல்லது பெண்ணே! பூதம் ஆதியாகவுள்ள உலகிற்கு, படைப்பும் முடிவும் துணைக்காரணமாகக் கொண்டே நிலைபேறு நிகழும். ஆதலின், ஒருவகைப்பொருள் ஒருகாலத்தில் ஒருங்கு தோன்றி நிலை பெற்று ஒருங்கே அழிவடையப் பார்த்திருந்தும், உலகிற்கும் எப்பொழுதாவது முற்றும் ஒடுங்கும் நிலைமை உண்டாமென ஆய்ந்தறிந்து அறிஞர் ஓதமாட்டாரா? (ஓதுவார் என அறிக.)

குறிப்பு :—இற - அழிய. பெற்றிமை - தன்மை. அன்று - முடிவுக் காலம். உலகிற்கு என்றும் அன்று உண்டென்ன ஆய்ந்து ஓதாரோ என முடிக்க.

இரண்டாம் அதிகரணம்

இனி, ஒடுங்கின சங்காரத்தினல்லது உற்பத்தியில்லை யென்றது.

பொருள்:—உலகம் ஒடுங்குவதற்குக் காரணமான சங்காரக் கடவுளினாலல்லாமல் அதற்குத் தோற்றம் இல்லை. சங்கர்ரம்-சங்காரக் கடவுள்.

ஏது :—இல்லதற்குத் தோற்றம் இன்மையின்.

பொருள் :—இல்லாதபொருள் எக்காலத்தும் தோன்றுவது இல்லையாகலின்.

இலயித்த தன்னில் இலயித்த(து)ஆ(ம்) மலத்தால்
இலயித்த வாறுளதா வேண்டும்—இலயித்த(து)
அத்திதியில் என்னில் அழியா தவை அழிவ(து)
அத்திதியும் ஆதியும்ஆம் அங்கு.

பொருள் :—எதன்கண் ஒடுங்கியதோ அதன்கணின்று ஒடுங்கியபொருள் மலம் (பரிபாகப்படுவது) காரணமாக, (மீள) உண்டாம். அது ஒடுங்கிய முறையே தோன்றவும் வேண்டும். உலகம் ஒடுங்கியது திதிக்கடவுளாகிய வாசுதேவனில் என்றுரைப்பின், (அக்கடவுள் வைகுந் தத்துவத்திற்கு மேற்பட்ட) தத்துவங்கள் அவனால் ஒடுங்காதவை. அவையும் ஒடுங்குவதுண்டு. அப்படி ஒடுங்குங்கால், அத் திதிக்கடவுளும், உலகப் படைப்பிற்குக் காரணமாய ஆதியெனப்படும் பிரமனும் அத் தத்துவங்களோடு ஒடுங்குவர்.

குறிப்பு :—இலயித்தது - ஒடுங்கியது. ஆம் - உண்டாம். அத்திதி - அப்பெற்றித்தாய திதிக்கடவுள். அழியாதவை - ஒடுங்காதவை. அழிவது - ஒடுங்குதல். ஆதி - பிரமா. அங்கு - ஒடுங்கும் அவ்விடத்தே.

ஏது :—உள்ளதற்குச் செய்வோரின்றிச் செய்வினை யின்மையின்.

பொருள் :—நிலைபெற்ற பொருளுக்குச் (செயல் நிகழ வேண்டுமாயின்) செய்வோரில்லாது செயற்றொழில் நிகழாமையால்.

குறிப்பு: மண் முதலியவற்றிற்குக் குயவனையின்றி வனைதல் முதலிய செயல் நிகழாமையறிக.

வித்துண்டா மூல(ம்) முளைத்தவா தாரகமாம்
அத்தன்ருள் நிற்றல் அவர்வினையால்—வித்தகமாம்
வேட்டுவனும் அப்புழுப்போல் வேண்டுருவைத் தான்கொடுத்துக்
கூட்டானே மண்போற் குளிர்ந்து.

உரைநடை:—மண்(போற்) குளிர்ந்து என்பதை முதற்கண் கொள்க.

உரை:—நிலங்குளிர்ந்தவிடத்து, வித்துண்டாக அதன்கணின்று முளை முளைத்ததுபோல, (மாயையும்) தனக்கு ஆதாரமாகிய இறைவனது சத்திவழி நின்று உருப்பட, அதன்கணின்று உயிர்களின் வினைக்கேற்ப உலக முதலியன தோற்றமெய்தும். குளவியா லிடப்பட்ட புழு, குளவியாதல் போல,

வேண்டுவார் வேண்டிய உருவைக் கொடுத்து இறைவன் செய்வினைப்பயனைக் கூட்டுவானல்லவா?

குறிப்பு:—தாரகம் - ஆதாரம், தாள் - சத்தி, திருவடி, முயற்சி. வித்தல் - வித்தலால் வித்பதாகிய மாயை யெனவுங் கூறுப. வித்தகமாம் உருவடையும் வேட்டுவன் - குளவி. குளவி ஒரு புழுவைத் தன் கூட்டில் வைத்துக் கொட்ட, அப் புழு, குளவி வடிவடைதல் என்பது கருத்து. கூட்டானே - கூட்டுவான். 'மண்போல்' என்பதிற 'போல்' அசை.

நோக்காது நோக்கி நொடித்தன்றே காலத்தில்
தாக்காது நின்றுவத்திற் கண்டிறைவன்—ஆக்காதே
கண்ட நனவுணர்விற் கண்ட கனவுணரக்
கண்டவனி லிற்(று) இன்ருங் கட்டு.

உரைநடை :—இறைவன் அன்றே காலத்திற்ருக்காதே நின்று ஆக்காதே கண்டும் நோக்காது நோக்கி (நொடியாது) நொடித்து இன்ருங்கட்டு உளத்திற் கண்ட நனவுணர்விற் கண்ட கனவுணரக் கண்டவனில் இற்று.

உரை:—கடவுள் அநாதியாகவே (கரணச் செயலுக் குரிய) காலதத்துவம்போலத் தொடக்குருது நின்று, கரணத்தாற் படையாது எண்ணியவாறே படைத்தும், அவ் வாறே காவாது காத்தும், அழியாது அழித்தும், கட்டுப்படா திருத்தல், நனவுள்ளபோது ஒருவன் தன் உள்ளத்தில் தான் கண்ட கனவை யெண்ணுங்கால், அதனிற்ருெடக்குரு திருத்தலைப்போலு மித்தன்மைத்து.

குறிப்பு :—அன்றே - அநாதியே, காலத்தில் - காலத்தைப்போல, கண்டு - படைத்து, நோக்கி - காத்து, நொடித்து - ஒடுக்கி, இன்ரும் - இல்லாததாகிய, கட்டு - கட்டில்லாமை, கண்டவனில் - கண்டவனைப் போல, இற்று - இத்தன்மைத்து.

மூன்ரும் அதிகரணம்

இனிச் சங்காரமே முதலென்றது.

பொருள்:—மேற்கூறிய காரணத்தால், சங்காரக் கடவுளே உலகிற்கு முதல்வன் என்றவாறு.

ஏது:—சுட்டுணர்வாகிய பிரபஞ்சம் சுட்டுணர்வின்றி நின்ற சங்காரத்தின் வழியல்லது சுதந்திரமின்றி நிற்றலான்.

பொருள்:—பொருள்களைச் சுட்டியறியும் இயல்பினவாகிய உயிர்த்தொகுதி, சுட்டியறியாது அறியுமியல்பொடு நின்ற சங்காரக் கடவுள் கட்டளைப்படி, நிற்றலன்றித் தம் வயமாய் நில்லாமையான்.

குறிப்பு:—சுட்டுணர்வு என்றமையால், பிரபஞ்சம் உயிர்த்தொகுதிகளைக் குறித்துநின்றது. சுதந்திரம் - தம் வயமுடைமை.

ஒன்றலா ஒன்ருல் உளதாக நின்றவா(று)
ஒன்றலா ஒன்றில்அவை யீருதல்—ஒன்றலா
ஈறே முதல்அதனின் ஈறலா ஒன்றுபல
வாறே தொழும்பாகும் அங்கு.

பொருள்:—(உயிர் உலகம் என்பவற்றுள்) ஒன்றுமாகாத ஒரு பரம்பொருளால், உயிர்கள் உடம்பொடு தோன்றி நின்று, அந்த ஒன்றலா ஒரு பொருளாலேயே ஒடுங்குதலால், ஒன்றுமல்லாத முடிவான பொருளே வினைமுதல் ஆகும். அதனைப் போல அழிவில்லாததாகிய உயிர் தானும் பலவாற்றனும், வீட்டிலேயும் அப் பரம்பொருளுக்கு அடிமையாவதே.

குறிப்பு:—ஒன்றலாவொன்று, ஒன்றலாவீறு என்பன இறைவனை யுணர்த்தும். அவை - உயிர்த்தொகுதி. அங்கு - அங்கும்; முத்தியிலும்.

இரண்டாஞ் சூத்திரம்

அவையே தானே ஆய்இரு வினையிற்
போக்கு வரவு புரிய ஆணையின்
நீக்க மின்றி நிற்கும் அன்றே.

கருத்து:—புனருற்பவம் வருமாறுணர்த்துதல் நுதலிற்று.

பொருள்:—இறைவன் கலப்பினால் உயிர்களேயாயும், தன்னியல்பால் தானேயாயும், உயிர்களுடன் நின்று அறி

வித்தலால், உடனாயும் நின்று, கட்டளை யென்ற தனது ஞானசத்தியால் இருவினைப் பயனுக்கேற்ப இறத்தல் பிறத்தல்களை உயிர்கள் மேற்கொள்ளும்படி, அந்த ஞான சத்தியோடு பிரிவில்லாது நிற்பன்.

கருத்து:—மறுபிறவி வரும்வகை யுணர்த்துதல் கருதப் பட்டது.

குறிப்பு: அவை - உயிர்கள், அவையேயாய்த் தானேயாய் அவையே தானேயாய் எனப் பிரித்திசைக்க. இருவினை - நல்வினை தீவினை என்பன. போக்கு - இறத்தல். வரவு - பிறத்தல். புரிதல் - மேற் கொள்ளுதல்.

கருத்துக் குறிப்பு:—மறுபிறவியெனவே, அதற்கு முற்பட்ட இறப்புங் கூறப்பட்டதாம்: இறப்புப் பிறப்பெனவே, இரு வினைப்பயனுகர்ச்சி யனைத்துங் கூறப்பட்டவாறு காண்க.

முதல் அதிகரணம்

ஈண்டு இவ்வான்மாக்கள் பலவும் முதல்வன்றானேயாய் நிற்கு மென்பது.

இவ்வதிகரணத்துள் உயிர்கள் எல்லாவற்றோடும் அத்து விதமாய் முதல்வன் கலந்து நிற்பன் என்பது கூறப்பட்டது.

ஏது:—அத்துவிதமென்ற சொல்லானே ஏகமென்னில் ஏகமென்று சுட்டுவ துண்மையின், அத்துவித மென்ற சொல்லே அந்நிய நாத்தியை யுணர்த்துமாயிட்டு.

பொருள்:—இறைவன் உலகத்தோடு அத்துவிதமாய் இருக்கிறான் என்று சொன்ன வளவிலேயே அச் சொல் இரண்டில்லாமை யென்று பொருள்பட்டு ஒருமையை யுணர்த்துமென்றால், ஒருமையைச் சுட்டி அறிவதாகிய பொருள் வேறாக இருத்தலால், அத்துவிதமென்ற சொல் (ஏகத்துவத்தை யுணர்த்தாமல்) இரண்டு பொருள்களின் அந்நியம் இன்மையை உணர்த்துவதாயிற்று.

குறிப்பு:—என்னும் பெயர்மேல் வந்த அகரம் அன்மையை யுணர்த்துமாதலின், அத்துவிதம், இரண்டல்லாத என்றே பொருள்படும். நாத்தி - நாஸ்த்தி, இன்மை. அந்நியம் - வேறுபாடு. ஆயிட்டு - ஆகலான்.

கட்டும் உறுப்புங் கரணமுங் கொண்டுள்ளம்
இட்டதொரு பேரழைக்க என்என்றுங்(கு)—ஒட்டி
அவன்உளம்ஆ கில்லான் உளம்அவனு மாட்டா(து)
அவன்உளமாய் அல்லனுமாய் அங்கு.

பொருள்:—(நரம்பு முதலியவற்ருற் கட்டிய) உடம்பும் ஐம்பொறி முதலிய கருவிகளும் உடைய உயிர்க்கு இட்ட பெயரால் அழைத்தவுடன், அது ஏன் என்று பதில் விடுக்கும். அதற்குக் காரணம் உயிர் உடம்பிலே பேதமில்லாமற் கலந்திருப்பதே. அதுபோல, இறைவன் உயிர்களோடு வேற்றுமை தோன்ருதவாறு கலந்திருப்பன். ஆயினும், அவன் உயிராகமாட்டான்; உயிர்களும் அவனுக மாட்டா. ஆயினும், அவன் உயிராகியும், உயிரின் வேருகியும் இருப்பன். உயிர் அப்படி நில்லாது.

குறிப்பு:—உறுப்பு, உடம்பிற்கு ஆகுபெயர். உள்ளம் - உயிர். ஆங்கு ஒட்டி - உயிரிற் பொருந்தியவன். 'ஒட்டி' பெயராகவுங் கொள்ளப்படும்: வினையெச்சமாகவுங் கொள்ளப்படும். அவன் - இறைவன்.

ஒன்(று) என்ற தொன்றேகாண் ஒன்றே பதிபசுவாம்
ஒன்(று) என்ற நீபாசத் தோடுளைகாண்—ஒன்றின்ருல்
அக்கரங்க ளின்ரும் அகரவுயி ரின்றேல்
இக்கிரமத் தென்னு மிருக்கு.

உரை;—உபநிடத முதலியவற்றுள் ஒன்று என்றது ஒரு பொருளைக் குறித்தேயாம். அதன் கருத்து, கடவுள் ஒருவரே யென்பது. இதனை யறியாமல் ஒன்றென்று சொல்லுகின்ற நீ பாசத்தோடிருக்கின்ருய். ஆதலால் நீ பதியாகமாட்டாய். கடவுளையன்றி ஒன்றில்லை யென்றது, அகரவுயிரின் தொடர்பில்லாமல், பிற எழுத்துக்கள் தோன்றுதல் இல்லை யென்ருற் போல, இந்த முறைபற்றியே ஞான நூலானது, பிரமமில்லை யாயின், ஒரு பொருளும் இல்லை யென்றது.

குறிப்பு :—அகரவுயி ரென்பதற்கு நாதமென்பாரு முளர்.

பண்ணையும் ஓசையும் போலப் பழமதுவும்
எண்ணுஞ் சுவையும்போ லெங்குமாம்—அண்ணல்தாள்
அத்துவித மாதல் அருமறைக ளொன்றென்னு(து)
அத்துவித மென்றறையும் ஆங்கு.

உரை:—பண்ணில் ஓசை யடங்குவது போலவும், பழத்திலே, சிறப்பாகக் கருதப்படுஞ் சுவை அடங்குவது போலவும் உலகெங்கும் வியாபகமாயிருக்கிற இறைவனது திருவருள் உயிர்களில் இரண்டறக் கலந்து நிற்பதால், அரிய மறைகள் ஒன்றென்று சொல்லாது அத்துவிதம் என்றியம்புவன.

குறிப்பு:—குணகுணி சம்பந்தம் போய் அத்துவிதக் கலப்பைக் கூறுவதால், அண்ணலுக்குஞ் சத்திக்கு முண்டான சம்பந்தங் கூறுமிவ்வெண்பா என்பாருமுளர். உடலுயிக் கலந்தமைக்கே அவை உவமையாயின.

அரக்கொடு சேர்த்தி யணைத்தஅக் கற்போல்
உருக்கி யுடங்கியைந்து நின்று—பிரிப்பின்றித்
தானே யுலகாம் தமியேன் உளம்புகுதல்
யானே உலகென்பன் இன்று.

உரை:—சிவப்பு மெழுகோடு சேர்த்து அணைக்கப்பட்ட கற்பொடியானது உருகி யொருங்கு சேர்ந்து நின்றாற்போல, இறைவன் உயிர்களினின்றும் பிரிவிலனாக நிற்றலால், அவனே உலகமாய்த் தோற்றுவன். இம் முத்திக் காலத்தே, இறைவன் எனது அறிவின்கண் மன்னியபடியால், அவன் உலகமாதல் போல, அவனொடு கலந்த நானும் உலகமாயினேன் என்றியம்புவேன்.

குறிப்பு:—சிவச்சார்பு பற்றி, யானே உலகெலாம் ஆயினேன் என வாமதேவ முனிவர் முதலியோர் கூறினரென வுணர்க என்றது.

இரண்டாம் அதிகரணம்

இனி, இவ்வான்மாக்களுக்கு இருவினை முதல்வன் ஆணையின் வருமென்றது.

பொருள்:—மேற்கூறுமிடத்து, இறைவன் கலந்து நிற்கப் பெறும் உயிர்களுக்குப் பல பிறவிகளில் ஈட்டப்பட்ட புண்ணிய

பாவங்கள், இறைவனது கட்டளைப்படியே உயிர்களின் நுகர்ச்சிக் குரியனவாம்.

ஏது:—ஒரு நகரியைக் காப்பான் பாடிகாவலிட்டாங்கு அவை அவனதாக்கினை யாகலான்.

பொருள்:—ஓர் ஊரைக் காவல் செய்யும் அரசன் அவனது அதிகாரத்தை ஊர்காப்பாள ரென்னும் அதிகாரிகளிடம் வைத்து அவர் வாயிலாக அதிகாரம் நடாத்துதல் போல, முதல்வனும் தனது கட்டளையை இருவினையிலே வைத்து அவற்றாற் பயன் நுகர்வித்தல் நிகழும் என அறிக.

உள்ளதே தோற்ற உயிரணையும் அவ்வுடலின்
உள்ளதா முற்செய்வினை யுள்ளடைவே—வள்ளலவன்
செய்பவர் செய்திப் பயன்விளைக்குஞ் செய்யேபோற்
செய்வன் செயலணையா சென்று.

உரை:—சஞ்சிதமாய் உள்ளதாகிய வினையே உடம்பைத் தோற்றுவிக்க, அந்த உடம்பில் உயிர் பொருந்தி வினைப் பயனை யனுபவிக்கும். முன்வினைப் பயனை அனுபவிக்கு முறையிலேயே வரும் பிறவிக்குரிய வினை ஏற்படும். கருணையாள னாகிய கடவுள் முயற்சியின் பயனை விளைக்கும் நிலம்போல வினைசெய்வார்க்கு அவர் வினைப்பயனைக் கூட்டுவிப்பன். வினைப்பயன் தானே சென்று செய்தவனை யடையாது.

குறிப்பு:—உள்ளது - சஞ்சிதம். தோற்றமென்பதன் முன், உடம்பு என்பது தொக்குநின்றது. அடைவே - மேலைக்குரிய வினை.

அவ்வினையைச் செய்வதனில் அவ்வினைஞர் தாஞ்சென்றங்(கு)
அவ்வினையைக் காந்த பசாசம்போல் — அவ்வினையைப்
பேராமல் ஊட்டும் பிரானின் நுகராரேல்
ஆர்தாம் அறிந்தணைப்பா ராங்கு.

உரைநடை:—காந்தபசாசம் போல் அவ் வினையைப் பேராமல் ஊட்டும் பிரானின் அவ் வினைஞர் அவ் வினையைச் செய்வ

தனில் அவ்வினையைச் சென்று நுகராரேல், ஆர்தாம் ஆங்கு அறிந்து அணைப்பார்.

உரை: காந்தத்திற்கு நேராக இரும்பைப் பிடித்துக் காந்தத்தை அது பற்றச்செய்தல்போல, உயிர்களுக்குத் தவருமல் வினைப்பயன்களை நுகர்விக்கும் முதல்வனுல், வினை செய்வோர் வினைசெய்தற்குரிய உடம்பினைப் போய்ப் பொருந்தி வினைப்பயனை நுகர்வா ரல்லராயின், மலத்திற் கிடக்குங் கட்டுக்காலத்தில், வேறே எவர் வினைப்பயன்களை அறிந்து உயிர்களுக்குச் சேர்ப்பிப்பார்?

குறிப்பு:—அவ்வினை - முற்செய்யுளிற் பேசப்பட்ட வினை. ஆங்கு - கட்டுற்றிருக்குங் காலத்தே, உயிர்தாமே வினைப்பயன்களை யறியா; வினை சடம் ஆதலான், முதல்வனே வினைப்பயனை ஊட்டுவிப்பன் என்றவாறு.

நெல்லிற் குமியு நிகழ்செம்பி னிற்களிம்புஞ்
சொல்லிற் புதிதன்று தொன்மையே—வல்லி
மலகன்ம மன்றுளவாம் வள்ளலாற் பொன்வாள்
அலர்சோகஞ் செய்கமலத் தாம்.

உரைநடை:—பொன்வாள் செய் வள்ளலாம் கமலத்து அலர் சோகம் ஆம்.

உரை:—பொன்னொளியைச் செய்கின்ற சூரியனுல், தாமரையினிடத்தே விரிதலும் குவிதலு முண்டாம். (அது போல, முதல்வனுல் மும்மலங்கள் தத்தஞ் செயல்களைச் செய்வன.) நெல்லினுக்கு உமியும் செம்பினுக் களிம்பும், ஆராயுமிடத்து அவை இடையே புதிதாய்ச் சேர்ந்தன வல்ல. பழமையாக அவற்றுடன் உள்ளனவே. அதுபோல மாயையும், ஆணவமும், வினையும் அநாதியே உள்ளன.

குறிப்பு:—வல்லி - கொடி, சத்தி, மாயை. மலம் - ஆணவம். அன்று - அநாதியே; பொன்வாள் செய்வள்ளல் - சூரியன். சோகம் - வாட்டம், குவிதல்.

மூன்றும் அதிகரணம்

இனி, இவ்வான்மாக்கள் மாறிப் பிறந்து வருமென்பது

மேற் கூறப்படுவதாவது:—இருவினைப் பயனை நுகர்தற்குரிய உயிர்கள் இறந்தபின் மீட்டும் பிறந்து, இவ்வாறே பிறப்பு இறப்புடையனவாம்.

ஏது:—தோற்றமும் ஈறும் உள்ளதற்கல்லது உளவாதல் இன்மையான்.

பொருள்:—பிறத்தலும் இறத்தலும் தொடர்ச்சியாய் உள்ள பொருட்கல்லது பிறபொருட்கில்லாமையால்.

கண்ட நனவைக் கனவுணர்வில் தான்மறந்து
விண்படர்ந் தத்தூடு வினையினுல்—கண்செவிகெட்(டு)
உள்ளதே தோற்ற உளம்அணுவாய்ச் சென்றுமனந்
தள்ள விழுங்கருவில் தான்.

உரைநடை—கண்செவி கெட்டு உள்ளதே தோற்ற உளம் அத்தூடு விண்படர்ந்து மனந்தள்ளக் கண்ட நனவைக் கனவுணர்வில் தான் மறந்து அணுவாய்ச் சென்று கருவில் விழுந்தான்.

உரை:—கண்செவி முதலியன வுடைய பருவுடம்பு அழிய முன் உள்ளதாகிய நுண்ணுடம்பு, பூதசார வுடம்பாகப் பரிணமிக்க, உயிர் அதனேடு விண், நிரய முதலிய இடங்கட்குச் சென்று, வினைப்பயன்களை நுகர்ந்து, பின்னர் நனவினைக் கனவில் மறந்தாற்போல அறிவு மறந்து, எடுத்த உடம்புகளை விட்டு, நுண்ணுடம்போடு மாத்திரஞ் சென்று, மன முன் பற்றிய இடத்தே தள்ளக் கருவிலே போய்ப் பதியும்.

குறிப்பு:—கண்செவி - உடம்பு, உள்ளதே - படைப்புக் காலந் தொட்டு முடிவு காலம்வரை உள்ள உடம்பு, தோற்ற - செல்லும் இடத்திற்குரிய உடம்பாய்த் தோன்ற. உளம் - உயிர்; அணுவாய் - சூக்கும உடம்புடன் மாத்திரம், முன் இறக்குங் காலத்தே மனம் எங்கே பற்றியதோ, அங்கே வந்து பிறத்தலின் 'மனந்தள்ள' என்றார்.

அரவுதன் தோலுரிவும் அக்கனவும் வேறு
பரகாயம் போய்வருமப் பண்பும்—பரவிற்

குடாகாய ஆகாயக் கூத்தாட்டா மென்ப(து)
அடாதுள்ளம் போமா றது.

உரை:—பாம்பு தோலுரித்துப் புதிய தோல் போர்த்தலும், நனவு நீங்கிக் கனவுக்குரிய உடம்பிற் சேர்தலும், வேறுடலில் யோகிகள் புகுந்து மீளுதலும் ஆகிய உவமைகளே, (உயிர் தூலவுடம்பை விட்டுப் போதலுக்குப்) பெரிதும் வழங்குதலின், குடத்திலுள்ள ஆகாயம், வெளியாகாயத்தோடு கலப்பது போன்றதொரு கூத்தாட்டம் அது என்பது பொருந்தாது. அவ்வுவமை, சூக்கும உடம்பு நீங்கிப் போகும் விதத்திற்கே உரியதாகும்.

குறிப்பு:—பரவின் - மிக்கு வழங்குதலின், அடாது - பொருந்தாது. உள்ளம் - சூக்குமவுடம்பு. போமாறு - போம் ஆற்றிற்கு. அது - அவ்வுவமை.

நான்காம் அதிகரணம்

இனி, நீக்கமின்றி நிற்குமன்றே யென்றது.

உரை: — முதல்வன் தனது ஞானசத்தியோடு பிரிவில்லாது நிற்பன்.

குறிப்பு:—சமவாயம் என்னும் வடமொழிச் சொற்றொடர், 'நீக்கமின்றி நிற்றல்' எனப் பொருள்படும். சமவேதம், தாதான்மியம் என்பன அக்கருத்தே உடையன. ஒரு பொருளே குணகுணியாக அல்லது அவயவமுடையதும் அவயவமுமாகப் பேதப்பட்டு நிற்பது.

ஏது:—அவன் ஏகாநேக மிரண்டு மின்றிச் சருவ வியாபியாய் நிற்றலான்.

உரை:—ஒன்று, வேறு என்ற இருதன்மையுமில்லாமல் பொதுவாய் எங்கணும் வியாபியாய் நிற்றலால்.

குறிப்பு:—ஏகம் - ஒன்று, அநேகம் - வேறு.

எங்குமுளன் என்றவவை யொன்றன்று இரண்டேன்னில்
எங்கு முளன் அன்(று) எவற்றெவனும்—அங்கண்
அவையவன் அன்றில்லைப் பொன்னொளிபோல் ஈசன்
அவையுடைமை யாளாந்தாம் அங்கு.

உரை:—எங்கும் இருக்கிருன் என்ற பிரமாணத்தாலே இறைவன் (ஓரிடத்தில் மாத்திரமுள்ள) ஒரு பொருள் அல்லன். இருபொருளாம் இறைவன் உள்ளான் என்னில், (எவற்றினுங் கலந்து) எங்கும் உள்ளான் என்பது இல்லையாகும். எவ்விடங்களினுமுள்ள எப்பொருளும் அவ்விடத்து அவைகளெல்லாம் இறைவனையன்றித் தோன்றி நிலைபெரு. ஆதலால் முதல்வன் கதிரவனும் ஒளியும் போலச் சிவமுஞ் சத்தியுமாய் வியாபித்திருப்பன். பொருள்களெல்லாம் அவனதுடைமை; உயிராகிய நாம் அவன்மர்ட்டு அடிமையாவோம்.

குறிப்பு:—என்ற அளவை, என்றளவை யெனத் தொக்கு நின்றது. அளவை - பிரமாணத்தாலறிந்த உண்மை. எவற்று - எவ்விடங்களிலும். எவனும் - எப்பொருளும், ஈசன் பொன்னொளிபோல் உளன் என்பது கருத்து. பொன் - சூரியன். பொன்னு மொளியும்போற் சிவமுஞ் சத்தியுமாயுளன். அவை - பொருள்களாகிய பாசங்கள். நாம் - உயிராகிய நாம். ஆள் - அடிமை. அங்கு - அவன்மாட்டு.

மூன்றும் சூத்திரம்

உளது இலது என்றலின் எனது உடல் என்றலின்
ஐம்புலன் ஒடுக்கம் அறிதலிற் கண்படில்
உண்டிவினை யின்மையின் உணர்த்த உணர்தலின்
மாயா இயந்திர தனுவினுள் ஆன்மா.

கருத்து:—ஆன்மப் பிரகாசம் உணர்த்துதல் நுதலிற்று.

உரைநடை:—உளது என்றதை ஆன்மா என்பதனோடு முடிக்க.

உரை:—நான் இதுவல்ல, அதுவல்ல என்று கூறுவதொன்று உண்டாகலானும், எனது உடல் என உடலைக் கூறுவதொன்று உண்டாகலானும் ஐம்பொறியினையும் அவற்றின் நீக்கத்தையும் அறியும் அறிவுடையதொன்று இருத்தலானும், துயின்றபோது, உணவு, செயல், இல்லாததொன்று இருத்தலானும், ஒன்றை உணரச் செய்யுங்காலை,

உணர்வதொன்றிருத்தலானும், மாயையாலாகிய கருவியாகிய உடம்பினுள், உயிரென்பது உடம்பின் வேருயுள்ளது.

கருத்து:—உயிருண்மையும் விளக்கமும் உணர்த்துதல் கருதியது.

முதல் அதிகரணம்

ஈண்டு, இலதென்றலின் ஆன்மா உளதென்றது.

உரை :—இதன்கண், இல்லையென்று சொல்லுதலால், அங்ஙனம் சொல்லுவதாகிய உயிர் உண்டென்றது.

ஏது :—எவற்றினையும் அன்றன்றென விட்டு ஆன்மா இலதென்றி நிற்பது உளதாகலின் அதுவே அவ்வான்மாவாம் என்றது.

உரை :—உடல், பொறி, மனம் முதலிய எல்லாவற்றையும், இஃது ஆன்மாவல்ல என்று கழித்து, ஒன்றும் ஆன்மாவல்லாமையால், ஆன்மாவென்பது சூனியமென்று சொல்லிக் கொண்டு நிற்பதாகிய அறிவு இருத்தலின், அவ்வறிவே ஆன்மாவாமென்றுணர்க.

அன்றன் றெனநின் றனைத்தும்விட்(டு) அஞ்செழுத்தாய்
நின்றுென் றுளதுவே நீஅனைத்தும் — நின்(று) இன்று
தர்ப்பணம்போற் காட்டலாற் சார்மாயை நீயல்லை
தற்பரமு மல்லை தனி.

உரை :—உடல், பொறி முதலிய கருவிகளனைத்தையும் இது நான் அன்று எனக் கழித்தவிடத்தே நுண்ணிய ஐந்தெழுத்து வடிவாய் அறியுமறிவொன்று நிலைபெற்றுளது. அதுவே நீ யென அறிக. (மலத்தாற் பிணிப்புண்ட) இந்நிலையிலே, உன்னோடு சார்ந்து நின்று எல்லாப் பொருளையும் கண்ணாடிபோலக் காட்டுவதாகிய மாயை நீயல்ல. (அறிவில்லாத மாயை நீயாகமாட்டாய்) மாயையாலறியும் அறிவிற்கு அப்பாற்பட்ட மேலான சிவமும் நீ ஆகமாட்டாய். நீ மாயைக்கும் சிவத்துக்கும் வேருகிய தனிப்பொருள்.

குறிப்பு : ஐந்தெழுத்தென்பது - நுண்ணிய மந்திர வடிவமேயன்றி, உயிராகாது. மாயை, பொருளை விளக்குவதன்றித் தான் ஒன்றையும்

அறியாது. இறைவன் மாயையாற் பொருள்களை அறிவானல்லன். ஆதலால், மாயையும் சிவமும் உயிராகமாட்டா வென்றவாறு.

இரண்டாம் அதிகரணம்

இனி, எனதுடல் என்றலின் ஆன்மா உளது என்றது.

உரை :—உடம்பைத் தானாகக் கூறாது, என்னுடையது என்று அதனை உடைமைப் பொருளாகக் கூறும் வழக்கமிருத்தலின், அங்ஙனம் கூறும் உயிர் ஒன்று உளது என்றவாறு.

ஏது :—என் பதி, என் மனை என்றாற்போல, என் கை, என் கால் என நிற்பதுவதாகலின், அதுவே அவ்வான்மாவாம் என்றது.

உரை :—எனது ஊர், எனது வீடு என்று சொல்வதுபோல உடம்பின் பகுதிகளாகிய கை, கால் முதலியவற்றையும் என்னுடையனவெனக் கருதி நிற்பதாகிய ஒன்றிருத்தலின், அதுவே அவ்வுயிர் என்றது.

குறிப்பு :—தலை மாத்திரமாய் நிற்கும் இராகுவை, இராகுவினது தலையென்றபோது ஒற்றுமைப் பொருள் கொள்ளுவதுபோல, எனதுயிரென்ற இடத்துங்கொள்க. உடம்பு முதலியவற்றோடு கூடிநின்ற காலை, உடம்பையும் உயிரையும் பகுத்துத் தன்னுடையன வென்று கூறுதல் உடம்படுத்த உயிர்க்கியல்பே. உடம்படாவிடின், உயிர் தன்னை அவ்வாறு கூற முடியாது.

என(து)என்ற மாட்டின் எனதலா தென்ற(து)
உனதலா துன்கைகால் யாக்கை—என(து) என்றும்
என்னறிவ தென்றும் உரைத்துநீ நிற்றிகாண்
உன்னில் அவைவேறாம் உணர்.

உரை :—எனது என்று சொல்லுகின்ற இயற்கைபற்றி உன்னுடைய உடம்பின் பகுதிபோலல்லாத பதி, மனை முதலியவற்றை என் பகுதியல்லவென்று கூறாது (உயிரென மயங்கினாய்) அதுபோல, கை, கால், உடம்பு, பாச அறிவு முதலியவற்றை, என்னுடையனவென்று கூறிக்கொண்டு நீ நிற்கின்றாய். ஆய்ந்து பார்க்கின், அவையும் உனக்கு வேறானவையென்றுணர்க.

மூன்றும் அதிகரணம்

இனி, ஐம்புலன் அறிதலின் ஆன்மா உளதென்றது.

உரை :—(ஒவ்வொரு பொறிபோல ஒவ்வொன்றை யுணராது, பொறி வாயிலாக) ஐம்புலன்களையும் அறிவ தொன்றிருத்தலின், அதுவே உயிர் என்பது.

ஏது:—ஐம்புலனுகிய சத்தப் பரிச ரூப ரச கந்தங்களை இந்திரியங்கள் ஒன்றறிந்த தொன்றறியாமையின் இவ்வைந்தினுலும் ஐம்பயனும் அறிவதுளதாகலின், அதுவே அவ்வான்மாவாம் என்றது.

உரை :—ஐப்பொறிகளாலறியப்படுவனவாகிய ஓசை, ஊறு, ஒளி, சுவை, நாற்றமென்ற ஐம்பூத நுட்பங்களுள் ஒரு பொறி யறிந்ததைப் பிறிதொரு பொறி அறியமாட்டாமையின், ஐம்பொறியையுங் கருவியாகக்கொண்டு ஐந்து பயனையும் அறியவல்லது ஒன்றிருத்தலின், அதுவே மேற்கூறிய உயிர் என்பதாம்.

குறிப்பு :—காது கேட்பதைக் கண் கேளாது. கண் பார்ப்பதைக் காது பாராது. உயிரானது காதாற் கேட்டும், கண்ணுற்கண்டும் பயன் பெறுகின்றது என்பது கருத்து.

ஒன்றறிந்த தொன்றறியா தாகி யுடல்மன்னி
அன்றும் புலனுயவ் வஞ்செழுத்தை—யொன்றறிதல்
உள்ளதே யாகில் அதுநீ தனித்தனிகண்(டு)
உள்ளல்அவை ஒன்றல்லை யோர்.

உரை :—உடலிலே நிலைபெற்று, தம்முள் ஒன்று அறிவதை மற்ருென்றறியாத நிலையை யுடையனவாய்த் தம்முள் மாறுபட்ட, ஒலி முதலிய ஐம்புலன்களை ஐந்தெழுத்தாற் செலுத்தப்பட்டு ஆராய்ந்தறிகின்ற ஐம்பொறிகளை, இப்பொறி காணும், இப்பொறி கேட்குமென அறிவதொன்று இருப் பதனுல் அது நீயென அறிக. (ஐம்பொறிகளாகிய) அவைகள் தனித்தனி தமக்குரியவற்றை யறிவதன்றி அறிகின்றேனென் றுணரமாட்டா. ஆகலின், நீ அவற்றினேடொன்ருகமாட்டாய், (நீ அவற்றின் வேறே) என்ருராய்ந்தறிக.

குறிப்பு :—பொறிகள் தம்மை அறியமாட்டா. உயிர் பொறிகளை யறியும். அன்றும் - மாறுபடும். அஞ்செழுத்தாற் செலுத்தப்பட்ட பொறிகள், அஞ்செழுத் தெனப்பட்டன.

நான்காம் அதிகரணம்

இனி, ஒடுக்கம் அறிதலின் ஆன்மா உளதென்றது.

உரை :—ஐம்புலனும் ஒடுங்கிய விடத்துள்ள கனவில் நிகழ்ந்தவற்றை அறிவதொன் றிருத்தலின், அஃதாகிய ஆன்மா உண்டென்பது.

குறிப்பு :—ஒடுங்கிய இடத்து நிகழ்ந்ததற்கு 'ஒடுக்கம்' என்பது ஆகு பெயர்.

ஏது :—நனவின்கட் கனவு கண்டாமென்றும் கனவு கண்டிலமென்றும் நிற்ப துளதாகலின் அதுவே அவ்வான்மாவாம் என்றது.

உரை :—விழித்திருக்கும்போது, தூங்கும்போது கனவு கண்டாற் கண்டேனென்றும், காணாவிடத்து அதனைக் காண வில்லை யென்றும் அறிந்து நிற்பது ஒன்றிருத்தலின், அதுவே அவ்வுயிரா மென்றது.

குறிப்பு :—கனவில் அறிவது நுண்ணுடம்பாயினும், கனவொழிந்த காலை, நனவையுங் கனவையும் அறிவது உயிரென ஓர்க என்றவாறு.

அவ்வுடலின் நின்(று) உயிர்ப்ப ஐம்பொறிகள் தாம்கிடப்பச்
செவ்வியின் அவ்வுடலிற் சென்றடங்கி—அவ்வுடலின்
வேறொன்று கொண்டு விளையாடி மீண்டதனை
மாறனுடல் நீஅல்லை மற்று.

உரை :—பருவுடம்பிலே நின்று இயங்குதலையுடைய அந்த ஐம்பொறிகள் ஒடுங்கிக்கிடப்ப, அவ்வுடலின் அடங்கி வருத்த மில்லாது செவ்வையாக வேறுபோய், அத் தூலவுடம்பினைப் போன்ற மற்றோருடம்பெடுத்து, வேறுவகையாகக் கண்டுங் கேட்டும் உண்டும் உற்றும் உயிர்த்தும் விளையாடி, கனவு முடிந்தவுடன் மீளப் பருவுடம்பினை மாறி மேற்செல்லுதலால், கனவிற்குரிய சூக்கும உடம்பு நீ ஆகமாட்டாய்.

குறிப்பு : அவ்வுடல் - பருவுடம்பு. உயிர்ப்பு - இயக்கம். அ, ஐம்பொறி - தூல வுடம்பிற்குரிய பொறிகள். செவ்விதின் - வருத்தமின்றி. 'சென்றடங்கி' யென்பதை 'அடங்கிச் சென்று' என மாறுக. மாறல் - மாறலால், மாறி மேற் செல்லுதலால். உடல் - சூக்கும உடம்பு.

ஐந்தாம் அதிகரணம்

இனிக் கண்படில் உண்டி வினையின்மையின் ஆன்மா உளதென்றது.

உரை :—மேல், துயின்றால், பிராணவாயு சரித்தும், உணவு, தொழில் முதலியன இல்லாதிருத்தலின், (பிராணனுக்கு வேறாக) உயிர் உண்டென்பது.

ஏது :—ஒடுங்கின இடத்து, இன்பதுன்பஞ் சீவனம் பிரகிருதிக் கின்மையின், ஒடுங்காத விடத்து இன்ப துன்பஞ் சீவியா நிற்பதுளதாகலின் அதுவே அவ்வான்மாவாம் என்றது.

உரை :—துயிலுமிடத்தே, புலன்களாலேற்படும் இன்ப துன்பமும் அனுபவமும் இயக்கமும் உடம்பின்கண்ணே இல்லாமையாலும், துயிலாத காலத்தே, அவை நிகழ்தலாலே, அந்நிகழ்ச்சிக் கேதுவாய தெதுவோ அதுவே அவ்வுயிரென்றது.

குறிப்பு :—உண்டி - பொறிவாயிலாக, இன்ப துன்ப அனுபவம். சீவியா நிற்பது - இயங்குவது. பிரகிருதி - உடம்பு. பிரகிருதிக்கு - பிரகிருதியின்கண்; உருபு மயக்கம். பிரகிருதி யென்பது இயற்கை யெனப் பொருள்படும். அது பிராணவாயுவைக் குறிக்குமென்பாரு முளர். துயிலிலும் விழிப்பிலும் ஒரு தன்மைத்தாயது, பிரகிருதியாகிய உடம்பு என அறிக.

கண்டறியும் இவ்வுடலே காட்டொடுங்கக் காணுதே
உண்டிவினை யின்றி யுயிர்த்தலாற்—கண்டறியும்
உள்ளம்வே றுண்டா யொடுங்கா(து) உடல்நண்ணில்
உள்ளதாம் உண்டிவினை யூன்.

உரை :—பொருள்களைப் பார்த்தறிதற்கு நிலைக்களமாகிய இவ்வுடலின் கண்ணே, பொருள்களைக் காட்டுவனவாகிய கருவிகள் தொழிற்படாது ஒடுங்கியபோது, உடம்பிலே

நுகர்ச்சியுஞ் செயலும் இல்லாதிருக்கவும், பிராணவாயு இயங்குதலால், (கருவிகளாற்) பார்த்தறியும் உயிர் பிராணவாயுவுக்கு வேறாக உண்டு. (அவ்வுயிர்) ஒடுங்காமல் உடலிற் பொருந்தியிருப்பின், ஊனுலாய உடம்பு, நுகர்ச்சியும் இயக்கமும் உடையதாம். இதனை ஆய்ந்தறிக.

குறிப்பு :— காட்டு - கருவி, 'காணாதே ஒடுங்க' என மாறுக. காணாதே - தொழிற்படாமல். உள்ளம் - உயிர், 'உண்டாய்' என்பதிலுள்ள 'ஆய்' என்பதை இறுதியிற் கொள்க. ஊன் - உடம்பு. 'ஊன் உண்டிவினை உள்ளதாம்' என மாறுக.

ஆறும் அதிகரணம்

இனி, உணர்த்த உணர்தலின், ஆன்மா உளது என்றது.

உரை :—(கடவுள் கருவிகள் வாயிலாகப் பொருள்களை) அறிவிக்க அறிதலின், (கடவுளுக்கு வேறாக) உயிர் உண்டென்றது.

ஏது :—அவன் அறிந்தாங்கு அறிவன் என்று அறிவிக்க அறிந்து உபதேசியாய் நிற்பதுளதாகலின், அதுவே அவ்வான்மாவாம் என்றது.

உரை :—முதல்வன் மறந்து மறந்து அறிதலில்லாமல் அறிந்த முறையே அறியுமியல்பினன் என்று அருள் நூல்கள் அறிவிக்க, அறிந்து ஆசாரியன் அறிவுறுத்தும் உபதேச மொழியைப் பெற்றுடையதாய நிற்பது ஒன்று இருத்தலின், அதுவே அவ்வுயிர் என்றது.

குறிப்பு :—உபதேசி - உபதேச முடையவன்.

அறிந்தும் அறிவதே யாயும் அறியா(து)
அறிந்ததையும் விட்டங் கடங்கி — அறிந்த(து)
எதுஅறிவும் அன்றாகும் மெய்கண்டான் ஒன்றின்
அதுஅதுதான் என்னும் அகம்.

உரை :—(பொருள்களை ஐம்பொறிகளாலும் ஒருங்கே அறியாது) ஒன்றையே ஒரு காலத்து அறிந்தும், அறியப்

படுவதாயும், முன் அறிந்ததனை மறந்து அறியாதும், அறிந்ததை இடைவிடாமல் அறியுமாற்றலின்றி, விட்டு விட்டு ஐந்து அவத்தைப்பட்டு அடங்கி, மீள அறிந்தும் வருவதெது? அது பேரறிவுமாகாது. உண்மையுணர்ந்தான் மனவொருமைப் பட்டு ஆராயின், எப்பொருளை அறிகின்றதோ அதன் வயப் பட்டு நின்று அதனைத் தானெனக் கருதுந் தன்மையுடையது உயிரென விளங்கும்.

குறிப்பு :—அங்கு - உணர்த்துந் தானமாகிய புருவ நடுவில். அகம்-உயிர். மெய்கண்டான் என்ற தனது பெயரைக் குறிப்பாக அமைத்தனர் போலும்! ஒவ்வொன்றுபறிதல், புதிதாக அறிதல், அறிந்ததை அறியாது விடுதல், இடைப்பட்டறிதல், அவத்தைப் பட்டறிதல் என்பன. சார்ந்ததன் வண்ணமாதல், உயிரினியல்பு இவைகளில்லாத முதல்வன் உயிரின் வேறு என்றவாறு.

ஏழாம் அதிகரணம்

இனி, மாயா வியந்திர தனுவினுள், ஆன்மா உளது என்றது.

உரை :—மாயா காரியங்களாலாய சூத்திரப்பாவை போன்ற உடம்பினுள் உயிர் உள்ளது.

குறிப்பு :—மாயா காரியங்களின் சமூகமாகிய உடம்பு உயிராகாது. அச்சமூகத்திற்கு வேறாக உயிர் உண்டு என்றவாறு.

ஏது :—அவை தாம் வெவ்வேறு பெயர் பெற்று நிற்றலான்.

உரை :—மாயா காரியங்களாய அவைகள் தத்தமக்குரிய வேறுவேறு பெயருடைமையால், (அவை உயிரல்ல).

கலையாதி மண்ணந்தங் காணில் அவைமாயை
நிலையாவாம் தீபமே போல—அலையாமல்
ஞானத்தை முன்னுணர்ந்து நாடில் அதுதனுவாம்
தான்அத்தின் வேறாகும் தான்.

உரை :—ஆராயுமிடத்து, கலைமுதல் நிலம் ஈறாகவுள்ள தத்துவங்களெல்லாம், மாயையினுலாயவையாகலின், நிலை யாதனவாகும். அவை தொக்கபோது விளங்கும் ஞானத்தி

னியல்பை அசையாமல் கருத்தொடுங்கி முதலில் அதன் றன்மையறிந்து பின் அவற்றின் பயனை ஆராயின், கண்ணுக்கு விளக்குப்போல அவைகள் உயிர்க்குப் பொருள்களை விளக்கும் தூல காரண பரமாகிய உடம்பாகும். உயிர் தான் அவ்வுடம்பின் வேருவதே.

இலக்கணவியல்

நான்காஞ் சூத்திரம்

அந்தக்கரணம் அவற்றின் ஒன்று அன்றுஅவை
சந்தித்தது ஆன்மாச் சகசமலத்து உணராது
அமைச்சு அரசு ஏய்ப்ப நின்றுஅஞ்சு அவத்தைத்தே.

கருத்து :—இதுவுமது.

உரை :—ஆன்மா, அகக்கருவிகளாய மனம், புத்தி, அகங்காரம், சித்தம் என்னும் அவைகளில் ஒன்று அன்று; அரசனுக்கு அமைச்சன்போல அவற்றைத் துணையாகக் கொண்டுளது ஆன்மா. தன்னோடு எப்போதும் உள்ள ஆணவ மலத்திறற் பொருள்களைத் தானே அறியமாட்டா. அவற்றின் துணைகொண்டு அறிந்து ஐந்துவகையான உணர்வெல்லைகளை யுடையது ஆன்மா.

குறிப்பு :—சகசமலத் துணரா, ஆன்மா அந்தக்கரணமவற்றில் ஒன்று அன்று. அமைச்சு அரசு ஏய்ப்ப அவை சந்தித்தது (அவற்றோடு) நின்று ஐந்து அவத்தைத்து என உரைநடை கொள்க. அவத்தை - உணர்வின் எல்லை. ஏய்ப்ப - போல.

முதல் அதிகரணம்

ஈண்டு இவ்வான்மா அந்தக்கரணங்களாயுள்ள மனோபுத்தி யகங்கார சித்தங்களில் ஒன்று அன்று என்றது.

உரை :—வெளிப்படை.

குறிப்பு :—கலை, அராகம், வித்தை முதலிய தத்துவங்களை ஒப்புக் கொள்ளுவார், ஆன்மா இல்லை என்பதில்லை யாகலின், மனம், புத்தி முதலிய அந்தக்கரணங்களையே ஆசிரியர் விதந்தனர்.

ஏது :—அவைதாம் பிரகாசமாய் நின்றே அப்பிரகாசமாய் நிற்றலான்.

உரை :—அந்தக்கரணங்கள் அவற்றிற்குக் கீழுள்ள பொறிகளை நோக்க மிகுதியாக அறியுந்தன்மையுடையன வெனினும், உயிர்க்கு அறிதற் கருவிகளாய்ச் சடமா யிருத்தலின்.

குறிப்பு :—பிரகாசம் - அறிவுள்ளது. அப்பிரகாசம் - சடம், அறிவில்லாதது.

மனமாதி யால்உணர்தல் மன்னு புலன்கள்
மனமாதி மன்புலனின் அல்லன்—மனமேல்
உதித்தொன்றை உள்ளம் உணர்தல் அதனின்
உதிக்கும் கடற்றிரையை ஒத்து.

உரை :—மனமுதலியவற்ருல் உணரப்படுபவை, பொறிகள் முதற்கண் உணரும் புறத்தே நிலைத்த பொருள்கள். உள்ளத் தால் உணரப்படுவது, மனதுக்கு மேலுள்ள புத்தி தத்துவத்திற் ருேன்றிய தொன்றே. அது கடலலைபோல வந்து தோன்றும். மன முதலியவை, புலனுக்கு வேருயினுற்போல, ஆன்மாவும், மனமுதலியவற்றிற்கு வேருவன்.

குறிப்பு :—மனமாதியால் உணர்தல் மன்னு புலன்கள், உள்ளம், உணர்தல் மனமேல் உதித்தொன்றை, கடல் திரையை ஒத்து உதிக்கும். அதனின், மனமாதி மன்புலனின் (ஆன்மா) அல்லன்என உரைநடை கொள்க. உணர்தல் - உணரப்படுபவை. அதனின் - அதனுல். புலனின் - புலன்போல. அல்லன் - வேருவன். கடல் அலைபோலத் தோன்றுதலாவது, பொறியுணர்வு முதலிலே தோன்றி, அதன் பின்னர் மனவுணர்வு தோன்றி, அது போய்ப் புத்தியை அடைய, அங்கே இன்ப துன்ப மயக்க வுணர்ச்சி தோன்றுதல்.

சிந்தித்தாய்ச் சித்தந் தெளியாதாய் ஆங்காரம்
புந்தியாய் ஆய்ந்து மனமாகிப்—பந்தித்து
வெவ்வேறு தானே துணிந்துள்ளம் இவ்வேரும்
அவ்வேரும் போதுபோல் ஆங்கு.

உரைநடை :—உள்ளம் ஆங்குச் சித்தமாய்ச் சிந்தித்து மனமாகிப் பந்தித்து ஆங்காரமாய்த் தெளியாது புந்தியாய் ஆய்ந்து துணிந்து வெவ்வேறு தானே இவ்வேரும். அது போது அவ்வேரும் போல்.

உரை :—(புருடதத்துவமாய்) நின்ற உயிர், மனவுணர் வாற் பொருள்களைக் காணுமிடத்துச் சித்தத்தைச் சேர்ந்து நின்று இஃது யாது என நினைந்தும், மனத்தைச் சேர்ந்து நின்று பற்றியும், பின்னர் ஆங்காரத்தைச் சார்ந்து நின்று இஃது இன்னதென அறிவேனென்றெழுந்தும், தெளிவு பிறவாது புத்தியினாலே இன்னதென்று தீர்மானித்தும் வெவ்வேறு வகையில் அறிதலால், இந்த நால்வகை அந்தக் கரணங்களுக்கும் வேருவன் புருடன். (அஃது எதுபோலு மெனின்) கதிரவன் முதலியவற்றோடு கூடி, நாள், நாழிகை முதலிய பாகுபாடு செய்தற்கேதுவாய காலதத்துவம், கதிரவன் முதலிய பொருள்களின் வேருதல் போல என்க.

குறிப்பு :—போது - காலம். 'சிந்தித்தாய்' என்பதன் இறுதியிலுள்ள ஆய் என்பதைச் 'சித்தம்' என்பதனோடு கூட்டுக. ஐம்பொறிகளுக்குப் போலவே, அந்தக்கரணங்கள் ஒவ்வொன்றிற்கும் வெவ்வேறு தொழில்கள் உள்ளன. அந்தக்கரணங்களோடு கூடிநின்று அத் தொழில்களனைத்துஞ் செய்வது உயிர். ஒரோவொன்றே செய்வது அந்தக்கரணம் என அறிக.

அகார உகாரம் அகங்காரம் புத்தி
மகார(ம்) மனம்சித்தம் விந்துப்—பகாதிவற்றை
நாதம் உளவடிவாம் நாடிற் பிரணவமாம்
போதம் கடற்றிரையே போன்று.

உரை நடை :—அகாரம் அகங்காரமாகிய அந்தக்கரணத் தைச் செலுத்தும். உகாரம் புத்தியைச் செலுத்தும். மகாரம் மனத்தைச் செலுத்தும். விந்து சித்தத்தைச் செலுத்தும். நாதம் புருடனாகிய உயிரைச் செலுத்தும். இவ்வெழுத்துக் களைப் பிரிப்பின்றிப் பார்த்தகாலே, அவை பிரணவமாகிய ஓங்காரமாம். இவற்றால், கடலில் அலையெழுந்து வீழ்ந்து

மீண்டெழுதல் போல, அறிவு நிகழும். (நினைப்பு மறப்பு மாறிமாறி வரும் என்பது கருத்து.)

குறிப்பு :—அகார, உகாரம், அகங்காரம், புத்தி,யென்றது விரல் நிறை உளம் - புருட தத்துவமாய் நின்ற உயிர். 'போன்று' என்பது, மூன்றும் அடியில் 'ஆம்' என்பதனோடு முடிவது.

எண்ணில(வு) ஓங்காரத்(து) ஈசர் சதாசிவமாம்
நண்ணிய விந்துவொடு நாதத்துக்—கண்ணிற்
பகர்அயன்மா லோடு பரமன்அதி தெய்வம்
அகரஉக ர(ம்)மகரத் தாம்.

உரை :—எண்ணத்திலே நிலவும் ஓங்காரத்திலே, பொருந்திய விந்துவுக்கும் நாதத்துக்கும் அதிதெய்வத்தை ஆராயின், மகேசுரனும் சதாசிவனுமாவர். அகரம், உகரம், மகரததிற்கு அதிதெய்வங்கள் முறையே, (சுத்தவித்தையி லுள்ள) பிரமன், மால், உருத்திரன் என்பவர்களாவர்.

குறிப்பு :—இயக்குகிற கடவுளர், சுத்ததத்துவங்களிலுள்ளவர்கள் ஆதலின், இங்கே கூறப்பட்ட அயன், மால், பரமன் சுத்தவித்தையி லுள்ளாரென்பது குறிக்கப்பட்டது.

இரண்டாம் அதிகரணம்

இனி, இவ்வான்மாச் சகச மலத்தினால் உணர்வின்று என்றது.

உரை:—மேலே, இச் சூத்திரத்தே பேசப்படும் உயிரானது தன்னோடு எப்போதுங் கூடியுள்ள ஆணவமலத்தினால், (கருவிகளின் துணையின்றிப் பொருள்களை அறியும்) அறிவில்லாததாகும்.

குறிப்பு :—சகசம் - இயல்பு போல உடனுய் உள்ளது. மாயை, கன்மங்கள், இடையில் உளவாகிய மலங்கள்.

ஏது :—அதுதான் ஞானநிரோதகமாய் மறைத்துக்கொடு நிற்றலால்.

உரை :—அந்த ஆணவ மலமானது, அறிவுக்கொரு மறைவாய், அஃது இல்லை யென்னும்படி மறைத்துக்கொண்டு நிற்பதாகலின்.

குறிப்பு :—திரோதகம் - மறைவு.

மாயா தனுவிளக்கா மற்றுள்ளம் காணுதேல்
ஆயாதாம் ஒன்றை அதுஅதுவாய்—வியாத
வன்னிதனைத் தன்னுள் மறைத்(து) ஒன்றுங் காட்டம்போல்
தன்னைமலம் அன்றணைதல் தான்.

உரை :—உயிரானது மாயையினுலாய உடம்பாகிய விளக்கினைக் கொண்டு பாராதாயின், ஒரு பொருளையும் அறியாது. மாயையின் வேருகிய ஆணவமலம் உயிர் தன்னை அநாதியே சார்ந்திருத்தல், அதன் வண்ணமாய்ச் சார்ந்திருந்து தனக்குக் கேடில்லாத நெருப்பினைத் தனக்குள் மறைத்து ஒன்ளும் நிற்கும் விறகுபோலா மென்ப.

குறிப்பு :—விளக்கா - விளக்கு ஆக. உள்ளம் - உயிர். அதுவதுவாய் என்பதை, ஆயாதா மென்பதனேடும் வியாத என்பதனேடுங் கூட்டலாம். அதுவதுவாதல் - தான் வேறெனத் தெரியாது நிற்றல். வன்னி - நெருப்பு. காட்டம் - விறகு. ஒன்ளுய் - அத்துவிதமாய்.

மூன்ரும் அதிகரணம்

இனி, இவ்வான்மா, சாக்கிரஞ் சொப்பனம் சுழுத்தி துரியம் துரியாதீதமாயுள்ள பஞ்சாவத்திதனுய் நிற்கும் என்றது.

உரை :—மேலே, உயிரானது, நனவு, கனவு, துயில், பேருறக்கம், உயிர்ப் படக்கம் என்ற ஐந்து உணர்வெல்லைகளை யுடையனுயிருப்பது என்றவாறு.

ஏது :—அதுதான் மல சொருபத்தின் மறைந்து அருப சொருபியாய் நிற்றலான்.

உரை :—அவ்வுயிர் தான் ஆணவமலவடிவின் மறைந்து நின்ற நிலையிலே, தத்துவங்களோடு கூடிய காலை, அருவமாகிய தத்துவ வடிவினனுய் நிற்பதாதலின்.

குறிப்பு :—இப்படித் தத்துவ வடிவாய் நிற்றல், ஆணவமல நீக்கம் வரை யாதலின், 'மல சொருபத்தின் மறைந்து' என்ருர். (மலம் நீங்கிய பின், சிவத்தின் மறைந்து நிற்குமென்பது கருத்து.)

ஒன்றணையா மூலத்(து) உயிரணையு(ம்) நாபியினில்
சென்றணையும் சித்தம் இதயத்து—மன்றவே
ஐயைந்தாம் நன்னுதலிற் கண்டத்தின் வாக்காதி
மெய்யாதி விட்டகன்று வேறு.

உரை நடை :—நல்நுதலில், வாக்காதி மெய்யாதி மன்ற ஏய் ஐயைந்து ஆம்; கண்டத்தில், வாக்காதி மெய்யாதி விட்டகன்று வேறு (ஆய) ஐயைந்தாம். இதயத்திற் சித்தம் சென்று அணையும், நாபியினில் உயிர் அணையும், அணையா மூலத்து ஒன்று.

உரை :—(நனவிடமாகிய) நெற்றியில் மெய், வாய், கண், மூக்கு, செவி யென்ற அறிவுப் பொறியைந்தும் சொல்லுதல், செல்லுதல், இடுதல், கழித்தல், மகிழ்த லென்ற வினைப்பொறி யைந்தும் ஆகிய பத்தையும் தெளிவாகப் பொருந்திய இருபத்தைந்து கருவிகள் தொழிற்படும். (கனவிடமாகிய) கழுத்தினில், அப் பத்தினையும் நீங்கி வேறாகிய இருபத்தைந்து கருவிகள் தொழிற்படும். (துயிலிடமாகிய) இதயத்திலே சித்தம் தொழிற்படும். (துரியத்தானமாகிய) உந்தியிலே பிராணவாயு மாத்திரந் தொழிற்படும். கருவிகள் அணையாத மூலாதாரத்தில் புருடன் ஒன்றே நிலைபெறும்.

குறிப்பு :—துயிலில், சித்தத்தோடு பிராணனும் புருடனும் தொழிற்படும். துரியத்தில், பிராணனும் புருடனு மாத்திரம் உள்ளன என அறிக. இருபத்தைந்தென்றது, பொறிகள் பத்திற்கும் உரிய விடயங்கள் பத்தும், வாயுக்கள் பத்தும், அந்தக் கரணங்கள் நான்கும், புருடன் ஒன்றுமாம்.

இலாடத்தே சாக்கிரத்தை எய்திய உள்ளம்
இலாடத்தே ஐந்தவத்தை எய்தும்—இலாடத்தே
அவ்வவ இந்திரியத்து அத்துறைகள் கண்டதுவே
அவ்வவற்றின் நீங்கலது ஆங்கு.

உரை:—நெற்றியிலே நனவுநிலையுற்ற உயிரானது நனவி லேயே ஐந்து அவத்தையடையும். அவையாவன : ஐம்

பொறிகளுள் ஒவ்வொரு பொறியாலுமுணரக்கூடிய விடயங்களை அறிந்து அவ்வப்போதே அவ்வவற்றின் நீங்குதல், இது போலச் சுத்தாவத்தையும் ஐவகைப்படும்.

குறிப்பு :—கனவில் கனவு கனவிற் கனவு முதலிய ஐந்து நுட்ப வுணர்வெல்லைகளைக் குறித்தார். திறைகள் - விடயங்கள். அதுவே - அப்போதே. அது - சுத்தாவத்தை. ஆங்கு - அவ்வாறு (ஐவகைப் படும்.

ஐந்தாம் சூத்திரம்

விளம்பிய உள்ளத்து மெய்வாய் கண்மூக்(கு)
அளந்தறிந் தறியா ஆங்கவை போலத்
தாம்தம் உணர்வின் தமியருள்
காந்தங் கண்ட பசாசத் தவையே.

கருத்து :—இவ்வான்மாக்களிடத்துத் தமது முதல் உபகார முணர்த்துதல் நுதலிற்று.

உரை :—மேலே கூறிய உயிராலே, மெய், வாய், கண், மூக்கு, செவி என்ற ஐந்து பொறிகளும் தத்தம் விடயங்களை அளவிட்டறிந்தாலும் (தம்மையுந் தம்மைச் செலுத்தும் உயிரையும்) அறியமாட்டா. அப் பொறிகள்போல, உயிர்களும் தம்மையும் தமது அறிவிற்கு விளக்கந் தருபவனுகிய தனி முதல்வனது திருவருட் சத்தியையும் அறியமாட்டா. உயிர்கள் முதல்வனுல் அறிதல், காந்தத்தின்முன் வைத்த இரும்புபோல முதல்வன் சந்நிதிமாத்திரையில் நிகழும். (ஆதலால் முதல்வன் விகாரப்படான்).

குறிப்பு :—தாம் - தம்மை. உணர்வின்தமி - அறிவுக்கு (விளக்கமாய) தனிமுதல். 'அருள்' என்பது அறியா என்பதோடு முடிகின்றது. அருள் - மறைப்புச் சத்தி.

கருத்து :—சுட்டு நிலையில் இறைவன் உயிர்க்குச் செய்யும் உதவியை உணர்த்துதல் கருதியது.

முதலதிகரணம்

ஈண்டு ஐயுணர்வுகள் ஆன்மாவா லுணரும் என்றது.

உரை :—இதனுள் ஐம்பொறிகள் உயிராற் பொருள்களை யறியும்.

ஏது :—அவற்றினுள் ஆன்மா ஒற்றித்துக் காணின் அல்லது அவை ஒன்றையும் விடயியா வாகலான்.

உரை :—அவற்றினோடு உயிர் ஒற்றுமைப்பட்டு அறிந் தாலன்றி, அவை ஒரு பொருளையும் உணரமாட்டா வாகலின்.

ஐம்பொறியை ஆண்டங்(கு) அரசாய் உளம்நிற்ப
ஐம்பொறிகள் உள்ளம் அறியாவாம்—ஐம்பொறியிற்
காணுதேற் காணுது காணும்உளம் காணுதேல்
காணுகண் கேளா செவி.

உரை :—அரசன் செங்கோல்மண்டபத்தி லிருந்து ஏவலாளரைக் காரியங்களிற் செலுத்தி ஆளுதல்போல, உயிரானது ஐம்பொறிகளையும் செலுத்தி ஆண்டு நெற்றியிலே நிற்பதாகலின், ஐம்பொறிகள் உயிரை அறியமாட்டா; ஐம்பொறி வாயிலாகப் பொருள்களை அறிந்தாலன்றித் தானுக உயிர் பொருள்களை யறியாது; உயிர் ஒற்றுமைப் பட்டாலல்லாமல், கண் பாராது; காது கேளாது. (ஆதலால் ஐம்பொறிகளும் உயிரும் தம்முள் இன்றியமையா.)

குறிப்பு :—கனவில், பொறிகளின் உதவியை உயிர் வேண்டுவதில்லை.

இரண்டாம் அதிகரணம்

இனி, இதுவுந் தமது முதலாலே உணரும் என்றது.

உரை :—மேல், உயிரும், தம் தலைவனாகிய கடவுளினாலே பொருள்களை அறியும்.

ஏது :—இவ்வான்மாத் தன்னாலே உணரும் இந்திரியங்களைப் போலத் தானுந் தன்னையுணராது நிற்றலான்.

உரை :—தன்னாலே பொருள்களை அறியும் இந்திரியங்கள், தம்மையும் தன்னையும் அறியாமைபோல, உயிரும் தன்னையும் தனது முதல்வனையும் அறியாமல் நிற்றலால்.

குறிப்பு :—தன்னை - தன்னை, என்றும், தின் + ஐ - தன் தலைவன் என்றும் இருபொருள்படும்.

மன்னுசிவன் சந்நிதியின் மற்றுலகம் சேட்டித்த(து)
என்னு மறையின் இயல்மறந்தாய்—சொன்னசிவன்
கண்ணு உளம்வினையாற் கண்டறிந்து நிற்குங்காண்
எண்ணுன் சிவன்அசத்தை இன்று.

உரை :—மாறு நிலைப்பொருளாகிய சிவபெருமான் திருமுன்பே உலகம் தொழிற்படுகின்றதென்ற மறைப்பொருளை மறந்தவனே! மறைகள் இயம்பிய முதல்வன் தனக்குக் கண் போலப் பொருள்களை விளக்கி நிற்ப உயிரானது தனது வினைக்கீடாகப் பொருள்களை அறிந்தனுபவிக்கும். அப்படி இறைவன்கண்ணாக நின்றபொழுதும், சுட்டுப் பொருளாகிய அசத்துப்பொருள்களை உயிர்போல அனுபவியான்.

குறிப்பு:—மன்னுசிவன் - பேரின்ப நிலையருளும் இறைவன். உலகம் - உயிர்கள். சொன்னசிவன் - முற்றுணர்வுடைய முதல்வன். சிவன் - தூய தன்மையன். எண்ணுன் - கருதி நுகரமாட்டான். பொறிகள் உயிரின் பொருட்டறியும்; உயிர், தன்பொருட்டே யறியும் இறைவன் பொருட்டன்று என்பது கருத்து. சந்நிதி - சத்தி சங்கற்பம்.

வெய்யோன் ஒளியில் ஒடுங்கி விளங்காது
வெய்யோனை ஆகாத மீன்போல—மெய்யவனிற்
கண்டுகேட் டுண்டுயிர்த் துற்றறியும் ஐம்புலனைக்
கண்டுடனுய் மன்னுதலைக் காண்.

உரை :—கதிரவனுடைய ஒளியிலே அடங்கித் தோன்றாது நிற்பனவாய், அவனுடைய ஒளியை இன்றியமையாத நட்சத்திரங்கள்போல மெய்ப்பொருளாகிய இறைவனுதவியால், உயிர் கண்டுங் கேட்டும் உண்டும் முகர்ந்தும் தொட்டு முணரப்படும் ஐம்பொறிக்கு விடயமாய பொருள்

களைத் தெரிந்து (வேருதலும் ஒன்ருதலுமின்றி) இறைவனேடு உடனய் நிலைபெறுதலை அறிவாயாக.

அருளுண்டாம் ஈசற்கு அதுசத்தி யன்றே
அருளும் அவன்அன்றி யில்லை— அருளின்(று)
அவனன்றே யில்லை அருட்கண்ணுர் கண்ணுக்(கு)
இரவிபோல் நிற்கும்அரன் ஏய்ந்து.

உரை: ஈசன்பால் உயிர்களை உய்விக்கும் இரக்கம் உண்டு அஃது அவனது சத்தியாகும். அச் சத்தி அவனை யின்றியமையாது. அவனும் அச் சத்தியை யின்றியமையான். சத்தியுஞ் சிவமும், குணமுங் குணியும்போல, ஞானக் கண்ணுடையார் அறிவுக்குக் கதிரவனும் ஒளியும் போலப் பொருந்தி நிற்குமென அறிக.

ஆரும் சூத்திரம்

உணருரு அசத்தெனின் உணரா தின்மையின்
இருதிறன் அல்லது சிவசத் தாமென
இரண்டு வகையின் இசைக்குமன் னுலகே.

கருத்து :—சத்தும் அசத்தும் வரைசெய்துணர்த்துதல் நுதலிற்று.

உரை :—இறைவன் அறியப்படு மியல்பின னெனின் (உலகப் பொருள் போல) நிலையிலாப் பொருளாவான். அவன் எவ்வாற்ருலும் அறியப்படாதவனெனின், அவன் சூனியமாவன். ஆதலின் இரண்டு தன்மையுமின்றி உயிரறிவாலறியப்படாமையும், பதியறிவால் அறியப்படுதலுமாகிய இரண்டு வகையானும் இறைவன் சித்தாகிய சத்தாய் உள்ளவனெனக்கூறுவர் மெய்யில் நிலைபெற்று உயர்ந்தோர்.

குறிப்பு :—உரு - இயல்பு. *அசத்து - நிலையில்லாப் பொருள். உணராது - உணராதது, உணரப்படாதது. சிவசத்து - சித்தாகிய சத்து.*

கருத்து :—நிலைப்பொருள் இது, நிலையாத பொருளிது என அறிவித்தல் கருதியது.

முதல் அதிகரணம்

ஈண்டு அறிவினுல் அறியப்பட்ட சுட்டு அசத்து என்றது.

உரை :—இவ்வுலகில், தருக்க அறிவினுல் அறியப்பட்ட சுட்டுப்பொருள் நிலையாத் தன்மையுடையது.

ஏது :—அவைதாம் பிரகாசமாய் நின்றே அப்பிரகாசமாய் நிற்றலான்.

உரை :—அவைதாம் உள்ளதென்றறியு மறிவைப் பயப்பிப்பதாய் இருந்தே மறைந்து இல்லையென்ற அறிவைப் பயப்பிப்பதாய் நிற்பனவாகலான்.

குறிப்பு :—பிரகாசம் - உபலத்தி, உள்ளதென்ற அறிவு. அப்பிரகாசம் - அநுபலத்தி, இல்லையென்ற அறிவு.

அசத்தறியாய் கேள்நீ அறிவறிந்த வெல்லாம்
அசத்தாகு(ம்) மெய்கண்டான் ஆயின்—அசத்தலாய்
நீரி லெழுத்தும் நிகழ்கனவும் பேய்த்தேரும்
ஓரின்அவை இன்றுமா(று) ஒப்பு.

உரை :—அசத்தின் தன்மை யறியாதவனே! நீ கேட்பாயாக. சத்தினியல்பு உணர்ந்தவன் ஆராயுமிடத்து (மாயா கருவியின் உதவியால்) அறியப்பட்டனவெல்லாம் நிலையாதனவாகும், நிலையாப் பொருளல்லாதவனே, நிலையாமைக்கு உவமைகளாவன இவையென்று இப்போது ஆராயுங்கால் நீரிலே எழுதிய எழுத்தும், நிகழும்போதே மறைகின்ற, கனவும், கானலும் என்னுமிவை என்றவாறு.

குறிப்பு :—'மெய்கண்டான்' என்ற குறிப்பு ஆசிரியர் திருப்பெயரை உணர்த்துமா றறிக. அசத்தலாய் - அசத்து + அலாய் - அசத்து அல்லாதவனே. அசத்காரியவாதி யல்லாத அறிவுடையவனே என்று முனிவர் பொருளுரைத்தார். நீரிலெழுத்து முதலியன நிலையாமைக்கு உதாரணங்களாமன்றி, இல்பொருளுக்கு உவமையாகாவென அறிக.

இரண்டாம் அதிகரணம்

இனி, இவ்விரண்டு தன்மையுமின்றி வாக்குமனதீத கோசரமாய் நின்ற அதுவே சத்தாயுள்ள சிவமென்று உணர்தற்பாற்று.

உரை :— மேலே கூறுவதாவது, முற்கூறிய பிரகாசம், அப்பிரகாசமென்ற இரண்டு இயல்புமின்றி, சொல்லையும் மனத்தையுங் கடந்ததாய், அஃதாவது பாசஞானத்தையும் பசுஞானத்தையுங் கடந்ததாய் (பதிஞானத்தால்) நேரே யறிந்தனுபவிக்கற்பாலதாய் நிற்கும் அப் பரம்பொருள் நிலைப் பொருளாயுள்ள சிவமென்று (பெரியோரால்) அறியப்படுந் தன்மைத்து என்றவாறு.

ஏது :— பிரகாசத்திற்குப் பிரகாசிக்கவேண்டுவது இன்மையானும் அப்பிரகாசத்திருக்குப் பிரகாசம் இன்மையானும்.

உரை :—(மனம் வாக்குகளால்) அறியப்படும் பொருள் இறைஞானத்தால் அறியப்பட வேண்டுவதில்லை யாகலானும் ஒருவாற்றானும் அறியப்படாத தொன்றிற்கு எக் காலத்தும் விளக்கம் இல்லாமையாலும்.

குறிப்பு :— இறைவன், கருவிகளா லறியப்படும் பொருளில்லை ; ஒருவாற்றானும் அறியப்படாத பொருளுமில்லை யென்பது கருத்து.

எண்ணிய சத்தன்று அசத்தன்றும் என்றுல்ான்
கண்ணி உளதென்றல் மெய்கண்டான்—எண்ணி
அறிய இரண்டாம் அசத்தாதல் சத்தாம்
அறிவறியா மெய்ச்சிவன்றுள் ஆம்.

உரை :—பரம்பொருள், கருதப்பட்ட சத்துப் பொருளும் அசத்துப் பொருளும் அன்று என்னில், சத்தும் அசத்து மாகாத பொருள், யாது காரணம்பற்றி உண்டென்றறிவது. (கூறுக.) சத்தினியல் புணர்ந்தோன் ஆராய்ந்தறிய கருவிகளின் உதவியால் அறியப்பட்டதும் ஒருவாற்றானும் அறியப்படாத சூனியமும் ஆகிய இரண்டும் அசத்தே யாதலால், சுட்டறிவினால் அறியப்படாத சத்தென்ற மெய்ப்

பொருள், (உயிர் அத்துவிதமாய் நின்றறியத் தக்க) சிவனது திருவருளேயாம்.

குறிப்பு :—என்கண்ணி - எதனைப்பற்றி. தான் - அருள்சத்தி, - திருவடி யென்றதும் இதுவே.

உணர்ப அசத்தாதல் ஒன்றுணரா(து) ஒன்றை
உணருநீ தான்உணராய் ஆயின்—உணரும்உனில்
தான்இரண்டாம் மெய்கண்டான் தன்னால் உணர்தலால்
தான்இரண்டாய்க் காணுன் தமி.

உரை :—அறியப்படுபவைகளெல்லாம் நிலையாப்பொருள் ஆதலின், அறிவில்லாத அவற்றுள் ஒன்றும் ஒரு முதல்வனை அறியமாட்டாது. அப் பொருள்களை அறியும் நீதானும் முதல்வனை அறியமாட்டாய். நீ ஆராய்ந்து பார்ப்பின், அப் பொருள்களைப்போல அவனை அறியக் கூடுமாயின், அவன் உன்னில் வேருவன். உண்மை யுணர்ந்தோன், இறை யருளில் அடங்கி நின்ற இறையறிவோடு கூடிய தன்னறிவால் அறிதலான் அத் தனிமுதற்பொருளை அதனின் வேருக நின்று அறிவானல்லன்.

குறிப்பு :—ஒன்றை - ஒரு பரம்பொருளை. தமி - தனி முதல்வன். இரண்டாம் - வேறும்.

பாவகமேல் தான்அசத்தாம் பாவநா தீதமெனிற்
பாவகமாம் அன்றென்னிற் பாழதுவாம்—பாவகத்தைப்
பாவித்தல் தான்என்னில் பாவகமாந் தன்னருளால்
பாவிப் பதுபரம்இல் பாழ்.

உரை :—மன முதலிய கருவிகளோடு பாவிக்கப்படுவ தானல். அது (சுட்டி யறியப்படும்) அசத்தாகும். அப் பாவனையைக் கடந்ததென்ருல், (கருவிகள் நீங்கிய வழிப்) பாவனை யென்பது பெயர் மாத்திரமன்றி உண்மையில் இல்லை யாம். இருவகையாகவுமன்றி, சொல்லவொண்ணுததாகப் பாவிக்கப்படுவதென்னில், அது சூனியமாம். (கிடையாத

பொருளைக் கிடைத்ததாகப் பாவிப்பது போலப்) பாவனை செய்தலென்னின், அது போலிப்பாவனையாம். ஆதலால் இறையருள்வழி நின்று நினைக்கப்படுவது பரம்பொருள். அது சூனியமன்று.

குறிப்பு :—யோகியர் கூறும் பாவனையால் இறைவனை அறிதல் கூடாதென்றவாறு. இரண்டாமடி முதலிற் பாவகம் என்றது பயனில்லை யென்ற பொருளில் வந்தது. மூன்றாமடியிற் பாவகம் - போலிப் பாவனை. 'இல்பாழ்' என்பதைப் 'பாழ்இல்' என மாறுக.

அறிய இரண்டல்லன் ஆங்(கு) அறிவு தன்னால்
அறியப்படான் அறிவின் உள்ளான்—அறிவுக்குக்
காட்டாகி நின்றானைக் கண்ணறியா மெய்யென்னக்
காட்டா(து) அறி(வு) அறிந்து கண்டு.

உரை :—உயிர் அறியும்படி அதனின் வேறாக நிற்பானல்லன். உயிரறிவுக்கு அப்பாற்பட்டு நுட்பமாய் அதன் கட் கலந்திருத்தலின், தனது அறிவின்கண்ணே உயிரால் அவன் அறியப்படான். உயிராற் பொருள்களை யறிகிற கண், சத்தாகிய உயிரினை அறியாமைபோல, தனக்குப் பொருள்களை விளக்குவானாகி நின்ற முதல்வனை உயிரினறிவு கண்டறிந்து உயிர்க்குக் காட்டமாட்டாது.

குறிப்பு :—உயிர் தன்னறிவு கொண்டு முதல்வனை அறிய முடியாமை விளக்கியவாறு. ஆங்கு என்பதை 'அறிவின் உள்ளான்' என்பதன் இறுதியிலமைத்துப் பொருள்கொள்க. மெய் - சத்து, ஆன்மா. இறுதி யடியில், அறிவு - உயிரறிவு. அறிந்து கண்டு, என்பதை, கண்டு அறிந்து என மாறுக.

அதுவென்னும் ஒன்(று) அன்று அதுவன்றி வேறே
அதுவென் றறியறிவும் உண்டே—அதுவென்(று)
அறிய இரண்டல்லன் ஆங்குஅறிவுள் நிற்றல்
அறியும்அறி வேசிவமும் ஆம்.

உரை :—சிவம் இன்னதென்றறியப்படாமையால் 'அது' வென்று சொல்லப்படும் ஒரு பொருளல்ல. அச்சிவத்தை யன்றி, அதனை (வாக்கு மனாதீத மென்ற) அது என்று அறிகின்ற அறிவுப் பொருள் அதற்கு வேறேயுளது. உலகப்

பொருள் போலச் சுட்டியறியும்படி வேருக நில்லாது உயிரின் அறிவின்கண் கலந்து முதல்வன் நிற்றலின், அவனை அறிகின்ற அறிவுப்பொருளாய உயிரும் கலப்பால், முதல்வனுய சிவமுமாம் என்று சொல்லுமாறு உளதாம்.

குறிப்பு :—முதலடியில் முதல் 'அது' - சொல்லொணுததென்னும் பொருட்டு. இரண்டாவது, அது - பரம்பொருள். இரண்டாமடி முதனில் 'அது'-மனம் வாக்கைக் கடந்தது. தனிச்சீரில், 'அது'-சுட்டுப் பொருள். இரண்டு - வேறு. 'ஆங்கு' என்பதை 'உண்டே' என்பதோடு முடிக்க. அறியுமறிவே - அறியுமுயிரே. 'சிவமும்' என்ற உம்மையால், பொருட்டன்மையால் அது சிவமாகாதென்ற குறிப்புக் காண்க. தண்ணீரிலே உப்புக் கரைந்தவிடத்துத் தண்ணீரையும் உப்பென்பது காண்க.

ஏழாஞ் சூத்திரம்

யாவையுஞ் சூனியம் சத்(து)எதிர் ஆகலின்,
சத்தே அறியா(து) அசத்தில(து) அறியா(து)
இருதிறன் அறிவுள(து) இரண்டலா ஆன்மா.

கருத்து :—மேலதற்கோர் புறனடை யுணர்த்துதல் நுதலிற்று.

உரை :—அசத்தாகிய உலகப் பொருளெல்லாம் சத்தாகிய சிவத்தின்முன் பாழாமாகலின், சத்து அசத்தை அறிதல் செய்யாது. அசத்தாகிய உலகம் அறிவிலதாகலின் ஒன்றையும் அறியுந் தன்மையுடையதன்று. சத்தையும் அசத்தையும் அறியும் இருவகைத் தன்மையுடையதாய்ச் சத்தேயாகவும் அசத்தேயாகவுமில்லாத சதசத்தாகி உயிர் உளது. (என அறிக.)

குறிப்பு :—சூனியம் - பாழ். இலது - அறிவிலது.

கருத்து :—சத்திற்கும் அசத்திற்கும் வேருகச் சதசத்துண்மை அறிவித்தல் கருதியது.

முதல் அதிகரணம்

ஈண்டுச் சத்தினிடத்து அசத்துப் பிரகாசியாது என்றது.

உரை :—இதன்கண், சுட்டாது அறியுஞ் சிவத்தின்முன் சுட்டி யறியப்படும் நிலையிலாப் பொருட்டொகுதி விளங்கித் தோன்றாது.

ஏது :—மெய்யினிடத்துப் பொய் அப்பிரகாசமாய் நிற்றலான்.

உரை :—இறைவனது இயற்கை யுணர்வின்முன் செயற்கைச் சுட்டுணர்வு விளங்கி நில்லாமையால்.

அன்னியமி லாமை அரற்(கு) ஒன்(று) உணர்வின்றும்
அன்னியமி லான்அசத்தைக் காணுவனேல்—அன்னியமாக்
காணுன் அவன்முன் கதிர்முன் இருள்போல
மாணு அசத்தின்மை மற்று.

உரை :—பசுபாசங்கள் தனக்கு வேருகாது தன்னுள் அடங்கி நிற்றலையுடைய அரனுக்குச் சுட்டியறியக் கிடப்பது யாதுமில்லை. அவ்வாறு அன்னியமில்லாத முதல்வன் அசத்துப்பொருளை யறிவானாயின், தனக்கு வேருக அவற்றைச் சுட்டி யறியான். கதிரவன் முன் இருள் மடங்குதல் போல, முதல்வன் முன், அவனது வியாபக அறிவுக்கு இயையாத அசத்துலகம் விளங்கி நில்லாமை அறிக.

இரண்டாம் அதிகரணம்

இனி, அசத்திற்கு உணர்வின்று என்றது.

உரை :—மேல், தத்துவவடிவாகிய உலகினுக்கு அறிவு இல்லை என்றவாறு.

ஏது :—அதுதான் நிருபிக்கில் இன்ருகலான்.

உரை :—ஆராயுங்கால் அதன்கண் (அறிவு) இல்லையாகலான்.

குறிப்பு :—உயிரியைந்தவழி, பொறி, கரண முதலியன அறிவுடையன போலத் தோற்றினும், உயிர் கலவாத இடத்து அவை தம்மிலே சடமாயுள்ளன வென்பார், 'விரூபிக்கில்' என்றார்.

பேய்த்தேர்நீர் என்றுவரும் பேதைக்கு மற்றணைந்த
பேய்த்தேர் அசத்தாகும் பெற்றிமையின்—வாய்த்ததனைக்
கண்டுணர்வார் இல்வழியிற் காணும் அசத்தின்மை
கண்டுணர்வா ரில்ல(து)எனக் காண்.

உரை :—கானலைத் தண்ணீரென்றெண்ணி, அதன்பாற் செல்லும் அறிவிலானுக்கு, அவன் அதையணைந்தகாலை அக் கானல் நீரானது பொய்யாகுந் தன்மைபோல, நேர்பட்ட குருமொழியை ஆய்ந்தறிவாரில்லாதபோது, உலகப்பொருளிற் றோன்றும் நிலைத்த அறிவாந்தன்மை, ஆய்வாருள்ளபோது அவர்க்கு இல்லாததாக விளங்குமென்றறிக.

குறிப்பு :—வாய்த்து - கிடைத்து. இங்கே, குருமொழியென்பது வருவிக்கப்பட்டது. வாய்த்தது என்பதற்கு எதிர்ப்பட்டதை யென்றும் பொருள் கொள்ளலாம்.

மூன்றும் அதிகரணம்

இனி, இருதிறன் அறிவுளது இரண்டலா ஆன்மா என்றது.

உரை :—அசத்தும் சத்தும் ஒன்றை யொன்றுணராதாகவே, இரண்டையும் அறிவதாகிய ஒன்று உண்டு. அஃது இரண்டின் தன்மையுமில்லாத உயிர் என்றது.

ஏது :—இவ்விரண்டினையும் அறிவதாய் உபதேசியாய் நின்ற அவ்வறிவு இரண்டன்பாலு முள்ளதாய் உள்ள அதுவே அவ்வான்மாவாம் என்றது.

உரை :—சத்தினையும் அசத்தினையும் அறியுந்தன்மையதாய், அறிவிக்க அறிவதாய் அவ்விரண்டினும் நிலைபெற்ற அனுபவ அறிவுள்ளதாயது எதுவோ, அதுவே சதசத்தாய உயிர் என்றவாறு.

குறிப்பு :—உபதேசி - அறிவிக்க அறிவது. இரண்டன் பாலும் நின்ற அறிவு உளதாய் என உரைநடை கொள்க.

அருவுருவந் தான்அறிதல் ஆயிழையாய் ஆன்மா
அருவுருவம் அன்றாகும் உண்மை—அருவுருவாய்த்
தோன்றியுடன் நில்லாது தோன்றாது நில்லாது
தோன்றல் மலர்மணம்போல் நோக்கு.

உரை :—நுணுகிய நூல்களை ஆராய்கின்ற உயிரானது சத்தையும் அசத்தையும் தான் அறிதலால், அது (அறியப் பட்ட இரண்டினும் வேறாதலால்) அறியப்பட்ட சத்துமாகாது; அசத்துமாகாது. அதன் உண்மைத்தன்மை, சத்தோடும் அசத்தோடும் கணிக்கப்படத்தக்கதாய், மூன்றாவதொரு பொருளாய் உடனாக நில்லாது, சூனியப் பொருளாகவும் நில்லாது, இரண்டினுஞ் சார்ந்ததன் வண்ணமாய்ப் பூவிலே வாசம் அடங்கித் தோன்றுமாறு போல, இரண்டினையும் அறியுங்கால், அவற்றின் சார்பாக யறியப்படுவதா யிருத்தலாகும்.

குறிப்பு :—அரு - சத்து. உரு - அசத்து. ஆய் - நுண்ணிய; இழை நூலுக்கு ஆகுபெயர்; ஆய் - ஆராய்கின்ற.

மயக்கம துற்றும் மருந்தில் தெளிந்தும்
பெயர்த்துணர்நீ சத்தாகாய் பேசில்—அசத்தும்அலை
நீயறிந்து செய்வினைகள் நீஅன்றி வேறசத்துத்
தானறிந்து துய்யாமை தான்.

உரை :—(அறிவைவிளக்குங் கருவி யியல்வழி) அறியாமை அடைந்தும், நோய்க்கு மருந்து போல்வதாகிய அறியாமைக்கு மருந்தாகிய விளக்கமுள்வழி அறிந்தும், இங்ஙன மாறிமாறி உணர்ந்து வருகின்ற நீ ஒருதன்மையா யறியும் சத்தாக மாட்டாய். சொல்லப்புகில், நீ செய்த வினைகளின் பயனை அறிந்து நீயே அனுபவிப்பதன்றி அசத்தாய பாசம் அறிந்து அனுபவியாமையால், நீ அசத்தும் அல்லாதாய். நீ இரண்டினும் வேறு.

மெய்ஞ்ஞானந் தன்னில் விளையாது அசத்(து)ஆதல்
அஞ்ஞானம் உள்ளம் அணைதல்காண்—மெய்ஞ்ஞானந்
தானே உளவன்றே தண்கடல்நீ ருப்புப்போல்
தானேய் உளம்உளவாய்த் தான்.

உரை நடை :—அஞ்ஞானம் மெய்ஞ்ஞானந் தன்னில் அசத்து ஆதல் விளையாது. மெய்ஞ்ஞானம் தானே உள அன்றே தான் ஏய் உளம் உளவா, தான் உள்ளம் அணைதல், தண்கடல் நீருப்புப்போற்காண்.

உரை :—அறியாமையானது, மெய்யறிவாகிய முதல்வன் முன் (ஒளிமுன் னிருள்போல) நிலையாமையால் அவனிடத்தே உளதாகாது. அந்த மெய்யறிவன் என்று உள்ளானே அன்றே, தான் பொருந்துதற்குரிய உயிர்கள இருப்பனவாக, அவ்வுயிர்களை அது பற்றிநிற்றல், குளிர்ந்த கடல் உப்பானது நீரைப்பற்றி இடத்தைப் பற்றாது நிற்குந்தன்மைபோல என அறிக.

———

எட்டாஞ் சூத்திரம்

ஐம்புல வேடரின் அயர்ந்தனை வளர்ந்தெனத்
தம்முதல் குருவுமாய்த் தவத்தினில் உணர்த்தவிட்(டு)
அன்னிய மின்மையின் அரன்கழல் செலுமே.

கருத்து :—ஞானத்தினை உணரு முறைமையினை யுணர்த்திற்று.

குறிப்பு :—ஞானம் - பதியறிவு

சூத்திர உரை நடை :—தவத்தினில் தம் முதல்குருவுமாய் ஐம்புல வேடரின் வளர்ந்து அயர்ந்தனை எனவுணர்த்த விட்டு அன்னிய மின்மையின் அரன்கழல் செலுமே.

உரை :—உயிர்களது தவமிகுதியால், அவற்றிற்கு உள் நின்றுணர்த்திய முதல்வன் குருவடிவாய் எழுந்தருளிவந்து, நீ ஐம்பொறிகளாகிய வேடருள் அகப்பட்டு வளர்ந்து நின் பெருந்தன்மையை மறந்தாய் என்று உண்மை யறிவிக்க அறிந்து ஐம்புல வேடரை விட்டு நீங்கி, இறைவனோடு அந்நியமாகாத தன்மையில் நிலைபெற்று அவன் திருவடிகளை அணையும் என்றவாறு.

முதல் அதிகரணம்

ஈண்டு, இவ்வான்மாக்களுக்கு முற்செய் தவத்தால் ஞானம் நிகழும் என்றது.

உரை :—இதனுள், மேற்கூறிப் போந்த உயிர்களுக்குப் பல பிறவிகளில் இயற்றிய தவத்தின் பயனாக, இறைவன் அளிக்கும் சிவஞானம் உண்டாகும் என்றது.

ஏது :—மேற் சரியை கிரியா யோகங்களைச் செய்துழி நன்னெறியாகிய ஞானத்தைக் காட்டி யல்லது மோக்ஷத்தைக் கொடாவாகலான்.

உரை :—முன்னேயே, சரியை, கிரியை, யோகமாகிய தவங்களைச் செய்தகாலை, அவை வீட்டு நெறிக்குச் சாதனமாய சிவஞானத்தைக் கொடுத்தன்றி வீட்டினைத் தரவல்லன அல்லவாகலின்.

குறிப்பு :—தவத்தால் ஞானம் அடைந்தே வீடு கூடுதல் ஆகும். ஞானமின்றி வீடில்லை யென்றது.

தவஞ்செய்தா ரென்றுந் தவலோகஞ் சார்ந்து
பவஞ்செய்து பற்றறுப்பா ராகத்—தவஞ்செய்த
நற்சார்பில் வந்துதித்து ஞானத்தை நண்ணுதலைக்
கற்றோர்சூழ் சொல்லுமாம் கண்டு.

உரை :—(சரியை, கிரியை, யோகம் என்னுந்) தவத்தை ஆற்றியவர்கள் ஒருதலையாகத் தவப்பயனடைதற்குரிய உயருலகினை யடைந்து (தவப்பயனை நுகர்ந்தபின்) உலகத்தி லுள்ள பற்றினைப் பிறவியெடுத்து ஒழித்தற்பொருட்டு, தவஞ் செய்தற்குரிய நல்ல இனத்திலே வந்து பிறந்து சிவஞானம் நண்ணுவதைக் கற்றறிந்தவர் ஆராய்ச்சி தெரிந்து கூறும்.

குறிப்பு :—என்றும் - திண்ணமாக உலகத்திற் பிறந்து அறுப்பதாகிய பற்று இல்லாதவிடத்து, தவலோகம் சென்றவாறே ஞானமடைவர் என்பது கருத்து. சார்பு - இனம், பழக்க முதலியவைகளைக் குறிக்கும். சாதியென்று பொருள்கொண்டு, இழிகுலத்தார்க்கு ஞானம் இல்லை யென்பது தவறு. சூழ் - சூழ்ச்சி. கூட்டமென்றுங் கொள்ளுப. கற்றறிந்தார் கூறுவதைச் சூழ்ச்சிமேல் வைத்துரைத்தார்.

பசித்துண்டு பின்னும் பசிப்பானை ஒக்கும்
இசைத்து வருவினையில் இன்பம்—இசைத்த
இருவினை ஒப்பில் இறப்பில் தவத்தால்
மருவுவனும் ஞானத்தை வந்து.

உரைநடை :—இசைத்து வினையில் வரும் இன்பம் பசித்துண்டு பின்னும் பசிப்பானையொக்கும், இசைத்த இருவினை இறப்பில் தவத்தால் ஒப்பில் வந்து ஞானத்தை மருவுவன்.

உரை :—பயனைக் கூறிக்கொண்டு செய்யப்படும் புண்ணியங்களால் வரும் இன்பமானது, பசித்து உணவு உண்டு, அது அற்றவிடத்து மீட்டும் பசிப்பவனுக்கு அவ்வின்பம் எவ்வாறோ அவ்வாறாகும். பிறவியைத் தோற்றுவிப்பதில் சமமாயுள்ள நல்வினையும் தீவினையும் மிக்க தவத்தினால், ஒப்ப வெறுக்கப் படுமாயின், அத் தவ முதிர்ச்சியுடையான் ஞானகுருவை நாடி வந்து சிவஞானத்தை அடைவன்.

இரண்டாம் அதிகரணம்

இனி, இவ்வான்மாக்களுக்குத் தமது முதல் தானே குருவுமாய் உணர்த்தும் என்றது.

உரை :—மேல், ஞானத்தை விரும்பும் உயிர்களுக்குப் பருவம் வந்தபோது உள்நின்று உணர்த்திவந்த அவர்கள் முதல்வனே, குருவாய் வெளிப்பட்டருளி அதனை அறிவுறுக்கும் என்றவாறு.

ஏது ;—அவன் அந்நியமின்றிச் சைதன்னிய சொருபியாய் நிற்றலின்.

உரை :—அவன், தூயஉயிர்களின் வேறாகாது அவர்களது அறிவைத் தமக்கு வடிவமாகக் கொண்டு நிற்பனாதலின்.

குறிப்பு :—குருவாய்வருவா ரறிவின்கண் இறைவன் ஆவேசித்து நிற்குநிலை கூறப்பட்டது.

மெய்ஞ்ஞானந் தானே விளையும்விஞ் ஞானகலர்க்(கு)
அஞ்ஞான அச்சகலர்க்(கு) அக்குருவாய்—மெய்ஞ்ஞானம்
பின்உணர்த்தும் அன்றிப் பிரளயா கலருக்கு
முன்உணர்த்துந் தான்குருவாய் முன்.

உரை :—விஞ்ஞானகலர்க்கு உண்மை யறிவு இறைவன் உள்நின்றுணர்த்தத் தானே உண்டாகும். பிரளயாகலருக்கு அவ்வாறன்றித் தனது தெய்வ வடிவையே குருவடிவாகக் கொண்டு முன்னின்று ஞானத்தை உணர்த்துவன். அறியாமையுடைய சகலர்க்கு அவர் வடிவுபோலும் வடிவுடைய குருவாகிவந்து அவ்வடிவின்பின்னாக மறைந்துநின்று உண்மையறிவை நல்குவன்.

குறிப்பு :—விஞ்ஞானகலர் - விஞ்ஞானத்தாற் கலையற்றவர். பிரளயாகலர் - பிரளயத்தாற் கலையற்றவர் சகலர் - கலையோடு கூடினவர். இவர்கள், முறையே ஒருமலம் இருமலம் மும்மலமுடையவர். அன்றிப் பிர...முன் என்பதை முதலடிக்குப் பின் வைத்துப் பொருள் கொள்க. தன்மை, முன்னிலை, படர்க்கை யென்ற முறையில் உபதேசம் நிகழும் என்றவாறு.

அறிவிக்க அன்றி அறியா வுளங்கள்
செறியுமாம் முன்பின் குறைகள்—நெறியிற்
குறையுடைய சொற்கொள்ளார் கொள்பவத்தின் வீடென்
குறைவில்சகன் சூழ்கொள் பவர்க்கு.

உரைநடை :—நெறியில் அறிவிக்க அன்றி அறியா உளங்கள், குறைவில் சகன் சூழ்கொள்பவர்க்குக் குறைகள் முன்பின் செறியும். குறையுடைய சொற்கொள்ளார் கொள் பவத்தின் வீடு என்.

உரை :—உயிர்கள் தமக்கு உரிய படிமுறையில் வைத்து முதல்வன் அறிவிக்க அறியும் இயல்பினவாகலான், குறைவில்லாத உலகமுதல்வன் உபதேசமொழியை வேண்டி நின்ற

விஞ்ஞானகலர், சகலருக்குக் குறையாகப் பெறுதற்குரியனவாய இன்றியமையா உபதேசம், முன்னிலையிலும் பின்னிலையிலும் நிகழும். உபதேசமொழியை இன்றியமையாது வேண்டாத விஞ்ஞானகலர்க்கு இறைவனாற் கொள்ளப்பட்ட நிகழ்ச்சியளவிலேயே வீடுபயக்கு முணர்வு உண்டாமென்று சொல்லுக.

குறிப்பு :—குறைகள் - முற்றுப் பெறுதற்கு இன்றியமையாக் குறையாயிருந்தவைகள். பவம் - நிகழ்ச்சி. சகன் - உலக முதல்வன். சூழ் - உபதேசம்.

இல்லா முலைப்பாலுங் கண்ணீரும் ஏந்திழைபால்
நல்லாய் உளவாமால் நீர்நிழல்போல்—இல்லா
அருவாகி நின்றானை யார்அறிவார் தானே
உருவாகித் தோன்றானேல் உற்று.

உரை :—நல்ல மாணவனே ! (ஏந்திய அணிகலனையுடைய நங்கைக்குப் பிள்ளையைக் காணுமுன்) சுரக்காத முலைப்பாலும் கண்ணீரும் பிள்ளையைக் கண்டவுடனே தோன்றுகின்றன. அவ்வாறே நீரில் மறைந்த நிழல்போல உயிர்களொடு கலந்து புலப்படாது நின்ற முதல்வனை, அவன் குருவடிவமாய் உருவெடுத்துத் தோன்றாவிடின், யார்தாம் அறிதல் கூடும்?

குறிப்பு :—அருவாய் - புலப்படாது.

மூன்றும் அதிகரணம்

இனி, இவ்வான்மாக்கள் ஐயுணர்வுகளான் மயங்கித் தம்மையுணரா என்றது.

உரை :—மேல், இவ்வுயிர்கள் ஐம்பொறி யறிவுகளால் திரிபுணர்ச்சியுடையனவாய்த் தம்மை அறியமாட்டா.

ஏது :—அவைதாம் பளிங்கில்விட்ட வன்னம்போற் காட்டிற்றைக் காட்டி நிற்றலான்.

உரை :—பளிங்கிற் பொருந்திய நிறங்கள் தமது இயல்பினைக் காட்டுவனவன்றிப் படிகவொளியைக் காட்டாமை போல, ஐம்பொறியறிவுகள் தமக்குப் புலனாய விடயங்களையே உயிர்க்குக் காட்டி நிற்றலால்.

குறிப்பு :—ஒவ்வொரு பொறியும் தனக்குப் புலனுபவதையே காட்டு மென்பார், 'காட்டிற்றை' என ஒருமையாற் கூறினர்.

பன்னிறங் காட்டும் படிகம்போல் இந்திரியம்
தன்னிறமே காட்டும் தகைநினைந்து—பன்னிறத்துப்
பொய்ப்புலனை வேறுணர்ந்து பொய்பொய்யா மெய்கண்டான்
மெய்ப்பொருட்குத் தைவமாம் வேறு.

உரை :—பளிங்கானது தன்னுற் சாரப்பட்ட பல நிறங்களையே காட்டி நிற்பதுபோல, சார்ந்த பொறிகளின் தன்மையையே தன்மாட்டுக் காட்டும் தனது பொதுவியல்பை நினைந்து பல் நிறங்கள் படிகத்திற்கு வேறு என்றறியுமாறு போல, பொதுவியல்பைக் காட்டும் பொறிகளைத் தன்னின் வேறென அறிந்து, அப் பொதுவியல்பு நிலையாதொழியுமாறு, தனது சிறப்பியல்பை யுணர்ந்தோன் (அசத்தாகிய பொறிகளுக்கு) வேருகிய மெய்ப்பொருளாகிய தெய்வத்தின் அடிமையாவன்.

குறிப்பு :—பொய் - பொதுவியல்பு. மெய் - சிறப்பியல்பு. தைவம் - தேவனுடைமை. இறுதியடியில், 'வேறு மெய்ப்பொருட்கு' என்பதோடு முடிவது.

நான்காம் அதிகரணம்

இனி, இவ்வான்மாத் தன்னை இந்திரியத்தின் வேருவான் காணவே, தமது முதல் சீபாதத்தை அணையும் என்றது.

உரை :—மேல் தவமுற்றிய உயிரானது, தன்னை ஐம் பொறிகளுக்கும் வேருகவுணரவே, தமது தலைவனது திருவடியை அடையும்.

குறிப்பு :—இந்திரியத்துக்கு வேருகக் கேவல நிலயடையாது என்பார், 'காணவே' என்முர்.

ஏது :—ஊசல் கயிறற்ருல் தாய் தரையேயாந் துணையான்.

உரை :—ஒருவன் ஏறியிருந்து ஆடுகின்ற ஊஞ்சல், அது தொங்கவிட்டுள்ள கயிறு இற்றுவிழநேரின், உற்றுழி யுதவுந்

தாய்போல அதற்குத் தாரகமாக உதவுவது நிலனேயா மாதலால்.

சிறைசெய்ய நின்ற செழும்புனலின் உள்ளம்
சிறைசெய் புலன்உணர்வில் தீர்ந்து—சிறைவிட்(டு)
அலைகடலிற் சென்றடங்கும் ஆறுபோல் மீளா(து)
உலைவிலரன் பாதத்தை உற்று.

உரை :—அணையை உயர்த்துக்கட்டித் தடை செய்தலினால் தேங்கிநின்ற ஆற்றுநீர்போலப் பாச ஞானங்களால் வியாபகம் தடைப்பட்டுநின்ற உயிரானது, தடைநீங்கிய காலத்தே கடலின்கட் சென்றடங்கி மீண்டு பிரிந்துவாராத ஆற்றுநீர் போலத், தனக்குத் தடைசெய்கின்ற பொறியுணர்வு நீங்கிய வழி, கேடில்லாத சிவபெருமானின் திருவடிகளை யடைந்து அத் திருவடி நிறைவேயாய் அதன்கண் அடங்கிப் பின்பு மீளுதல் செய்யாது.

எவ்வுருவுந் தான்என்னில் எய்துவா ரில்லைதான்
இவ்வுருவில் வேறேல் இறையல்லன்—எவ்வுருவுங்
கண்போல் அவயவங்கள் காணா அக் கண்ணில்லார்
கண்பேறே காணக் கழல்.

உரை :—ஐம்பொறியுணர்வு உள்பட எவ்வகை யுணர்வும் இறைவனே என்றால், அவனைப் போயடைய விரும்புவார் யாரும் இல்லை. உயிருணர்வோடு இறைவன், தொடர்பில்லா னென்னில், அவன் முழுமுதல்வன் ஆகான். கண்போலப் பிறபொறிகள் புலன்களைச் சென்று பற்றுவனவல்ல. அது போலப் பொறியுணர்வும் உயிருணர்வும் ஒரு தன்மையன வல்ல. கண்ணில்லாதவர் கண்பெற்றவிடத்தே, அவர்கள் அனுபவத்தால் அத்தன்மைத்தாய வெற்றியை அறிக.

குறிப்பு :—கழல் - வெற்றி. பிற பொறிகளினு மிகுதியாயுள்ள வியாபகச்சிறப்பு. புலன் உணர்வு பற்றியதை யறியும். உயிருணர்வு வியாபித்தறியும். பிற அவயவங்கள் பொறியுணர்வுக்கும், கண் உயிருணர்வுக்கும் உவமையாயின.

ஐம்பொறியின் அல்லையெனும் அந்த தரசிவனை
ஐம்பொறியை விட்டங்(கு) அணைசகலன்—ஐம்பொறியின்
நீங்கான்நீர்ப் பாசிபோல் நீங்குமல கன்மம்வரின்
நீங்கானை நீங்கு நினைந்து.

உரை :—ஐம்பொறிகள்போல, அளவுபட்ட விளக்கம் உடையவனாகாய் என்று அறிவுறுக்கப்பட்ட முடிந்த உபதேச முடையவனே ! ஐம்பொறிகளை விட்டுச் சிவனை அடைகின்ற சகலனாகிய ஆன்மா, ஐம்பொறிகளோடு இருத்தல் பற்றிச் சிவனைவிட்டு நீங்கமாட்டான். நீர்மேலே பரந்த பாசியைப் போல, நீங்கக்கூடிய ஆணவமலம், வினை முதலியன வாசனை வயமாக வந்து கூடுமாயின், தன்னை நீங்காத முதல்வனை நினைந்து அவற்றைவிட்டு விலகுவன்.

குறிப்பு :—அந்தரை - முடிவான சொல்லுடையவனே இறுதியில், 'நினைந்து நீங்கும்' என மாறுக.

ஒன்பதாஞ் சூத்திரம்

ஊனக்கண் பாசம் உணராப் பதியை
ஞானக் கண்ணினிற் சிந்தை நாடி
உராத்துனைத் தேர்த்தெனப் பாசம் ஒருவத்
தண்ணிழலாம் பதிவிதி எண்ணும் அஞ்செழுத்தே.

கருத்து :—ஆன்மசுத்தி பண்ணுமாறுணர்த்துதல் நுதலிற்று.

உரை :—குறைவான அறிவாகிய பாசஞானத்தா லறியப் படாத முதல்வனை அவனது திருவடி ஞானமாகிய கண்ணினால், அறிவின்கண்ணே ஆய்ந்தறிக. ஒருவரும் ஏறிச்செலுத்தாத விரைவுடைய பேய்த்தேராகிய கானல்போலப் பாசக்கூட்டம் நீங்கி யொழிய இறைஞானமானது பிறவித்துயராகிய வெப்பத் திற்குக் குளிர்ந்த நிழலாய் வெளிப்பட்டு, விளங்கும். அக்

காட்சி சலியாமைப் பொருட்டு, அப் பொருள் பயக்குந் திருவைந்தெழுத்தை விதிப்படி தியானிக்க.

குறிப்பு :—கண் - அறிவு, சிந்தை - உயிரறிவு. நாடி - நாடுக. உரா - ஊராத. துனை - வேகம், ஒருவ - நீங்க. பதி - இறைஞானம். எண்ணு - வினை.

கருத்துப் பொருள் :—வாசனா மலம் தாக்காது உயிரினைப் புனித மாக்குவதை உணர்த்துதல் கருதியது.

முதல் அதிகரணம்

ஈண்டு அம்முதலை ஞானக்கண்ணாலே காண்க என்றது.

உரை :—வெளிப்படை.

ஏது:—அவன் வாக்கு மனாதீத கோசரமாய் நிற்றலான்.

உரை :—பாச பசு ஞானங்களுக்கு அப்பாற்பட்டுப் பதியறிவாலே அறியத்தக்கவனா யிருத்தலால்.

நாடிபோ என்போ நரம்புசிக் கோழைபோ
தேடி யெனையறியேன் தேர்ந்தவகை—நாடியான்
தன்னாலே தன்னையுங் கண்டு தமைக்காணார்
என்னும் எனஅறிவார் இன்று.

உரை :—(இடை, பிங்கலை முதலிய) நாடிகளோ, எலும்போ, நரம்போ, தண்ணீர் கோழை முதலியவற்றுள் யான் யார் என்று தேடியும் என்னை அறிகின்றிலேன் என்று தேர்ந்தறியும் அறிவின்கண்ணே ஆய்ந்தால், விளங்கித் தோன்றுவதாய அரனது பேரறிவாலே அரனை யறிந்து அவனுளடங்கி நின்றறியும் பொருளாய தம்மை யறிய மாட்டாதார் முத்திக்காலமாகிய இப்போது தம்மை எவ்வியல்பினரென அறிவார்.

குறிப்பு :—பாசங்களுள் ஒன்றல்லன் ஆன்மா வென்ப தறிந்து, இறையறிவு பெற்ற காலத்தே அவன் வியாபகத்தி லடங்கிப்

ஆன்மாவை இறையறிவாற் காணப்பெறுதல் கூடும். அவ்வாறன்றி வேறு எவ்வாறு உயிரை அறிதல் கூடும் என்றவாறு. 'இன்று என் என அறிவாராம்' என இறுதியடிக்கு உரைநடை கொள்க.

காட்டிய கண்ணே தனைக்காணு கண்ணுக்குக்
காட்டாய வுள்ளத்தைக் கண்காணு—காட்டிய
உள்ளந் தனைக்காணு துள்ளத்தின் கண்ணாய
கள்வன்றன் உள்ளத்திற் காண்.

உரை :—உயிரால் காட்டப்படும் ஒன்றைக் காண்கின்ற கண்ணனது தன்னை யறியமாட்டாது. தனக்குப் பொருள் களைக் காட்டுவதாய உயிரையும் அறியமாட்டாது. அதுபோல முதல்வன் காட்ட ஒன்றைக் காண்பதாய உயிர் தன்னையுமறி யாது தலைவனையுமறியாது. உயிரின் தேர்ச்சி அறிவின்கண் உடனாய் நிற்கும் மறைபொருளாகிய முதல்வனை அவ்வறிவிலே நாடித் தெளிவாயாக.

குறிப்பு :—காட்டிய - காட்டப்பெற்ற, உள்ளம் - உயிர். மூன்றும் அடியில், கண் - அறிவு.

இரண்டாம் அதிகரணம்

இனி, அசத்தாயுள்ள வன்ன பேதங்களை அசத்து என்று காண உளதாய் நிற்பது ஞானசொருபமென் றுணரற்பாற்று.

ஏது :—வேற்றியலாகிய வன்ன பேதங்களை வேற்றியல்பென்று கண்டு கழிப்பின் உளதாய் நிற்பது, படிக சொருபமாந் துணையான்.

உரை :—படிகத்தின்பாலுள்ள நிறவேற்றுமைகளைப் படிகத்தின் குணமல்லவென்று கழித்தவிடத்து, எஞ்சி நிற்பது படிக வியல்பாகுமாதல்போல, நிலையானபொருளை அறியும் ஞானத்தை மறைத்து நிற்கும் அசத்துப் பொருள்களி னுணர்வை நிலையிலாதனவென ஆசிரிய மொழியில் உறைத்து நின்றுகண்டு கழித்தவிடத்தே, தோன்றி விளங்குவது சிவ ஞானத்தின் வடிவமென் றறியற்பாலது.

நிர்க்குணனாய் நின்மலனாய் நித்திய னந்தனாய்த்
தற்பரமாய் நின்ற தனிமுதல்வன்—அற்புதம்போல்
ஆனா அறிவாய் அளவிறந்து தோன்றானே
வானே முதல்களையின் வந்து.

உரைநடை :—நாலாமடியை மூன்றாம் அடிக்குமுன் கொள்க.

உரை :—குண ரூபமாக அறியப்படும் அசுத்தமாயா காரியங்களையும், மலகன்ம காரியவடிவா யறியப்படும் கலப்புப் பிரபஞ்சத்தையும், நிலையில்லாத இன்பவடிவாய் விளங்கும் சுத்தப் பிரபஞ்சத்தையுங் கடந்தவனாய், உயிரினுணர்வுக்கு மேற்பட்டவனாய் நின்ற சிவஞானத்தாலன்றிப் பிறவற்றாலறியப் படாத முதல்வன், ஆகாய முதலியவற்றை அசத்தென நீக்கிய விடத்து, இன்னதென்றறிய வாராத சூனியப் பொருள்போலத் தோன்றி, உயிரின் அகண்ட அறிவின்கண் நீங்காது நிலை பெறும் பேரறிவாய்த் தோன்றுவான்.

குறிப்பு :—குணதத்துவ மூலமாகிய பிரகிருதியைக் கடந்தவன் என்பார் 'நிர்க்குணன்' என்றும், ஆணவம், வினை முதலியவற்றின் சார்புடைய அசுத்தமாயையைக் கடந்தவன் என்பார் 'நின்மலன்' என்றும், சுத்த தத்துவங்களையுங் கடந்தவனென்பார் 'நித்தியானந்தன்' என்றும், உயிராகிய தனக்குப் பரமானவர் என்பார் 'தற்பரம்' என்றும், சிவஞானத்தாலேயே அறியப்படுதலின் 'தனி'யென்றும் உரைத்தார். அற்புதம் - சூனியம். ஆனா - நீங்கா. 'வானே' என்பதில் ஏகாரம் அசை. முதல் - முதலியவற்றை.

சுட்டி யுணர்வதனைச் சுட்டி யசத்தென்னச்
சட்ட இனியுளது சத்தேகாண்—சுட்டி
உணர்ந்தநீ சத்தல்லை உண்மையைத் தைவம்
புணர்ந்ததனாற் பொய்விட்டுப் போம்.

உரை :—சுட்டி யறியப்படும் பொருளை அசத்தென்று சுட்டி யறிந்து கழிக்கவே, முடிவாய்ச் செப்பமாயுள்ளது சத்தாகிய சிவமே யென்றறிக. சுட்டுப் பொருளோடு சார்ந்தறிந்து வந்த நீ, அதனின் வேறான சத்தாக மாட்டாய். நீ சத்துப் பொருளுக்கு அடிமையாய் அதனைச் சேர்ந்தால் சுட்டுணர்வு உன்னை விட்டொழியும்.

குறிப்பு :—சத்துப் பொருள் அசத்தின் வேறென்று மேற் காட்டினமையால், அசத்தினொடு சார்ந்து சுட்டுணர்வுடைய நீ சத்தாக மாட்டாய் என்றவாறு. சட்ட - செப்பமாக. இனி - முடிவில். தைவம் - அடிமை. உண்மையை - உண்மைக்கு, சத்துப் பொருட்கு. போய் - சுட்டுணர்ச்சி.

கண்டதை யன்றன் றெனவிட்டுக் கண்டசத்தாய்
அண்டனை யான்மாவில் ஆய்ந்துணரப்—பண்டணைந்த
ஊனத்தைத் தான்விடுமா(று) உத்தமனின் ஒண்கருட
சானத்திற் றீர்விடம்போற் றான்.

உரை :—சுட்டறிவாற் கண்ட பொருள் ஒவ்வொன்றையும் இது சத்தன்று இது சத்தன்று எனக் கழித்து உயிரறிவின் கண்ணே சுட்டுணர்வில்லாது நின்ற தேவனை ஆராய்ந்து அத்துவிதமாய் அவனைப் பாவித்துணர்ந்தால், அப்பாவனையில் விளங்கித்தோன்று முதல்வனால், சுட்டுணர்வு ஒழியுமுறை, கருட தியானத்தால் விடம் நீங்குவதுபோலாகுமென்க.

குறிப்பு :—அண்டன் - தேவன், கடவுள். உணர - அத்துவித பாவனையால் உணர. சானம் - தியானம். ஊனம் - சுட்டுணர்வு.

மூன்றும் அதிகரணம்

இனி, இவ்விடத்து ஸ்ரீ பஞ்சாக்கரத்தை விதிப்படி உச்சரிக்க என்றது.

உரை :—பதியை ஞானக்கண்ணால் நாடிய பின்னர் அவ் விடத்து முத்தி பஞ்சாக்கரமாய பிரணவத்தை அதன்பொருள் அறிவின் விளங்கும்படி அறிவிலே கணிக்க என்றவாறு.

ஏது :—இவ் வான்மாக்களுக்கு ஞானம் பிரகாசித்தும், அஞ்ஞானத்தை வேம்பு தின்ற புழுப்போல, நோக்கிற்றை நோக்கி நிற்குமாகலின், அதனை நீக்குதற்கு எனக் கொள்க.

உரை :—வேப்பங் கனியைத் தின்று சுவைகண்ட புழு, கரும்பைத் தின்றபோதும், பழக்கத்தினாலே முன் தின்ற வேம்பை நோக்கி நிற்குமாறுபோல, பக்குவமடைந்த ஆன் மாக்களுக்குச் சிவஞானம் விளங்கிய காலையும், வாசனை

வயத்தால் பண்டைச் சிற்றுணர்வை நோக்கி நிற்குமாதலின், அவ் வாசனையை நீக்குவதற்கு என்க.

அஞ்செழுத்தால் உள்ளம் அரன்உடைமை கண்டரனை
அஞ்செழுத்தால் அர்ச்சித்(து) இதயத்தில்—அஞ்செழுத்தாற்
குண்டலியிற் செய்தோமங் கோதண்டஞ் சானிக்கில்
அண்டனும் சேடனும் அங்கு.

உரை :—உயிர் சிவனுக்கு உடைமைப்பொருளாதலை ஐந்தெழுத்து ஓது முறையினால் அறிந்து இதயத்திலே அஞ்செழுத்தினா லமைந்த முதல்வன் திருமேனியில் (கொல்லாமை, பொறியடக்கம், பொறுமை, அருள், அறிவு, வாய்மை, தவம், அன்பு) என்னும் எண்மலர் தூவி வழிபட்டு அஞ்செழுத்தினால், குண்டலித்தானமாகிய உந்தியிலே ஞான அனலை யெழுப்பி, அதன்கண் ஓமஞ் செய்து, புருவநடுவில் (அஞ்செழுத்தில் சிகர யகர வகரங்கள் நிற்குமுறையை) நினைப்பின், இறைவன் விளங்கித் தோன்றுவன். உயிரும் அவனுக்கு அடிமையாய் விளங்குவன்.

குறிப்பு :—கோதண்டம் - இமை, அஃதாவது புருவநடு. சானிக்கில் - தியானிக்கில்.

இந்துவிற் பானுவில் இராகுவைக் கண்டாங்குச்
சிந்தையிற் காணிற் சிவன்கண்ணும்—உந்தவே
காட்டாக்கிற் றோன்றிக் கனல்சேர் இரும்பென்ன
ஆள்தான்ஆம் ஓ(து) அஞ்செழுத்து.

உரை :—சாதாரணமாய்க் காணப்படாத இராகுகேதுக்களைக் கிரகண காலத்தில், சந்திரனிலும் சூரியனிலும் கண்டாற் போல உள்ளத்தின்கண் அஞ்செழுத்துமுறையில் வைத்துச் சிந்தித்தால், கடைந்தகாலை விறகிற்றோன்றும் நெருப்புப் போல, சிவன்தோன்றி அறிவுக்கறிவாய் விளங்கிநிற்பன். அப்பொழுது உயிர்தானும் நெருப்பைச் சேர்ந்த இரும்பு போலப் பெருமானுக்கு அடிமையாகும். ஆதலால் திருவஞ்செழுத்தை விதிப்படி எண்ணுக.

குறிப்பு : கேது சூருமலே விளங்கக் கிடந்தது இந்துவையும் பாநுவையுங் கூறினமையால். உந்தவே - கடையவே. காட்டாக்கி - காட்டத்தின் அக்கினி.

மண்முதல் நாள(ம்) மலர்வித்தை கலாரூபம்
எண்ணிய ஈசர் சதாசிவமும்—நண்ணிற்
கலையுருவா நாதமாஞ் சத்தியதன் கண்ணும்
நிலையதிலாம் அச்சிவன்தாள் நேர்.

உரை நடை :—நண்ணில், மண்முதல் நாளம், வித்தை மலர், கலாரூபம் ஈசர், சதாசிவமும் கலையுருவாம். சத்திநாதம் அதன் கண்ணும். அச் சிவன் தாள், அதில் நிலையாம் நேர்.

உரை :—தியானிக்குமிடத்து, மண் முதல் பிரகிருதி வரையுள்ள தத்துவங்கள் உந்தியில் நின்று மேலெழுந்த தண்டு. வித்தியாதத்துவமேழும் சுத்த வித்தையும் எட்டிதழ்த் தாமரைப்பூ. அதன் கேசரங்கள் அவற்றிற்கு மேலாகக் கருதப்பட்ட ஈசுர தத்துவமும் சதாசிவ தத்துவமும். சத்தி தத்துவம், தாமரைப் பொகுட்டு. சிவதத்துவம், அப் பொகுட்டியிலுள்ள வித்துவடிவமாம். அம் முப்பத்தாறு தத்துவங்களாலாகிய இருக்கையிலே, அச் சிவனது சத்தி நிலைபெறும். அதனை அறிந்து வணங்குக.

குறிப்பு:—கேசரம் - தாது. பொகுட்டு - கொட்டை. கலை, அறுபத்து நான்காதலின், கேசரம் அறுபத்து நான்கிற்குவமையாம். கலை யுருவு - கலைக்குள் உருவு, பொகுட்டு. சத்திக்கு மேல் சிவமென்பது குறிப்பானுணர்க.

பத்தாஞ் சூத்திரம்

அவனே தானே ஆகிய அந்நெறி
ஏக னாகி இறைபணி நிற்க
மலமாயை தன்னொடு வல்வினை யின்றே.

இ - ள் :—பாச க்ஷயம் பண்ணுமாறுணர்த்துதல் நுதலிற்று.

உரை :—உயிர்கள் கட்டுற்ற காலத்திலே, இறைவன் உயிரோடு அத்துவிதமாய்க் கலந்து நின்ற அம்முறையே, உயிர் முதல்வனோடு ஒற்றித்து நின்று தானென வேறு காணப் படுமாறில்லாமல், இறைவன் கட்டளையில் வழுவாது நிற்கவே, ஆணவமலம், மாயை என்பவற்றோடு, கொடிய வினையும் இல்லையாய் ஒழியும்.

கருத்து :—(முற்றிலும்) பாசநீக்கம் பண்ணும் வகை புணர்த்துவதைக் கருதியது. இச் சூத்திரம் திருவருட் பேற்றினை புணர்த்துவது.

முதல் அதிகரணம்

ஈண்டுப் பரமேசுரன் இவ்வான்மாவாய் நின்ற முறைமையான் அவனிடத்து ஏகனாகி நிற்க என்றது.

உரை :—சூத்திரப் பொழிப்பால் விளங்கும்.

ஏது :—அவ்வாறு நிற்கவே யான் எனது என்னுஞ் செருக்கற்று அவனது சீபாதத்தை அணையும் ஆகலான்.

உரை :—அங்ஙனம் ஒற்றுமைப்பட்டு நிற்றலால், யானும் எனதும், எனப் பகுத்துணருந் திரிபுணர்ச்சிக்குக் காரணமாய் மலம் நீங்கி அம்முதல்வனது திருவடியாகிய சிவானந்தத்தைப் பெறும் ஆதலின்.

நான்அவன்என் றெண்ணினர்க்கு நாடும்உளம் உண்டாதல்
தான்எனஒன் றின்றியே தான்அதுவாய்—நானெனவொன்(று)
இல்லென்று தானே யெனும்அவரைத் தன்னடிவைத்(து)
இல்லென்று தானும் இறை.

உரை :—யானென்றும் அவனென்றும் பகுத்துணர்வார்க்கு நானே என்பார்க்குப் போல, உயிருணர்வு முனைத்துத் தோன்றுமாதலின், தான் என்று ஒரு முதல் காணப்படுமா றின்றித் தான் இறை புணர்வு மயமாய், நான் என்பதொன் றில்லை, எல்லாம் இறைவனே யென்று தெளிவடைவாரை

இறைவன் தனது திருவடி வியாபகத்துள் அடங்கி நிற்குமாறு வைத்து அவர்களுக்குத் தானே முழுவதுமாய் விளங்குவன்.

குறிப்பு:—எண்ணினர்க்கும், என்றமையால், நானே என நிற்பார்க்கும் என்பது வருவிக்கப்பட்டது. உளம் - உயிருணர்வு. அது பரம்பொருள். இறுதியடியில் இல்லென்று - அடங்கி நிற்ப, 'இறை தானும்' என மாறுக.

இரண்டாம் அதிகரணம்

இனி, இறைபணி வழுவாது நிற்க என்றது.

உரை:—இறைவன் அருட் கட்டளையின்கண், தவறுது சலிப்பின்றி நிலை பெறுக என்றவாறு.

ஏது:—அவன் அருளால் அல்லது ஒன்றையுஞ் செய்யான், ஆகவே அஞ்ஞான கன்மம் பிரவேசியா ஆகலான்.

உரை:—அவன் அருள்வழி நின்றே செய்வனவெல்லாம் உயிர் செய்யுமாகுல், திரிபுணர்ச்சிக்குக் காரணமாகிய மாயா காரியங்களும் வினையும் ஏகனுகி நிற்பதற்குத் தடையாய் வந்து தாக்கமாட்டாவாதலின்.

குறிப்பு:—அஞ்ஞானமும் கன்மமும், என விரிக்க. ஏகனுகி 'நிற்பதால்,' ஆணவ மலமும் பணியின் வழுவாது நிற்பதால், மாயை கன்மங்களும் தாக்கா என்றனர்.

நாமல்ல இந்திரியம் நம்வழியின் அல்லவழி
நாமல்ல நாமும் அரன்உடைமை—பாமென்னில்
எத்தனுவில் நின்றும் இறைபணியார்க்(கு) இல்லைவினை
முற்செய்வினை யுந்தருவான் முன்.

உரை:—இந்திரியங்களாகிய பொறிகள் மாயாகாரிய மாவனே யன்றி, யாம் அல்ல. அவை முதல்வனுல் தொழிற்படுவனவன்றி, நமது வசமாயுள்ளன அல்ல. அவை தொழிற்படுதற்கு வாயிலாகிய விடயங்களும் மாயா காரியமாவனவன்றி நாமல்ல. அவ் விடயங்கள் செயற்படுதலும் முதல்வனுலன்றி நம் வசமாக அன்று. அவைபோல நாமும் சிவனது

உடைமைப்பொருளே. நாம் அறிவதும் செய்வதும் இறைவன் அருள் விளக்கத்தினாலேயாம் என்று உணர்ந்தால், இவ்வடிமைத் திறமுடையார் எவ்வுடம்பில் நின்று எவ்வினைகளைச் செய்தாலும் வினையாலாகிய பந்தம் இல்லை. பிராரத்த வினையும், இறைவன் திருமுன் உடல் நியதியாகக் கழியும். (எதிர் வினையாகிய ஆகாமியத்திற்கு வித்தாகமாட்டாது.)

குறிப்பு :—நம் வழியின் - நமது வசத்தில். வழிநாம் அல்ல - வாயில் நாம் அல்ல. வாயிலென்றது விடயங்களை. 'நம் வழியினல்ல' என்பது, இந்திரியத்திற்கும் 'வழி' என்பதற்கும் நடுநிலையாக நின்றமையின், இருபாலுங் கொள்ளப்பட்டது. பணியார் - பணியுடையார், அடிமைத் திறமுடையார். முற்செய்வினை - பிராரத்தம். தருவான்-ஊட்டுவிக்கு முதல்வன். முன் - சந்நிதி.

சார்ந்தாரைக் காத்தல் தலைவர் கடன்ஆதல்
சார்ந்தாரைக் காத்தும் சலம்இலனாய்ச்—சார்ந்தடியார்
தாந்தானாய்ச் செய்துபிறர் தங்கள்வினை தான்கொடுத்தல்
ஆய்ந்தார்முன் செய்வினையும் ஆங்கு.

உரை :—அடைக்கல மெனச் சார்ந்தவரை அவர்க்கு வரும் இடர்களை நீக்கிக் காத்தல் தலைமைக் குணமுடையவர் கடன் ஆதலால், முதல்வன் தன்னை யடைந்தவர்களைச் சிறப்பாகப் பாதுகாப்பானாகியும், அதுபற்றி ஒருபாற் சார்வு இல்லாதானாய், தன்னைச் சார்ந்து தன் அடித்தொழில் செய்வாரைத் தன்போல, வரும்வினைத் தொடர பிலராக்கிப் பிறர்க்கு அவரவர் வினையினை விளைத்தலால், நுணுகி வந்து பொருந்தும் பிராரத்தவினை, ஆகாமியஞ் சாராமை போலவே உயிர்ச்சார் பின்றி ஒழியும்.

குறிப்பு :—சலம் - பட்சபாதம். தங்கள் வினை - தத்தம் ஆகாமிய வினை. ஆய்ந்து - நுணுகி. ஆர் - பொருந்து. முற்செய்வினை - பிராரத்தம்.

இங்குளி வாங்குங் கலம்போல ஞானிபால்
முன்செய் வினைமாயை மூண்டிடினும்—பின்செய்வினை
மாயையுடன் நில்லாது மற்றவன்முன் மெய்ப்பொருளே
ஆயஅத னால்உணரும் அச்சு.

உரை :—பெருங்காயம் வைத்த பாத்திரத்தின்கண் காய வாசனை மெலிதாய்த் தோன்றுதல்போல, சிவஞானியிடம், வாசனையால், தன்னுணர்வு தோன்றிப் பிராரத்தமும் அதற்கு வாயிலாகிய மாயாகாரியங்களும் வந்து மூளுமானாலும், (பிறர்க்கு அப் பிராரத்தத்தோடு கூடிவருவதாய) ஆகாமியம் தனக்கு வாயிலாகிய மாயாகாரியங்களோடு கெட்டொழியும். (மேற் பிறவிக்கு வித்தாகாது.) ஞானியாய அவன் சிவமாய சத்தேயாய் நிற்றலால், (தன்னைப் பிறழவிடாத) அச்சாகிய சத்தையே அறிந்து நிற்பன்.

குறிப்பு :—முன்செய்வினை - பிராரத்தம். பின் செய்வினை - ஆகாமியம். மாயையுடன் வில்லாது - மாயையுடனாய் ஒழியும்: எடுத்த உடம்போடு நீங்கும். மெய்ப் பொருள் - சத்து. அச்சு - வார்ப்பு: பதிந்தபடியே இருப்பது. அடையாளம், உயிரெனவுங் கொள்ப. உயிர்க்குயிராகிய கடவுளை அச்சென்றார்.

நண்ணனல் வேவாத நற்றவர் தம்மினும்
பண்ணமர மாச்செலுத்தும் பாகரினும்—எண்ணி
அரனடி ஓர்பவர் ஐம்புலனிற் சென்றும்
அவர்திறன் நீங்கார் அதற்கு.

உரை :—மிகுந்த தீயினாலும் வேவாத அனற்கட்டுடைய நல்ல மந்திர வலியுடையோரைப்போலவும், செவ்வையாகச் செலுத்துதல் அறிந்து குதிரைமேலேறி அதன் வேகத்தாற் கீழே விழாது அதனைச் செலுத்துவோர் போலவும், ஐம்புலனில் அகப்படாமைக்குரிய சூழ்ச்சி அறிந்து முதல்வன் திருவடியை உணரவல்லார், பிராரத்தத்தால், ஐவகை விடயங்களிற் சென்றாலுந், தமது அருள் திறமையின் நீங்கிக் (கட்டுப் படமாட்டார்).

குறிப்பு :—தவர் - மந்திரவலியுடையர். பாகர் - செலுத்துவோர் அமர - பொருந்த. மா - குதிரை.

சதசத்தாம் மெய்கண்டான் சத்தருளிற் காணின்
இதமித்தல் பாசத்தில் இன்றிக்—கதமிக்(கு)
எரிகதிரின் மூன்னிருள்போல் ஏலா அசத்தின்
அருகணையார் சத்தணைவார் ஆங்கு.

உரை:—தான் சதசத்தென உண்மை யுணர்ந்தவன் சத்தாகிய முதல்வனது அருள்வழியே நின்று எவற்றையும் பார்ப்பின், பாசமாகிய அசத்து அவனுக்கு இன்பஞ் செய்யாமையால், சீற்றமிகுந்து எரிகின்ற தீமுன் இருள்போல சத்தாகிய திருவருள்முன், அசத்து தனது வலி மடங்கிவிடு மாதலின், சத்தை அணைந்தவர் அவ்விடத்தே அசத்தைச் சாரமாட்டார்.

குறிப்பு :—கதம் - விரைவு ; வேகம் என்றலு முண்டு.

பதினோராஞ் சூத்திரம்

காணுங் கண்ணுக்குக் காட்டும் உளம்போல்
காண உள்ளத்தைக் கண்டு காட்டலின்
அயரா அன்பின் அரன்கழல் செலுமே.

கருத்து :—பரமேசுரனது சீபாதங்களை அணையுமாறு உணர்த்துதல் நுதலிற்று.

உரை :—காட்டக் காணும் இயல்புடைய கண்ணுக்கு உருவத்தைக் காட்டித் தானும் காண்கின்ற உயிர்போல, உயிர் பொருள்களை அறியும்படி முதல்வன் அதனோடு இயைந்து நின்று அறிவித்து அறிந்து வருதலால், அவ் உபகாரத்தை மறவாது கடைப்பிடித்துச் செய்யும் அன்பாலே, முதல்வன் திருவடியாகிய சிவானந்த அனுபவத்தை எய்தும்.

குறிப்பு :—கண்டு காட்டலின் என்பதைக் காட்டிக் காணலின் எனக் கொள்க. அயரா - மறவாத. உள்ளத்தை - உள்ளத்துக்கு, உயிர்க்கு.

கருத்து :—பரமசிவனுல் விளையுஞ் சிவானந்தானுபவங் குறித்தல் கருதியது.

முதல் அதிகரணம்

ஈண்டு அவனும் அவற்றது விடயத்தை யுணரும் என்றது.

உரை :—முதல்வனும் ; உயிர்களால் உணரப்படும் பொருள்களை உடன் நின்று அறிவன்.

ஏது :—இவ்வான்மாக்கள் அவனை இன்றியமைந்து ஒன்றையும் விடமியா வாகலான்.

உரை :—(விளக்கொளி கண்ணொளியொடு கலந்து கண்ணொளியொடு உருவத்தினுங் கலந்தாலன்றிக் கண் உருவத்தைக் காணுமைபோல) முதல்வன் அறிவு உயிரொடு விரவி நின்று உயிரறிவொடுகூடச் சென்று பொருளினுங் கலந்தாலன்றி ஒன்றையும் உயிர் அறியா தாகலான்.

ஐந்தையும் ஒக்க உணரா(து) அவற்றுணர்வ(து)
ஐந்துபோல் நின்றுணரும் ஆகலான்—ஐந்தினையும்
ஒன்றென்றுப் பார்த்துணர்வ துள்ளமே எவ்வுலகும்
ஒன்றென்றுப் பார்க்கும் உணர்ந்து.

உரை நடை :—உள்ளம் அவற்றுள் ஐந்தும்போல் நின்றுணரும் ஆகலான், ஐந்தையும் ஒக்கஉணராது; ஐந்தினையும் ஒவ்வொன்ருய்ப் பார்த்துணர்வது. ஒன்று எவ்வுலகும் ஒன்ரு உணர்ந்து பர்க்கும்.

உரை :—ஆன்மாவானது பொருள்களை அறியுங்கால் ஐம்பொறிபோல அதுவது வாய்ச் செறிந்து அறியுந் தன்மைத் தாதலான், ஐம்புலன்களையும் ஒருங்கே உணரமாட்டாது. அவ்வைந்தினையும், ஒவ்வொன்ருக அறிந்தனுபவிக்கும். ஆனல், என்றும் ஒரு பெற்றித்தாய சிவம், எல்லா உயிர்களுடைய எல்லாப் பொருள்களையும் பொதுவகையான் ஒருங்கே உணர்ந்து அவ்வுயிர்களுடன் நின்று சிறப்புவகையாக அறியும்.

ஏகமாய் நின்றே இணையடிகள் ஒன்றுணரப்
போகமாய்த் தான்விளைந்த பொற்பினுன்—ஏகமாய்
உள்ளத்தின் கண்ஆனுன் உள்குவார் உள்கிற்றை
உள்ளத்தால் காணுனே மற்று.

உரை :—(உயிரானது) ஒன்ருகிய முதல்வனேடு ஒற்றுமைப்பட்டு நின்று அவன் இரண்டு திருவடிகளையும் அறியவே அம்முதல்வன் பரபோகமாய் விளைகின்ற பொலிவுடையனுதலாலும்

உயிரறிவின்கண்ணே ஒற்றுமைப்பட்டுப் பொருந்தினவனாதலாலும் கருதுவார் கருதுகின்ற தன்னை அவரறிவோடு கூடி நின்று அறியமாட்டானோ? (அறிவான்).

குறிப்பு :—உள்கிற்றை - கருதிய முதல்வனை. உள்ளத்தால் - உயிரறிவோடுநின்று. உற்று - பொருந்தி.

இரண்டாம் அதிகரணம்

இனிப் பத்தியினன் மறவாதேத்த அவனது சீபாதத்தை அணையும் என்றது.

உரை :—வெளிப்படை.

ஏது : அவன் அன்னியமின்றிச் செய்வோர் செய்திப் பயன் விளைத்து நிற்றலான்.

உரை :—அவன் வேறுநில்லாது செய்வோர் செய்வனவற்றை அறிந்து செய்திக்குத்தக்க பயனைப் பெறுவித்தலால்.

அருக்கன்நேர் நிற்பினும் அல்இருளே காணார்க்(கு)
இருட்கண்ணே பாசத்தார்க்(கு) ஈசன்—அருட்கண்ணால்
பாசத்தை நீக்கும் பகல்அலர்த்துந் தாமரைபோல்
நேசத்தில் தன்உணர்ந்தார் நேர்.

உரை :—கதிரவன் எல்லார்க்கும் ஒப்ப விளங்கினாலும், காட்சியில்லார்க்கு இரவிலுள்ள இருட்டுப்போல்வதாம். அதுபோல, பாசமுடையவர்களுக்கு இறைவன் இருளிடத்தனாவான். (மலரும் பருவத்துத்) தாமரையைக் கதிரவன் அலர்த்துவதுபோல, பேரன்பால் தன்னை உணர்வார்க்கு நேரான தனது திருவருட்பார்வையால் இறைவன் பாசத்தை நீக்குவன். ஆதலால், சீவன்முத்தரும் பிறரும் ஒருதன்மையரல்லர்.

குறிப்பு :—அல் - இரவு. காணார்க்கு அல்லிருள் என மாறுக. இருட்கண் - இருளிடம். பகல் - கதிரவன். நேர் என்பதை 'அருட்கண்ணால்' என்பதனோடு முடிக்க.

மன்னும் இருளை மதிதுரந்தவா(று) அன்பின்
மன்னும் அரனே மலந்துரந்து—தன்னின்

வலித்திரும்பைக் காந்தம் வசஞ்செய்வான் செய்தல்
சலிப்பில் விகாரியலன் தான்.

உரை:—(இரவில்) நிலைபெறும் இருளைப் பிறையானது நாள்தோறும் சிறிது சிறிதாக ஓட்டுகிறதுபோல, உயிர்கள் பாற் பேரன்புடைய முதல்வன், உயிர்களின் பாசத்தைச் சிறிது சிறிதாக நீக்கிக் காந்தம் இரும்பைத் தன்பால் வலிந்து இழுத்துத் தன் வசமாக்கிக்கொள்ளுதல் போல, உயிரின் மலம் நீங்க நீங்கத் தனது அருட்சத்தியைப் பதிவித்து உயிரைத தன்கண் வலித்துக்கொண்டு தன்வசமாக்கிவருஞ் செய்கையில் முதல்வன் சலிப்பில்லாதவன். (தன் சந்நிதி மாத்திரையிற் செய்தலின்), விகாரப்படுவானல்லன்.

குறிப்பு :—அன்பின் மன்னும் - விருப்பத்தில் நிலைபெறும்.

நசித்தொன்றின் உள்ளம் நசித்தலால் ஒன்று
நசித்திலதேல் ஒன்றுவ தில்லை—நசித்துமலம்
அப்பணைந்த உப்பின் உளம்அணைந்து சேடமாம்
கப்பின்றும் ஈசன் கழல்.

உரை :—உயிர்கள் ஒரு பொருளாகிய இறைவனிற் கலக்குங்காலை, கெட்டொழியுமாயின், அவை இறைவனை ஒன்ற மாட்டா. கெடுதலில்லாதிருப்பின், உயிரும் இறைவனும் இருவேறு பொருளாய் நிற்றலாமேயன்றி ஒன்றுவதில்லை. மலம் கெடப்பெற்று, நீரிற்கரைந்த உப்புப்போல உயிர் இறைவனிற் கலந்து அவனுக்கு அடிமையாம். பின் கவர்ச்சியாகிய மீளுதல் இல்லை.

குறிப்பு :—கப்பு - கவர்ச்சி, பிரிவு. சேடம் - சிறப்புவகையால் அடிமையாதல்.

பொன்வாள்முன் கொண்மூவிற் புக்கொடுங்கிப் போயகலந்
தன்வாளே எங்குமாந் தன்மைபோல்—முன்வாள்
மலத்தின் மறைந்(து) உள்ள(ம்) மற்றுலகை உண்ணும்
மலத்(து) இரித்துச் செல்லும் வரத்து.

உரை :—கதிரவனொளி, தன் முன்னுள்ள மேகபடலத்துட் புகுந்து மறைந்து, அம்மேக படலஞ் சிறிது நீங்கியவழி ஒரு புடையாய்த் தோன்றி நிலவிப் பின் மேக படலம் முழுவதும் நீங்கியபோது, எங்கும் அவ்வொளி பரவிய தன்மைபோல, உயிரும், தனது அறிவு மலத்திலே மறையப் பெற்றுக் கேவல நிலையிற் கிடந்து, பின் கருவிகளோடு கூடியகாலை ஒருபுடை அறிவு விளங்கப்பெற்று உலகப் பொருள்களை நுகர்ந்து, பின் முதல்வனருளால் மலத்தைப் பற்றறக் களைந்து வியாபக அறிவுடன் அவனது திருவடியை அணையும்.

குறிப்பு:—கொண்மூ - மேகம். ஒடுங்கி - ஒருபுடை விளங்கி. வாள் - ஒளி; அறிவு வரத்து - வரமாகிய திருவடிக்கு.

பன்னிரண்டாம் சூத்திரம்

செம்மலர் நோன்தாள் சேரல் ஒட்டா
அம்மலம் கழீஇ அன்பரொடு மரீஇ
மால்அற நேய(ம்) மலிந்தவர் வேட(மு)(ம்)
ஆலயம் தானும் அரன்எனத் தொழுமே.

உரை :—அசிந்திதனாய் நின்ற பதியைச் சிந்திதனாகக் கண்டு வழிபடுமாறு உணர்த்துதல் நுதலிற்று. அசிந்திதன் - சிந்தைக் கெட்டாதவன். சிந்திதன் - சிந்தைக் கெட்டுபவன்.

உரை :—சீவன்முத்தன் (உடம்பில் வீடெய்தியவன்) செந்தாமரை மலர்போல விரிந்து விளங்கிய முதல்வனது வலிய திருவடிகளை அணைய வொட்டாது (மறத்தலைச் செய்விக்கும்) மும்மல அழுக்கை ஞானநீரால் கழுவி, மறவா அன்பு செய்யும் அறிஞரோடு கலந்து மலமயக்கம் நீங்க அன்புமிக்க அவரது திருவேடத்தையும் சிவன்கோயிலையும் முதல்வனெனவே கண்டு வழிபடுவன்.

கருத்து :—சீவன்முத்தர் உலகநிலை கூறியது.

முதல் அதிகரணம்

ஈண்டு ஆணவம் மாயை கான்மியம் என்னும் மலங்களைக் களைக என்றது.

உரை :—மெய்யுணர்ச்சிக்குத் தடையாக வரும் மும்மலங்களை நீக்குக என்றவாறு.

ஏது :—அவைதாம் ஞானத்தை உணர்த்தாது அஞ்ஞானத்தை உணர்த்தும் ஆகலான்.

உரை :—அவை மெய்யுணர்வைக் கீழ்ப்படுத்தி, மாயாவுணர்வை மேற்படுத்தும் ஆதலால்.

குறிப்பு :—அஞ்ஞானம் - நிலையாதனவற்றை நிலையினவென்றறியுந் திரிபுணர்ச்சி. உணர்தல் - உணர்விற்கேதுவாதல்.

புண்ணிய பாவம் பொருந்தும்இக் கான்மியமும்
மண்முதல் மாயைகாண் மாயையும்—கண்ணிய
அஞ்ஞானங் காட்டும்இவ் ஆணவமும் இம்மூன்று(ம்)
மெய்ஞ்ஞானிக் காகா விடு.

உரை :—நல்வினை தீவினைகளுக்குப் பயனும் காரணமாயும் பொருந்துகின்ற கன்மமலமும், நிலமுதல் அசுத்த மாயை முடிவாகக் காணப்படுகின்ற மாயாமலமும், தற்போதத்திற் கேதுவாய் நிற்கும் ஆணவமும் ஆகிய இம்மூன்று மலங்களும் மெய்யுணர்வுடைய உனக்குத் தடையாமாகலின், அவைகளைக் களைக.

குறிப்பு :—விடுவென்றது, சிவானுபவ நிலையில் உறைத்து நிற்பதால், விடுக என்றவாறு.

இரண்டாம் அதிகரணம்

இனிச் சிவபத்தரோடிணங்குக என்றது.

உரை :—சிவபத்தர் - அணைந்தோரர்கிய சீவன் முத்தர்.

ஏது :—அல்லாதார் அஞ்ஞானத்தை யுணர்த்துவராகலான்.

உரை :—ஏனையோர் உலகப்பொரு ளுணர்ச்சியாய திரி புணர்ச்சிக்குக் காரணராவாராகலின்.

குறிப்பு :—திருவாசகப் போற்றித் திருவகவலுள் அதனைக் காண்க.

மறப்பித்துத் தம்மை மலங்களின் விழ்க்குஞ்
சிறப்பிலார் தம்திறத்துச் சேர்வை—அறப்பித்துப்
பத்தர் இனத்தாய்ப் பரன்உணர்வி னுல்உணரும்
மெய்த்தவரை மேவா வினை.

உரை :—தமது மெய்யியல்பை மறக்கச் செய்து, மலங்களாலாய பிறவியில் விழுத்தும் அன்பிலாரொடு பழகிய பழக்கம் அறுமாறு, அன்பர் கூட்டத்திற் பெருவிருப்புடையராய், அதன் சார்பாக விளங்குஞ் சிவஞானத்தால் முதல்வனை உணரும் மெய்த் தவத்தினரைப் பிராரத்த வினைகள் பொருந்தமாட்டா.

குறிப்பு :—மலம் - மலத்தாளுய பிறவி. சிறப்பு - அன்பு. 'அறப்பித்துப் பத்தர் இனத்தாய்' அற பத்தர் இனத்துப் பித்தாய் எனக் கொள்க.

மூன்றும் அதிகரணம்

இனிப் பத்தரது திருவேடத்தையுஞ் சிவாலயத்தையும் பரமேசுரனெனக் கண்டு வழிபடுக என்றது.

உரை :—வெளிப்படை

ஏது :—அவன் மற்றிவ்விடங்களிற் பிரகாசமாய்நின்றே, அல்லாத இடத்து அப் பிரகாசமாய் நிற்றலான்.

உரை :—முதல்வன், இவ்விரண்டிடங்களின் மாத்திரமே (தயிரின் நெய்போல) விளங்கி நின்று, ஏனைய இடங்களிற் பாலில் நெய்போல வெளிப்படாது நிற்றலால்.

தன்உணர வேண்டித் தனதுருவைத் தான்கொடுத்துத்
தன்உணரத் தன்னுள் இருத்தலால்—தன்னுணரு(ம்)
நேசத்தர் தம்பால் நிகழும் ததிநெய்போல்
பாசத்தார்க் கின்றும் பதி.

உரை :—பரம்பொருள் தன்னை உலகினர் அறிதற் பொருட்டுத் தனது திருவேடத்தை அடியார்களுக்குக் கொடுத்து, அவர்கள் தன்னைச் சிவோகம்பாவனையால் உணரவே, தன் வியாபகத்துள் அவர்களை இருத்தி வைப்ப தால், தன்னை அகண்டமாக உணரும் பேரன்பரிடத்தே தயிரில் நெய்போல விளங்குவான், பாசமுடையாரிடத்தே முதல்வன் விளங்காது நிற்பன்.

குறிப்பு :—இருத்தல் - இருத்துதல். இன்றும் - விளங்கான்.

கண்டதொரு மந்திரத்தால் காட்டத்தில் அங்கிவே(று)
உண்டல்போல் நின்றங்கு உளதாமால்—கண்டஉருத்
தான்அதுவாய் அன்றுனுன் தானதுவாய்த் தோன்றுனே
தான்அதுவாய்க் காணுந் தவர்க்கு.

உரைநடை :—காட்டத்தில் அங்கி வேறுண்டல்போல் கண்ட உருத் தான் அதுவாய் அன்று ஆனுன். கண்டது ஒரு மந்திரத்தால் நின்று அங்கு உளது ஆம் அது தான் ஆய்க் காணும் தவர்க்கு அது தானுய்த் தோன்றுனே?

உரை :—விறகினிடத்தே கடைந்தகாலைத் தோன்றியும் அல்லாக்கால் தோன்றுமலும் விறகிற்கு வேருயுள்ள அக்கினி போல, காணப்பட்ட திருவடிவத்தின்கட் கலந்து அதுவாகியும் அதுவல்லாமல் வேருயும் நிற்கும் முதல்வன், அறியப்பட்ட தொரு மந்திர உறைப்பால் விளங்கித் தோன்றுவன். (அஃதில்வழி விளங்கான்) அவ் வடிவையே அவனுகக் காணும் மெய்த்தவமுடையார்க்கு (மந்திர முதலியவற்றின் உதவி யில்லாமலே) அவ்வண்ணமே அவன் விளங்கித் தோன்று வானல்லனே?

நான்காம் அதிகரணம்

இனி, இவ்விடங்களின் வழிபடுக என்றது.

உரை :—மேற்கூறிய இடங்களில் இறைவனை வணங்குக என்றவாறு.

ஏது :—நரம்பு நாடி முதலானவற்றைத் தான்அதுவாய் வரும்புருடன் அவையாகாவாறு அப்புருடனும் ஆகலான்.

உரை :——உடம்புள் நரம்பு, நாடி முதலிய கருவிகளில் அது அதுவாய் நிற்கும் உயிர் அவையாகாமல், தன்னின் வேறாய் நிற்றல்போல முதல்வனும் கலப்பால் எப்பொருளுமாகியும் பொருளுண்மையால், அவை அல்லனாகியும் நிற்றலால்.

குறிப்பு :—பொருள்களின் வடிவாய்க் காணுமிடத்து அவன் அவையாகியும், பொருள்களில் வேறாய்க் காணுமிடத்து இவ்விடங்களின் வேறாகியும் முதல்வன் விளங்குதலின், இருவகை வழிபாடுங் குறித்தவாறாயிற்று.

அதுஇது என்ற(து) அதுஅல்லான் கண்டார்க்(கு)
அதுஇது என்றதையும் அல்லான்—பொதுவதனில்
அத்துவிதம் ஆதல் அகண்டமுந் தைவமே
அத்துவிதி அன்பில் தொழு.

உரை நடை :—கண்டார்க்கு, என்பதை முதலிற் கொள்க.

உரை :—முதல்வன் நிற்குநிலை யறியப்பெற்றவர்கட்கு அதுஇது என்ற வேறுபாட்டு நிலையும், அதுஎன்ற வேறுபாடில்லா நிலையும், அதுவாகிய இது என்ற குணகுணி நிலையும் உடையன் அல்லாமல், அறிவொளிபோல் அம்மூன்றற்கும் பொதுவாய் அத்துவிதநிலையில் நிற்றலால், எல்லாப் பொருளும் அவன் வடிவமேயாயினும், அவற்றுள்ளும் அன்பு மிகுதியாய் விளையுமிடத்தே, அத்துவித முணர்ந்தோய் நீ வழிபடுக என்றவாறு.

குறிப்பு :—தைவம் - தேவனது உடைமை. இங்கே வடிவு குறித்து நின்றது. இதனுள் சிவலிங்க வணக்கங் கூறப்பட்டதென்ப

வினையால் அசத்து விளைதலான் ஞானம்
வினைதீரின் அன்றி விளையா—வினைதீர
ஞானத்தை நாடித் தொழவே அதுநிகழும்
ஆனத்தால் அன்பில் தொழு.

உரை :—பிராரத்தவினை தாக்குமளவும், நிலையிலாப் பொருளுணர்ச்சி உளதாமாதலால், பிரர்ரத்த வாசனை நீங்கினால் அன்றி மெய்யுணர்வு மேற்படாது. அவ் வாசனை கழிதற்பொருட்டு மெய்யுணர்வுடையாரை நாடி வழிபடவே, மெய்யுணர்வு மேம்படும். ஆகையால், அவரை அன்பால் வழி படுக என்றவாறு.

குறிப்பு :—விளையா - விளையாது. ஞானம் - ஞானமுடையோர். ஆனதால் - ஆனத்தால் என விரிந்தது. இதனுள் அடியார் வணக்கங் கூறப்பட்டதென்ப.

தன்னை அறிவித்துத் தான்தானுச் செய்தானைப்
பின்னை மறத்தல் பிழையலது—முன்னவனே
தானேதா னுச்செய்துந் தைவமென்றுந் தைவமே
மானே தொழுகை வலி.

உரை :—தன்னுண்மையை அறியமாட்டாது குருடாய்க் கிடந்த உயிர்க்குப் பலவாற்றானும் அதனைத் தெரிவித்து, அவ் வுயிரைத் தான் ஆகும் வண்ணஞ் செய்தருளியவனை அவ்வுப காரத்தின் பின்னர் மறத்தல் (பரிகாரமில்லாத) குற்றமாவ தோடு, முதல்வன் அப்படி உயிரைத் தானாகவே செய்தாலும், முதல்வனுதவியை இன்றியமையாத அடிமையாகிய உயிர் அவனுக்கு எக்காலத்தும் அடிமையே யாதலால், அப் பெரியோனை வழிபடுதலே உயிர்க்கு வலிமையளிப்பதாகும்.

குறிப்பு :—மானே - மகானே. பெரியோனே - பெரியோனையே : இரண்டாம் வேற்றுமைத்தொகை. இதனுட் குருவணக்கம் கூறப் பட்ட தென்பர்.

சிவமென்னும் அந்ததர சிந்தைநேர் நோக்கப்
பவம்இன்றும் கண்வா சகத்திற்—சிவம் உண்டாம்
ஒன்றும் இரண்டும் மலத்தார்க்(கு) இங்(கு) ஒண்குருவால்
இன்(று) இந்நூல் மும்மை மலர்க்கு.

உரை :—சீவன் என்ற இயல்பு நீங்கிச் சிவம் என்றேதப் படுஞ் சித்தாந்தத்தை யுடையவனே! ஒரு மலம் இருமலம் உடையார்க்கு, முறையே அறிவின்கண் நின்று நேரே திரு வருட் பார்வையால் நோக்குவதாலும், நேரே தேவவடிவோடு வந்து பார்த்தலாலும் சொல்லுதலாலும், பிறவிக் கேதுவாய பசுத்துவம் நீங்கும்; சிவத்துவம் உண்டாம். மூன்று மலமுடை யார்க்கு இவ்வுலகில் அனுபவமுடைய தேசிகரால், அவை நிகழும். இந்நூல் மும்மலமுடைய சகலர்க்கே பக்குவமுறும் இக்காலத்து உரியதாகும்.

குறிப்பு :—அந்தர - மேலான முடிபுடையவனே. பவம் - பிறவி. இங்கே, பிறவிக்கேதுவாய பாசம். சிவம் - சிவத்துவம். இன்று - பக்குவகாலத்து. ஒண் - அனுபவமுடைய.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

சிவஞான போதச் சூர்ணிக்கொத்து

முதற்சூத்திரத்தில்-சகம் பிறப்பு இருப்பு இறப்பாகிய முத்தொழிலை யுடையது. (க)

அது அரனாலே யுடையது. (உ)

மற்றிருவரும் முத்தொழிற்படுவர்கள். (ங)

உ - ல் அரன் உயிர்களி லிரண்டற நிற்பன். (க)

உயிர்களுக்குக் கன்மபலனை அரனே கொடுப்பன். (உ)

உயிர்கள் அச்சு மாறியே பிறக்கும். (ங)

அரன் சருவ வியாபகன். (ச)

ங-ல் இல்லையென்கிற அறிவுடனே சொல்லுகையினாலே அறி உயிருண்டு. (க)

எனதுடலென்ற பொருட் பிறிதின் கிழமையாகச் சொல்லுகையினாலே உடற்கு வேறாயுயிருண்டு. (உ)

ஐந்தையு மொருவனே யறிதலி னெவ்வொன்றை மாத்திர மறிகின்ற ஐந்திற்கும் வேறாயுயிருண்டு. (ங)

கனவுடலைவிட்டு நனவுடலிலே வருகையினாலே கனவுடலுக்கு வேறாயுயிருண்டு. (ச)

நித்திரையினும் பிராணவாயுத் தொழிற் பண்ணவுஞ் சரீரத்திற்குப் புசிப்புந் தொழிலுமில்லாத படியினாலே பிராண வாயுவுக்கு வேறாயுயிருண்டு. (ரு)

மறந்து மறந்து நினைக்கின்றபடியினாலே மறவாமலிருக்கிறவனுக்கு வேறாயுயிருண்டு. (சா)

எல்லாத் தத்துவங்களுக்கும் வெவ்வேறு பெயரிருக்கிற படியினாலே அந்தத் தத்துவங்களுக்கு வேறாயுயிருண்டு. (எ)

ச-ல் அந்தக்கரணங்களுக்கு உயிர் உள்கூடினாலன்றித் தொழிலில்லாத படியினாலே அந்தக்கரணங்களுக்கு வேறாயுயிருண்டு. (க)

மலமறைப்பா லுயிர்க்கு அறிவில்லை. (உ)

உயிர் மூன்றவத்தைப்படும். (ங)

ரு-ல் உயிராலே தத்துவங்களெல்லாந் தொழில் செய்யும். (க)

அரனாலே வுயிர்களெல்லா மறியும். (உ)

சா-ல் உயிரறிவினாலே யறியப்பட்டவெல்லாம் அழியும். (க)

அப்பிரமேயமாக அறியப்பட்டவனே யரன். (உ)

எ-ல் அரன் பாசத்தை யனுபவியான். (க)

பாசம் அரனை யனுபவியாது. (உ)

உயிர் அவ்விரண்டினையும் அனுபவிக்கும். (ங)

அ-ல் உயிர்க்கு நல்லறிவு தவத்தினாலே வரும். (க)

உயிர்க்குச் சற்குருவாய் வருவது அரனே. (உ)

உயிர் பஞ்சேந்திரியங்களைப் பற்றுகையினாலே தன்னையும் அறியமாட்டாது. (ங)

உயிர் பஞ்சேந்திரியங்களிற் பற்றற்றால் தன்னையும் அறியும். (ச)

கூ-ல் உயிர் அரன்ஞானத்தினாலேயே அரனைக் காணும். (க)

உயிர் பாசத்திலே பற்றற்றால் அரன் வெளிப்படுவன். (உ)

பஞ்சாட்சரசெபம் பண்ணினால் வாதனைமலம் போம். (ங)

க0 - ல்	அரனுடன் ஒன்ருகி நில்.	(க)
	உன்தொழிலெல்லாம் அரன்பணியென்றே கொள்.	(உ)
கக - ல்	ஞானிக்கு வருகின்ற விடயங்களை அரனே யனுபவிப்பன்.	(க)
	அரனைமறவாமல் அன்பிருந்தால் அவ் அரனிடத்திலே ஐக்கமாய்ப் போவன்.	(உ)
கஉ - ல்	மும்மலங்களையுங் களைக.	(க)
	சிவஞானிகளுடனே கூடுக.	(உ)
	சிவஞானிகளையுஞ் சிவலிங்கத்தையுஞ் சிவனென்றே தேறி வழிபடுக.	(ந)
	வழிபடாமையை யொழிக.	(ச)

[இது திருவெண்ணெய் நல்லூர் பொல்லாப்பிள்ளையார் அருளிச் செய்ததாக ஆன்றோர் வழக்கில் கூறப்படுகிறது.]

உ

சிவமயம்

சிவஞான போதத்தைப்பற்றிப் பிற்காலத்தவரால் செய்யப்பட்ட செய்யுள்கள்

நூற் சிறப்பு

வேதம் பசு அதன்பால் மெய்ஆ கமம்நால்வர்
ஓதுந் தமிழ் அதனின் உள்ளுறுநெய்—போதமிகும்
நெய்யின் உறுசுவையாம் நீள்வெண்ணெய் மெய்கண்டான்
செய்ததமிழ் நூலின் திறம்.

நூற் கருத்து

முதற்பதி அரனே ஐந்து முன்னத்து விதமி ரண்டே
இதற்பினே யனுமா னத்தால் எண்ணிலா வுயிர்கள் மூன்றே
அதற்பினே யவத்தை நான்கே யகமறுத் திடலே ஐந்தே
செகற்பதி பிரித்த லாறே தெரிவித்த லுயிரை யேழே.

மறைப்பினை நீக்கி ஞான வாரியை நினைத்தல் எட்டே.
சிறப்புடை உபாயந் தம்மால் தெளிவித்தல் உயிரை ஒன்பான்
அறுத்திடல் மலங்கள் பத்தே அழுந்தலே சிவத்தில் ஒன்றே
திறப்பணி கொளல் இரண்டே சிவஞான போதஞ் சித்தி.

பதினுன்கு சாத்திரம்

உந்தி களிறு உயர்போதஞ் சித்தியார்
பிந்திருபா உண்மை பிரகாசம்—வந்த அருட்
பண்புவினு போற்றிகொடி பாசமிலா நெஞ்சுவிடு
உண்மைநெறி சங்கற்பம் முற்று.

சிறப்புப் பாயிரம்

மலர்தலை யுலகின் மாயிருள் துமியப்
பலர்புகழ் ஞாயிறு படரி னல்லதைக்
காண்டல் செல்லாக் கண்போல் ஈண்டிய
பெரும்பெயர்க் கடவுளில் கண்டுகண் ணிருள்தீர்ந்து
அருந்துயர்க் குரம்பையின் ஆன்மா நாடி
மயர்வற நந்தி முனிகணத் தளித்த
உயர்சிவ ஞான போதம் உரைத்தோன்
பெண்ணைப் புனல்சூழ் வெண்ணெய்ச் சுவேதவனன்
பொய்கண் டகன்ற மெய்கண்ட தேவன்
பவநனி வன்பகை கடந்த
தவர்அடி புனைந்த தலைமை யோனே.

மெய்கண்ட தேவர் துதி

சிறிய ஆடியிற் பெரியமால் வரைப்பொருள் செறிந்தாங்கு
அறிவுநூல்களின் முடிபெலாம் அகப்படுத்து அவற்றின்
நெறியெலாம் விளங்கிய சிவஞான போதத்தைக்
குறிசெய்திந் தமிழால்உரை குரவனைப் பணிவாம்.

மூன்று மலங்கெடுத்து மூலமாம் அப்பொருளுந்
தோன்ற அருளுந்தன் தொண்டர்க்கிங்—கான்றமைந்தோர்
கைகண்ட தன்றே கடன்ஞாலத் தெப்பொருட்கும்
மெய்கண்ட தேவன் விரைத்தாள்.

நூன் மரபு

எந்தை சனற்குமரன் ஏத்தித் தொழஇயல்பாய்
நந்தி உரைத்தருளும் ஞான நூற்—சிந்தைசெய்து
தானுரைத்தான் மெய்கண்டான் தாரணியோர் தாமுணர
ஏதுதிருட் டாந்தத்தால் இன்று.

———

தலைமை நிலையம் :

79, பிரகாசம் சாலை, சென்னை-1.

கிளை நிலையங்கள் :

திருநெல்வேலி-6.
மதுரை-1. கோயமுத்தூர்-1.
கும்பகோணம்-1. திருச்சிராப்பள்ளி-2.

அப்பர் அச்சகம், சென்னை-1